# சிலப்பதிகார ஆய்வுரை

பூங்கொடி பதிப்பகம்

# சிலப்பதிகார ஆய்வுரை

சிலம்புச்செல்வர்
டாக்டர் ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

22, வி. எஸ். வி. கோயில் தெரு,
மயிலாப்பூர் : : சென்னை-4.

முதற் பதிப்பு : 5, பிப்ரவரி, 1979

இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட் 1980

உரிமை : ஆசிரியருக்கு

விலை ரூபாய் இருபது

அச்சிட்டோர் :

குரு அச்சகம்,

சென்னை—600 005.



# நுழைவாயில்

1976 சனவரி 30-ல் தமிழகத்தில் சட்ட மன்றம் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி நடை முறைக்கு வந்தபோது, அரசியல் வாழ்வில் எனக்குச் சிறிது "ஓய்வு" கிடைத்தது. அதனால், "ஓய்வு" முடிவுக்கு வரும்வரை இலக்கியப் பணியில் தீவிரமாக ஈடுபடுவதென முடிவெடுத்தேன்.

அதன்படி, 19—5—76 தொடங்கி 4—5—77 வரை சென்னை பாரதீய வித்யாபவன் மண்டபத்தில் சிலப்பதிகாரம் பற்றித் திங்களுக்கொரு சொற்பொழிவு வீதம் தொடர்ந்து 13 சொற்

பொழிவுகள் நிகழ்த்தினேன். அந்தச் சொற்பொழி வுகளின் தொகுப்பே "சிலப்பதிகார ஆய்வுரை" என்னும் இந்நூல்.

மாநிலக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றி வரும் திரு. தி. வ. மெய்கண்டார் அவர் கள், மயிலை இலக்கிய வட்டத்தின் சார்பில் சிலப்பதி காரத் தொடர் சொற்பொழிவுக் கூட்டங்களை மிகவும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்தார். அந்தக் கூட்டங்களிலே என்னால் பெரிதும் மதிக்கப்பெறும் பேராசிரியர்களும், கல்லூரி மாணவர்களும், தமிழ் ஆர்வலர்களும் திரள்திரளாக வந்து கலந்து கொண் டனர். இதற்கு, திரு. மெய்கண்டார் அவர்களின் தன்னலங் கருதாத உழைப்பே காரணமாகும்.

மயிலை பாரதீய வித்யாபவன் மண்டபத்தில் நான் பேசிய ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு அறிஞர் தலைமை வகிக்க அழைக்கப்பட்டார். 13 கூட்டங்களிலும் தலைமை வகித்த அறிஞர்களின் பெயர்கள் வருமாறு:

ஓய்வு பெற்ற நீதிபதி எஸ். மகாராசன், சாகித்ய அக்காதமி துணைத்தலைவர் கே. ஆர் சீனிவாச ஐயங்கார், மாநிலக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் மெ. சுந்தரம், சட்டமன்ற மேலவை முன்னாள் தலைவர் எம். ஏ. மாணிக்கவேலர், முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் லெ.ப. கரு. இராமநாதஞ் செட்டியார், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன், கலைஞர் தி. க. பகவதி, சென்னைப் பல்கலைக் கழக மலையாளத் துறைத் தலைவர் டாக்டர் எஸ். கே. நாயர், சமஸ்கிருத ரத்ன எஸ். என். ஸ்ரீராம தேசிகன், சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த்

துறைத் தலைவர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், சென்னைப் பல்கலைக்கழக இந்தித்துறைத் தலைவர் டாக்டர் சு. சங்கரராசு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் வ. சுப. மாணிக்கம்

தொடர் கூட்டத்தில் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுரை நிகழ்த்தினேன். அந்தத் தலைப்புகளை யொட்டியே இந்நூலின் பொருளடக்கம் அமைந்துள்ளது.

சிலப்பதிகாரம் பற்றித் தொடர் சொற்பொழிவாற்றுமாறு என்னைத் தூண்டி, அதற்கான கூட்டங்களையும் சிறப்பாக நடத்தி, இந்நூல் வெளிவருவதற்கு ஒருவகையில் காரணமாக அமைந்த திரு. மெய்கண்டார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மைக் காலமாக என்னுடைய நூல்கள் பலவற்றை வெளியிட்டு வந்துள்ள "பூங்கொடிப் பதிப்பகமே" இந்நூலையும் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளது. அதற்காக, பதிப்பகத்தின் உரிமையாளர் திரு வே. சுப்பையா அவர்களுக்கு எனது பாராட்டுதல் உரித்தாகுக!

சிலப்பதிகாரம் பற்றி இதுவரை எட்டு நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறேன். இது ஒன்பதாவது நூல் ஆகும். இந்த நூலையும் தமிழுலகம் வரவேற்கும் என்று நம்புகிறேன்.

சென்னை<br>
5—2—1978

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எந்தச் சிலம்பு? | ... | 5 |
| 2. | கண்ணகி—கோவலன் இல்லற வாழ்க்கை | ... | 10 |
| 3. | மாதவி—கோவலன் காதல் வாழ்க்கை | ... | 39 |
| 4. | கண்ணகி—கோவலன் மதுரைப் பயணம் | ... | 74 |
| 5. | வளையாத செங்கோல் வளைந்தது! | ... | 131 |
| 6. | கண்ணகி தொடுத்த வழக்கு | ... | 151 |
| 7. | எரித்தது குற்றமா? | ... | 190 |
| 8 | சேர மன்னனின் வடபுலப் படையெடுப்பு | — | 234 |
| 9. | வடபுலஞ்சென்ற சேரன் வஞ்சி திரும்பினுன் | .... | 280 |
| 10. | கண்ணகி கோட்டத் திறப்பு விழா | ... | 317 |
| 11. | பத்தினி வழிபாடு | ... | 349 |
| 12. | பொருளடைவு | ... | 373 |

# 1

# எந்தச் சிலம்பு?

இந்தியாவில் தோன்றிய மகா கவிகளுள்ளே தேசிய ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டிய முதல் கவிஞர் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகள் ஆவார்.

அவர், தம் காலத்தில் நாட்டில் நிலவிய சைவ, வைணவ, சமண, பௌத்த மதங்களிடையே ஒருமைப்பாடு நாடினர்.

அந்தண, அரச, வணிக, வேளாள வருணங்களிடையே ஒருமைப்பாட்டினை உருவாக்கிக் காட்டினர்.

அரசியல் ரீதியில் பிரிந்து கிடந்த சேர, சோழ, பாண்டிய மண்டலங்களிடையே ஒற்றுமையை வளர்த்தார்.

இலங்கை உள்ளிட்ட இந்திய உபகண்ட அரசர்களைக் கண்ணகி கோயில் முன்பு நிறுத்தி, அக்கற்புத் தெய்வத்தை வழிபடும் முறையிலே அவ்வேந்தர்களிடையேயும் ஒருமைப்பாடு காட்டினர்.

தென்புலத்தில் தோன்றிய பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குச் சிலைவடிக்க வடபுலத்து இமயத்திலே கல்லெடுக்கச் செய்து வடக்குக்கும் தெற்குக்கு மிடையே கலாசார ஒருமைப்பாடு இருப்பதனை உணர்த்தினர்.

பூம்புகாரிலே இந்திர விழாவில் மாதவி ஆடிய நடனத்தைக் காண இமயப் பிரதேசத்திலிருந்து கந்தர்வக் காதலர் இருவர் வந்தனர் எனக் கூறி, கலைத்துறையிலேயும் இந்தியாவின் ஒருமைப் பாட்டினை வற்புறுத்தினார்.

## முதலில் தோன்றிய தேசியக் கவி

இப்படி, சமயங்களிடையேயும், வருணங்களிடையேயும், மொழி வேறுபாடுடைய நாடுகளிடையேயும் சமத்துவமும் சமரசமும் நிலவினால்தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு சாத்தியமாகும் என்பதனையும் சிலப்பதிகாரத்தின் மூலம் நமக்குக் காட்டினார்.

அரசியல் மரபுக்கு மாறாக, அண்ணனுக்குரிய அரசு தனக்கு வரவிருந்ததை பரதன் ஏற்க மறுத்ததிலிருந்து இராமாயணக் கதை தொடங்குகிறது. அதுபோல, இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனின் மூத்த மகன் செங்குட்டுவனுக்கே உரிய அரசு இளவல் இளங்கோவைத்தான் சாருமென்று நிமித்திகன் கூறியதை எதிர்த்து இளங்கோவடிகள் தமக்கு வரவிருந்த அரசைத் துறந்ததன் மூலம்தான் சிலப்பதிகாரம் தோன்றுகிறது.

அதிகாரத்திலிருந்த அண்ணன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கற்கோயில் கட்டினான். அதனை இன்று கண்டுபிடிக்க முடியவில்லை. தமக்கு வரவிருந்த அரசைத் துறந்த தம்பி இளங்கோவடிகள் கண்ணகிக்குச் சொற்கோயில் கட்டினார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அது நின்று நிலைத்திருக்கிறது.

**தேசத்திலுள்ள பல்வேறு பிரிவினரை ஒன்றுபடுத்திக் காட்டுவதுதான் தேசியமென்றால், அந்தத் தேசியத்தைப்பாடிய முதற் கவிஞர் இளங்கோவடிகளே யாவார்.**

## சிலப்பதிகாரம் என்று பெயர் வரக் காரணம்

'சிலப்பதிகாரம்' என்ற பெயர் இளங்கோ படைத்த காப்பியத்திற்கு எதனுல் வந்தது? கண்ணகியின் காற் சிலம்பு காரணமாக மதுரையில் புரட்சி விளைந்ததனுல், அதன் பெயரைக் கொண்டே இளங்கோவடிகள் காப்பியம் படைத்தார் என்று சொல்லப்படுகிறது. அதுவும் ஒரு காரணம்தான். ஆயினும், அதை விடவும் சிறந்த காரணம் ஒன்றும் உண்டு.

வால்மீகி ராமாயணத்திலே, கிஷ்கிந்தையில் தன்னைச் சந்தித்த இராமனிடம், இராவணனுல் அபகரிக்கப்பட்டு வான வழியே சென்று கொண்டிருந்த சீதையானவள் எறிந்து விட்டுப் போன அணிகலன்களைக் காட்டுகின்றுன் சுக்ரீவன். அவற்றைச் சீதை அணிந்த கோலத்தில் முறைப்படுத்தி வைத்து, இளவல் இலக்குவனைப் பார்த்து, "தம்பி! இந்த அணிகலன்கள் உன் அண்ணியினுடையவைதானு, அடையாளம் கண்டு சொல்!" என்று இராமன் கேட்கிருன். அப்பொழுது,

"காற் சிலம்புக ளிரண்டும் அண்ணியினுடையவையே. மற்றைய அணிகலன்களை நான் அடையாளம் சொல்ல வல்லேன் அல்லேன். அண்ணியின் திருவடிகளைத் தினமும் வணங்கியபோது காற்சிலம்புகளைக் கண்டிருக்கிறேன். ஆனுல், திருமேனியை நான் ஒரு முறையும் கண்டதில்லை யாதலால், மற்ற அணிகலன்களை அடையாளம் சொல்ல வல்லேன் அல்லேன்."

என்று இலக்குமணன் கூறுகிருன். இதனை நினைவில் கொண் டால் தமது காப்பியத்திற்கு இளங்கோவடிகள் சிலப்பதி காரம் என்று பெயர் சூட்டியதற்கான காரணம் புரியும்.

கண்ணகி தேவி கற்புத் தெய்வமாகப் படைக்கப்பட் டிருக்கிருள். அந்தத் தெய்வத்தின் திருவடியைக் காணத் தான் நமக்கு உரிமை உண்டு. அதனுல், 'கண்ணகிக் காப்

பியம்' என்று பெயரிட்டால் அவளது திருமேனி நினைவுக்கு வருமே என்றஞ்சி, அவள் திருவடியை அலங்கரித்த அணியான சிலம்பின் பெயரை வைத்து, திருவடி ஒன்றே நமது நெஞ்சிலும் நினைவிலும் பதியும்படிச் செய்துவிட்டார் இளங்கோ.

## எந்தச் சிலம்பு?

கோப்பெருந் தேவியின் சிலம்பு களவு போனதன் காரணமாகத்தான் கோவலன் கொலையாவதும், கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைப்பதும், பின்னர் மதுரையை எரிப்பதும் நிகழ்கின்றனவாதலால், அந்த அரசமாதேவியின் சிலம்பை நினைத்தே இளங்கோவடிகள் சிலப்பதிகாரமென்று பெயரிட்டார் என்கின்றனர் புலவர்களில் சிலர். இது பொருந்தாது.

சிலப்பதிகாரத்திலே ஒரு பாத்திரமாக இருப்பது கண்ணகியின் சிலம்புதான். கோப்பெருந்தேவியின் சிலம்பல்ல அது. பொற்கொல்லனாலும் பாண்டி வேந்தனாலும் சுட்டிச் சொல்லப்படுகிறது. அதற்குமேல் காட்சிப்படுத்தப்படவில்லை. அந்தச் சிலம்பைக் களவாடிய பொற்கொல்லனிடமிருந்து அது மதுரை மன்னனால் கைப்பற்றப்படவில்லை. ஆகவே, அதை நினைத்துத் தமது காப்பியத்திற்குச் சிலப்பதிகாரம் என்னும் பெயரை இளங்கோ தந்திருக்க முடியாது.

மாதவியைப் பிரிந்த கோவலன் தன்னை அடைந்து கைப்பொருளை இழந்து வறுமையால் வருந்துகிறேன்' என்று கூறிய போது, 'சிலம்புள கொள்ளுங்கள்' என்கின்றாள் கண்ணகி. இதனால், கதையிலே ஒரு திருப்பம் ஏற்படுகிறது. இந்தத் திருப்பம் இல்லையேல் கதையே இல்லை. இதற்குக் காரணம் கண்ணகியின் சிலம்புதான். கோப்பெருந்தேவியின் சிலம்பல்ல.

கண்ணகியுடன் மதுரை ஆயர் சேரியில் மாதரியின் இல்லத்திலிருக்குங்கால், அவள் தந்த சிலம்பை விற்பதற்கு அவளை விட்டுப் பிரிகிறான் கோவலன். கண்ணகி இரண்டு சிலம்பையும் கொடுப்பதாகக் கூறியிருந்தும், 'நின் சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான் போய் மாறிவருவன்' என்று அவளிடம் கூறிவிட்டுச் செல்கின்றான். இரண்டு சிலம்பு களையுமே பெற்றுச் சென்றிருந்தால் பொற்கொல்லன் கோவலனைச் சந்தேகித்திருக்க மாட்டான். மாறாக, ஒற்றைச் சிலம்பைக் கொண்டுபோய் விற்கமுயன்றதால் சந்தேகித்தான்.

இதனால், கண்ணகியின் சிலம்பு காரணமாகக் கதையில் மற்றொரு திருப்பம் ஏற்படுகிறது. இந்த இடத்திலேதான் கோப்பெருந்தேவியின் சிலம்பு கண்ணகியின் காற்சிலம்புடன் கதையில் போட்டியிடுகிறது இதைக்கொண்டே கதையின் பெயருக்குக் கோப்பெருந் தேவியின் சிலம்புதான் காரண மென்று சொல்லிவிடுவதற்கில்லை. இதற்குமேல் கதை தொடர் வதும் கோப்பெருந் தேவியின் சிலம்பைக் கொண்டல்ல; கண்ணகியின் சிலம்பைக் கொண்டுதான். ஆகவே, சிலப்பதி காரம் என்று கண்ணகியின் வரலாற்றுக்குப் பெயர் வரக் காரணம் அவளுடைய காற் சிலம்பேதான்.

# 2

# கண்ணகி-கோவலன் இல்லற வாழ்க்கை

கண்ணகி—கோவலன் இல்வாழ்க்கை பற்றி விளக்கப் புகுமுன் சிலப்பதிகாரத்தில் இல்லாத ஒரு விஷயத்தைப்பற்றி விளக்கந் தர விரும்புகிறேன்.

## கடவுள் வாழ்த்துப் பாடாததேன்?

இளங்கோவடிகள், இலக்கிய மரபுப்படிக் கடவுள் வாழ்த்துப் பாடிக் காப்பியத்தைத் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. "இளங்கோ சமணர். அதனால்தான் அவர் கடவுள் வாழ்த்துப் பாடவில்லை" என்று சிலர் கூறுகின்றனர். சமணரான திருத்தக்க தேவர் பாடிய சீவக சிந்தாமணி முழுக்க முழுக்க சமணக் காப்பியம். அதிலே அவர் அருக தேவனுக்கு வாழ்த்துப் பாடிவிட்டுத் தான் காப்பியத்தைத் தொடங்கியிருக்கிறார் அதுபோல, அருக தேவனுக்கு வாழ்த்துப் பாடவில்லை இளங்கோவடிகள்.

இளங்கோவடிகள் கடவுள் நம்பிக்கை யற்றவரா என்றால், அப்படியும் இல்லை. காப்பியத்தின் இறுதியிலே

"தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்" என்று மல்லன்மா ஞாலத்தார்க்கு அறிவுரை கூறுகிறார். இதனால், அவருக்குத் தெய்வ நம்பிக்கை உண்டு என்பது புலனாகிறது.

ஐவகையான நிலத் தெய்வங்களை மக்கள் வழிபட்டதை சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஆசிரியர் காட்டுகிறார். அந்த நிலத் தெய்வங்கள் அல்லாத பொதுத் தெய்வமாக சிவபெருமானை அறிமுகப்படுத்துகிறார். சைவ சித்தாந்திகளைப் போன்று நிலத் தெய்வங்களுக் கெல்லாம் மேலான தெய்வம் என்றும் சிவபெருமானைச் சொல்லுகிறார். "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றும் கூறுகின்றார். இதனால், அவர் சிவபெருமானுக்கு சிலம்பின் தொடக்கத்திலே வாழ்த்துப் பாடியிருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது.

அப்படிச் செய்யாததற்கு ஒரு காரணம் உண்டு. சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவி மானிடப் பெண்ணாகப் பிறந்திருந்தாலும், கதையின் முடிவிலே உலகோர் தொழும் கற்புத் தெய்வமாகப் போகிறாள்.

காப்பியத்தின் தலைவியே ஒரு தெய்வமாதலால் இன்னொரு தெய்வத்திற்குக் காப்பியத்தின் தொடக்கத்திலே வாழ்த்துப் பாட அடிகள் விரும்பவில்லை எனலாம். முழுமுதற் கடவுளேயானாலும், பத்தினித் தெய்வத்தை விடவும் அத்தெய்வத்தை உயர்த்திச் சொல்வது முறையாகாதுதானே!

காப்பியத்தின் தொடக்கத்தில் கண்ணகித் தெய்வத்திற்கே வாழ்த்துப் பாடியிருக்கலாம். அப்படியும் பாடவில்லை. அதற்கும் காரணம் உண்டு. சிலப்பதிகாரக் காப்பியத்தின் முடிவில்தான் கண்ணகி தெய்வமாகிறாள். அதனால், கதையின் தொடக்கத்திலேயே அவளைத் தெய்வமாக ஏற்று வாழ்த்துப் பாடுவது முறையாகாதென்று இளங்கோ கருதியிருக்க வேண்டும்.

இந்தச் சிக்கலைச் சமாளிக்க இளங்கோ ஒரு புது வழியைக் கண்டு பிடித்தார். அது. திங்கள்-ஞாயிறு-மாமழை-மாநிலம் ஆகிய இயற்கைச் சக்திகளைப் போற்றி வழிபடுவதாகும்.

## சர்வ தேசிய கீதம்

இயற்கை வேறு தெய்வம் வேறு அல்ல என்பது நம் நாட்டு மக்களின் நம்பிக்கை. இளங்கோவடிகளும் "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று கூறி, எதிர் மறையில் தெய்வத்தைப் போற்றுகின்றார். ஞாயிறையும் மாமழையையும் தெய்வ சக்திகளாகவே கருதிப் போற்றிப் புகழ்கிறார். மண்ணும் இயற்கைதானே! அதையும் விட மன மில்லாமல், "பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்" என்று கூறி, நிலத்தையும் வழிபடுகிறார். இந்த இயற்கை வழி பாட்டிலே அரச வழிபாட்டையும் இணைத்திருக்கிறார். "திங்களைப் போற்றுகிறோம், ஏன் தெரியுமா? நம் சோழ மன்னனின் வெண் கொற்றக்குடைபோன்று இந்தஉலகத்தை அது காப்பாற்றுவதால்" என்கிறார். "ஞாயிறைப் போற்று கிறோம், ஏன் தெரியுமா? நம் சோழ மன்னனின் ஆக்ஞா சக்கரம் போன்று மேரு மலையை அது வலம் வருவதால்" என்கிறார்.

"பெரிய மழையைப் போற்றுகிறோம், ஏன் தெரியுமா? நம்முடைய சோழ மன்னனின் வள்ளண்மை போன்று வானி லிருந்து நீரை வழங்குவதால்" என்று கூறுகின்றார். பூம்புகா ரையும் சோழருடைய குலத்தோடு ஒப்பிட்டு போற்றிப் புகழ் கின்றார்.

சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திலுள்ள 19 வரிகள் கொண்ட பகுதியை சர்வ தேசியப் பாடல் என்று சொல்ல லாம். பிரபஞ்சம் முழுவதையும் இதிலே காட்டுகிறார் இளங்கோ.

திங்கள், ஞாயிறு, மாமழை, மாநிலம், மேருமலை, இமய மலை, பொதிகைமலை, பூம்புகார் ஆகியவற்றை யெல்லாம் 19 வரிகளிலே பாடி விடுகிறார்.

## உலகம் முழுவதுமே தாயகம்!

பூம்புகார் சோழ நாட்டிற்கு மட்டுமே தலைநகர் என்றா லும், இந்த மங்கல வாழ்த்திலே உலகப் பெருநகராகக் கொண்டுதான் அதனை வாழ்த்துகிறார்.

சோழன், சோழ நாட்டிற்கு—அதிகமாகச் சொன்னால், தமிழ் நாட்டிற்கு மட்டுந்தான் மன்னன். ஆனால், மங்கல வாழ்த்துப் பாட்டிலே உலக மன்னனாகவே கற்பனை செய்து கொண்டு அவனைப் போற்றுகின்றார்.

தமிழருடைய பண்பாடு உலகம் முழுவதனோடும் உறவு கொள்வதாகும்.

முதற் குறளில் "ஆதி பகவன் முதற்றே உலகு" என்கிறார் வள்ளுவர்.

"உலகம் உவப்ப" என்று தொடங்கி திருமுருகாற்றுப் படையைப் பாடினார் நக்கீரர்.

"உலகம் யாவையும்" என்று தொடங்கி இராம கதை யைப் பாடினார் கம்பர்.

"உலகெலாம்" என்று தொடங்கி திருத்தொண்டர் புராணத்தைப் பாடினார் சேக்கிழார்.

உலகம் முழுவதையும் தாயகமாகக் கொள்ளுவதே தமிழ ருடைய மதம். அதனாற்றான், புறநானூற்றுப் புலவரான கணியன் பூங்குன்றனார், "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முழங்கினார்.

பூங்குன்றனார் பாடியது ஒரே பாட்டுதான். அந்தப் பாட் டிலும் நம்முடைய நினைவிலே இருப்பது "யாதும் ஊரே;

யாவரும் கேளிர்" என்ற ஒரே வரிதான். அது அவரது பாட்டின் முதல் வரி. அடுத்த வரியை நாம் நினைவில் கொள்ள முடியாதபடி முதல் வரி ஒன்றே நம்முடைய நெஞ்சம் முழுவதிலும் நிறைந்திருக்கிறது. இப்படி உலகம் முழுவதையும் தாயகமாகக் காணும் தமிழர் பண்பாட்டை யொட்டித்தான் சிலப்பதிகாரத்தின் தொடக்க வரிகளிலே இயற்கையோடியைந்து இளங்கோ உலக வாழ்த்துப் பாடுகிறார்.

இனி, சிலப்பின் தொடக்கத்திலுள்ள—சர்வ தேசிய கீதமாக அமைகின்ற—பாடல் முழுவதையும் பார்ப்போம்:

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அம்கண் உலகளித்த லான்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்.

மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்.

பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!
வீங்குநீர் வேலி உலகிற்கு அவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்.

ஆங்கு,
பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்
பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே ஆயினும்
நடுக்கின்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கங் கூறார், உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே!

## கூறியது கூறல் ஏதனுல்?

"திங்களைப் போற்றுதும்" என்று சொன்ன அடிகள், அடுத்த பொருளுக்குப் போகாமல், திரும்பவும் ஒருமுறை "திங்களைப் போற்றுதும்" என்று சொன்னதையே சொல்லுகிருர். இப்படியே, "ஞாயிறு போற்றுதும்" என்பதையும் இரண்டு முறை சொல்லுகிருர். "மாமழை போற்றுதும்" என்றவர், திரும்பவும் அதையே சொல்லுகிருர். "பூம்புகார் போற்றுதும்" என்றவர், மறுமுறையும் அதையே சொல்லுகிருர்.

மனிதன் உணர்ச்சி வயப்படும்போது ஒருமுறை கூறியதையே திரும்பத் திரும்பக் கூறுவான். உணர்ச்சி வயப்படுவது, பக்தி மிகுதியாலும் நிகழலாம்; அன்பு மிகுதியாலும் நிகழலாம்; சினம் அதிகரிக்கும்போதும் ஏற்படலாம். இளங்கோவடிகள் திங்களையும், ஞாயிறையும், மாமழையையும், பூம்புகாரையும் கண்கண்ட தெய்வங்களாகக் கருதி மிகுந்த பக்தியோடு போற்றுகிருர்.

"திங்களைப் போற்றுதும்" என்று ஒருமுறை சொன்னவர் அடுத்த பொருளுக்குப் போகாமல், திரும்பவும் "திங்களைப் போற்றுதும்" என்று பக்தி மிகுதியால் உணர்ச்சி வயப்பட்டு கூறுகின்ருர். உணர்ச்சி கொண்டு வாழ்த்தும்போது "வாழ்க, வாழ்க" என்று இருமுறை சொல்கிறேம் அல்லவா! "வெல்க, வெல்க" என்றும் முழங்குகிறேம் அல்லவா! ஞாயிற்றையும் இருமுறை போற்றுகிருர். மாமழையையும் இரண்டு முறை போற்றுகிருர். பூம்புகாரையும் இப்படித்தான் போற்றுகிருர். சிலம்பிலே வேறு சில இடங்களிலும் பாத்திரங்கள் உணர்ச்சி வயப்படும்போது கூறியது கூறல் நிகழ்கின்றது. "மதுரையில் அரண்மனை வாயிலையணுகி, வாயிற் காவலனைக் கண்ட கண்ணகி, "வாயிலோயே, வாயிலோயே!" என்று இருமுறை கூப்பிடுகிருள். "இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள் கணவனையிழந்தாள் கடையகத்தாள்" என்று தன்னைப்

பற்றிச் சொல்லிவிட்டு, "எனது வரவை அரசனுக்கு அறிவிப்பாயே அறிவிப்பாயே" என்று கூறுகின்றாள். இப்படி, கூறியதையே கூறுவது உணர்ச்சி வயப்பட்டதன் விளைவாகும். இங்கே உணர்ச்சிக்குக் காரணம் சினம்.

கண்ணகியின் வரவை அறிவிக்க அரசனிடம் ஓடிய காவலன், "வாழி!" என்று ஒருமுறை வாழ்த்துகிறான். அத்துடன் நில்லாமல், "எங் கொற்கை வேந்தே வாழி!" என்று மறுமுறையும் வாழ்த்துகிறான். அதற்கு மேலும், "தென்னம் பொருப்பின் தலைவ வாழி!" என்று மூன்றாவது முறையாகவும் வாழ்த்துகிறான். "செழிய வாழி!" என்று நான்காவது முறையும் வாழ்த்துகிறான். மேலும், "தென்னவ வாழி!" என்று ஐந்தாவது முறையும் வாழ்த்துகிறான். இறுதியாக, "பழியொடு படராப் பஞ்சவ வாழி!" என்று ஆறாவது முறையாகவும் வாழ்த்துகிறான். இப்படி, வாயிற் காவலன் பலமுறை வாழ்த்தியதற்குக் காரணம், கண்ணகியின் தோற்றத்தைக் கண்டு அச்சம் கொண்டு, அவன் உணர்ச்சி வயப்பட்டதுதான். கண்ணகியின் வரவை மன்னனிடம் கூறும்போதும் "கணவனை யிழந்தாள் கடையகத்தாளே, கணவனை யிழந்தாள் கடையகத்தாளே!" என்று இருமுறை கூறுகின்றான்.

## கண்ணகி—கோவலன் திருமணம்

சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திலுள்ள மங்கல வாழ்த்துப்பாடலிலே கண்ணகி—கோவலன் திருமணம் கூறப்படுகிறது. "மங்கல வாழ்த்து" என்பதனை "மங்கலப் பாடல்" என்றும் கொள்ளலாம். வாழ்த்துப் பாடலானது இசைப் பாடல் போலவே அமைந்துள்ளதல்லவா!

கண்ணகியையும் கோவலனையும் முதன் முதலில் மணவறையில்தான் பார்க்கிறோம். அதனால், அவர்களுடைய திருமணம் வைதிகத் திருமணம் என்று சொல்லப்படுகிறது.

தொல்காப்பியத்திலே, ஒரு நம்பிக்கும் ஒரு நங்கைக்கு மான இல்வாழ்க்கை முதலில் களவியலிலேதான் தொடங்கு மென்கிறார் ஆசிரியர். அகநானூறு, கலித்தொகை, நற்றிணை போன்ற அகத்திணை இலக்கியங்களும் களவியல் காட்சி களையே காட்டுகின்றன.

இல்வாழ்க்கை தொடங்குவதற்கான பருவமடைந்து விட்ட ஒருவனும் ஒருத்தியும் தனிப்படச் சந்தித்து, பருவ ஒற்றுமை காரணமாக மன ஒற்றுமையும் ஏற்பட்டு, "உனக்கு நான்; எனக்கு நீ" என்று ஒருவருக்கொருவர் சொல்லி, வாழ்க்கை உடன்படிக்கை செய்து கொள்கின்றனர். பின்னர், அந்த உடன்படிக்கையைத் தங்கள் பெற்றோருக்கு அறிவித்து, அவர்களும் உடன்படுகிறபோது, அந்த நம்பிக்கும் நங்கைக் கும் திருமணம் நடக்கின்றது. பெற்றோர் உடன்படாது, அந் நங்கைக்கு மற்றொருவனை மணம் முடிக்க அவர்கள் முயல்கிற போது, அவள் தான் காதலித்த தலைவனுடன் பெற்றோர் அறியாமல் வேற்றூர் சென்று விடுகிறாள். சென்றவிடத்தில் அவர்களுக்குத் திருமணம் நிகழ்கிறது. இதுதான் களவியலில் தொடங்கும் இல்வாழ்க்கை.

தமிழர் வாழ்க்கை களவியலில் தொடங்கிக் கற்பியலிலே கலக்கும் என்கிறார் தொல்காப்பிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர். இந்த விதிக்கு விலக்காகக் கற்பியலில் தொடங்குவதும் உண்டு என்றும் கூறுகிறார்,

கண்ணகி—கோவலன் திருமணம் தொல்காப்பியர் சொல்லும் களவியல் விதிவழி நடந்ததல்ல. நச்சினார்க்கினியர் கூறும் விதி விலக்கின்படிக் கற்பியல்வழி நடந்ததாகும். அதாவது, திருமணத்திற்கு முன்பு கண்ணகியும் கோவலனும் சந்தித்ததில்லை.

'இது, தமிழர் மரபுவழிப்பட்ட திருமணம் அல்ல' என்று இந்நாளைய புலவர்களிலே சிலர் கூறுகின்றனர். "தமிழர்

திருமணத்திலே ஆரியர் வழக்கு புகுந்தது கண்ணகி—கோவலன் திருமணத்தில்தான்" என்று கூறுவோரும் உண்டு. இது, உண்மைக்கு மாறான கூற்றாகும்.

## கடவுளாதலால் களவியல் இல்லை!

சிலப்பதிகாரத்திற்கு முன்பு களவியல் விதிக்கு விலக்கான திருமணம் நடந்ததேயில்லையென்று சொல்வதற்கில்லை. அந்தணப் புரோகிதரைக் கொண்டு, மணவறையில் தீ வளர்த்து, அந்தத் தீயை மணமக்கள் வலம் வரும்படிச் செய்து திருமணத்தை நடத்துவது சிலப்பதிகாரத்தில்தான் முதன் முதலில் சொல்லப்பட்டிருக்கலாம். அதனாலேயே அந்தத் திருமண முறை சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்பு தமிழர் வாழ்வில் வழக்கத்தில் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

> "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்கிறார் காலத்தால் இளங்கோவடிகளுக்கு முற்பட்டவரான தொல்காப்பியர்.

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, கண்ணகியும் கோவலனும் தீவலம் செய்தது, 'ஐயர் யாத்த கரணம்' என்று தொல்காப்பியர் கூறுகிறாரே, அதன்வழிப்பட்டதுதான். இப்படி, கற்பியலில் தொடங்கும் வாழ்க்கை முறையும் தொல்காப்பியம் தோன்றுவதற்கு முன்பும் இருந்திருக்க வேண்டும்.

இளங்கோவடிகள் கண்ணகியையும் கோவலனையும் களவியற் காதலராக அறிமுகப்படுத்தாமல் முதன் முதலில் மணவறையில் சந்திக்கும் மணமக்களாக அறிமுகப்படுத்தக் காரணம் என்ன? ஒரு காரணத்தோடுதான் கண்ணகி—கோவலன் வாழ்க்கையை களவியலில் தொடங்காமல் கற்பியலில் தொடங்கி வைக்கிறார் அடிகள்.

கண்ணகி தன் வாழ்க்கையின் முடிவில் பத்தினித் தெய்வமாகப் போகிருள். ஆகவே, அவளைக் களவியலிலே புகுத்தி, திருமணத்திற்கு முன்பே உளப்புணர்ச்சிக்கும் உடற்புணர்ச்சிக்கும் உட்பட்டுவிட்டவளாகக் காட்ட அடிகள் விரும்பவில்லை. அப்படிக் காட்டுவது பத்தினித் தெய்வமாகப் போகும் பாத்திரத்திற்கு இழுக்கு தேடுவதாகுமென்று அவர் எண்ணியிருக்க வேண்டும். அதனுற்ருன், கண்ணகியையும் கோவலனையும் முதன்முதலில் களவியலுக்குப் புறம்பான காதலராக மணவறையில் அறிமுகப்படுத்தியிருக்கிருர்.

புகார்க் காண்டத்திலே கண்ணகிதேவி நான்கு இடங்களில்தான் வாய்திறந்து பேசுகின்ருள். தேவந்தியின் கருத்துப்படிக் காமன் கோயில் சென்று வழிபாடு நடத்த மறுக்கிருள். அச்செயல் "பீடு அன்று" என்று கூறுகின்ருள். தான் கண்ட கனவைத் தேவந்திக்குச் சொல்லுகின்ருள். அந்தக் கனவுச் செய்தி மேலே நிகழப்போகும் கதையின் சுருக்கமாகும். அதிலே, இல்வாழ்க்கை ஒன்றுமில்லை. அது, இனி மதுரையில் அவளுக்கு நேர இருக்கும் துன்பம் பற்றியது தான்.

பின்னர், கோவலன் தன்னையடைந்து, 'வறுமையுற்றேன்' என்று சொன்னபோது, "சிலம்புள கொண்ம்" என்று கூறும் இடத்தில் கண்ணகி மூன்ருவது முறையாகப் பேசுகின்ருள். இங்கும் அவளுடைய புனித வாய் இரண்டு சொற்களையே சிந்துகின்றது.

இதற்கு மேல் தன் கணவனுடன் புகாரை விட்டுச் செல்லும்போது, நகர எல்லையைக் கடப்பதற்கு முன்பே, "மதுரை மூதூர் யாது?" என்று கேட்டதோடு காார்க் காண்டத்தில் கண்ணகியின் பேச்சு முடிகின்றது.

## இல்வாழ்க்கைக்கு இருட்டடிப்பா?

புகார்க் காண்டத்தில் கண்ணகி பேசுவதற்கு இன்பங் கலந்த அவளது இல்வாழ்க்கைக்கும் தொடர்பு இல்லை.

துன்பந் தோய்ந்த மதுரைக் காண்ட நிகழ்ச்சிகளே நினைவூட்டப்படுகின்றன.

திருமணத்திற்குப் பின் கணவனோடு கூடிக் கண்ணகி இல்வாழ்க்கை நடத்தியதையே விரித்துக்கூற விரும்பாத இளங்கோவடிகள், திருமணத்துக்கு முன்பே காதலனோடு களவியல் வாழ்க்கை நடத்தியதாகக் கூறுவாரா?

சிலப்பதிகாரத்திலே வெறும் காப்பியத் தலைவியாக மட்டும் கண்ணகி படைக்கப்பட்டிருந்தால், அவளது வாழ்க்கை களவியலிலேயே தொடங்கியிருக்கும். கோவலனோடு அவள் நடத்திய இல்வாழ்க்கையும் விரிவாகக் கூறப்பட்டிருக்கும். மாறாக, அவள் பத்தினித் தெய்வமாக்கப்படவிருக்கிறாள். அதனால்தான் களவியலுக்கு அவள் விலக்காகி விட்டாள். அவளுடைய இல்வாழ்க்கைக்கும் இருட்டடிப்பு ஏற்பட்டுவிட்டது.

## களவியற் காதலரா?

சிலப்பதிகாரத்தில் முதன் முதலாகக் கண்ணகியையும் கோவலனையும் அறிமுகப்படுத்துமிடத்து, "பெருங்குணத்துக் காதலாள்"—", காதலால் கொண்டேத்துங் கிழமை யான்" என்று இளங்கோவடிகள் வருணிக்கிறார். இதில் வரும் "காதலாள்" "காதலான்" என்னும் சொற்களை வைத்துக் கொண்டு, கண்ணகியும் கோவலனும் தங்கள் திருமணத்திற்கு முன்பே களவியற் காதலர்களாக இருந்திருக்க வேண்டுமென்று பெரும் புலவர் ஒருவர் கூறுகின்றார்.

உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஒருவர், கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணத்திற்கு முன்பே களவியல் நெறிப்படி உடற்புணர்ச்சிகூட ஏற்பட்டுவிட்டதென்ற வகையில் கற்பனை செய்திருக்கின்றார். களவியலில் வாழ்க்கை தொடங்கும் இலக்கிய மரபுக்கு மாறாகக் கண்ணகி—கோவலன் உறவு கற்பியலில் தொடங்குவதை ஒரு குறையாகக் கருதியே அந்த இரண்டு அறிஞர்களும் அவர்களைக் களவியற் காதலர்களாகச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார்கள். இது, இளங்கோவின் எண்ணத்திற்கு எதிரானதாகும்.

திருமணத்தின்போது கண்ணகிக்கு வயது 12 என்றும், கோவலனுக்கு வயது 16 என்றும் இளங்கோவடிகள் கூறுகின்றார். அந்தக் காலத்தில் மணமக்களுக்குரிய வயது வரம்பு பன்னிரண்டும் பதினாறுமாகவே இருந்ததாகத் தெரிகின்றது. இன்றைக்கு அப்படி ஒரு திருமணம் நடப்பது சட்ட விரோதமாகும். உண்மையில் இந்தப் பருவத்திற்குரிய மணமக்கள் இல்வாழ்க்கையில் ஈடுபடுவதற்குரிய மனப் பக்குவத்தையும், உடல் பலத்தையும் கூடப் பெற்றிருப்பதில்லை.

## தமிழர் திருமணமா?

கண்ணகி—கோவலன் காலத்திலே அவர்களுடைய தாயகமாக விளங்கிய சோழ நாடு சோற்றுப் பஞ்சம் இல்லாததாக இருந்தது. "சோழ வளநாடு சோறுடைத்து" என்ற சிறப்பையும் பெற்றிருந்தது. அந்தச் சோழ நாட்டிலே பால் பஞ்சமும் இருக்கவில்லை. பசுக்களை வருணிக்குமிடத்து, "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்" என்றும், "நினைத்து முலைவழியே நின்று பால் சோர நனைத்தில்லம் சேறாக்கும் பசுக்கள்" என்றும் கூறுகின்றார் ஆண்டாள். வளமுள்ள நாட்டிலே—காலத்திலே வாழ்ந்தவர்களாதலால், 12 வயதிலேயே கண்ணகியும், 16 வயதிலேயே கோவலனும் இல்வாழ்க்கையைத் தொடங்குவதற்கான மன நலத்தையும், உடல் பலத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

சேர நாட்டின் இளவரசரான இளங்கோவடிகள் பால்ய விவாகத் தம்பதிகளைத் தமது காப்பியத்தின் தலைவனாகவும், தலைவியாகவும் படைத்திருக்க மாட்டார் அல்லவா? திருமணத்தை அடுத்து கண்ணகியையும் கோவலனையும் அவர்களுடைய பெற்றோர் தனிக்குடித்தனம் வைத்தனர் என்பதையும் நாம் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

கண்ணகி—கோவலன் திருமணத்தில் சடங்குகள் நிகழ்ந்தன. மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, மணமக்கள்

தீ வலம் வந்தனர். மணவறையிலே அந்தணர் ஒருவர் தீ வளர்ப்பதும், மணமக்கள் அந்தத் தீயை வலம் வருவதும் முதன் முதலாகச் சிலப்பதிகாரத்தில்தான் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. இதனால், இந்தச் சடங்குகள் தமிழருக்கு உரியவையல்ல என்று பேசப்படுகின்றது. திருமணத்தைக் காட்சிப்படுத்தும் வகையில் வருணிப்பது முதன் முதலில் சிலப்பதிகாரத்தில்தான் காணப்படுகிறது. சிலம்பு நாடகக் காப்பியமாதலால், திருமணத்தைக் காட்சிப் படுத்தியிருக்கிறார் ஆசிரியர். சிலம்புக்கு முற்பட்ட இலக்கியங்களிலே மணமக்களை மணவறையில் வைத்து, அங்கு நிகழும் சடங்குகள் விரிவாகக் கூறப்படாததனாலேயே சிலம்பில் சொல்லப்படும் திருமணச் சடங்குகள் தமிழருக்குரியவை யல்லவென்றோ, ஆரியருக்குரியவை யென்றோ சொல்லி விடுவதற்கில்லை.

இன்னொரு காரணத்திற்காகவும் திருமணத்தில் தீ வளர்த்து மணமக்கள் அதை வலம் வருவதைத் தமிழ் மக்கள் முணு முணுக்காமல் ஏற்கவேண்டி யிருக்கிறது. இந்தச் சடங்கு ஆரியரிடமிருந்து வந்ததுதான் என்றாலும், அதனை நாம் வரவேற்கலாம். தீ வலம் வருவதும், அதையொட்டி நிகழும் வேறு சில சடங்குகளும் இந்துக்கள் அனைவருக்கும் உரிய பொதுச்சடங்குகளாகிவிட்டன. அந்தப் பொதுமையை அழிக்கத் தேவையில்லை. தேசிய ஒருமைப்பாட்டை நாம் உண்மையிலேயே ஏற்பவர்களானால், தமிழரையும் பிற இனங்களைச் சார்ந்தவர்களையும் ஒருமைப்படுத்தும் பழக்க வழக்கங்களை—அவை மதவழிப்பட்டவையானாலும்—அழித்துவிடக் கூடாது; போற்றி வரவேண்டும். இப்படிப்பட்ட கலாசார அடிப்படையில் ஏற்படும் ஒருமைப்பாடுதான் உறுதியானதாக இருக்கும்.

## தீயை வழிபடும் தீ!

கண்ணகியின் கையைப் பிடித்துக் கொண்டு கோவலன் தீ வலம் வந்தான் என்று கூறும் இளங்கோவடிகள், "அதனைக்

காண்பார்கள் நோன்பு என்னே?" என்றும் வியப்போடு வினா எழுப்புகிறார்.

இளங்கோ, அரசையும் அரண்மனை வாழ்வையும் துறந்தவர்; பெண் இன்பம் உள்பட வாழ்க்கை இன்பங்கள் அனைத்தையும் துறந்தவர். அப்படிப்பட்டவர் கண்ணகி தீ வலம் வரும் காட்சியைக் கண்டு வியப்பானேன்? "அதைக் கண்டவர்கள் முற்பிறப்பில் செய்த தவம்தான் என்னே!" என்று வியப்புடன் வினா எழுப்புவானேன்? அடிகளின் வியப்பிலும் வினாவிலும் ஏதோ ஒரு பொருள் இருக்க வேண்டும். அந்தப் பொருள் என்ன?

கற்பை நெருப்போடு ஒப்பிடுவது உண்டு. கற்பைக் கடைப்பிடித்து வாழும் பத்தினியரும் நெருப்புக்கு ஒப்பானவரே. அதனாற்றான், கண்ணகியை "கற்புக் கனலி" என்கின்றனர். அந்தக் கற்புக்கனலி அந்தணப் புரோகிதர் வளர்த்த சிறு தீயை வலம் வருகிறாள் என்றால், அது வியப்புக்குரிய நிகழ்ச்சியாகப் படுகிறது இளங்கோவுக்கு. ஒரு தீ இன்னொரு தீயை வலம் வருவது அவருக்கு விந்தையாகப் படுகிறது.

நாளை மதுரை மாநகரிலே அக்கினிக் கடவுளே கண்ணகி முன் பயபக்தியுடன் தோன்றி,

"மாபத்தினி! நின்னை
மாணப் பிழைத்த நாள்
பாயெரி இந்தப்
பதியூட்ட, பண்டேயோர்
ஏவல் உடையேனால்;
யார் பிழைப்பார், ஈங்கு?"

என்று ஏவல் கேட்கப் போகின்றது. அப்படிப்பட்ட பத்தினித் தெய்வம் அந்தணர் வளர்த்த சிறு தீயை வலம் வருவது விந்தைதானே! இதை நினைக்கும்போது கண்ணகி தீ

வலம் வந்த காட்சியைக் காணக் கொடுத்து வைத்தவர்களின் பேற்றினை நினைத்து இளங்கோ பெருமூச்சு விடுகிறார்.

கதைப்போக்கினை யொட்டி, "காண்பார்கள் நோன்பு என்னை?" என்று நிகழ் காலத்தால் கூறியிருப்பினும், கண்ணகி கோவலன் திருமணம் இளங்கோவைப் பொறுத்தவரையில் கடந்துபோன காலத்தின் நிகழ்ச்சிதானே! அதனாற்றான், அந்தத் திருமணத்தைக் கண்டவர்களைத் தன்னிலிருந்து வேறுபடுத்தி, "அவர்கள் செய்த நோன்பு என்னே!" என்று வியக்கின்றார்.

## மேருவும் இமயமும் ஒன்று?

தமிழர் வீடுகளில் நடைபெறும் திருமணங்களிலே, திருமணமாகாத — அதற்கான பருவத்தை யடையாத— சிறுமியர், திருவிளக்கு, முளைக்குடம், பாலிகை முதலிய வற்றைக் கைகளிலே தாங்கி, மணமக்களுடன் சேர்ந்து, மணவறையை வலம் வந்து, அவர்களைப் பள்ளியறையிலே கொண்டு போய் விடுவது வழக்கம். இந்தச் சடங்கு கண்ணகி —கோவலன் திருமணத்திலும் நிகழ்கின்றது. இதனை,

> "விளக்கினர்: கலத்தினர், விரிந்த பாலிகை
> முளைக்குட நிறையினர், முகிழ்த்த மூரலர்
> போதொடு விரிகூந்தல் பொலன்நறும் கொடியன்னார்"

என்ற வரிகளிலே பார்க்கிறோம். மணமக்களைப் பள்ளியறை சேர்த்த இளம் பெண்கள்,

> "காதலற் பிரியாமல்: கவவுக் கை ஞெகிழாமல்
> 'தீது அறுக' என ஏத்தி, சின்மலர் கொடு தூவி
> அம்கண் உலகின்: அருந்ததி அன்னாளை
> மங்கல நல் அமளி ஏற்றினார்..."

என்கிறார் இளங்கோ. இந்த வரிகளிலே, "காதலர்களே! நீங்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து வாழுங்கள்; கை

கோத்து வாழுங்கள்!" என்று சொல்வதற்குப் பதிலாக, "காதலர்களே! பிரியாமல் வாழுங்கள்! கோத்த கையை நெகிழவிடாமல் வாழுங்கள்! உங்களுக்கு நேரக்கூடிய தீது கெடுவதாக!" என்று வாழ்த்துகின்றனர்.

இது, அமங்கலம் கலந்த மங்கல வாழ்த்து என்று சொல்லலாம். இனி நிகழப் போவதை சிலம்பைப் படிப்பவர்களுக்கு முன்கூட்டியே நினைப்பூட்டுவதற்காக இப்படி அமங்கலா மங்கல வாழ்த்தைப் பாடினார் இளங்கோ.

பள்ளியறை சேர்ந்த மணமக்களுக்கு வாழ்த்துக் கூறும் சிறுமியர் ஒரு கோரிக்கையையும் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் காலத்திலே சோழ நாட்டிற்கு ஒரு குறை இருந்தது. அது என்ன? சோறில்லாக் குறையா? தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான சோழ நாட்டில் வாழ்ந்த மக்களுக்குச் சோற்றுப் பஞ்சம் ஏது? பின்னே, பால் பஞ்சமா? கன்றை நினைத்துப் பால் சொரிந்து, ஆயர்களுடைய வீடுகளைச் சேறாக்கும் பசுக்கள் நிறைந்த நாட்டிலே பால் பஞ்சம் ஏது? மற்றென்ன, பகை பயமா? "நாளில மதனில் உண்டு போர் என நவிலின் அச்சொல் தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர்', ஆன வீர மறவர்களைப் படைத்த சோழ நாட்டுக்குப் பகை பயந்தான் ஏது?

## இமயத்தில் புலிக்கொடி

முன் எப்போதோ ஒரு முறை சோழ மன்னன் கரிகால் வளவன் இமய மலையைக் கடந்து செல்ல விரும்பி, அதற்கு அப்பாலுள்ள நாடுகளையும் தன் புலிக் கொடியின் கீழ் கொண்டு வர நினைத்துப் படைதிரட்டிப் புறப்பட்டுச் சென்றானாம். வழியில் வடபுலத்து மன்னர்களிலே சிலர் அவனுக்குப் பரிசுகள் தந்து வழியனுப்பி வைத்தனர். வேறு சிலர் வழிவிட மறுத்து வளவனுடன் போர் செய்தனர். அவர்களை வென்று, அவன் மேலே சென்றான். கரிகால்

வளவன் இமயப் பிடரிவரை ஏறினன். அதற்குமேல் போக அவனாலும் அவன் படை வீரர்களாலும் இயலவில்லை. இயற்கையின் ஆற்றல் அவர்களைத் தடுத்தது. ஆயினும், அவன் சென்ற இடம்—அவனைத் திருப்பியனுப்பிய இடம்—இது என்று பிற்காலத் தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்காக இமயத்தின் பிடரியிலே தன் புலிச் சின்னத்தைப் பொறித்து விட்டுத் திரும்பினன். தங்கள் மன்னன் இமயத்தைக் கடந்து செல்வதற்கு எடுத்த முயற்சியிலே அவன் வெற்றி பெறாமல் போனது சோழ நாட்டு ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்கும் ஒரு குறையாக இருந்தது. அதனால், கண்ணகி—கோவலனாகிய மணமக்களைப் பார்த்து, "இமயப் பிடரியிலுள்ள புலிச் சின்னத்தை, உச்சியையும் கடந்து கொண்டு செல்லும் வீர மகனைப் பெற்றெடுப்பீர்களாக!" என்று கூறி, மணமக்களை வாழ்த்துகின்றனர்.

"......தங்கிய
இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொன்கோட்டு உழையதா, எப்பாலும்
செருமிகு சினவேற் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே."

இப்படிப் பாடியவர்கள் யார்? திருமணப் பருவத்தை யடையாத சின்னஞ் சிறுமியர்கள். யாரைப் பார்த்துப் பாடுகிறார்கள்? திரைகடலோடித் திரவியம் தேடுவதையே தொழிலாகக் கொண்ட வணிக மரபிற் பிறந்த மணமக்களைப் பார்த்துப் பாடுகிறார்கள். பாட்டின் பொருள் என்ன? "சோழ சாம்ராஜ்யத்தின் கீழ் இமயம் வரையுள்ள இந்தியா முழுவதுமே அல்லாமல், இமயத்திற்கு அப்பாலுள்ள உலக நாடுகள் அனைத்துமே வந்துவிட வேண்டும். அதனைச் சாதிக்கும் வீர மகனைப் பெற்றெடுக்கவேண்டும்" என்பதாம்.

தேச பக்திக்கு வணிகர்களும் விலக்கல்ல என்ற கருத்தை இளங்கோ சொல்லாமல் சொல்லுகிறார். நாடு காக்கும்

கடமை நால் வருணத்தினருக்கும் உண்டு என்பது தமிழர் கொள்கை.

## பள்ளியறை வாழ்த்து

வாழ்த்துக் காதையிலே, இமயத்தின் உச்சியைப் "பொன் கோடு" என்கிறார் இளங்கோ. மேரு மலையைக் கதிரவன் வலம் வருவதாகவும் கூறுகிறார். மேரு மலை வேறு: இமயமலை வேறா? இரண்டும் ஒன்றா? இமயத்தின் உச்சிதான்—ஒரு பகுதிதான்—மேரு மலையா? இந்த வினாக்களுக்கு விடைகாண தமிழிலுள்ள இலக்கியங்களையெல்லாம் ஆராய்ந்தும் தெளிவான விடை கிடைக்கவில்லை. புராணம் ஒருபோக்கில் விடை தருகிறது. விஞ்ஞானம் வேறு போக்கில் விடை தருகின்றது. மேரு மலையை பொன்மலை என்கிறது புராணம். அது கடற் பிரதேசத்தில் இருப்பதாகவும் சொல்லுகிறது. சிலம்பிலேயும் ஆய்ச்சியர் குரவையிலே,

> "வடவரையை மத்தாக்கி
> வாசுகியை நாணாக்கி
> கடல்வண்ணன் பண்டொருநாள்
> கடல்வயிறு கலக்கினையே"

என்று வரும் வரிகளிலே மேரு மலையானது கடற்பிரதேசத்தில் உள்ளதென்றே கூறப்படுகின்றது. இமயத்தின் உச்சியைப் "பொன் கோடு" என்று சொவ்வதால், "அதுதானோ மேரு மலை!" என்ற மயக்கம் ஏற்படுகின்றது. பனி தவழும் காரணத்தால் வெள்ளை நிறம் காட்டும் இமயத்தின் சிகரம். அதனால், "வெள்ளி மலை" என்றும் அதனைச் சொல்வதுண்டு. சிலம்பிலும் "வெள்ளி மால் வரை" — "வெள்ளியம் பெருமலை" என்றெல்லாம் இளங்கோவும் கூறுகிறார்.

"பொன்" என்பது பொதுச் சொல். 'வெண் பொன்' என்றால், வெள்ளியைக் குறிக்கும். 'கரும் பொன்' என்றால், இரும்பைக் குறிக்கும். 'செம் பொன்' என்றால்தான் தங்கத்

தைக் குறிக்கும். இமயத்தின் சிகரத்தைப் பொன் கோடு என்று இளங்கோ கூறியது, வெண் பொன்—வெள்ளி மலை—என்ற பொருளில்தான். ஆகவே, இமயமலை வேறு, மேரு மலை வேறு என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது.

சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திலுள்ள "மங்கல வாழ்த்"திலே மணமக்களான கண்ணகி—கோவலன் பற்றி விவரமாகக் கூறுகிறார் ஆசிரியர். அவர்கள் திருமணத்தில் நடந்த சடங்குகளையும் விரிவாக வருணிக்கின்றார்.

கண்ணகி—கோவலன் பெற்றோர், மணமக்களுடைய வயது, அவர்களுக்குத் திருமணம் நடந்த நாள், நட்சத்திரம், திருமணத்திற்கு முன் நடைபெறும் தாலி ஊர்வலம், திருமணத்தை நடத்தி வைத்த புரோகிதர், மணமக்கள் தீ வலம் வருதல், இளம் பெண்கள் திருவிளக்கு—பாலி—முளைக் குடம் ஆகியவற்றை ஏந்திய மணமக்களைப் பின் தொடர்தல். மணமக்களைப் பள்ளியறையிலே சேர்த்தல், அங்கு அவர்களுக்கு இளம் பெண்கள் வாழ்த்துக் கூறல் ஆகியவற்றையெல்லாம் ஆசிரியர் நமக்கு அறிவிக்கின்றார்.

காப்பிய நாயக—நாயகியரின் திருமணம்பற்றி இவ்வளவு விரிவாகக் கூறும் சிலப்பிற்கு முற்பட்ட இலக்கியம் தமிழிலே வேறு எதுவும் இல்லை. இந்தத் திருமணத்தைத் தமிழர் மரபுக்கு மாறானது என்று சொல்லி விட்டால், அப்புறம் தமிழர் மரபோடு இயைந்த திருமணந்தான் எதுவோ? அதிலே தமிழினத்தாரைச் சூன்யத்திலா விட்டு வைப்பது? கோவலன்—கண்ணகி திருமணத்திலே ஆரிய நாகரிகக் கலப்பும் இருக்கலாம். உலகில் கலப்பு இல்லாதநாகரிகம்தான் ஏது?

## முதலிரவு

"மங்கல வாழ்த்தை யடுத்துள்ள மனையறம் படுத்த காதையிலே கண்ணகி—கோவலன் இல்வாழ்க்கையின்

தொடக்கம் கூறப்படுகிறது. அதற்குமேல் உள்ள காதைகளில் அவர்களுடைய இல்வாழ்க்கை நல்வாழ்க்கை எனத்தக்க வகையில் இளங்கோவடிகளால் கூறப்படவில்லை. கண்ணகி—கோவலன் இல்வாழ்க்கையில் முதல் இரவு நிகழ்ச்சி மட்டுமே மனையறம்படுத்த காதையில் வருணிக்கப் படுகிறது. அவர்களுடைய இல்வாழ்க்கையில் முதலிரவே கடைசி இரவு ஆகிவிடவில்லை. முதலிரவுக்குப் பின்னும் அவர்கள் சில ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்தினர். ஆனால், அதை விவரிக்காமல் விட்டு விட்டார் இளங்கோ. அதற்குக் காரணம் உண்டு.

இல்வாழ்க்கை அறங்களைக் கண்ணகி—கோவலன் மூலம் கூறுவதற்காக இளங்கோ சிலம்பைப் படைக்கவில்லை. அவளை வெறும் பத்தினியாக அல்லாமல், வீர பத்தினியாக, பாரோர் வழிபடும் பத்தினித் தெய்வமாக அறிமுகப்படுத்தவே படைத்தார். அதனாற்றான், கண்ணகி—கோவலன் இல் வாழ்க்கையை அவர் விவரிக்காமல் விட்டுவிட்டார். இதை உணராமல், "கோவலனைக் கவரும் வகையில் காதல் வாழ்க்கை நடத்த கண்ணகிக்குத் தெரிந்திருக்கவில்லை, பள்ளியறையிலே ஊடல் இன்பம் தருவதற்கான காதலுணர்வு அவளுக்கு இருக்கவில்லை. அவள் ஒரு மக்குபோல—மண்ணாங் கட்டிபோல இருந்திருக்கிறாள். அதனாற்றான், கோவலன் அவளுடன் வாழத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே அவளை விட்டுப் பிரிந்து மாதவியிடம் போய்விட்டான்" என்றெல்லாம் கூறுகின்றனர். புலவர்களிலேயும் சிலர் இப்படிக் கூறுகின்றனர்.

## காமனும் ரதியும்!

கண்ணகி—கோவலன் இல்வாழ்க்கையை ஆசிரியர் விரிவாகக் கூறாததாலேயே அவர்கள் மனம் ஒத்து வாழவில்லை என்ற முடிவுக்கு வந்து விடுவதா? அப்படியொரு தவறான எண்ணம் வந்து விடுமோ என்று ஐயப்பட்டுத்தான் கண்ணகி

யோடு கூடி நடத்திய இல்வாழ்க்கையிலே கோவலனுக்கு "யாண்டு சில கழிந்தன" என்று கூறியிருக்கிறார் சிலப்பதிகார ஆசிரியர். அந்த யாண்டுகள் எப்படிக் கழிந்தன என்பதையும் மனையறம்படுத்த காதையின் இறுதியிலே ஒரு வெண்பாவில் விளக்கியுள்ளார். அந்த வெண்பாவையும் பார்ப்போம்:

**தூமப்பணிக ளொன்றித் தோய்ந்தாலென வொருவார்**
**காமர் மனைவியெனக் கைகலந்து - நாமம்**
**தொலையாத இன்பமெலாந் துன்னினார்; மண்மேல்**
**நிலையாமை கண்டவர்போல் நின்று.**

இந்த வெண்பாவைப் படித்தால் கோவலனுடன் கூடி கண்ணகி நடத்திய இல்வாழ்க்கையிலே அவனுக்கு ஊடல் இன்பத்தையும் அவள் தந்திருக்கிறாள் என்பது புரிகிறது. "நாமந் தொலையாத இன்பமெலாம்" என்று இளங்கோ கூறுவதன் பொருள் என்ன? இன்ப வகைகள் எவ்வளவு உண்டோ, அவ்வளவையும் அவர்கள் அனுபவித்தார்கள் என்பதுதானே! இதிலே, பள்ளியறையில் கோவலனுக்குக் கண்ணகி தந்த ஊடல் இன்பமும் சேர்ந்ததுதானே!

காமத்திலே கோவலன் மன்மதனாக இருந்தான் என்றால், அதிலே அவனோடு போட்டியிடுவதில் கண்ணகி ரதியாக விளங்கினாளாம். இதனை, "காமர்—மனைவியெனக் கைகலந்து வாழ்ந்தார்கள்" என்ற வரியிலே இளங்கோ கூறுகின்றார்.

காமனையும் ரதியையும் உவமை சொல்லிவிட்ட பின்னர் சிற்றின்பம் துய்ப்பதிலே கண்ணகி—கோவலரிடையில் ஏற்றத் தாழ்வு காண முடியுமா? இதை விடவும் எளிதாக நமக்கு விளக்கும் பொருட்டு இன்னொரு உவமையையும் இளங்கோ தருகிறார். அதாவது, "தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தாலென அவர்கள் இன்பந் துய்த்தார்கள்" என்கிறார். "தூமப் பணிகள்" என்னும் சொல்லுக்கு "இரண்டு பாம்புகள்" என்பது பொருள்.

இரண்டு பாம்புகள் ஒன்றை யொன்று தழுவி—ஒன்றி லிருந்து மற்றொன்றைப் பிரித்தெடுக்க முடியாதபடி பிணைந்து-இன்பம் துய்த்தாற்போல, கண்ணகியும் கோவலனும் காதல் இன்பத்தை அனுபவித்தார்களாம்! இதனாலும், கோவலனுக்கு இன்பம் தருவதிலே கண்ணகி பின் தங்கிவிடவில்லை என்பது புலனாகிறது.

அவர்களுடைய இல்வாழ்க்கையை விவரமாகக் கூறத் தவறிய இளங்கோ முதல் இரவு சந்திப்பிலே நிகழ்ந்தவற்றை மட்டும் கொஞ்சம் விவரமாகவே கூறியிருக்கிறாரே, ஏன்?

"இல்வாழ்க்கை" என்பது பள்ளியறை நிகழ்ச்சி மட்டுமல்ல; அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஒப்பலும், துறவோர்க்கு எதிர்தலும், விருந்து எதிர்கோடலும் ஒருவனும் ஒருத்தியும் கூடி நடத்தும் இல்வாழ்க்கையின் சிறந்த நெறிகளாகும். இவற்றை விரிவாகக் கூறாமல் விட்ட அடிகள் திருமணத்தையடுத்து நடந்த முதல் இரவு சந்திப்பை மட்டும் விரிவாகக் கூறுவானேன்? படிப்போர்க்குக் காமச்சுவையை வழங்குவதற்காகவா? இல்லை. அதைவிடவும் புனிதமான ஒன்றை நமக்குப் புலப்படுத்துவதற்காகத்தான் பள்ளியறையில் கண்ணகியும் கோவலனும் சந்தித்ததை விரிவாகக் கூறியிருக்கிறார். அது என்ன?

## வேயா மாடத்தில் காதலர்!

வணிக வருணத்திலே—அவர்களிலும், கடலோடி வாணிபத்தில் தலை சிறந்து விளங்குகின்ற குடும்பங்களிலே—அரச குடும்பத்தோடு ஒப்பிட்டுச் சொல்லத்தக்க நிலையிலே பிறந்தவர்கள் நம் பூம்புகார்க் காதலர்கள். அதனால், ஏழு அடுக்குகளைக் கொண்ட மாளிகையிலே நான்காம் அடுக்கில் குடியமர்த்தப்படுகின்றனர்.

ஏழு அடுக்குகளைக் கொண்ட மாளிகைகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் பூம்புகார், மதுரை, வஞ்சி போன்ற பெரு நகரங்களிலே ஏராளமாக இருந்தன என்று அறிகிறோம். இதனால், கட்டிடக் கலையில் அந்நாளைய தமிழர் திறமை பெற்றிருந்தனர் என்பது புலனாகிறது.

ஏழு அடுக்குகளிலே ஏழாவது அடுக்குக்கு "முகில் தோய் மாடம்" என்று பெயர் சொல்கின்றன சங்க இலக்கியங்கள். "வேயா மாடம்" என்கின்றார் இளங்கோ. "கூரை வேயாமல் விடப்பட்டுள்ள திறந்தவெளி" என்பது பொருள். கூரை வேய்ந்திருக்க வேண்டும். ஆனால், ஏதோ ஒரு பயன் கருதி வேயாமல் விடப்பட்டிருக்கிறது. அதனாற்றான், "வேயா மாடம்" என்று பெயர் பெற்றது. "வேயா மாடம்"— எவ்வளவு சுவையான சொற்றொடர்!

எழுநிலை மாடத்துள் ஆறாவது நிலையானது கோடைக் காலத்தில் வெளியிலிருந்து வரும் தென்றல் காற்றை மாளிகைக்குள் அதிகமாகப் புகுத்துவதற்கேற்பப் பெரிய கண்களையுடைய சாளரங்களைக் கொண்டதாம்.

ஐந்தாவது மாடம் குளிர் காலத்தில் வாடைக் காற்று அதிகமாக மாளிகைக்குள் புகாதபடி தடுத்து—குறைத்து—அனுப்புவதற்கேற்ப மான் கண் போன்ற சிறிய துவாரங்களையுடைய சாளரங்களைக் கொண்டதாம். மேலிருந்து கீழ்நோக்கி எண்ணினாலும், கீழிருந்து மேல்நோக்கி எண்ணினாலும் நான்காவதாக உள்ள நடுநிலை மாடத்திலே பூம்புகார்க் காதலர்களின் முதல் இரவு சந்திப்பு நிகழ்கிறது.

அந்த நாலாவது நிலையிலே திருமணத்திற்குப்பின் காதல் வாழ்க்கை தொடங்கும் கண்ணகியையும் கோவலனையும் பார்ப்போம்.

## பள்ளியறை வருணனை !

தென்றல் காற்றானது பல்வேறு மலர்களிலிருந்து வேறு பாடுடைய வாசனைகளைத் திரட்டிக் கொண்டு வந்து பூம் புகார்க் காதலர்களின் பள்ளியறைக்குள் புகுத்தி, அந்த அறைக்கு மணம் ஊட்டியது! பத்தினித் தெய்வமாகப் போகிற உத்தமியாள் பள்ளியறை புகும் முதல் நாளாதலால் இயற்கைச் சக்தியாகிய தென்றலும் அவளுக்கு ஏவல் செய் கிறது.

பள்ளியறையில் கட்டிலின் மீது பலவிதமான நிறங்களை யும் வாசங்களையும் கொண்ட மலர்கள் பரப்பப்பட்டிருக் கின்றன. காதல் இன்பம் துய்க்கும் புதுத் தம்பதிகளுக்கு ஏவல் செய்யும் பொருட்டு காமதேவனும் அங்கு முன் கூட்டியே குடியேறி விட்டான். இதெல்லாம் பள்ளியறை பற்றி இளங்கோவின் வருணனைகள்!

பள்ளியறையிலே கண்ணகியும் கோவலனும் உடல் இன் பம் துய்த்ததனை நேரடியாகவும் வெளிப்படையாகவும் கூறத் தயங்குகின்றது இளங்கோவின் எழுதுகோல். அவர், இளந் துறவி! அவரால் வருணிக்கப்படும் காப்பியத்தலைவி பத்தினித் தெய்வம்! இளங்கோவால் பயன்படுத்தப்பெறும் தமிழ்மொழி ஒழுக்கத்தை வளர்க்கும் உயர் கருவி. அதனால், கண்ணகியும் கோவலனும் உடல் இன்பம் துய்த்ததனை காம ரசம் கசியும் வகையிலே இளங்கோ வருணிக்கவில்லை. அதனை, அடிகள் ஒரு உவமானத்தின் மூலம் விளக்குகிறார். ‘கோவலன் மார்பி லிருந்த மாலையும் கண்ணகியின் மார்பை அலங்கரித்த மாலை யும் ஒன்றையொன்று தழுவின” என்று கூறி, அவற்றை யணிந்திருந்த மணமக்களின் உடல்கள் தழுவியதை உணர்த்துகிறார்.

## கோவலன் பேசுகிறான்!

உடல் இன்பம் துய்த்த பின்பு கண்ணகியும் கோவலனும் வேயா மாடத்திற்குச் செல்கின்றனர். காதலர்கள் நிலவுக்

காலத்திலே தங்கியிருந்து பரஸ்பரம் உரையாடி இன்பம் துய்ப்பதற்காகவே அந்நாளைய எழுநிலை மாடங்களிலே ஏழாவது நிலை வேயாமல் விடப்பட்டது. அதனால், சிலப்பதி காரக் காதலர்களும் நிலவுப்பயன் துய்க்க வேயா மாடத்தை யடைந்தனர். அங்கு, கண்ணகியின்பால் கொண்ட காதல் காரணமாக அவளுடைய உடல் உறுப்புக்களை வருணிக் கின்றான் கோவலன். அதனை,

**"தீராக் காதலின் திருமுகம் நோக்கி,**
**கோவலன் கூறும்ஓர் குறியாக் கட்டுரை"**

(சிலம்பு. 2: 104-5)

என்கிறார் இளங்கோ. "குறியாக் கட்டுரை" என்பது கோவல னுடைய காதல் வார்த்தைகளில் உண்மைத்தன்மை குறை வாக இருப்பதைச் சுட்டிக் காட்டுவதாகும். கண்ணகியைப் பற்றிச் சொல்ல வேண்டியவற்றை முன்கூட்டி நினைத்துப் பாராமலே, அதைப்பற்றி ஒரு திட்டம் இல்லாமலே மனதில் பட்டவற்றை யெல்லாம் கூறி மகிழ்கிறான் கோவலன்.

கண்ணகியின் நெற்றியை சிவபெருமான் சடையிலுள்ள பிறைச் சந்திரனோடு ஒப்பிடுகின்றான். வாழ்த்துக் காதையி லேயே, "போதிலார் திருவினாள் புகழுடை வடிவினள்" என்று கூறி, கண்ணகியை லட்சுமியோடு ஒப்பிட்டார் கவிஞர். கோவலன் அவளை இலக்குமியாகவே கருதிவிட்டான். இலக் குமி திருப்பாற் கடலில் பிறந்தபோது, அவளுடன் சேர்ந்து பிறந்தது சந்திரன். அந்த உறவையும், அதனால் அவளுக்கு ஏற்பட்டுள்ள உரிமையையும் கருதித் தனது சடையிலுள்ள பிறைச் சந்திரனை இலக்குமியின் அவதாரமான கண்ணகி தேவியின் நெற்றியாக சிவபெருமான் படைத்து விட்டாராம்.

காம தேவனுக்கு கோவலனிடம் தீராப் பொறாமை! காரணம், அழகில் காமனை வென்றவன் கோவலன் என்பது தான். அதனால், தன் கையிலுள்ள—தனது தொழிலுக்குரிய

—ஒரே கருவியான கரும்பு வில்லை இரண்டாகப் பிளந்து, கண்ணகி தேவியின் இரண்டு கரும் புருவங்களாகப் படைத்து விட்டானும்!

தேவர் கோமானுன இந்திரன் அசுரர்களை வெல்வதற்காகத் தன் கையில் தாங்கியுள்ள வஜ்ராயுதத்தை—அதன் இடைப் பகுதியை—கண்ணகியின் இடையாகப் படைத்து விட்டானும்.

கந்தவேளுக்கும் கோவலன் மீது பொருமை உண்டு. "கண்டேத்தும் செவ்வேளா"கக் கருதிப் புகார் நகரத்துப் பெண்கள் கோவலனை வழிபடுகிருர்கள் என்று இளங்கோ வாழ்த்துக் காதையிலேயே கூறிவிட்டார் அல்லவா!

**"மண்தேய்த்த புகழினுன் மதிமுக மடவார்தம்**
**பண்தேய்த்த மொழியினுன் ஆயத்துப் பாராட்டிக்**
**கண்டேத்தும் செவ்வேளென் றிசைபோக்கும் காதலான்**
**கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்"**

(சிலம்பு 1: 36-39)

என்ற வரிகளிலே, "முருகனைக் காண முடியாது கண்டு தொழத்தக்க முருகன் கோவலன்" என்கிருர் இளங்கோ. இது உண்மையானுல், முருகவேளுக்கும் கோவலனிடம் பொருமை இருக்குந்தானே? அந்தப் பொருமையால், தனக்கு ஒரு பயனும் இல்லை என்பது தெரிந்திருந்தும், தன் கையிலுள்ள வேலாயுதத்தை இரண்டாகப் பிளந்து கண்ணகி தேவியின் இரு கண்களாகப் படைத்து விட்டானும்.

## கந்தனும் காமனும்

காமனும் இந்திரனும் கந்தவேளும் தத்தம் ஆயுதங்களைக் கண்ணகி தேவியின் அங்கங்களாகப் படைத்தது கோவலனுடன் அவள் நடத்தும் காதற் போரிலே அவனுக்குத் தோல்வி ஏற்படவேண்டும் என்று எண்ணித்தானும்,

இங்கே தமிழ் மூவேந்தர்களின் போர்த் தந்திரம் ஒன்றை இளங்கோ நமக்கு நினைவூட்டுகின்றார். "தன் பகை மன்னன் ஒருவன், அவனுடைய பகைவேந்தனுடைய நாட்டின் மீது படையெடுத்தால், அந்தப் படையெடுப்புக்கு ஆளான மன்னனுக்குப் போர்க் கருவிகள் கொடுத்து, தன்னுடைய பகைவனை அவன் பகைவனைக் கொண்டே வீழ்த்தி விடுவது தமிழ் வேந்தர்களின் போர்த் தந்திரம்! அந்தத் தந்திரப்படி, தங்கள் பகைவனுன என்னை—கண்ணகியுடன் யான் நடத்தும் காதற் போரிலே—வீழ்த்திட எண்ணி, காமனும் இந்திரனும் கந்தப் பெருமானும் தத்தம் போர்க் கருவிகளைக் கண்ணகியின் புருவமாகவும், இடையாகவும், கண்களாகவும் படைத்து விட்டனர்" என்கிறான் கோவலன். கண்ணகியைக் கோவலன் வருணிப்பதை இளங்கோவின் வாக்காலேயே பார்ப்போம்:

**குழவித் திங்கள் இமையவர் ஏத்த**
**அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்,**
**உரிதின் நின்னோடு உடன்பிறப்பு உண்மையின்,**
**பெரியோன் தருக திருநுதல் ஆக என;**
**அடையார் முனையகத்து அமர்மேம் படுநர்க்குப்**
**படைவழங் குவது ஓர்பண்புஉண்டு ஆகலின்,**
**உருவி லாளன் ஒருபெருங் கருப்புவில்**
**இருகரும் புருவம் ஆக ஈக்க;**
**மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்,**
**தேவர் கோமான் தெய்வக் காவல்**
**படைநினக் களிக்க அதன் இடைநினக் கிடைஎன;**
**அறுமுக ஒருவன்ஓர் பெறுமுறை இன்றியும்**
**இறுமுறை காணும் இயல்பினின் அன்றே**
**அம்சுடர் நெடுவேல் ஒன்றும் நின் முகத்துச்**
**செங்கடை மழைக்கண் இரண்டா ஈத்தது!**

(சிலப்பு. **2:106-120**)

**மாசு அறு பொன்னே! வலம்புரி முத்தே!**
**காசுஅறு விரையே! கரும்பே! தேனே!**

**அரும்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!**
**பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!**
**மலையிடைப் பிறவா மணியே என்கோ?**
**அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?**
**யாழிடைப் பிறவா இசையே என்கோ'**
***தாழ் இருங் கூந்தல் தையால்! நின்னை''***

*(சிலப்பு. 2. 141-48)*

கண்ணகியின் உடலமைப்பைக் கோவலன் வருணிப்பது வேறு எந்தக் காப்பியத்திலும் இல்லாத ஒரு புது முறையாகும். மற்ற காப்பியங்களிலே, காப்பிய நாயகியின் கண்களை வேற் படைக்கும், நெற்றியை பிறைச் சந்திரனுக்கும், இடையை மின்னலுக்கும் ஒப்பிடுவது வழக்கம். ஆனல், அதிலிருந்து சற்று வேறுபட்டு, கண்ணகியின் நெற்றியைச் சிவபிரான் சடையிலுள்ள பிறைச் சந்திரனுக்கும், கண்களை முருகப் பெருமான் கையிலுள்ள வேலாயுதத்துக்கும், இடையை தேவர் கோமானின் வஜ்ராயுதத்துக்கும் ஒபபிடுகிறன் கோவலன்.

காதலர்கள் இருப்பது பள்ளியறையிலே! அவர்கள் சந்திப்பு நிகழ்வது முதல் நாள் இரவிலே! வருணிப்பவன் மணந்து கொண்ட காதலன்! வருணிக்கப்படுபவள், காதலி! ஆனல், வருணனையிலே விரசம் இல்லை. பெண்களடங்கிய கூட்டத்திலேயும் அந்த வருணனையை விமர்சித்துப் பேசுவதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை. கண்ணகி—கோவலன் இல்வாழ்க்கையை விவரிக்காத இளங்கோ, அவர்களுடைய முதலிரவு வாழ்க்கையை விவரித்தது, அதிலுள்ள தெய்விகத் தன்மையைப் புலப்படுத்துவதற்காகவே!

## சமாதானத் தேவதை!

நாட்டிலே கற்பு நெறியானது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகி விடுமானல் ஒழுக்கம் நிலைபெற்றுவிடும். அந்த நிலையிலே போர் நிகழாது. அப்போது காமனுடைய கரும்பு வில்லுக்கு வேலை இருக்காது. அதனற்றுன், அவன் தனது

வில்லைப் பிளந்து கண்ணகியின் புருவங்களாகப் படைத்து விட்டான். கற்பு நெறி வாழுமானால், தேவர்—அசுரர் போரும் நிகழாது. அந்நிலையிலே, இந்திரனுடைய வஜ்ஜிரா யுதத்துக்குத்தான் வேலை ஏது? ஆகவே, அதனைக் கண்ணகியின் இடையாகப் படைத்து விட்டான் தேவேந்திரன். அசுரத் தனம் அழிந்த பின்னர் தன் வேலுக்கும் வேலையில்லையென்று கருதி, முருகப் பெருமான், அதனைப் பிளந்து கண்ணகி தேவியின் கண்களாகப் படைத்து விட்டான். இது, கோவல னின் வருணனையிலுள்ள சிலேடைப் பொருள்கள். கண்ண கியை ஒரு சமாதான தேவதையாகவே காண்கின்றான் கோவலன். இன்னும் என்னென்ன வெல்லாமோ சொல்லிக் கோவலன் கண்ணகியைப் புகழ்ந்தானும். அதனை, "உலவாக் கட்டுரை பல பாராட்டி" என்ற சொல்லால் சுட்டுகின்றார் இளங்கோ. பொருளற்ற சொற்களால் வருணித்தானும் கோவலன். மாதவியைக் காண்பதற்கு முன்பு மாசற்ற பொன்னாக, வலம்புரி முத்தாக, காசறு விரையாக, கரும்பாக, தேனாகக் கோவலனுக்குக் காட்சியளித்தாள் கண்ணகி தேவி. சோதனையில் தேராத காதல் மன்னன் கோவலன் அதனாற்றான், அவனுடைய வருணனையைப் "பொருளற்ற கட்டுரை" என்கிறார் கவிஞர்.

கண்ணகியும் கோவலனும் முதல் நாளிரவில் உடலின்பந் துய்த்ததனை இரு உவமைகள் மூலம் கவிஞர் இளங்கோ விளக்குகிறார் ஆம்; "கோவலன் மார்பிலணிந்த தாரும், கண்ணகி மார்பிலணிந்த மாலையும் ஒன்றோடொன்று கலந்து மயங்கின" (2: 103) என்கிறார். ஒரு வெண்பாவிலே, "இரண்டு பாம்புகள் இரண்டறக் கலந்து புணர்ந்தாற்போல இன்பந் துய்த்தனர்" என்றும் கூறுகிறார். அந்த வெண்பா வருமாறு:

**தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனலொருவார்**
**காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்**
**தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்**
**நிலையாமை கண்டவர்போல் நின்று.**

# 3

# மாதவி—கோவலன் காதல் வாழ்க்கை

கண்ணகியும் கோவலனும் இல்வாழ்க்கை தொடங்கியதுமே நடனக் கணிகையான பூம்புகார் மாதவி அரங்குக்கு வந்து விடுகிறுள்—அதாவது, கண்ணகியின் இல்வாழ்க்கை தொடங்கியதைக் கூறும் மனையறம்படுத்த காதையையடுத்து மாதவியின் நடன அரங்கேற்று காதையை இளங்கோ அமைத்துள்ளார். கதையமைப்பிலே கண்ணகியும் கோவலனும் சில ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்திய பின்னர்தான் மாதவியின் அரங்கேற்றம் நிகழ்கின்றது ஆனுல், சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பிலே கண்ணகியும் கோவலனும் முதலிரவு இன்பத்தைத் துய்த்து முடித்ததுமே, அவர்கள் வாழ்க்கையில் மாதவி குறுக்கிடுகிருள். கதையில் தொய்வு விழாமலிருப்பதற்காகக் காலத்தைக் குறைத்துக் காட்டும் உத்தியைக் கையாண்டிருக்கிருர் கவிஞர். அவர் மாதவியை அரங்குக்குக் கொண்டு வருவதே ஒரு புதுமையாகும். கண்ணகியை அறிமுகப்படுத்திய போது, "மாகவான் நிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பு" என்று கூறினர். ஆம்; தந்தையின் மூலம் கண்ணகியை அறிமுகப்படுத்துகிருர். நடனக் கணிகையின் குலத்தில் பிறந்த மாதவிக்கு அந்தப் பேறு கிடைக்கவில்லை. அது, அவளுடைய

குலத்திற்குக் கிடைத்துவிட்ட சாபம்! அதனால், தாய் வழியில் அவள் அறிமுகப்படுத்தப்படுகிறாள்.

## சித்திராபதிக்கு இருட்டடிப்பு

சிலப்பதிகாரக் கதையிலே மாதவியைப் பெற்ற தாயின் பெயர் இன்னதெனக் கூறப்படவில்லை. அவள் காப்பியத்தில் நடமாடும் பாத்திரமே அல்லள். அவளுடைய குரலைக் கேட்க முடியவில்லை. அந்த அளவுக்கு மாதவியைப் பெற்றவளை இளங்கோ இருட்டடிப்புச் செய்துவிட்டார். சாத்தனார் படைத்த மணிமேகலைக் காப்பியத்திலேதான் மாதவியின் தாய் சித்திராபதி என்று கூறப்படுகிறாள். அங்கு அவள் நடமாடும் பாத்திரமும் ஆவாள் அப்படிச் சொன்னால் போதாது. மணிமேகலையில் சித்திராபதிதான் "வில்லன்" பாத்திரம்! பெண்பாலானதால் "வில்லி" என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள்!

பாட்டியாகிவிட்ட நிலையிலேயே பேத்தியாகிய மணிமேகலையை சித்திராபதி படாதபாடு படுத்துகிறாள். ஒழுக்கக் கேட்டின் சிகரத்திலிருந்து காட்சியளிக்கிறாள். அப்படிப்பட்டவளை சிலம்பிலே நடமாடவிட்டிருந்தால்—மாதவியின் மீது செல்வாக்கு செலுத்த அனுமதித்திருந்தால்—இன்று நாம் காணும் ஒழுக்கத்திற் சிறந்த மாதவியை இளங்கோ படைத்திருக்க முடியாது. அதனால்தான் மாதவியின் தாயை அவர் திரையிட்டே மறைத்துவிட்டார். தாய் வழியில் மாதவியை அறிமுகப்படுத்த வேண்டுமென்பதற்காக நடனப் பரத்தையர் குலத்தின் முதல்வியான இந்திரலோகத்து ஊர்வசியின் கதை சிலம்பில் சொல்லப்படுகிறது. அந்தக் கதையையும் கொஞ்சம் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

### ஊர்வசியின் கதை

முத்தமிழ் முனிவரான அகத்தியர் ஒரு சமயம் இந்திரலோகத்திற்குச் சென்றார். தேவர்கள் தலைவனான இந்திரனை

பொதிகை முனிவரை வணங்கியும் வாழ்த்தியும் வரவேற்ருன். கற்ருேர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்புதானே! அகத்தியர் வளர்த்த முத்தமிழிலே நாடகத் தமிழும் ஒன்றல்லவா! அதனுல், நற்றமிழ் வளர்த்த அகத்தியர் நடனக் கலையை ரசிப்பார் என்று கருதி, தேவலோக நடன மாதர் எழுவரில் ஒருத்தியான ஊர்வசியை அழைத்து, "தென் பொதிகை முனிவர் காண நடனம் நிகழ்த்து!" என்ருன். இந்திரன். அவளும் அகத்தியர் முன் ஆடுவதைத் தனக்குக் கிடைத்த பெரும் பேருகக் கருதி ஆடத் தொடங்கினுள்.

நடன அரங்கின் எதிரே முன் வரிசையில் தேவேந்திரன் மகன் சயந்தன் என்பான் அமர்ந்திருந்தான், ஊர்வசியின் நடனத்தைக் காண! நடனம் நடந்துகொண்டிருந்தபோது ஊர்வசியை காமக் குறிப்புடன் நோக்கினுன். கௌதம முனிவரின் மனைவியைக் கற்பழித்த இந்திரன் மகன்தானே! சயந்தன் விரித்த காம வலையில் விழுந்த ஊர்வசியும் பதிலுக்கு மோகப் பார்வையுடன் அவனை நோக்கினுள். கண்ணொடு கண்ணிணை கவ்வின. சயந்தனும் ஊர்வசியும் இதயம் மாறிப் புகுந்தார்கள் — அவ்வளவுதான்! அவளது நடனத்திலே தாளம் தவறியது! நடனத்தையொட்டி இசைக்கப்பட்டு வந்த வீணையும் குழலும் மத்தளமும் ஒன்ருேடொன்று தொடர்பு கொண்டிருந்த நிலை மாறியது. "வீணையும் பிற இசைக் கருவிகளும் மங்கலம் இழந்தன" என்கிருர் இளங்கோ. இதைக் கண்ட அகத்திய முனிவர் ஆற்ருெணுச் சினங்கொண்டார். கலையரங்கிலே நடனமாடிக் கொண்டிருக்கும் நங்கையை சயந்தன் காமுற்று நோக்கியது குற்றம்; நடனமாடிக் கொண்டிருந்த ஊர்வசியும் சயந்தனுடைய காமவலையில் விழுந்தது மிகப் பெரிய குற்றம் என்று கருதினுர் அகத்திய முனிவர். அதனுல், சயந்தனையும் ஊர்வசியையும் சபித்தார்! சயந்தனைப் பார்த்து, "நீ இந்திய நாட்டின் நடுவிடத்திலுள்ள விந்திய மலையில் மூங்கிலாகப் பிறப்பாயாக!" என்ருர்.

ஊர்வசியைப் பார்த்து, "நீ நிலவுலகில் கூத்தாடும் மங்கையாகப் பிறப்பாயாக!" என்றார்.

## சாபத்தால் வந்த கலை

"பரதம்" என்று சொல்லப்படும் நடனக் கலையானது முதலில் தமிழகத்தில்தான் தோன்றியது—தமிழின் ஒரு கூறாகவே வளர்ந்தது—முத்தமிழ் முனிவரான அகத்தியர் இட்ட சாபத்தால் விண்ணகத்திலிருந்து வந்தது—என்பது இந்தக் கதையாலும் உறுதிப்படுகிறது.

அகத்தியருடைய சாபத்தால் மண்ணுலகம் வந்த ஊர்வசி, இந்தியப் பெரு நாட்டிலே—அதிலேயும், நம் தமிழ்த் திருநாட்டிலே—இங்கேயும், காஞ்சிபுரத்திலே பிறந்தாள் என்று "சுத்தானந்தப் பிரகாசம்" என்னும் பெயருடைய தமிழ் நடனக் கலை நூல் கூறுகிறது.

நடனக் கலையை நாம் எவ்வளவுதான் போற்றினாலும் அது தவமுனிவர் ஒருவருடைய சாபத்திலிருந்து நமக்குக் கிடைத்தது, நடனக் கணிகையர் குலம் அகத்தியரால் சபிக்கப் பெற்ற ஊர்வசியை முதல்வியாகக்கொண்டு தமிழகத்தில் தோன்றியது என்பதனை மறப்பதற்கில்லை. இதனால்தானோ என்னவோ, காமமும் கலையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்தெடுக்க முடியாதபடி பிணைந்திருக்கின்றன. இதனையுணர்ந்தவே, "கலைவலார் நெஞ்சில் காமமே தோன்றும்" என்கிறார் சிந்தாமணி ஆசிரியரான திருத்தக்க தேவர்.

விண்ணிலிருந்து மண்ணகத்திற்கு வந்த ஊர்வசி மாதவி என்று பெயர் பெற்றாள். அந்த ஆதி மாதவியின் வழியிலே தோன்றியவள் சிலப்பதிகார மாதவி. இந்தக் கதையை இளங்கோவின் வாக்காலேயே அறிவோம்:

**"தெய்வ மால்வரைத் திருமுனி அருள
எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு
தலைக்கோல் தானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பரும் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி..."**

*[சிலம்பு. 3. 1-6]*

அகத்தியரின் சாபத்தால் விண்ணுலகத்து ஊர்வசி மண்ணுலகத்துக்கு வந்ததையும், அவள் வழியில் மாதவி தோன்றியதையும் கடலாடு காதையுள் இரண்டாவது முறையாகவும் இளங்கோ கூறுகின்றார்

கண்ணகியைப் போன்று மாதவியைத் தந்தையின் வழியில் இளங்கோ அறிமுகப்படுத்தாததற்குக் காரணம், ஒருத்தனுக்கே வாழ்க்கைப்படும் ஒழுக்கமில்லாத பரத்தையர் குலத்தில் அவள் பிறந்த பாவம்தான்.

## பாட்டும் கூத்தும்

ஊர்வசியின் கதை ஒரு புறம் இருக்கட்டும். வரலாற்றுப் படிப் பார்த்தால் மனித சமுதாயத்திற்குப் பரத்தையர் குலம் தேவைப்படவில்லை. ஆதி சமுதாயத்தில் அப்படி ஒரு குலம் இருந்திருக்கவும் முடியாது. நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலே தான் பரத்தையர் குலம் படைக்கப்பட்டதென்று சொல்லப் படுகிறது. ஆடலும் பாடலும் பரத்தையரிடமிருந்து பிரித்தெடுக்க முடியாதவை அல்ல. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழர் வாழ்க்கை முழுவதுமே பாட்டும் கூத்துமாகவே இருந்திருக்கிறது. இன்பத்திலேயும் பாட்டு; துன்பத்திலேயும் பாட்டு; உழவுத் தொழிலிலே, ஏர் உழும்போதும் பாட்டு; நடவு நடும் போதும் பாட்டு; களையெடுக்கும்போதும் பாட்டு; பயிரை அறுத்துக்

களத்திலே போட்டு, அதிலிருந்து நெல்லைப் பிரித்தெடுக்கும் போதும் பாட்டு; வயலுக்கு நீர் பாய்ச்சுங்கால் ஏற்றப் பாட்டு: ஆற்றிலே ஓடத்தில் செல்லும் போதும் பாட்டு. இப்படி வாழ்வு முழுவதும் பாட்டாக இருந்ததே தமிழர் வரலாறு.

இந்தப் பாட்டோடு கூத்தும் கலந்தே இருந்தது. இதனைச் சிலம்பிலேயும் பார்க்கிறோம். ஆய்ச்சியர் குரவை என்பது பாட்டும் கூத்தும்தான். வேட்டுவ வரி என்பதும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து நடத்தும் பாட்டும் கூத்தும்தான். குன்றக் குரவை என்பதும் பாட்டும் கூத்தும்தான். ஆகவே, பாட்டுக்கும் கூத்துக்குமாக ஒழுக்கங்கெட்ட ஒரு குலம் தேவைப்படவில்லை. ஆனால், நிலப்பிரபுக்களின் பொழுது போக்குக்காக பரத்தையர் குலம் படைக்கப்பட்டது. தமிழ் நாட்டிலே நிலப்பிரபுத்துவத்தின் கோட்டை எனப்படுவது அன்றும் இன்றும் சோழ மண்டலந்தானே!

நிலப்பிரபுக்களேயன்றி, அந்நாளில் திரைகடலோடியும் திரவியம் திரட்டிச் சுகபோகத்தில் மூழ்கி வாழ்ந்த வணிகத் தமிழர்களும் சோழ நாட்டில்தான் குழுமியிருந்தார்கள். புகார் நகரமே அவர்களுடைய பூர்வபதியாக இருந்தது. அவர்கள் மத்தியிலேதான் ஊர்வசியின் வழிவந்த மாதவியைக் காதலிப்பதற்கென்று இந்திரன் மகன் சயந்தனின் வாரிசாகக் கோவலன் தோன்றுகிறான்.

## பரத்தையர் பல வகையினர்

காலப் போக்கில் ஊர்வசி வழிவந்த நடனப் பரத்தையர் பல கூறுகப் பிரிந்தனர். நடனப் பரத்தையர், சேரிப் பரத்தையர் என பலவகைப் பரத்தையர்களைக் கூறுகின்றது அகத்திணை இலக்கியம்.

"பரத்தை" என்பதன் பொருள் என்ன? "பரம்" என்றால், "மேலானது", "பொதுவானது" என்று பொருள். அதனால்,

ஒருத்தனுக்கே உரியவளாக இல்லாமல் பலருக்கும் பொது மகளாக விளங்கியவள் "பரத்தை" எனப்பட்டாள். இதனாலேயே "பொதுமகள்" என்றும் பெயர் வந்தது.

"தாசி" என்பதும் பரத்தையர்க்குரிய மற்றொரு பெயர். "தாசன்" ஆண்பால்: "தாசி" பெண்பால். தெய்வத்துக்குத் தாசத் தன்மை பூண்டதால் "தேவதாசி" என்ற பெயர் வந்தது. தேவ(ர்-அ)டியாள்" என்பதன் பொருளும் இதுவே. நடனப் பரத்தையரிலே ஒரு சாரார் கோயிலில் ஆடுவதற்கென்று ஒதுக்கப்பட்டனர். அவர்களே, "தேவதாசி" என்றும், "தேவ(ர்-அ)டியாள்" என்றும் அழைக்கப்பட்டனர்.

"கூத்தி" என்னும் சொல்லுக்கு "கூத்தாடுபவள்" என்று பொருள். கூத்தாடும் நங்கை, ஒருவனுக்குக் காமக் கிழத்தியாகிவிட்டால், அவளைக் "கூத்தியாள்" என்று அழைப்பது வழக்கம். "வேசி" என்ற பெயரும் பரத்தையருக்கு, வழங்கப் படுகிறது. இது எப்படி வந்ததோ தெரியவில்லை. நான் நினைக்கிறேன், இந்திர லோகத்திலிருந்து வந்த ஊர்வசியின் மரபினருக்கு "ஊர்வசி" என்ற சிறப்புப் பெயரும் தொடர்ந்திருக்கலாம் அந்த ஊர்வசியே "ஊர்வேசி"யாக மாறி, பின்னர், "ஊர்"மறைந்து "வேசி" நிலைத்துப் போயிருக்கலாம்.

திருக்குறளிலே, பரத்தையரை "வரைவின் மகளிர்" என்கிறார் வள்ளுவர். வரைமுறையற்ற வாழ்க்கை நடத்துபவர்களாதலால் "வரைவின் மகளிர்" என்று பெயர் பெற்றனர் போலும்!

ஒருத்தனையே தனக்கு உரிமைப்படுத்திக் கொள்ளாமல் விரும்பியவனுடன் எல்லாம் வாழ்க்கை நடத்துபவளை "விபச்சாரி" என்கிறது வட மொழி. ஆனால், ஒருத்திக்கே தன்னை உரிமைப்படுத்திக் கொள்ளாமல் விரும்பியவளுடன் எல்லாம் வாழ்பவனுக்கு வடமொழியில் பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழிலே உண்டு. கற்பிழந்த பெண் "பரத்தை"

என்றால், அதே குற்றமிழைத்த ஆணை "பரத்தன்" என்கிறது தமிழ். கற்பொழுக்கமற்ற ஆண்களை "வம்பப் பரத்தர்"(16:63) என்கிறார் இளங்கோ.

திருக்குறளிலும் தன் தலைவன் பல பெண்களை நேசிக்கிறான் என்பதற்காக, அவன் மார்பைத் தீண்ட மறுக்கிறாள் தலைவி. அப்போது, "நண்ணேன் பரத்த! நின் மார்பு" என்கிறாள்.

தமிழிலே ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி இல்லை. கற்பு எனப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொது நெறியாகும்.

## பிறப்பொழுக்கம்

மாதவி நடனப் பரத்தையர் குலத்தில் பிறந்தாலும் "சிறப்பிற்குன்றாச் செய்கையொடு பொருந்தியவள்" என்றும் "பிறப்பிற்குன்றாப் பெருந்தோள் மடந்தை" என்றும் இளங்கோவடிகள் அவளை உயர்த்திக் கூறுகின்றார். மாதவியிடம் நாம் காணும் ஒழுக்கம் குல ஒழுக்கம் அல்லவென்றாலும், அதற்கு விலக்கான பிறப்பொழுக்கம் என்பது இளங்கோ தரும் விளக்கம்.

சிலம்பிலே மண்ணுலகுக்கும் விண்ணுலகுக்குமிடையே புதுமையான ஒரு உறவைக் காட்டுகின்றார் இளங்கோ. கதையின் தொடக்கத்திலே விண்ணுலகில் ஒழுக்கத்தில் வழுக்கிய ஊர்வசி—சயந்தன் ஆகிய காதலரை மண்ணுலகத்திலுள்ள தமிழகத்திற்குக் கொண்டு வருகின்றார், ஒழுக்கத்தோடு வாழும் முறை பயில! அதுபோல, மண்ணுலகத் தமிழகத்தில் பூம்புகாரில் பிறந்து, கற்பொழுக்கத்தில் சிறந்து நின்ற கண்ணகியையும், வினையால் வழுக்கிய நிலையிலும் வானுலகத் தேவனுக்கும் வாய்ப்பைப்பெற்ற கோவலனையும் விண்ணுலகுக்கு அனுப்பி வைக்கின்றார், அங்குள்ளோருக்கு ஒழுக்கம் போதிக்க! இளங்கோ தரும் இந்தச் செய்தி சுவையானதாகும்.

இனி, மாதவியின் நாட்டிய அரங்கேற்றத்தைக் காண்போம்.

பூர்வ மாதவியின் வழியில் வந்த பூம்புகார் மாதவிக்கு ஐந்து வயது முடிந்தபோது நாட்டியக் கலையைப் பயிற்று விக்கத் தொடங்கி, ஏழாண்டு பயிற்றுவித்த பின்னர், சோழ மன்னன் அவையிலே அரங்கேற்றம் நிகழ்ந்ததாம். அப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு.

நாட்டியக் கலையைப் பயிலத் தொடங்க வேண்டிய காலத்தையும், பயிற்சி முடியவேண்டிய பருவத்தையும் வரையறுத்துச் சொன்ன அடிகள், என்னவெல்லாம் பயின்றாள் என்ற பட்டியலையும் தருகின்றார்.

## தமிழிலே புலமை

ஆடலாசிரியனும் இசையாசிரியனும் ஆடவும் பாடவும் கற்பித்தார்களாம். அத்துடனன்றி, நன்னூல் புலவன் ஒருவனைத் தேர்ந்தெடுத்து, அவனிடம் தமிழ் இலக்கண—இலக்கியங்களையும் மாதவி பயின்றாளாம் அந்நன்னூல் புலவனின் தகுதியைக் கூறுமிடத்து,

> "இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் அறியத்
> தமிழ்முழு தறிந்த தன்மையன் .."
>
> [சிலப்பு 3-37-38]

என்கிறார். தமிழை முறையாகவும் முழுசாகவும் பயின்ற நன்னூல் புலவனிடம் இலக்கணமும் இலக்கியமும் பயின்றாள் மாதவி.

இந்நாளிலே, ஆடல்—பாடல் பயில்வோர் தமிழ் இலக்கண—இலக்கியங்களைப் பயில்வதில்லை. தமிழில் அற்ப சொற்ப ஞானம் இல்லாதவர்களும் அரங்கேறி ஆடவும்

பாடவும் தொடங்கிவிடுகிறார்கள். ஆடலும் பாடலும் சாத்திரம் என்றால், அதனுடைய வாழ்வையும் வளர்ச்சியையும் கூறும் சரித்திரம் தமிழ் இலக்கியம். ஒரு சாத்திரத்தைப் பயில்வோர் அதன் சரித்திரத்தையும் பயின்றாக வேண்டும்.

மாதவி ஆடலும் பாடலும் அழகும் என்று கூறிய மூன்றில் ஒன்று குறைபடாமல் பெற்றிருந்தாள் என்கிறார் இளங்கோ. "ஒன்று குறைபடாமல்" என்பதால், "குறையவும் கூடாது" என்ற குறிப்பையும் ஆசிரியர் தருகிறார். ஆடலும் பாடலும் தெரிந்திருந்தால் போதுமா? அழகும் வேண்டுமல்லவா? இவ்வளவும் பெற்று பன்னிரண்டு வயதும் முடிந்திருந்த நிலையில், சோழ மன்னன் அவையிலே மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்கின்றது.

பன்னிரண்டு வயது நிரம்பிய—ஆடலும் பாடலும் குறைவறப் பயின்ற—அழகையும் நிறைவுறப் பெற்றிருந்த மாதவியாள், சோழ மன்னனுடைய முன்னிலையிலே தனது நாட்டியத்தை அரங்கேற்றினாள்.

அந்நாளில் நாட்டியம் பயில்வோர், பயிற்சி முடிந்ததும் முதலில் மன்னன் முன்புதான் அரங்கேற்றம் நிகழ்த்த வேண்டும். மன்னன் தன் கண்ணாரக் கண்டு, "இவள் ஆடற்கலையில் தேர்ச்சியுடையவள்" என்று அறிவித்து, அதற்கான பரிசையும் வழங்கிய பின்னரே, நடனக் கலையை அரங்கேற்றும் நங்கை அதனைத் தொழிலாகக் கொள்ள வேண்டும். இதனால், பண்டைத் தமிழ் வேந்தர் கலைகளில் பொது அறிவையேனும் பெற்றிருந்தனர் என்பதும் புலப்படுகிறது. "பாராள்வோருக்குப் பாட்டிலும் கூத்திலும் பயிற்சி எதற்கு?" என்று கேட்கும் காலம் இது. "நடனக்கலை பயின்றவள் அதனை நாடாள்வோர் முன்புதான் அரங்கேற்ற வேண்டுமா? நாடாள்வோருக்கு வேறு வேலை இல்லையா?" என்ற வினாக்கள் எழுப்பிடும் காலம் இது.

## நடன அரங்கேற்றம்

மாதவியின் அரங்கேற்ற நிகழ்ச்சி புகார் நகரில் ஒரு பெருவிழாவாகவே நடைபெறுகின்றது. அந்நாளில் நங்கையர்க்கு நடனக் கலையைப் பயிற்றுவிக்கும் நட்டுவர்கள் கையில் கோல் வைத்துக் கொண்டிருப்பார்கள். நடன அரங்கிலே யாழ், மத்தளம், குழல் ஆகிய இசைக் கருவிகள் பயன்படுத்தப் பட்டாற் போலத் "தலைக்கோல்" என்பதும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. இந்தத் தலைக்கோலுக்கே ஒரு வரலாறு உண்டு.

இந்திரன் அவையிலே அகத்தியரால் சபிக்கப் பெற்று விந்திய மலையில் மூங்கிலாகப் பிறந்தான் அல்லவா சயந்தன்! அவனுடைய வடிவமாகவே தலைக்கோல் சொல்லப்படுகிறது. மாதவியின் நடன அரங்கேற்றத்திற்கு முன்பு தலைக்கோல் ஊர்வலம் நடைபெறுகின்றது புகார் நகரிலே. அந்த ஊர்வலத்திலே இளவரசர்கள், அமைச்சர்கள், தளபதிகள், நகர பிரமுகர்கள் எல்லாம் முன்வரிசையிலே அணியணியாக நடைபோடுகின்றனர். அரசனுக்குரிய பட்டத்து யானை தனது துதிக்கையிலே தலைக்கோலை ஏந்திக்கொண்டு ஊர்வலத்தின் முன்னே செல்கிறது

புகார் நகரின் ஒரு முச்சந்தியிலே மாதவியின் நடனத்திற் கென மேடை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மேடையின் அருகில் வந்து ஊர்வலம் முடிகின்றது. மேடையின் மீது தமிழை முழுமையாகப் பயின்றறிந்த பெரும் புலவர் ஒருவர் இருந்துகொண்டு யானையிடமிருந்து தலைக்கோலைப் பெறுகின்றார். ஆம்; பட்டத்து யானையிடமிருந்து தலைக்கோலைப் பெறும் சடங்கு நட்டுவரைக் கொண்டு நிகழ்த்தப்பெறவில்லை. முத்தமிழ்ப் புலவரைக் கொண்டு நிகழ்த்தப் பெறுகிறது. அந்நாளில் கலைக்கும் தமிழ்ப் புலவனுக்கும் அவ்வளவு தொடர்பு இருந்தது. பன்னிரண்டு வயதுடைய நடனக் கணிகை யொருத்தியின் அரங்கேற்றத்தை சோழ மன்னன் ஒரு பெருவிழாவாக நடத்தியதனை அந்நாளில் யாரும் குறை கூறவில்லை

மாதவியாள் வலதுகாலை முன்னே வைத்து மேடைமீது ஏறுகின்றாள். வலதுகாலை முன் வைப்பதை மங்கலமாகக் கருதுவது தமிழர் மரபு. மாதவியும் அந்த மரபைக் கடைப் பிடித்து மேடையேறினாள் என்பதனை மறந்துவிடாமல் சொல்லுகின்றார் இளங்கோ.

முச்சந்தியிலே, சோழ மன்னனின் முன்னிலையிலே, சாத்திரப்படி அமைக்கப்பட்ட மேடையிலே மாதவி தனது நடனத்தைத் தொடங்குகிறாள். "தோரிய மகளிர் வாரம் பாடுகின்றனர்" என்கிறார் இளங்கோ. "தோரிய மகளிர்" என்றால், "ஏற்கனவே நடனத் தொழிலில் தலைசிறந்து விளங்கி, பருவ முதிர்ச்சி காரணமாக அத்தொழிலிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்" என்கிறார் சிலப்பதிகார உரையாசிரியர்.

மாதவியாள் நடனமாடியதைச் சுருக்கமாக ஒரு வெண்பாவில் கூறுகின்றார் இளங்கோ.

**எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண்நான்கும்**
**பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் — மண்ணின்மேல்**
**போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்**
**வாக்கினால் ஆடரங்கில் வந்து.**

இந்த வெண்பாவின் பொருளையெலாம் விளக்கும் வகையில் அகவற்பாவிலும் மாதவி நடனம் ஆடியது பற்றி விரிவாகக் கூறுகின்றார். சுருக்கமாகத் தெரிந்துகொள்ள இந்த வெண்பாவையும் தந்துள்ளார்.

### கூனியின் சாகசம்

நடன அரங்கேற்றத்தின் முடிவிலே 1008 கழஞ்சு பொன் மதிப்புடைய பச்சை மாலையொன்றை மாதவிக்கு வழங்குகின்றான் சோழ மன்னன். அத்துடன், "இவள் ஆடற்கலையில் தேர்ந்தவள்" என்பதை அறிவிக்கும் வகையில் "தலைக்கோல் அரிவை" என்னும் பட்டத்தையும் வழங்குகின்றான். மன்ன

ளிடம் பரிசையும் பட்டத்தையும் பெற்ற மாதவியாள், அவனிடமும் அரங்கில் குழுமியிருந்த கலைஞர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்புகிறாள். திரும்பும் வழியிலே, மன்னன் கொடுத்த பச்சை மாலையைத் தன் தோழியான கூனி என்பவளின் கையில் கொடுத்து, 1008 கழஞ்சு பொன் விலைக்கு அதனை விற்று வருமாறு ஆணையிடுகிறாள். அக்கால வழக்கப் படி மாலையை வாங்குவோன் மாதவிக்குக் காதலன் ஆவான். மாலையின் விலை ஒரு இரவுக்குப் பரியமாம்!

மாதவியிட மிருந்து பெற்ற பச்சை மாலையை விற்பதற்கு, செல்வர் வீட்டு இளைஞர்கள் திரியக்கூடிய தெருவாகத் தேர்ந் தெடுத்து, அங்கு நின்று மாலையை விற்பவள் போலப் பாசாங்கு செய்கிறாள் கூனி. அதனை இளங்கோவின் வாக்காலேயே அறிவோம்:

**நூறுபத்து அடுக்கி எட்டுக் கடைநிறுத்த**
**வீறுஉயர் பசும்பொன் பெறுவதுஇம் மாலை**
**மாலை வாங்குநர் சாலுநம் கொடிக்கென**
**மான்அமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து**
**நகர நம்பியர் திரிதரு மறுகில்**
**பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த.**

## 'கூனி' என்றால், கிழவியா?

மாதவி தந்த பச்சை மாலையைத் தன் கையில் வைத்துக் கொண்டு, "இம்மாலை 1008 பசும்பொன் விலையுடையது, அந்த விலை கொடுத்து மாலையை வாங்குவோர் என் மாதவிக்குக் காதலர் ஆவார்" என்று பிரகடனம் செய்கிறாள் மாதவியின் தோழியான கூனி.

கூனி என்றாலே, கையில் தடி ஊன்றி நடக்கும் கிழவி என்று நினைக்குமாறு செய்து விட்டனர் நாடகக்காரர்கள். இராமாயணத்தில் வரும் கூனியைப் படுகிழமாகத்தானே

நாம் பார்க்கிறோம். ஆனால், வான்மீகியிலே கைகேயியின் தோழியான கூனி அழகிய நங்கையாகவே வருணிக்கப் படுகிறாள். சிலம்பில் வரும் கூனியை 'மான் அமர் நோக்கி'— அதாவது, மானைப் போன்று மருண்டு நோக்கும் பார்வையுடையவள் என்கிறார் இளங்கோ. இதனால், கிழவியல்லள் என்பது புலனாகிறது. விலை பகர்வனர் போன்ற பான்மையில் கூனி நடிக்கிறாள் என்பதால், மாலையை வாங்க முயல்வோர் எவராயினும் அவருக்கு விற்க அவள் விரும்பவில்லை என்பது தெரிகிறது. கூனி, எவனையோ எதிர்பார்த்து, அவன் வரும் வரையில் விலை பகர்வது போன்று பாவனை காட்டி வீதியில் நிற்கிறாள். அவள் எதிர்பார்ப்பது யாரை? புகார் நகரத்துப் பெண்கள் கண்டேத்தும் செவ்வேளாகக் கருதி கைதொழுது வழிபடும் பெருமகனான கோவலனைத்தான்!

மாதவி நடன அரங்கை விட்டு வெளியேறி வீட்டிற்குத் திரும்பியபோது கோவலனும் அவளைப் பின் தொடர்ந்தான். இதனால், மாதவியின் நடன அரங்கேற்றத்தின்போது கோவலனும் அங்கு இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அரங்கேற்ற நிகழ்ச்சிக்குச் சோழ மன்னன் புகார் நகரிலுள்ள பெருங்குடி வணிகர்களுக் கெல்லாம் அழைப்பு அனுப்பியிருப்பான். மன்னர் குடும்பத் தோடு சமமாக வைத்து மதிக்கத்தக்க மாசாத்துவான் மகனாதலால் கோவலனுக்கும் அழைப்பு அனுப்பப்பட் டிருக்கும். அவனை அழைக்காமல், இளம் நங்கையின் நடன அரங்கேற்றத்திற்குக் கிழவன் மாசாத்துவானையா மன்னன் அழைத்திருப்பான்!

## நகர நம்பியர் திரிதரு தெரு!

மன்னன் முன் மாதவி நடனம் ஆடியபோது அவையி லிருந்த கோவலன் அவளைக் கண் இமைக்காது கண்டிருப் பான். அவனது இமையா நாட்டத்தைக் கண்டு, தன்பால் அவன் காதல் கொண்டு விட்டான் என்பதை மாதவியும் புரிந்துகொண்டிருப்பாள். அவன் தன்னைப் பின்பற்றி

வருவான் என்ற முடிவுக்கும் மாதவி வந்திருக்க வேண்டும். அதனுற்றான், அவனது வருகையை எதிர்பார்த்து, அதுவரை மற்றவர்களுக்கு மாலையை விலை பகர்வது போன்ற பாவனையில் நகர நம்பியர் திரிதரு தெருவில் கூனி நின்றிருக்கிறாள்.

மாதவி வாழும் வீதியை "நகர நம்பியர் திரிதரு மறுகு" என்று வருணிக்கிறார் இளங்கோ. பரத்தையர் வாழ் தெருவில்தானே இளைஞர் கூட்டம் இப்படியும் அப்படியுமாக நடைபோட்டுத் திரியும். பழகு தமிழிலுள்ள "திரிதல்" என்னும் சொல்லைச் சரியான இடத்திற்கு, பொருத்தமான பேர்வழிகளுக்குப் பயன்படுத்துகிறார் இளங்கோ.

மாதவியைப் பின்பற்றி வந்த கோவலன், கூனியை அணுகி, 1008 செம்பொன் கொடுத்து மாலையை வாங்கி, அவளுடன் சென்று மாதவி இல்லத்திற்குள் நுழைகிறான். இதனை,

**"மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
**கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு**
**மணமனை புக்கு, மாதவி தன்னொடு**
**அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி!"**

[சிலம்பு. 3, 170-73]

என்னும் வரிகளிலே பத்தினியான கண்ணகி தேவியின் பதியான கோவலன் நடனப் பரத்தையான மாதவியின் மனை புகுந்த அவல நிகழ்ச்சியை இளங்கோ கூறுகின்றார்.

1008 கழஞ்சு பொன் கொடுத்து மாதவியின் மாலையைக் கோவலன் வாங்கியது ஒரு இரவில் இன்பம் அனுபவிக்கத் தான் என்கின்றனர் உரையாசிரியர்கள். ஆனல், மாதவியின் மனை புகுந்த கோவலன் தன் மனையகத்தையே மறந்து அவள் வீட்டில் தங்கிவிட்டான். "வடுநீங்கு சிறப்பின் மனையகத்தை

மறந்தான்'' என்கிறார் இளங்கோ. இதன்மூலம் மாதவியின் மனைக்கு ''வடு'' உண்டு என்று கவிஞர் சொல்லாமல் சொல்லு கின்றார். வடு மாதவிக்கு அல்ல; அவள் பிறந்த மனைக்குத் தான்!

## மாதவியிடம் மயங்கியதேன்?

கோவலன் மாதவியின் மனை புகுந்ததை குற்றமாகக் கூறவில்லை கவிஞர். அந்நாளில் செல்வந்தர்கள் பரத்தையொடு கூடி இன்பம் அனுபவிப்பது தமிழர் சமுதாயத்தில் அங்கீகரிக் கப்பட்ட ஒரு பழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால், இரவில் பரத்தை வீட்டில் தங்கி இன்பம் அனுபவித்துவிட்டு விடிந்ததும் பத்தினி வீட்டிற்கு வந்து விடுவதுதான் வழக்கம். கோவலனோ, தன் மனையகத்தையே மறந்து மாதவி இல்லத்தை அடைக்கலமாகக் கொண்டு விட்டான். அதுதான் அவன் செய்த தவறு.

கோவலன் சிறந்த கலைஞன். யாழிசைத்துப் பாடவல்ல இசைஞானி அதனால், கலையரசியான மாதவியை விட்டுப் பிரிய மனமில்லாதவனானன் அத்துடன், தனது குல ஒழுக்கத்திற்கு மாறான கற்பொழுக்கத்தையும் மாதவி கடைப்பிடித்தாள். அதனால், இல்லற நெறிகள் அனைத்தையும் கடைப்பிடித்து கோவலன் மாதவியுடன் கூடி வாழ்ந்தான். இளங்கோவடிகள் கோவலனைக் காமுகனாக அறிமுகப்படுத்தவில்லை. மாதவி-கோவலன் காதல் வாழ்க்கையைக் காமரசம் ததும்ப அடிகள் வருணிக்கவில்லை. அவர்கள் காதல் வாழ்க்கையைவிட கலை வாழ்க்கைக்கே சிறப்பிடம் தருகிறார்.

புகாரிலே சித்திரா பௌர்ணமி தொடங்கி வைகாசிப் பௌர்ணமி வரை இந்திர விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாவையொட்டிப் பொதுமக்கள் காண மாதவி நடன மாடுகின்றாள்.

நடனக்கலை வேத்தியல், பொதுவியல் என இருவகை யாகப் பிரித்துக் கூறப்படுகிறது. வேந்தன் அவையிலே ஆடுவது வேத்தியல். பொதுமக்கள் அவையிலே ஆடுவது பொதுவியல். சோழ வேந்தன் அவையிலே மாதவி ஆடியது வேத்தியல். புகார் நகரில் இந்திர விழாவில் பொதுமக்கள் காண ஆடியது பொதுவியல். இந்திரவிழா நடனத்தின் போது கோவலனும் அவையிலிருந்தான். பொது மக்களிலே கலையுணர்வற்ற சிலர் காம உணர்வுடன் மாதவியைக் காண் பதையும், அவளுடைய அழகை வருணித்துப் பேசுவதையும் கோவலன் கண்டான்; கேட்டான். இதனால், வெறுப்புற்று மாதவியின்பால் ஊடல் கொண்டான். தான் அருகிலிருந்தும் கண் படைத்தவனுக் கெல்லாம் மாதவி விருந்தாகிவிட்ட தற்கு அவளுடைய பரத்தமைதான் காரணம் என்பதை உணர்கின்றான். தான் அருகில் இல்லாத போதும் பிற ஆடவர் கண்களுக்கு விருந்தாகாமல் மனையில் மறைந்து வாழும் கண்ணகியின் கற்புநெறி அவனது நினைவிற்கு வரு கிறது. மாதவியின்பால் வெறுப்பும் கண்ணகியின்பால் விருப்பும் கொண்டான்.

## கடற் கரையில் காதலர்கள்!

இந்திர விழா நடனம் முடிந்ததும் மாதவியும் கோவல னும் வீடு திரும்புகின்றனர். கோவலன் ஊடல் கொண் டிருப்பதை மாதவி உணர்ந்துகொண்டு விடுகிறாள். ஆனால், அதற்கான காரணத்தை அவள் உணரவில்லை. அவனது ஊடலைத் தீர்க்கும் பொருட்டு, கடல் விளையாட்டைக் காண கோவலனை காவிரியும் கடலும் கலக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்கிறாள். தோழியான வயந்தமாலையும் உடன் செல்கிறாள். தன் தலைவியான மாதவியிடம் அவள் தலைவன் ஊடல் கொண்டிருப்பது தோழியான வயந்த மாலைக்கு வருத்தத்தைத் தந்தது. அந்த வருத்தத்துடன் தன் கையில் யாழைச் சுமந்துகொண்டு, மாதவியையும் கோவலனையும் பின்பற்றி கடற்கரைக்குச் சென்றாள்.

வருந்தி நின்ற வயந்தமாலையின் கையிலிருந்து யாழை வாங்கினாள் மாதவி. அதனை மீட்டு, பண் சேர்த்து, பின்னர் அந்த யாழைக் கோவலன் கையில் கொடுத்து, "ஏவல! நின் பாணி யாது?" என்று கேட்டு, தான் பாடவேண்டியது இன்ன தென்பதைப் பாடிக் காட்டுமாறு கோவலனை வேண்டினாள். அவனும் யாழைக் கையில் வாங்கி பாடத் தொடங்கினான்.

கோவலனை யாழிசைத்துப் பாட வைத்து விட்டால் அவன் தன்பால் கொண்ட ஊடல் போய்விடும் என்று மாதவி நம்பினாள். அதற்கான தந்திரமாகவே தான் பாட வேண்டியது இன்னதென்பதைப் பாடிக் காட்டுமாறு அவனை வேண்டினாள். அவன் பாடத் தொடங்கியதும், தன் தந்திரம் பலித்துவிட்டதென்று மகிழ்ந்தாள். இதனை உணர்த்துவது போல, "மாதவி தன் மனமகிழ வாசிக்கத் தொடங்குமன்" என்கிறார் இளங்கோ.

மாதவி தந்த யாழைக் கையில் வாங்கிய கோவலன் அவள் விரும்பிய வண்ணம் பாடத் தொடங்கினான்.

## கோவலன் பாடிய ஆற்று வரி

அவன் பாடிய வரிப்பாட்டு இருவகைப்பட்ட தென்கிறார் இளங்கோ. ஒன்று, 'ஆற்று வரி'; இன்னொன்று, 'கானல் வரி' கோவலனும் மாதவியும் காவிரியாறு கடலொடு கலக்கும் இடத்திலே அமர்ந்திருக்கின்றனர். அதனால், முதலில் காவிரியைப் பார்த்து ஆற்று வரியும், பின்னர் கடலைப் பார்த்துக் கானல் வரியும் பாடுகின்றான் கோவலன். ஆற்று வரி மூன்று செய்யுளோடு முடிகின்றது. அந்தச் செய்யுட்களைப் பார்ப்போம்:

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!

சங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி!

மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல் அதுஓச்சிக்
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி!
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மன்னும் மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி!

உழவர் ஓதை மதகோதை
உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி!
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்த வெல்லாம் வாய்காவா
மழவர் ஓதை வளவன்தன்
வளனே வாழி காவேரி!

ஆற்று வரிப் பாடல்களிலே காவிரியாற்றின் சிறப்பொடு காவிரி நாடனை சோழ மன்னனின் செங்கோன்மையையும் சேர்த்துக் கோவலன் புகழ்கின்றான்.

சிலம்பிலுள்ள கானல் வரிப் பாடற் பகுதி அரச வாழ்த்தோடு தொடங்குகின்றது. "அரச வாழ்த்து" என்றால், நேரடியாக அல்ல; உவமை வாயிலாக.

## உள் மனத்தில் கண்ணகி

மாதவியின்பால் ஊடல் கொண்ட காரணத்தால் கோவலனுடைய மனத்திரையிலே கண்ணகி தோன்றி

விட்டாள். மனம் இருவகைப்பட்டது என்பர் ஞானியர் ஒன்று உள்மனம்; மற்றொன்று, புறமனம். கோவலன் மாதவியின் மனை புகுந்த பின்னரும் அவனுடைய உள்மனத்தில் கண்ணகியைப் பற்றிய நினைவு இருந்து வந்தது. அவனுடைய புற மனத்திலேதான் மாதவி ஆதிக்கஞ் செலுத்தினாள். உண்மை உள்மனத்தோடுதான் உறவு கொள்ளும்.

மாதவியின் மனை புகுந்த கோவலன் தன் மனைவியான கண்ணகியை மறந்தான் என்று இளங்கோ கூறவில்லை. "வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்தான்" என்றுதான் கூறுகின்றார். "மனைவியை மறந்தான்" என்பதற்கும் "மனையகம் மறந்தான்" என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு தானே! மாதவியின் மனை புகுந்த பின்னர், கண்ணகியிடமும் சென்று வரவேண்டுமென்ற நினைப்பு கோவலனுக்கு அடிக்கடி வந்திருக்க வேண்டும். அகத்திணை இலக்கியங்களிலே பரத்தை வீட்டுக்கும் பத்தினி வீட்டுக்குமாகப் போக்கு வரத்து செய்யும் தலைவர்களையே காட்டுகின்றனர் புலவர்கள். அதுபோல, கோவலனும் மாதவியின் மனைக்கும் கண்ணகியின் மனைக்குமாகப் போக்குவரத்தாக இருந்திருப்பானானால், அது சமுதாய நியதிதான்! அப்படிப்பட்ட மனமும் அவனுக்கு இருந்திருக்கிறது. ஆனால், ஒருகண நேரத்தில்கூட மாதவியைப் பிரிய வழிவகை அறியாமல் அவளுடைய அன்புப்பிடியில் கோவலன் அகப்பட்டுக் கொண்டான். இதனை, "விடுதலறியா விருப்பினன்" என்ற வாசகத்தால் தெரிவிக்கிறார் கவிஞர்

மாதவியாள் கோவலனைக் கவர்ந்தது ஆடல்—பாடல்—அழகு ஆகியவற்றால் மட்டுமல்ல; தன் குல ஒழுக்கத்திற்கு மாறாக தான் கடைப்பிடித்து வந்த கற்பொழுக்கத்தாலும் அவனைக் கவர்ந்தாள். அதனால், மாதவியோடு கூடி இல்லற நெறிகளைக் கடைப்பிடித்து வாழக் கோவலனால் முடிந்தது. இல்லறங்களுக்காகக் கண்ணகி அவனுக்குத் தேவைப்படவில்லை. ஆயினும், இந்திர விழாவில் மாதவி நடனம் ஆடிய

போது, பிற ஆடவர்கள் அவளுடைய அழகை அள்ளிப் பருகியதைக் கண்டதால், அவளுடைய பிறப்பிலுள்ள குறை பாடு அவனுடைய நினைவிற்கு வந்தது.

உத்தமக் கற்பினளான கண்ணகி பிற ஆடவர் பார்வையிற் படாமல், கணவனைப் பிரிந்த நிலையில் மனையகத்திலே மறைந்து வாழ்வது அவனது நினைவிற்கு வந்தது. கற்பு நெறியிலே கண்ணகியொடு மாதவியை ஒப்பு நோக்கினன். பிறர் நெஞ்சு புகாத தெய்வக் கற்பினள் கண்ணகி; பிறர் நெஞ்சு புகும் குறைபாடுடையவள் மாதவி இந்த வேறுபாடு கோவலனுக்குப் புலப்பட்டது. இதனல், மாதவியின்பால் ஊடல் கொண்ட அவனுடைய மனம் கண்ணகியை நாடிச் சென்றுவிட்டது—இல்லை, அவன் உள் மனத்திலேயே தங்கியிருந்த கண்ணகி புற மனத்திலேயும் தோன்றிவிட்டாள். ஆகவே, தன் கண்ணெதிரே தோன்றும் காவிரியைக் கண்ணகியாக நினைத்துக்கொண்டு கோவலன் ஆற்றுவரிப் பாடல் பாடினன். ஆம்; உள்ளத்திலே கண்ணகி; உதட்டிலே காவிரி!

காவிரியின் நாயகனை சோழ மன்னன், வடக்கேயுள்ள கங்கையாற்றைக் காதலித்து அவளோடு கூடி வாழச் சென்று விட்டாலும், காவிரிப் பெண்ணனவள் அவன்பால் ஊடல் கொள்வதில்லை. ஏன் தெரியுமா? அதுதான் பெண்களின் கற்புநெறி என்பதால்! இதனை, "திங்கள் மாலை வெண்குடையான்... கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!" என்றும், "கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணய், மங்கை மாதர் பெருங் கற்பு என்று அறிந்தேன் வாழி காவேரி!" என்றும கோவலன் பாடியதால் அறிகிறேம்.

## ஆற்றுவரிப் பாட்டில் அரசியல்

இங்கே ஒரு அரசியல் நெறியையும் சேர்த்துச் சொல்லுகிருர் இளங்கோவடிகள். அதாவது, சோழ நாட்டு மன்னன்

கங்கை நாட்டைக் கைப்பற்ற வடபுலம் சென்றிருந்தாலும், அவன் இல்லாத நேரத்திலே உள்நாட்டில் அராஜகம் தோன்றுவதில்லையாம்! சோழன் செங்கோலன் ஆதலால், அவன் இல்லாத நேரத்திலும் குடிமக்களால் தருமமும் ஒழுங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றனவாம்.

"மன்னும் மாலை வெண்குடையான்" என்னும் பாடலின் பொருளும் இதுபோலத்தான்.

இதற்குமேல் அகத்திணை இலக்கிய நெறிப்படிக் கானல் வரிப் பாடல்களைக் கோவலன் பாடுகின்றான். நெய்தல் நிலமான கடற்கரைப் பிரதேசத்தில் வாழும் பெண் ஒருத்தியைக் காதலித்து, அவள்பால் மனதைப் பறிகொடுத்த தலைவனின் கூற்றுகக் களவியல் துறைகளைப் பாடுகின்றான் பாடுபவன் கோவலனானாலும் பாடல்களிலே அவன் வெளியிடும் கருத்துக்கள் பாட்டுடைத் தலைவனுடையவையாகும். ஆம் பாட்டுடைத் தலைவன் கோவலன் அல்லன்.

கோவலன் பாடிய கானல்வரிப் பாட்டின் தலைவனால் காதலிக்கப்பட்ட தலைவியானவள், கடற்கரையில் வாழும் மீனவப் பெண் ஆவாள். இளங்கோவடிகள் மன்னர் குலத்தில் பிறந்தவரென்றாலும், சிலம்பின் மூலம் மக்கள் கவியாகவே தம்மை அவர் அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார். அதனாற்றான், எளிய மீனவப் பெண்ணைக் கானல் வரிப் பாட்டின் தலைவியாக்கினார்.

## மீனவப் பெண்

கோவலன் கானல் வரிப் பாட்டிலே தலைவியின் முகத்தைத் திங்களுடன் ஒப்பிட்டு, அந்தத் திங்களும், வானத்திலிருந்தால் பாம்பு தன்னைப் பிடித்துக் கொள்ளுமென்று அஞ்சி, பூமியில் வந்து உலவுவதாக வருணித்துப் பாடுகிறான். அந்தப் பாடல் வருமாறு :

**கயல்எழுதி வில்எழுதிக் கார்எழுதிக் காமன்**
**செயல்எழுதித் தீர்த்தமுகம் திங்களோ காணீர்**
**திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே**
**அம்கண்ஏர் வானத்து அரவுஅஞ்சி வாழ்வதுவே.**

*கோவலன் ஏற்றுள்ள பாத்திரமான கானல் வரிப் பாட்டுடைத் தலைவன். தான் கண்ட தலைவியின் இடையும் முகமும் மொழியும் புருவமும் விழிகளும் தனக்கு இடர் செய்கின்றனவென்று பாடுகின்றான். பாடுபவன் கோவலன்தான் என்பதனை மறவாமல் அந்தப் பாடல்களைப் பார்ப்போம்:*

**பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே**
**பழுதறு திருமொழியே பணைஇள வனமுலையே**
**முழுமதி புரைமுகமே முரிபுரு வில்இணையே**
**எழுதரு மின்இடையே எனைஇடர் செய்தவையே**

**திரைவிரி தருதுறையே திருமணல் விரிஇடமே**
**விரைவிரி நறுமலரே மிடைதரு பொழில் இடமே**
**மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே**
**இருகயல் இணைவிழியே எனைஇடர் செய்தவையே.**

**வளைவளர் தருதுறையே மணம்விரி தருபொழிலே**
**தளைஅவிழ் நறுமலரே தனியவள் திரிஇடமே**
**முளைவளர் இளநகையே முழுமதி புரைமுகமே**
**இளையவள் இணைமுலையே எனைஇடர் செய்தவையே.**

*தன் தலைவி மீனவப் பெண்ணாதலால், அவள் தந்தை கடலுள் புகுந்து வலைவசி மீன்களைக் கொல்லுவதுபோல, அவளும் தன் உடலுள் புகுந்து தன் உயிரைக் கொல்லாமல் கொல்லுகிறாள் என்கிறான், கோவலன் கண்ட பாட்டுடைத் தலைவன்.*

**கடல்புக்கு உயிர்கொன்று வாழ்வர்நின் ஐயர்**
**உடல்புக்கு உயிர்கொன்று வாழ்வைமன் நீயும்.**

**கொடுங்கண் வலையால் உயிர்கொல்வான் நுந்தை**
**நெடுங்கண் வலையால் உயிர் கொல்வைமன் நீயும்.**

**ஓடும் திமில்கொண்டு உயிர்கொல்வர் நின்ஐயர்**
**கோடும் புருவத்துஉயிர் கொல்வைமன் நீயும்.**

*[திமில்— மீன் பிடிக்கும் படகு ]*

## மாதவியின் ஊடல்

கோவலன் முன்னம் பலமுறை யாழிசைத்துப் பாடி மாதவி கேட்டிருக்கிருள். ஆனல், அவன் அன்று பாடியது போல ஐம்புலன்களும் ஒன்றி மனமுருகிப்பாடி அவள் முன்பு பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. அவ்வளவு உருக்கமாகப் பாடினன். பாட்டுடைத் தலைவன் வேருெருவன் என்பதனை மறந்து, அந்தப் பாத்திரமாகவே மாறிப் பாடினன்.

உண்மையில் கண்ணகியையே உள்ளத்தில் நினைத்துப் பாடினன் ஆதலால், "இவன் வேருெருத்தியை நினைத்து மன முருகிப் பாடினன்" என்ற முடிவுக்கு வந்துவிட்டாள் மாதவி. அந்த வேருெருத்தி கண்ணகி என்பதை அவள் அறிந்திருக்க வில்லை. மூன்ருவதான ஒருத்தி என்ற தவருன முடிவுக்கே அவள் வந்தாள். அதனல், கோவலன் பாடியதைக் கேட்டு மகிழ்ந்தவள்போல பாவனை காட்டி, உள்ளத்திலே அவன் பால் ஊடல் கொண்டவளாகி, அவன் கையிலிருந்த யாழை வாங்கிக்கொண்டு தானும் பாடத்தொடங்கினள், கோவலன் பாடியதற்குப் போட்டியாக! அவள் பாடவேண்டிய பாணியைக் கோவலன் பாடிக் காட்டிவிட்டானல்லவா?

இக்காலத் திரைப்படங்களிலே காதலனுடன் போட்டி யிட்டு, 'டுயிட்' பாடும் காதலிபோல, கோவலனுடன் 'போட்டி யிடும் பாணியிலே மாதவியும் பாடத் தொடங்கினள். அதனை, இளங்கோ வாக்காலேயே அறிவோம்!

**ஆங்குக், கானல்வரிப் பாடல்கேட்ட**
**மான்நெடுங்கண் மாதவியும்**
**'மன்னும்ஓர் குறிப்புஉண்டுஇவன்**
**தன்நிலை மயங்கினான் எனக்**
**கலவியால் மகிழ்ந்தாள்போல்**
**புலவியால் யாழ்வாங்கித்**
**தானும்ஓர் குறிப்பினள்போல்**
**கானல்வரிப் பாடல்பாணி**
**நிலத்தெய்வம் வியப்பெய்த**
**நீள்நிலத்தோர் மனம்மகிழக்**
**கலத்தொடு புணர்ந்தமைந்த**
**கண்டத்தால் பாடத்தொடங்குமன்**

*கலையரசியான மாதவி பரத்தையர் குலத்தில் பிறந்தவ ளென்றாலும், கோவலனைத் தவிர பிறிதொரு ஆடவனை நெஞ் சாலும் நினைத்தறியாதவள். தனது நெஞ்சத்தைக் கோவல னுக்கே கோயிலாக்கியவள். அப்படியிருந்தும், தன்னை மறந்து வேறொருத்தியை நினைந்து கோவலன் கானல்வரிப் பாடினான் என்ற தவறான முடிவின் காரணமாக, தானும் கோவலன் அல்லாத வேறொரு ஆடவனை நினைத்தவள் போலப் பாசாங்கு செய்து கானல் வரி பாடத் தொடங்கினாள்.*

*தனக்கே உரியவளான கண்ணகியை நினைத்தே கோவலன் கானல்வரி பாடினான். அதுபோல, மாதவியும் கோவலனை நெஞ்சில் வைத்தே பாடினாள். அவன் தன்பால் ஊடல் கொண்டதால் தனக்கு ஏற்பட்ட வருத்தத்தை மறைமுகமாக வெளிப்படுத்தும் வகையில் பாடினாள். அதனால், கோவலன் அல்லாத வேறு ஒருவனை நினைத்துப் பாடுவதுபோன்று கோவல னுக்குத் தோன்ற வேண்டுமென்று பாவனை செய்தாள். இது வெறும் நடிப்புதான் என்பதனை உணர்த்துபவர்போல, "தானும் ஓர் குறிப்பினள் போல்" என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.*

"நிலத்தெய்வம் வியப்பெய்த நீள்நிலத்தோர் மனம் மகிழக் கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தால்" பாடத் தொடங்கினாள் என்கிறார்.

மகிழ்ச்சியும் வியப்பும் வேறுபாடுடைய—ஏன், முரண்பாடுடைய தன்மைகளாகும். உத்தமக் கற்பினளான மாதவியாள் கோவலன் அல்லாத வேறொருவனை நினைத்ததுபோலப் பாவனை செய்து பாடத் தொடங்கியது கண்டு நிலமகள் வியப்படைந்தாள். இதனால், கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகி வீட்டிற்குப் போக நேரும் என்பதால் உலகிலுள்ளோர் மனம் மகிழ்ந்தார்கள் என்று கவிஞர் கற்பனையாகக் கூறுகிறார்.

கோவலன் பாடிய பாணியிலேயே தானும் பாட நினைத்து அவனிடமிருந்து யாழை வாங்கிய மாதவியாள், அவன் பாடியது போன்றே முதலில் ஆற்றுவரிப் பாடல்களைப் பாடுகின்றாள். அந்தப் பாடல்கள் வருமாறு :

**மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்**
**கருங்க யற்கண் விழித்துஒல்கி நடந்தாய் வாழி காவேரி"**
**கருங்க யற்கண் விழித்துஒல்கி நடந்த வெல்லாம் நின்கணவன்**
**திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!**

**பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்**
**காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி!**
**காமர் மாலை அருகசைய நடந்தவெல்லாம் நின்கணவன்**
**நாமவேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழி காவேரி!**

**வாழி யவன்தன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி**
**ஊழி வுய்க்கும் பேருதவி ஒழியா தொழுகல் உயிரோம்பும்**
**ஆழி யாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி!**

கோவலனும் மாதவியும் பாடும் ஆற்றுவரிப் பாடல்கள் இளங்கோவின் படைப்புக்களே என்றாலும், வருணனையிலே

கோவலனை மாதவி விஞ்சி நிற்கச் செய்துவிட்டார் கவிஞர் கோவலனுடைய ஆற்றுவரிப் பாடல்களிலே பொருட் செறிவைக் காண முடிகின்றது. இருபொருள்படப் பாடும் திறமையையும் அவன் வெளிப்படுத்துகிறான். ஆனால், பாடல் களிலே வருணனை அழகைக் காண முடியவில்லை.

மாதவி, காவிரியாற்றையும் அதன் சுற்றுப் புறங்களையும் அழகாக வருணிக்கின்றாள். "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை யதுபோர்த்து, கருங்க யற்கண் விழித் தொல்கி நடந்தாய் வாழி காவேரி!" என்னும் வரிகள் படிப் போரின் கண்களுக்குக் காவிரியாற்றைக் காட்சிப்படுத்தி விடுகின்றன. "பூவர் சோலை மயிலால" என்று தொடங்கும் பாடலிலும் வருணனையழகைப் பார்க்கிறோம். புனல் வடிவ மான காவிரியாள் பூவாடை போர்த்து ஒய்யார நடை போடு கிறாள். கண்களைத் திறப்பதும் மூடுவதுமாக வேடிக்கை காட்டுகிறாள். காவிரியாற்றின் இரு கரையிலும் உள்ள சோலை களிலே குயில்கள் பாடுகின்றன; மயில்கள் அகவுகின்றன. இது, மாதவியின் வருணனை.

மாதவியின்பால் ஊடல் கொண்ட நெஞ்சத்துடன் கோவலன் பாடினான் ஆதலால், அவன் பாடல்களிலே இயற்கை அழகுபற்றிய வருணனையைக் காண முடியவில்லை.

## 'நன்மை மறந்தாரை நாம் மறவோம்!'

கோவலன் தன்னுடைய ஆற்று வரிப் பாடல்களிலே பெண்ணினத்தின் கற்பைப் பெருமைப்படுத்திப் பாடியதனைத் தன் கற்பொழுக்கத்தைக் குறை கூறியதுபோல் மாதவி கருதினாள். அவளது காதல் வாழ்க்கை கற்புக்கு விலக்கான தல்லவாதலால், கோவலன் மங்கை மாதர் பெருங் கற்பைப் பெருமைப் படுத்திப் பாடியதனை ஏற்றுக்கொள்ளுகின்றாள். ஆனால், மனைவி கற்பைக் கடைப்பிடிக்க வேண்டுமானால் அதனைக் கணவனும் கடைப்பிடித்தாக வேண்டுமென்று

-சொல்லாமல் சொல்லுகின்றாள். அவளும் கோவலனுக்கு தான் அளிக்கும் பதிலை காவிரியின்மேலேற்றித்தான் சொல்கின்றாள். "கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின் கணவன் திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!" என்பது கோவலனுக்கு மாதவி தந்த பதிலாகும்.

மாதவி, தன் மனத்துள் திட்டமிட்டிருந்தபடிக் கானல் வரிப் பாடல்களைப் பாடினாள். அப்பாடல்களில் அவள் வெளிப்படுத்திய உணர்வும் பொருளும் அவளுடையவை யல்ல. அவள் ஏற்றுக்கொண்ட பாட்டுடைத் தலைவியி னுடையவையாகும். ஆயினும், கோவலனை ஏமாற்றவேண்டி, தானே அந்தப் பாத்திரமாகி, மனமுருகிக் கானல்வரி பாடினாள். தலைவனின் வரவை எதிர்பார்த்து, தான் சொல்லிச் சென்ற கால எல்லைக்குள் அவன் வராததால் ஏமாந்த தலைவியின் உணர்வை வெளிப்படுத்தி மாதவி பாடிய பாடல் களிலே ஒரு பாடல் வருமாறு:

**தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்**
**எம்மை நினையாது விட்டாரோ? விட்டுஅகல்க;**
**அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்;**
**நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்.**

பாட்டுடைத் தலைவியால் காதலிக்கப்பட்ட தலைவன் தானும் தன் தலைவியும் தெய்வமாகக் கருதும் கடல் மீது ஆணை வைத்து, குறித்த காலத்தில் திரும்பி வந்து விடுவதாகச் சொல்லிவிட்டுப் போனான். சொன்ன காலத்தில் வாராததால் கடல் தெய்வத்தின் மீது அவன் செய்த சத்தியம் பொய்த்து விட்டது அதனால், சினங் கொண்ட கடல் தெய்வமானது தன் காதலன் என்றேனும் ஒருநாள் மரக்கலத்தின் வாயி லாகத் திரும்பி வரும்போது, அந்த மரக்கலத்தைக் கவிழ்த்து அவனைத் தண்டித்து விடுமோ என்று பாட்டுடைத் தலைவி அஞ்சுகின்றாள். அப்படிச் செய்யாமல் சத்தியம் பொய்த்த

தன் தலைவனை மன்னித்துவிடுமாறு வேண்டிக் கடல் தெய்வத்தைக் கெஞ்சுகின்றாள்:

**பூக்கமழ் கானலில் பொய்ச்சூள் பொறுக்கென்று**
**மாக்கடல் தெய்வம் நின் மலரடி வணங்குதும்**

## கோவலன் பிரிந்தான்!

காவிரியாற்றையே கண்ணகியாகப் பாவித்து இரு பொருள்படக் கோவலன் ஆற்றுவரிப் பாடல்கள் பாடினானே, அதிலே உண்மை இருந்தது. அதன்பின் பாட்டுடைத் தலைவியைக் கண்ணகியாகக் கற்பித்துக்கொண்டு கானல்வரிப் பாடல்களை மனமுருகிப் பாடினானே, அதிலேயும் உண்மை உண்டு. அவனுடைய பாட்டுடைத் தலைவி கற்பனைப் பாத்திரமல்லள்! அவனால் மணக்கப்பட்ட பத்தினியே! அதனால், கோவலன் உண்மைத் தன்மையோடு உளமுருகிப் பாடினான்.

அவனோடு போட்டியிட்டு, தானும் கோவலன் அல்லாத வேறொருவனைக் காதலித்தவள்போல மாதவி பாடினாளே, அது அவள் மனமறிந்து நடத்திய போலி நாடகம். மனமுருகிப் பாடுவதுபோலக் காட்டியது பொய் நடிப்பு. அவளுடைய பாட்டுடைத் தலைவன் அவளது கற்பனையில் பிறந்த பாத்திரந்தான். ஆயினும், கோவலன் இதனை அறியாதவனாகி, உண்மையிலேயே தான் அல்லாத வேறொருவனைக் காதலித்து மாதவி பாடினாள் என்று கருதி அவளைத் தழுவியிருந்த கையை நழுவவிட்டு, பகற்பொழுது முடிந்துகொண்டிருந்த அந்தி மாலை நேரத்திலே, மாதவியோடு தான் நடத்திய காதல் வாழ்க்கைக்கும் பொழுது முடிந்து விட்டதென்று சொல்லாமல் சொல்பவன்போல அவளைவிட்டுப் பிரிந்து சென்றான். இதனை இளங்கோவின் வாக்காலேயே அறிவோம்:

**"கானல்வரி யான் பாடத் தான்ஒன்றின்மேல் மனம்வைத்து**
**மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்' என-**

**யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினை வந்து**
**உருத்தது ஆகலின்,**
**உவவுற்றதிங்கள் முகத்தாளைக் கவவுக்கை**
**ஞெகிழ்ந்தனனாய்ப்**
**'பொழுதுஈங்குக் கழிந்தது ஆகலின் எழுதும்' என்று**
**உடன்எழாது**
**ஏவலாளர் உடன் சூழ்தரக் கோவலன்தான்**
**போனபின்னர் —**

கோவலனுடைய ஊழ்வினையானது யாழின் மூலம் அவனும் மாதவியும் பாடிய கானல்வரிப் பாடலை ஒரு காரண மாகக் கொண்டு மாதவியிடமிருந்து அவனைப் பிரித்துவிட்டது என்கிறார் இளங்கோ.

## வினையே வில்லன்!

சிலப்பதிகாரத்திலே நம் அகக்கண்கள் காண வில்லன் பாத்திரம் நடமாடவில்லை கதையிலே பிரதான திருப்பங் களை ஏற்படுத்தவே வில்லன் பாத்திரம படைக்கப்படுவது வழக்கம். அப்படிப்பட்ட வில்லன் பாத்திரமாக ஊழ்வினை யைப் பயன்படுத்துகிறார் இளங்கோ. அந்த ஊழ்வினை உருவப் பாத்திரம் அல்ல; அருவப் பாத்திரம. கோவல னுடைய ஊழ்வினையான வில்லன் பாத்திரம் முதன் முதலில் வேலை செய்யத் தொடங்கியது கானல் வரிப் பாடல் காரண மாக அவன் மாதவியை விட்டுப் பிரிந்தபோதுதான். இதனை உணர்த்தவே, ''யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்தது'' என்கிறார் கவிஞர். இதிலே வரும் ''தன்'' என்ற சொல் கோவலனைக் குறிக்கும்.

இசைக் கருவிகளிலே யாழ் மிகச் சிறந்ததுதான் என்றாலும், வரலாற்றுச் சிறப்புமிக்க கலைஞர்களான காதலரின் பிரிவுக்குக் காரணமாகிவிட்டது. அதனால்தானோ என்னவோ அந்த யாழும் உலகிலிருந்து மறைந்து விட்டது.

கதையின் தொடக்கத்திலே மாதவியின் ஆடலையும் பாடலையும் அழகையும் கண்டு மயங்கி, கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவியின் மனை புகுந்தானே, அதற்கு, "ஊழ்வினை"யைக் காரணமாக்கவில்லை இளங்கோ. அது, அவன் தனது மதியின்மையால் செய்த பிழை என்றே கூறுகின்றார். மனிதன் தனது மதிபிறழ்ந்து தவறு செய்யும் போதுதான்—அதன் அடுத்த கட்டமாகத்தான்—'விதி' வேலை செய்யத் தொடங்குகின்றது என்ற உண்மையை கோவலனைக் கொண்டு இளங்கோ உலகத்தாருக்கு உணர்த்துகின்றார்.

## காதற் கடிதம்

கோவலனால் கைவிடப்பட்ட மாதவி, தன் தோழியான வயந்தமாலையின் துணைகொண்டு, கடற்கரையிலிருந்து வீடு திரும்பினாள். துயரக் கடலில் வீழ்ந்திருந்த நேரத்திலும், உலகம் முழுவதும் சோழனுடைய வெண்கொற்றக் குடையின் கீழ் வரவேண்டுமென்று பிரார்த்தித்து, விசுவாசமுடைய குடிமகளாக மன்னனை வாழ்த்தினாள்.

**மாயிரு ஞாலத்து அரசு தலைவணக்கும்**
**சூழி யானைச் சுடர்வாள் செம்பியன்**
**மாலை வெண்குடை கவிப்ப**
**ஆழி மால்வரை அகலவையா** எனவே.

இது, மாதவி பாடிய அரச வாழ்த்து. வீடு கெட்டாலும் நாடு வாழவேண்டும் என்று வாழ்த்துவதுதானே தேசபக்தி! அதுபோல, கோவலனுடைய பிரிவால் தனது வீடு இருண்டு விட்ட நிலையிலும் சோழர் பேரரசை வாழ்த்தினாள்.

இளவேனிற் பருவம் காதலரைப் பிரிந்த காதலியருக்குத் துன்பம் தருவதாகும். மாதவி, தனது மாளிகையில் மிக உயர்ந்த மேல் மாடத்திலுள்ள வேனிற் காலப் பள்ளியை அடைந்தாள். அங்கு, அவள் தன்னை அணிகலன்களாலும்

பிறவற்றாலும் அழகுபடுத்திக் கொண்டதை இளங்கோ சுவைபட வருணிக்கிறார். பின்னர், கோவலன் பிரிந்ததால் ஏற்பட்ட துயரை மறக்கும் பொருட்டு, யாழிசைத்துப் பாடி, இசையின்பத்தை அனுபவிக்க அவள் முயன்றாள். ஆனால், அவளுடைய மனம் இசையிலே ஈடுபடவில்லை. திரும்பவும் கோவலனை அடைந்தாலன்றி, தனக்கு வாழ்வு இனிக்காது என்ற முடிவுக்கு வந்தாள். அதனால், கோவலனுக்கு அனுப்பு வதற்கென்று ஒரு திருமுகம் எழுதினாள். அதன் வாசகம் வருமாறு:

மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்இள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்;

புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்று; இஃது அறிந்தீமின்!

"கோவல! காதலர்களைப் பிணைத்து மகிழ்விக்கும் இனிய இளவேனிற்காலம் வந்துவிட்டது. மாலைப்பொழுதானதால், விரகதாபத்தைப் பெருக்குகின்றவனாகிய சந்திரனும் வானிலே வந்து தோன்றிவிட்டான். அவன் செவ்வியன் அல்லன். காதலர்களை மலர் அம்புகளினால் தாக்கி, அவர்களுடைய உயிர்களையே கைக் கொள்பவன் காமன். இதெல்லாம் தாங்கள் அறியாதவை அல்ல. எனவே, என்னை நாடி வந்து, எனக்கு அருள் புரிவீராக!"

கடிதத்தை வயந்தமாலையிடம் தந்து, "இந்தக் கடிதத்தின் பொருளை கோவலற்கு, அவர் உள்ளம் ஏற்கும்படி எடுத்துரைத்து, அவரை இங்கே அழைத்து வருவாயாக!" என்று கூறினாள்.

கடற்கரையில் மாதவியைவிட்டுப் பிரிந்த கோவலன் புகார் நகர வீதிகளிலே நடைபோட்டுச் சென்று கொண்டிருந்தான். அவனைச் சந்தித்து, மாதவி தந்த திருமுகத்தைக் கொடுத்தாள் வயந்தமாலை. மாதவியின்பால் வெறுப்புற்றிருந்த கோவலன், அத் திருமுகத்தை வாங்க மறுத்தான். மாதவியுடன் கூடி வாழ்ந்த காலத்திலே. தன்னை மகிழ்விக்க அவள் ஆடிய நடனங்களையெல்லாம், பரத்தைத்தனத்திற் கேற்ற சாகசங்கள் என்று வருணித்தான். "நடனக்காரி தானே!" என்றும் ஏளனமாகக் கூறினான்.

கோவலன் நடத்தையால் ஏமாற்றமடைந்த வயந்தமாலை திரும்பிச் சென்று மாதவியையடைந்து நடந்ததைக் கூறினாள். மாதவி, "மாலை வாராராயினும் காலை காண்குவம்" என்று கூறி அமைதி பெற்றாள்.

## கண்ணகி கண்ட கனா

தேவந்தி என்பாள், கண்ணகியின் ஆருயிர்த் தோழி. பிறப்பால் அந்தணப் பெண். கண்ணகி தன் கணவனைப் பிரிந்து வருந்துவது அறிந்து, அவளையணுகி, "அருகம்புல், நெல் ஆகியவற்றை அவள்மீது தூவி, "கணவனோடு சேர்ந்து நீ இன்பம் பெறுவாயாக!" என்று வாழ்த்தினாள்.

கண்ணகி, "நான், என்னுடைய கணவனை இனிப் பெற மாட்டேனோ என்று அஞ்சுகின்றேன்" எனக் கூறி, தான் கண்ட தீய கனவினைத் தேவந்தியிடம் சொன்னாள்!

"கடுக்கும் என்நெஞ்சம் கனவினால் என்கை
பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுள் பட்டேம்
பட்ட பதியில் படாதது ஒருவார்த்தை
இட்டனர் ஊரார் இடுதேளிட்டு என்தன்மேல்
'கோவலற்கு உற்றதுஓர் தீங்கு' என்று அதுகேட்டு
காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோடு

ஊர்க்குஉற்ற தீங்கும்ஒன்று உண்டால் உரையாடேன்
தீக்குற்றம் போலும் செறிதொடீஇ! தீக்குற்றம்
உற்றேனொடு உற்ற உறுவனோடு யானுற்ற
நற்றிறங் கேட்கின் நகையாகும்''

''தோழி! நேற்றிரவு கனவிலே என் கணவர் வந்தார். என் கையைப் பிடித்து, 'வா' என்று அழைத்தார். இருவரும் புகாரைவிட்டுப் பிரிந்து வேறொரு பெரிய நகரினுள் சென்றோம். அங்கு எங்கள் குலப் பெருமைக்கு இழுக்கு தரக்கூடிய ஒரு பழியை ஊரார் எங்கள் மீது சுமத்தினர். அது, பொய்த்தேளை மேலே போட்டு, பயமுறுத்துவதுபோல் இருந்தது. அதனால், கோவலனுக்குத் தீங்கு விளைந்தது. அஃதறிந்து, காவலன் முன்னர் சென்று வழக்குரைத்தேன். காவலனோடு அவ்வூருக்கும் என்னால் கேடு உண்டாயிற்று. ஆனால், அதனை விளக்கமாகக் கூற மனம் தயங்குகின்றது. என் கணவனும் யானும் நற்பேறு பெற்றோம். அதைக் கேட்டால், உனக்கும் சிரிப்பு வரும்.''

கண்ணகி சொன்ன கனவைக் கேட்ட தேவந்தி, ''கண்ணகி! நீ உன் கணவனுக்குக் கசப்பாகிவிடவில்லை. முற்பிறப்பிலே ஒரு நோன்பினைச் செய்யாது தவறு இழைத்தாய். காவிரி கடலொடு சேருமிடத்திற்கு அருகேயுள்ள நெய்தல் நிலத்துக் கானலிலே சோம குண்டம், சூரிய குண்டம் என இரு பொய்கைகள் உள்ளன. அவற்றின் துறைகளிலே மூழ்கி அங்குள்ள காமவேள் கோயிலைத் தொழுத பெண்கள் பிரிந்த கணவனைத் திருப்பவும் அடைந்து இவ்வுலகில் இன்ப வாழ்வு எய்துவர். மறுமையிலும் போக பூமியிலே கணவனுடன் கூடி இன்புறுவர். நாமும் அங்கு சென்று நீராடுவோம், வா'' என்று அழைத்தாள். தேவந்தி கூறியதைக் கேட்ட கண்ணகி, ''காமனைத் தொழுவது கற்புடைய மகளிர்க்குப் பெருமை தருவது அன்று'' எனக் கூறினாள்.

இந்நிலையில், கோவலன் கண்ணகியின் மனையை அடைந்து, நேரே பள்ளியறை புகுந்து, தன் மனைவியை அருகழைத்து, "உன்னுடைய மேனி மெலிந்துவிட்டதே! முகம் ஒளியிழந்து விட்டதே!" என்று கூறி வருந்தினான். "வஞ்ச நெஞ்சப் பரத்தையுடன் கூடி, கைப் பொருளையெலாம் இழந்த எனது நிலையை எண்ணி நான் வெட்கப்படுகிறேன்" என்று மாதவியை வெறுத்தும் பழித்தும் பேசினான். கண்ணகி பல்லாண்டுகள் பிரிந்திருந்த கணவன் திரும்பவும் தன்னை அடைந்ததற்காக மகிழ்ச்சியடைந்தவளாய், நகைமுகங் காட்டி, "காற்சிலம்புகள் இரண்டுள; கொள்ளுங்கள்" என்று இதமாகக் கூறினாள்.

கோவலன் நேரே பள்ளியறை புகுந்தது, மனையிலுள்ள மற்றவர்கள் தன்னை பார்ப்பதைத் தவிர்ப்பதற்காகத்தான். காம உணர்வினுற்றான் பள்ளியறை புகுந்தான் என்று கூறு வோருமுண்டு. இது, பொருந்தாக் கூற்றாகும்.

கண்ணகி சிரித்த முகத்துடன் சிலம்புகளைத் தர முன் வந்ததால், கோவலன், வருங்கால வாழ்வுக்குத் திட்ட மிட்டவனாகி,

> **"சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு**
> **உலந்த பொருள் ஈட்டுத லுற்றேன்; மலர்ந்தசீர்**
> **மாட மதுரை யகத்துச்சென்று என்னோடு இங்கு**
> **ஏடுஅலர் கோதாய் எழுக!"**

என்றான். "மதுரை சென்று, சிலம்பை விற்றுப் பொருள் தேடி, அப்பொருளைக் கொண்டு வாணிபஞ் செய்து வாழ் வாங்கு வாழலாம், வா" என்று கோவலன் கண்ணகியை அழைத்தான். அவளும் தடை சொல்லாமல் புறப்பட்டாள்.

# 4

# கண்ணகி - கோவலன் மதுரைப் பயணம்

கண்ணகியும் கோவலனும் ஒரு நாள் விடியற்காலை நேரத்திலே புகார் நகரை விட்டுப் பிரிந்து மதுரை நோக்கிப் பயணமாயினர். இது, தற்காலத்தில் அரசியல் வாதிகள் செய்யும் "பாத யாத்திரை" போன்றது என்று சொல்லலாம். ஆனால், அதைவிடவும் புனிதமானது கண்ணகியும் கோவலனும் மேற்கொண்ட யாத்திரை! அதனை, "மான யாத்திரை" எனலாம். இந்த யாத்திரையை நாடுகாண் காதை, காடு காண் காதை, வேட்டுவ வரி, புறஞ்சேரியிறுத்த காதை, ஊர்காண் காதை ஆகிய ஐந்து காதைகளிலே விவரிக்கிறார் அடிகள். நாடுகாண் காதையிலே சோழ நாட்டின் வளம் முழுவதையும் வருணிக்கின்றார்.

"வயலும் சோலையும் அல்லது யாங்கணும்
அயல்படக் கிடந்த நெறிஆங்கு இல்லை"

என்ற வரிகளில், சோழ நாட்டிலே, பார்க்குமிடந்தோறும் பசுமையான வயல்களும், இருபுறமும் சோலைகளைக் கொண்ட சாலைகளும் தவிர பாலை நிலமே இல்லை என்கிறார். இன்றும் சோழ நாட்டின் பிரதான பகுதியான தஞ்சை மாவட்டம் வயலும் சோலையுமாகத்தானே நம் கண்களுக்குக் காட்சியளிக்கின்றது!

வேட்டுவ வரியிலே காட்டுப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறையைக் காட்டுகின்றார். அவர்கள் ஆண்களும் பெண்களு மாக ஒருங்கு கூடி, கொற்றவைத் தெய்வத்தை வழிபடும் காட்சியை படிப்போரின் அகக்கண்கள் காணும்படிக் காட்டு கின்றார். புகார்க் காண்டத்தை நாடுகாண் காதையோடு முடித்த கவிஞர், மதுரைக் காண்டத்தை காடுகாண் காதை யிலே தொடங்குகிறார். இதனால், பாண்டி நாட்டில் அந் நாளிலும் காட்டுப் பிரதேசமே மிகுந்திருந்தது என்பதனை அறிகிறோம்.

கண்ணகியும் கோவலனும் புகார் நகரத்தை விட்டுப் புறப்பட்ட நேரத்தைக் கூறுமிடத்து,

"வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்
கனைசுடர் கால்சீயா முன்"

(சிலப்பு. 9: 78–79)

என்கிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

கோவலன் மாதவியானை விட்டுப் பிரிந்தது சிலப்பதிகாரக் கதையில் முதல் திருப்பமாகும். இந்தத் திருப்பத்தை ஏற் படுத்தியது கோவலனுடைய ஊழ்வினையே என்று அடிகள் கூற முன்பே கேட்டோம். கண்ணகியை கைப்பிடித்து புகாரை விட்டுக் கோவலன் புறப்பட்டது கதையில் இரண்டாவது திருப்பமாகும். இதற்கும் வினையையே காரணமாக்கு கின்றார், "வினை கடைக்கூட்ட வியங் கொண்டான்" என்னும் சொல்லால். கோவலன் மானமுடையவன். அதனால்தான், தன் பத்தினியோடு நாடுவிட்டுப் பெயர்வதனை ஊரிலுள்ளோர் கண்டுவிடாதபடி, காலைக் கதிரவன் அடிவானத்தில் எழுவ தற்கு முன் உள்ள இருள் சூழ்ந்த விடியற்காலை நேரத்திலே புறப்பட்டான்.

கண்ணகியாளின் சிலம்பை விற்றுப் பொருள் தேடுவது தான் கோவலன் குறிக்கோள். ஆனால், அதனை, தான் பிறந்த ஊரிலேயே செய்வதற்கு அவன் மனம் நாணியது. அதனால்,

வேற்று நாடான மதுரைக்குச் சென்று அங்கே சிலம்பை விற்றுப் பொருளீட்ட விரும்பினன். இப்படிப்பட்டவனை தன் மானத் தமிழன் என்று சொல்லாமல், வேறு யாரைச் சொல்வது?

## சமணரா?

இருள் விலகாத நேரத்தில் இல்லத்தை விட்டுப் புறப்பட்ட கண்ணகியும் கோவலனும் புகார் நகர வீதிகளைக் கடக்கின்றனர். வழியிலே வைணவர் வழிபடும் திருமால் கோயிலையும், புத்தர்கள் போற்றும் இந்திர விகாரங்கள் ஏழினையும், சாவக நோன்பினரான சமணர் கூடியிருக்கும் சிலா வட்டத்தையும் முறையே தொழுதுவிட்டுச் செல்கின்றனர். இதனை, இளங்கோவடிகளே கூறக் கேட்போம்:

**"அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த**
**மணிவண்ணன் கோட்டம் வலம்செயாக் கழிந்து**
**பணைஐந்து ஓங்கிய பாசிலைப் போதி**
**அணிதிகழ் நீழல் அறவோன் திருமொழி**
**அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்**
**இந்திர விகாரம் ஏழுடன் போகிப்**
**புலவுஊண் துறந்து பொய்யா விரதத்து**
**அவல நீத்து அறிந்து அடங்கிய கொள்கை**
**மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய**
**ஐவகை நின்ற அருகத் தானத்துச்**
**சந்தி ஐந்தும் தம்முடன் கூடி**
**வந்து தலைமயங்கிய வான்பெரு மன்றத்துப்**
**பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல்**
**நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினும்**
**சாரணர் வரூஉம் தகுதியுண் டாம் என**
**உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட**
**இலகுஒளிச் சிலாதலம் தொழுது வலம் கொண்டு.**

[சிலம்பு. 10: 9-25]

இதில், "திருமால் கோயிலை வலம் செய்து போயினர்" என்றும், "புத்தர்களின் இந்திர விகாரங்கள் ஏழினையும் கடந்து போயினர்" என்றும் கூறிய அடிகள், சமணர்களின் சிலாதலத்தைச் சொல்லும்போது மட்டும் "தொழுது வலம் வந்து சென்றனர்" என்று கூறியிருக்கிறார்.

இதனால், கண்ணகியும் கோவலனும் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்ற முடிவுக்கு வருவோரும் உண்டு. நான் அப்படி நினைக்கவில்லை. 'தொழுது' என்னும் சொல்லை மணிவண்ணன் கோயிலோடும், இந்திர விகாரங்களோடும் சேர்த்துப் பொருள் காண வேண்டும். இப்படிச் செய்வது பிழையல்ல. உரையாசிரியர்கள் கடைப்பிடிக்கும் முறைதான். சிலப்பதிகாரம் சர்வ சமய சமரசக் காப்பியம். இந்த உண்மையை உணர்த்தத்தான், புகார் நகரைக் கடக்கும் கண்ணகியும் கோவலனும் வைணவர் தெய்வமான மணிவண்ணனையும், பௌத்தர்களின் விகாரங்களையும், சமணர்களின் சிலாதலத்தையும் தனித்தனியே தொழுதுவிட்டுச் சென்றனர் என்று கவிஞர் கூறுகின்றார்.

## மதுரை மூதூர் எது?

புகார் நகரைவிட்டு ஒருகாத தூரம் கடந்து சென்றதும் "மதுரை மூதூர் யாது?" என்று கோவலனைக் கேட்கின்றாள் கண்ணகி. வழிநடைத் துன்பத்தை ஒரு காத தூரம் நடந்ததற்குள்ளேயே உணர்ந்து விட்டாள். "மதுரை மாநகரம் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்று கேட்க வேண்டியவள், கண்ணெதிரே பல நகரங்களைக் கண்டுவிட்டு, அவற்றுள் நாம் புகவிருக்கும் நகரம் எது?—என்று கேட்பவள் போல, "மதுரை மூதூர் யாது?" என்று கேட்கிறாள். கண்ணகியின் மனநிலையைக் கோவலன் அறிந்து கொண்டான். "இன்னும் 30 காத தூரம் இருக்கிறது" என்று பதில் சொல்ல வேண்டியவன்,

"ஆறுஐங் காதம் நம் அகல்நாட்டு உம்பர்"
[சிலம்பு 20:42]

என்று கூறுகின்றான். மொத்தமாக 30 காத தூரம் என்று சொன்னால் அஞ்சுவாளென்று எண்ணி, "நம் நாட்டுக்கு அப்பால் ஆறு ஐந்து காத தூரத்தில் மதுரை மாநகர் உளது" என்று கூறுகின்றான். ஆறும் ஐந்தும் சேர்ந்து 11 காத தூரத்தில் மதுரை இருக்கிறது என்று கண்ணகி நம்பும்படியாகக் கூறுகின்றான்.

## கவுந்தியைச் சந்தித்தனர்

புகார் நகரை விட்டு ஒரு காதம் சென்றதும் வழியில் "கவுந்தி" என்னும் சமணப் பெண் துறவியைக் காண்கின்றனர். அம்மூதாட்டி,

"உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர்! என்னோ, உறுகண் ணாளரின்
கடைகழிந்து இங்ஙனம் கருதிய வாறு?"
[சிலம்பு. 10: 46-49.]

என்று கண்ணகி—கோவலனைப் பார்த்துக் கேட்கின்றார். தம்மைப்போலவே பிறரையும் கருதுவது சான்றோர் மனப்பான்மை. அதுபோல, சமணத் துறவியான கவுந்தியடிகள், கண்ணகியையும் கோவலனையும் அருக தேவனை வழிபடும் ஒழுக்க சீலராகவே பார்க்கின்றார்.

கண்ணகி—கோவலனுடைய புறத் தோற்றமானது அவர்களுடைய அகத்திலுள்ள துயரத்தைக் கவுந்தியடிகள் அறியுமாறு செய்துவிடுகின்றது. "மனத்துயரால் பாதிக்கப்பட்ட தீவினையாளர்களைப்போல புகார் நகரை விட்டுப் பெயர்ந்தது ஏனோ?" என்று கேட்கிறார் கவுந்தி.

"ஊரையாட்டு இல்லை; உறுதவத்தீர்! யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்"

என்று, கவுந்தியின் கேள்விக்குக் கோவலன் மிகவும் சுருக்கமாகப் பதிலளிக்கிறான்.

"சிலம்பு விற்றுப் பொருள்தேடும் விருப்பத்துடன் மதுரை செல்கிறேன்" என்றுதான் அவன் சொல்லியிருக்க வேண்டும். ஆனால், அப்படிச் சொல்லவில்லை. அப்படிச் சொல்லவொட்டாமல் தன்மானம் அவனைத் தடுக்கின்றது. "தோழனோடும் ஏழைமை பேசேல்!" என்பது பழமொழி அதனால், "மனைவியின் காற்சிலம்பை விற்றுப் பொருள் தேட அயல்நாடு செல்கிறேன்" என்று சொல்ல அவன் மனம் நாணு கின்றது. இதுவன்றோ, தன்மானம்! "மறவுரைகளை நீக்கிய சமணச் சான்றோரின் அறவுரைகளைக் கேட்டு, அங்கு அருக தேவனை வழிபடுவதற்காக யானும் மதுரை செல்கிறேன். சேர்ந்து செல்வோம் வாரீர்!" என்கிறார் கவுந்தி.

## கவுந்தி யார்?

சிலப்பதிகாரம், வரலாற்றுக் காப்பியம். அதில் வரும் கண்ணகியும் கோவலனும், தமிழ் மூவேந்தர்களும், மற்ற பிரதான பாத்திரங்களும் சரித்திர நாயக—நாயகியர் ஆவர். ஆனால், பெண் துறவியான கவுந்தியடிகளை சரித்திர நாயகி யாகக் கருதுவதற்கில்லை. சிலப்பதிகாரக் காலம் வரை தமிழ கத்திலே பெண்கள் துவராடை அணிந்து துறவுக் கோலம் கொள்ளும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. தமிழ் இலக்கியம் காட்டும் முதல் பெண் துறவி கவுந்தியடிகள் தான். அதனால், கவுந்தியை தமிழினத்துப் பெண்ணாகக் கருதுவதற் குத் தயக்கம் ஏற்படுகிறது. பெண் துறவு தமிழருக்கு உண் டென்றோ அல்லது தேவையன்றோ இளங்கோவடிகள் கருதி யிருக்கமாட்டார்.

கண்ணகியின் மண்ணுலக வாழ்வு முடிந்ததைக் கேட்ட அவளது தந்தை மாநாய்கன் துறவுக் கோலம் கொண்டு சமணப் பள்ளியில் சேர்கிறான். அப்படியே, கோவலன் கொலை யுண்டு மாண்ட செய்தி கேட்ட துக்கத்தால், துறவுக்கோலம் கொண்டு பௌத்த மடத்தில் சேர்ந்து விடுகிறான் அவனது தந்தை மாசாத்துவான். கண்ணகி—கோவலன் தாயர் இருவரும் உயிர் துறந்தனர். பெண் துறவை இளங்கோ விரும்பியிருந்தால், கண்ணகி—கோவலன் தாயரும் துறவு நிலை எய்தினர் என்று சொல்லியிருப்பார். சிலப்பதிகாரக் கதையின் முடிவிலே மாதவியும் மணிமேகலையும் துறவுக் கோலம் கொண்டு பௌத்த மடத்தில் சேர்ந்தார்கள் என்று கூறப்படுகிறது. இதனாலும், குலப்பெண்களான கண்ணகி—கோவலன் தாயர்களைக் கொண்டு பெண் துறவை அறிமுகப் படுத்த இளங்கோ விரும்பவில்லை என்பது தெரிகிறது. சமண சமயம் வடக்கிலிருந்து தமிழகத்திற்கு வந்ததாகும். அதனால், அந்த சமயத்தைச் சேர்ந்த வடபுலத்துத் துறவியரும் தமிழ கத்து மடங்களிலே வந்து தங்கியிருந்திருக்கக் கூடும். அப்படிப் பட்ட ஒரு துறவியாகத்தான்—தமிழ் மகள் அல்லாத வட புலத்துப் பெண்ணாகத்தான்—கவுந்தியடிகளைக் கருத வேண் டும். "தமிழினத்தைச் சாராத வடபுலத்துப் பெண்ணொருத்தி தமிழரான கண்ணகிக்கும் கோவலனுக்கும் வழித்துணை செல்வது எப்படி?" என்று கேட்கலாம்.

மணிமேகலையிலே வடபுலத்திலுள்ள சண்பை நகரத்து அந்தணனான கௌசிகன் என்பானின் மகள் சுதமதி என்பாள் தென்புலத்துக் கலையரசியான மாதவியின் தோழியாக அறி முகப்படுத்தப்பட்டிருக்கிறாள். இந்த சுதமதி பௌத்த மடத் தைச் சார்ந்தவள். வடபுலத்திலே சிலப்பதிகார காலத்திற்கு முன்பே—புத்தர் காலத்திலேயே—பெண்கள் துறவு கொள் ளும் வழக்கம் இருந்ததாக பௌத்த சமயவரலாறு கூறுகிறது. சுதமதியைப் போன்ற வடபுலத்து சமணத் துறவியாகக் கவுந்தியடிகளைக் கருதுவதற்குத் தடைஎதுவும் இருக்கவில்லை.

கவுந்தியடிகள் என்ற பெண் துறவியை கண்ணகிக்கும் கோவலனுக்கும் வழித் துணையாக அனுப்புவதற்கென்றே இளங்கோ படைத்திருக்கிறார். இராமாயணத்திலே வழித் துணை போகிறான் இலக்குவன். அவன் இராமனுக்கு உடன் பிறந்தானாதலால் சீதையுடன் சேர்ந்து வழித்துணைபோவதில் சிக்கல் ஒன்றுமில்லை.

சிலப்பதிகாரத்தில் வழித்துணை தேவைப்படுவது கண்ணகிக்குத்தான். அதனால், பெண் துணையைத் தேடித் தந்தார் கவிஞர். "அந்தப் பெண்ணை துறவியாகத்தான் படைத்திருக்க வேண்டுமோ?" என்றால், ஆம்: அதற்குக் காரணம் உண்டு. கோவலனுடைய ஒழுக்கம் சந்தேகிக்கப்படாமலிருப்பதற்காகத்தான் கவுந்தியை துறவியாகப் படைத்தார்.

## மதுரைக்கு வழி கூறு!

கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளின் துணையோடு தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். புகாரிலிருந்து 30 காத தூரத்திலுள்ள மதுரைக்குப் பயணப்பட்டோர் ஒரு நாளைக்கு ஒரு காத தூரமே நடந்தனர். வழியில் மாங்காட்டு மறையவன் என்னும் வைணவ அந்தணனைச் சந்திக்கின்றனர்

கோவலனோ, அவனுக்குத் துணை வந்த கவுந்தியடிகளோ மதுரைக்குச் செல்லும் வழியை அறிந்திராத நிலையில் புகாரிலிருந்து பயணப்பட்டு விட்டனர். அதனால், வழியில் சந்தித்த மாங்காட்டு மறையவனை,

"மாமறை முதல்வ! மதுரைச் செந்நெறி
கூறு நீ" (சிலம்பு. 13.58.)

எனக் கேட்டனர். அம்மறையவன்,

"நெடும்பேர் அத்தம் நீந்திச் சென்று
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்கால்
பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறைவாய்ச் சூலத்து அருநெறி கவர்க்கும்"

(சிலப்பு 10:70-73)

"கற்பாறையும் கானல் நீர்வேலியு முடைய நீண்ட பாலை வழியில் சென்று கொடும்பாளூருக்கும் நெடுங் குளத்திற்கும் இடைப்பட்ட கரையினைச் சேர்ந்தால், இளம்பிறையினை முடியில் கொண்ட சிவபெருமான் ஏந்திய முத்தலைச் சூலம்போல வழிகள் மூன்று பிளவுபட்டுப் பிரியும்" என்று கூறினன். அந்த வழிகளில் சென்றால் காணக்கூடிய அதிசயங்களையும் அந்தணன் வருணித்தான் அந்தணன் கூறிய மூன்று வழிகளிலே நடுவில் உள்ள வழியிலே கோவலன் குழுவினர் நடந்து சென்றனர்.

கானுறைத் தெய்வம் ஒன்று கோவலனை வசப்படுத்த நினைத்து, மாதவியின் தோழியான வயந்தமாலை வடிவத்தைத் தாங்கி, அவன் எதிரே வந்து, அவனுடைய காலில் விழுந்து அழுதது "மாதவியாள் என் மூலம் அனுப்பிய கடிதத்தை வாங்கத் தாங்கள் மறுத்து விட்டதால், அதற்கு நான்தான் காரணம் என்று என்மீது பழி சுமத்தி, அவள் என்னை வெறுத்து விட்டாள்" என்று அந்த மாயத் தெய்வம் கூறியது. மயக்கும் தெய்வம் ஒன்று காட்டு வழியில் தோன்றும் என்று மாங்காட்டு மறையவன் கோவலனுக்குக் கூறியிருந்தான். அதனால், வயந்தமாலை உருவத்தில் வந்த தெய்வத்தின் உண்மை வடிவத்தை அறிந்து கொள்ள உதவும் பாய்கலைப் பாவை மந்திரத்தினை அவன் உச்சரித்தான். உடனே வனத் தெய்வமானது வயந்தமாலை வடிவத்தை விட்டுத் தன் சுயவடிவத்தில் தோன்றி, தன்னை மன்னிக்குமாறு கோவலனை வேண்டியதுடன் தான் மாய வடிவம் கொண்டு மயக்க முயன்றதைத் தவ மூதாட்டியான கவுந்தியடிகளுக்கும்

மாபத்தினியான கண்ணகிக்கும் சொல்ல வேண்டாமென்று வேண்டிக் கொண்டது.

இந்த நிகழ்ச்சியின்போது சற்றுத் தொலைவிலிருந்த கண்ணகியும் கவுந்தியடிகளும் வனத்தெய்வம் மறைந்தபின் கோவலனை அடைந்தனர். பின், மூவருமாக மதுரையை நோக்கி வழி நடந்தனர்.

## சாலினி கூற்று!

கோடைக்காலமானதால் கதிரவன் கடுமையாக எரித்தான். அதனால், கண்ணகி தேவி உளம் வருந்தினாள். பாலை வனத்திலே தொடர்ந்து நடந்து செல்ல இயலாதவளானாள். அவளுடைய சிற்றடிகள் சிவந்தன. அடிக்கடி குறுமூச்செறிந்தாள். அவளுடைய நிலை கண்ட கோவலன் வழிப்பயணத்தை நிறுத்தி, அருகிலிருந்த 'ஐயை' என்னும் தெய்வத்தின் கோயிலுக்கு அவளை அழைத்துச் சென்றான். யாரும் அறியாத நிலையில் மூவரும் அங்கு நின்றனர்.

அந்த நேரத்தில் மறவர் குலப் பெண்களும் ஆண்களும் கூடி, பாலைநிலத்தில் கோயில் கொண்டுள்ள தங்கள் குலத் தெய்வமான கொற்றவை மீது வரிப்பாடல் பாடி வழிபடலாயினர். மறவர் மகளான சாலினி என்பாள்மீது கொற்றவைத் தெய்வம் தோன்றி, கண்ணகியைச் சுட்டிக்காட்டி,

> **"இவளோ, கொங்கச்செல்வி; குடமலை யாட்டி;**
> **தென்தமிழ்ப் பாவை; செய் தவக்கொழுந்து**
> **ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய**
> **திருமா மணி"**
>
> (சிலப்பு. 12 : 47-50)

"இவளோ, கொங்கர் போற்றும் செல்வியாவாள். குடமலையினை ஆட்சி செய்வாள். சேரநாடொழிந்த தென் தமிழ்

நாடு செய்த தவக் கொழுந்து. ஒப்பற்ற மாணிக்கமாக, உலகோர் வழிபடும் மாமணியாக வருங்காலத்தில் ஒளி விடுவாள்.''

இது, பின்னால் நிகழப் போவதனை முன்கூட்டிக் கூறிய தாகும். மனித குலத்தின் பொதுத் தெய்வமாக கண்ணகியைச் செய்து விடவேண்டுமென்பது இளங்கோவின் எண்ணம். அந்த எண்ணத்தையே தெய்வமேறிய சாலினியின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

பகல் நேரத்தில் வெயில் கடுமையாக இருந்ததாலும், நடக்க வேண்டிய நெடுவழி பாலைநில மாதலாலும், பகல் முழுவதும் ஒரு இடத்தில் தங்கி, இரவில் நிலா வெளிச்சத்திலே நடக்கலாமெனக் கோவலன் யோசனை கூறினான். கவுந்தியும் கண்ணகியும் அதற்கு இணங்கினர்.

## நிலமகள் வருந்தினாள்

நிலவின் ஒளியில் பயணஞ் செய்யும் கண்ணகியின் தோற்றம் எப்படி இருந்தது? அதனை இளங்கோ வருணிக்கக் கேட்போம்:

**பன்மீன் தானையொடு பாற்கதிர் பரப்பித்**
**தென்னவன் குலமுதல் செல்வன் தோன்றித்**
**தாரலைக் கோவையும் சந்தின் குழம்பும்**
**சேரிள வனமுலை சேரா தொழியவும்;**
**தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்**
**போதுசேர் பூங்குழல் பொருந்தா தொழியவும்**
**பைந்தளிர் ஆரமொடு பல்பூங் குறுமுறி**
**செந்தளிர் மேனி சேரா தொழியவும்;**
**மலயத்து ஓங்கி மதுரையின் வளர்ந்து**
**புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு**
**பால்நிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய,**
**'வேனில் திங்களும் வேண்டுதி' என்றே**
**பார்மகள் அயாஉயிர்த்து அடங்கிய பின்னர்**

"தாரகைகளைக் கோத்தாற் போன்ற முத்து வடமும் மணங் கமழும் சந்தனக் குழம்பும் சீர்மையும் இளமையும் பொருந்திய அழகிய முலைகளிலே கண்ணகிக்குச் சேராது ஒழிந்தன. தாது பொருந்திய செங்கழுநீரின் குளிர்ந்த மாலை யானது முல்லை மலருடன் சேர்ந்து அவளது கூந்தலிலே பொருந்தாது ஒழிந்தது. சந்தனத் துளிர்கள் அவளுடைய செந்தளிர் வண்ண மேனியிலே சேராது ஒழிந்தது. அணி கலன்களும் ஒப்பனைகளுமின்றி, புகாரில் கோவலனைப் பிரிந் திருந்த நாட்களிலே எந்தக் கோலத்தில் இருந்தாளோ அதே அவலத்தில்தான் அவனைக் கைப்பிடித்து வழி நடக்கும் நேரத் திலும் கண்ணகி இருந்தாள்.

"பல விண்மீன்களாகிய தன் படையொடு பால்போன்ற கதிர்களைப் பரப்பியவனாகத் தென்னவர் குல முதல்வனான சந்திரன் வானிலே தோன்றினான். அவனுடைய நிலவுக் கதிர்கள் கண்ணகியின் திருமேனியில் படிவது கண்டு, 'இவ்வேனிற் காலத்துத் திங்கள் ஒளியினை நீயும் வேண்டு கின்றாயோ?' என்று நிலமகள் அவளைப் பார்த்துப் பெருமூச்சு எறிந்து அடங்கினாள்."

இந்த வரிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், 'மாதவியோடு புலர்ந்து போதுதலானும், மதுரைக்குச் சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினனாதலானும், மேற்கவுந்தியடிகளுடன் வழிச் சேறலானும் யாண்டும் மெய்யுறன் மாத்திர மல்லது புணர்ச்சி இல்லென உணர்க" என்று கூறுகிறார். ஆம்; கண்ணகியும் கோவலனும் பாத யாத்திரையின்போது உடற் புணர்ச்சியின்பத்தை அனுபவிக்கவில்லை என்கிறார்.

## 'செங்கோலன் நாடு!'

இரவில் காட்டு வழியே நடப்பது கண்ணகிக்கு அச்சத் தைத் தருவதாக இருந்தது. அந்த அச்சத்தைப் போக்க

விரும்பிய கோவலன் அவளிடம் பின் வருமாறு சொல்லு கின்றான்;

"கொடுவரி மறுகும்; குடிஞை கூப்பிடும் ;
இடிதரும் உளியமும் இனையாது ஏகு!"

[சிலப்பு. 13; 13-32]

"கொடிய புலிகள் உறுமும்; கோட்டான்கள் அலறும்; கரடிகள் முழங்கும். இருந்தாலும், இது செங்கோல் தென்னவர் காக்கும் நாடு ஆதலால், நீ நடுங்காமல் செல்வாயாக!"

கோவலன், கண்ணகியினுடைய வளையணிந்த கையைத் தன் தோளின் மீது சார்த்திக் கொண்டு நடந்தான். மறவுரைகளை நீக்கிய மாசற்ற அறவுரைகளைக் கவுந்தியடிகள் வழிநெடுக சொல்லிக் கொண்டே சென்றார். அவரது அற வுரைகளைக் கேட்டுக் கொண்டே கடத்தற்கரிய காட்டுப் பிரதேசத்தை கண்ணகியும் கோவலனும் கடந்தனர்.

காட்டின் இடையிலே, கானங்கோழிச் சேவல்கள் அதி காலையில் குரலெழுப்பி, கதிரவன் வரவினை அறிவித்தன. வரிப் பாடல்களைப் பாடும் இசைப் பயிற்சி பெற்றவர்க ளான முப்புரி நூல் அணிந்த அந்தணர் வாழும் பகுதியை அவர்கள் சேர்ந்தனர். பொழுது விடிந்தவுடனே கவுந்தியடி களொடு தன் காதலியான கண்ணகியைப் பாதுகாப்பான ஓரிடத்தில் இருக்கச் செய்துவிட்டு, அங்கு போடப்பட்டிருந்த முள் வேலியினைக் கடந்து, நெடுந் தொலைவிலுள்ள நீர் நிலையை நோக்கி, நீர் கொண்டு வரச் சென்றான் கோவலன்.

வழிப்பயணத்தில் கண்ணகி அடைந்த இன்னல்களைக் கண்டு கவலைப்பட்டதனாலும், பிறந்த நாட்டை விட்டுப் பெயர்ந்த மன வருத்தத்தாலும் கோவலன் ஊது உலைத் துருத்தியின்

செந்தீயினைப் போல பெருமூச் செறிந்தான். உள்ளம் வேதனையால் வெந்து பட்டதால் அவன் நிறமும் உருவமும் முன்னம் பழகியவர்களும் அவனை அறிந்து கொள்ளாதவாறு மாறுபட்டன.

## மாதவியின் தூதன்

கண்ணகியைக் கைப்பிடித்து கோவலன் புகார் நகரிலிருந்து புறப்பட்டு மதுரை நோக்கிச் சென்றது கேட்டு மாதவியாள் மன அதிர்ச்சி யடைந்தாள். அதனால், தனது ஆற்றாமையைத் தெரிவிக்கும் கடிதத்தை எழுதி, அதனை அறிவு நிறைந்த அந்தணனான கோசிகமாணியிடம் தந்து, எப்படியேனும் கோவலனைக் கண்டு பிடித்து, அவனிடம் கடிதத்தைக் கொடுக்குமாறு கூறி அனுப்பி வைத்தாள்.

கோசிகன் பல நாட்கள் நடந்து, வழி நெடுக கோவலனைத் தேடியலைந்து, இறுதியில் கண்டு பிடித்து விட்டான். ஆனால், அவன்தான் கோவலன் என்று உறுதி செய்ய அவனால் முடியவில்லை. அதனால், ஒரு சூழ்ச்சி செய்தான். பசிய இலைகளையுடைய மாதவி என்னும் கொடி படர்ந்த பந்தலின் பக்கமாக நின்று கொண்டு கீழ்வருமாறு கூறினன்:

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றுஇவ்
அருந்திறல் வேனிற்கு அலர்களைந்து உடனே
வருந்தினை போலும்நீ, மாதவி!"

"கோவலனுடைய பிரிவு காரணமாகக் கொடுந்துயரம் எய்திய கரிய மலர் போன்ற நெடுங் கண்களையுடைய மாதவியைப் போன்று வேனில் கொடுமைக்கு ஆற்றாது நீயும் வருந்திப் பொலிவிழந்தாய் போலும், மாதவி!"

இவ்வாறு கோசிகன் கூறியதைக் கேட்ட கோவலன், "யாது நீ கூறிய உரை ஈது, இங்கு" என்று உள்ளந் துடித்துக் கேட்டான். ஆம், கோசிகன் மாதவிக் கொடியைப் பார்த்துக் கூறியது, பூம்புகார் மாதவியை நினைப்பூட்டியது கோவலனுக்கு!

மாதவியின்பால் சினங் கொண்டு அவளை விட்டுப் பிரிந்தான் என்றாலும், அவன் உள்ளத்தில் எங்கோ ஓரிடத்தில் அவள் இருந்து கொண்டுதான் இருந்தாள். அதனால், மாதவி துன்புறுகிறாள் என்ற பொருள்படக் கோசிகன் கூறியது அவனது உள்ளத்தை உலுக்கி விட்டது. "மாதவிக்கு என்ன நேர்ந்தது?" என்று அவன் கோசிகனைக் கேட்டதும், 'இவன்தான் கோவலன்; கண்டு பிடித்து விட்டேன்' என்று கூறி, கோசிகன் பெருமிதமடைந்தான்.

கோவலன் புகாரை விட்டுப் புறப்பட்டபின், அவனுடைய பெற்றோர் பெறுதற்கரிய மணியினை யிழந்த நாகம் போல் வாடினர் என்றும், நெருங்கிய சுற்றத்தினர் எல்லாம உயிர் இழந்த உடல்போல் துயரக் கடலிலே அழுந்தினரென்றும், அவனுடைய தந்தையான மாசாத்துவான் "திக்கெட்டிலும் தேடி, என் அருமை மகனைக் கண்டு பிடித்துக் கொண்டு வாருங்கள்" என்று கூறி ஏவலாளர்களை அனுப்பினன் என்றும் கோவலனிடம் கூறி, "இராமனைப் பிரிந்த பின்னர் அயோத்தி எந்த நிலையில் இருந்ததோ, அது போன்று புகார் நகரம் இருக்கின்றது" என்றான் கோசிகமாணி. இதனை அவனே கூறக் கேட்போம்:

"இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும்
அருமணி இழந்த நாகம் போன்றதும,
இன்உயிர் இழந்த யாக்கை என்ன
துன்னிய சுற்றம் துயர்க்கடல் விழ்ந்ததும்;

'ஏவ லாளர்! யாங்கணுஞ் சென்று,
கோவலன் தேடிக் கொணர்க' எனப் பெயர்ந்ததும்,

'பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்.
அரசே தஞ்சம்' என்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்."
[சிலம்பு. 13:57—66]

மேலும் சொல்லத் தொடங்கிய கோசிகமாணி கோவலனைப் பிரிந்த பின் மாதவி அடைந்த பெருந் துயரையும், அவள் தன்னிடம் கடிதம் கொடுத்து அனுப்பியதையும் தான் பல நாட்கள் தேடியலைந்து, இறுதியில் கோவலனைக் கண்டு பிடித்ததனையும் மனமுருகிக் கூறுகின்றான்.

"வசந்த மாலையின் மூலம் தான் கொடுத்தனுப்பிய கடிதத்தை நீ வாங்க மறுத்து, அவளிடம் தன்னைப் பற்றிக் கூறியவற்றையெல்லாம் கேட்டதும், மாதவியின் மேனியில் பசலை படர்ந்தது. ஏக்கம் என்னும் நோய்க்கு இரையானாள். தான் வாழ்ந்த எழுநிலை மாடத்துள் இடைநிலை மாடத்திலே இருந்த பள்ளியறைக் கட்டிலிலே படுத்த படுக்கையாகி விட்டாள். அவளது நிலையைக் கேட்டு வருத்தமுற்று, ஒருநாள் அவளைக் காணச் சென்றேன். அப்போது அவள், 'உம் திருவடிகளைத் தொழுகிறேன். எனக்கு வந்துற்ற துன்பத்தை நீக்கியருள்வீர்' என்று வேண்டினாள். தன்னுடைய மலர்க்கரத்தால் ஒரு ஓலையினை எழுதி, அதன் மீது தன் கூந்தலை ஒற்றி முத்திரையிட்டு, 'என் கண்மணி அனையாற்கு இதனைக் காட்டுக' என்று கூறி என்னிடம் தந்தாள். அதனைப் பெற்றுக் கொண்டு பல நாடுகளைச் சுற்றியலைந்து, இறுதியில் இங்கு உன்னைக் கண்டேன்."

இப்படிக் கூறிய கோசிகமாணி, மாதவி தந்த ஓலையினைக் கோவலனிடம் கொடுத்தான்.

ஓலையை வாங்கிய கோவலன், உடனே அதைப் பிரித்துப் படிக்க முயன்றானில்லை. காரணம், ஓலையின் மேல் மாதவி

தன் கூந்தலால் பொறித்திருந்த மண் முத்திரையிலிருந்து வெளிப்பட்ட மணத்தை நுகர அவன் விரும்பியதுதான். பல ஆண்டுகள் அவளோடு கூடி வாழ்ந்தபோது அவன் அனுபவித்த "பூர்வ வாசனை" அல்லவா!

முன்னர், மாதவியிடம் ஊடல் கொண்டு, அவளை விட்டுப் பிரிந்து பூம்புகார் வீதிகளிலே விரைந்து நடந்து கொண்டிருந்தபோது, மாதவியின் தோழி வயந்தமாலை கொண்டு வந்த கடிதத்தை வாங்க மறுத்துவிட்ட கோவலன், "அவள் ஆடல் மகள்தானே!" என்று மாதவியைப் பழித்தும் பேசினனல்லவா!

## மாதவியின் தந்தை கோவலன்?

இப்போது, தனது ஓலையின் மீது மாதவியாள் பொறித்த மண் முத்திரையிலிருந்து வீசிய மணமானது கோவலனை மயக்கி, கோசிகமாணியிடமிருந்து ஓலையை வாங்கும்படிச் செய்துவிட்டது. மாதவியின் கூந்தல் மணத்தைச் சிறிது நேரம் நுகர்ந்து அனுபவித்த பின்னர், ஓலையைப் பிரித்துப் படித்தான். அதன் வாசகம் வருமாறு:

"அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்.
குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய், போற்றி!"

[சிலப்பு. 13; 87-92]

முன்னர் வயந்தமாலையிடம் மாதவி கொடுத்தனுப்பிய கடிதத்திற்கும், இப்போது கோசிகமாணி கொண்டுவந்த கடிதத்திற்கும் வாசக அமைப்பிலே தலைகீழான மாற்றம்!

பொருளிலேயும் அப்படித்தான்! முந்தைய ஓலையிலே கோவலன் மனத்திலே காம உணர்ச்சியைத் தூண்டும் வகையில் காதல் மொழிகளை எழுதியிருந்தாள் மாதவி! அப்போது அவள் அவனைத் தன் காதலனாகவே கருதினாள். இப்போது,

"அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்"

என்கிறாள். இது, மாதவியின் ஓலையிலுள்ள முன்னுரை.

"பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி!"

என்னும் வாசகத்தை முடிவுரையாகக் கூறி, ஓலையை முடிக்கிறாள். "பொய்தீர் காட்சி" புலன்களை வென்ற ஞானியருடைய நிலையாகும். கோவலனை அத்தகைய ஞானியாகவே கருதுமளவுக்கு அவன் விஷயத்தில் மனமாற்றம் அடைந்து விட்டாள் மாதவி. ஆம்; இப்போது அவன் அவளுடைய காதலன் அல்லன்.

## 'மாதவி தீதிலள்'!

தன்னைப் பிரிந்தபின் கோவலன் அடைந்தநிலை மாதவியின் நெஞ்சை உருக்கிவிட்டது. அதனால் அவள் தன் கடிதத்தில் பின் வருமாறு கூறுகிறாள்:

"பெற்றோரை விட்டுப் பிரிந்து சென்றீரே! முதுமைப் பருவத்தை யடைந்துவிட்ட அவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைத் துறந்து சென்றீரே! குலத்தில் பிறந்த மனைவியுடன் நாடுவிட்டு நாடு செல்லத் துணிந்தீரே! அந்தப் பயணத்தையும் நள்ளிரவில் தொடங்கினீரே! இவ்வளவு துன்பங்களைத் தாங்கள் அடைவதற்கு யான் செய்த தவறு தான் யாதோ? அதை அறிய முடியாமல் என் நெஞ்சம் செயலற்றுத் தவிக்கின்றதே. பொய்மையை வெறுத்து,

உண்மையை விரும்பும் மாதவனே! உன்னைப் போற்றுகின் றேன். எனது நெஞ்சத் துயரையாவது நீக்குவீராக!''

மாதவியின் ஓலையைப் படித்ததும் அவள் விஷயத்தில் தான் முன்னர் கொண்டிருந்த தவறான எண்ணத்தை மாற்றிக் கொண்டான் கோவலன்.

"மாதவி தீது ஏதும் இல்லாதவள். எனக்கு நேர்ந்த இன்னல்களுக்கெல்லாம் என் தீவினைதான் காரணம்'' என்று கூறி, தான் மனமாற்றம் அடைந்த செய்தியை கோசிகமாணி மூலம் மாதவிக்கு அனுப்பினான் கோவலன்.

இங்கு மாதவியிடமிருந்து தூதுவந்த கோசிகமாணியான அந்தணனைப் பற்றி விளக்க வேண்டும். பிற்காலத்தில் அந்தணரிலே ஒரு வகையினர் ஒழுக்கமற்ற பரத்தையர் இல்லங்களில் முகாம் போட்டிருந்தனர். அந்த வகையினரைச் சேர்ந்தவனல்லன் கோவலன்பால் தூது வந்த கோசிகன்.

மாதவி பரத்தையர் குலத்தில் பிறந்தவள் என்றாலும், குலத் தொழிலில் ஈடுபட்டவள் அல்லள்; அதனைக் கட்டோடு வெறுத்தவள். கோவலன் ஒருவனுக்கே தன் இதயத்தைக் கோயிலாக்கி, தன் வாழ்க்கையை அவனுக்கே அர்ப்பணித் தவள். அதனால், பரத்தமைத் தொழிலுக்குத் துணை புரியும் அந்தணன் அவளுக்குத் தேவைப்படவில்லை. அவள் காலத்தில் அத்தகையவர்கள் அந்தணர் குலத்தில் தோன்றாமலும் இருந் திருக்கலாம்.

கோசிகன் குறையேதும் இல்லாத அந்தணன். மாதவி யாலும் கோவலனாலும் நன்கு மதிக்கப்பட்டவன். அதனாற் றான், கோவலனால் கைவிடப்பட்ட மாதவி, கோசிகனிடம் அடைக்கலம் புகுந்து, தனக்காகத் தூது போகும்படி அவனை வேண்டினாள்.

## ஓலையை வாங்கியதேன்?

வயந்தமாலை கொண்டுவந்த ஓலையை வாங்க மறுத்த கோவலன் கோசிகமாணி கொண்டுவந்த ஓலையை வாங்கக் காரணம், அந்த அந்தணன்பால் அவன் கொண்டிருந்த பெரு மதிப்புதான்!

முதலில் அனுப்பிய ஓலையிலே கோவலனைத் தன்பால் ஈர்த்துக்கொள்ள அழைப்பு விடுத்தாள் மாதவி. இரண்டாவது அனுப்பிய ஓலையிலே அழைப்பு விடவில்லை. அவன் படும் துயருக்கு வருந்தியிருந்தாள்—அவ்வளவுதான்! பத்தினியிடம் சேர்ந்தவனை அவளிடமிருந்து மீண்டும் பிரித்தெடுக்க மாதவி விரும்பவில்லை. பரத்தையர் வலையில் சிக்கிய காமுகன் எவனும் ஒரு பரத்தையை வெறுத்துப் பிரிந்தால், இன்னொரு பரத்தையின் வீடு புகுவதுதான் அக்கால நியதி போலும்! அப்படி நினைத்துத்தான் வயந்தமாலையிடம் கொடுத்தனுப்பிய ஓலையை வாங்கி மாதவி மனைக்குத் திரும்ப கோவலன் மறுத்ததைக் கேட்டபோது,

"மாலை வாரா ராயினும் மாணிழை
காலை காண்குவம்"

என்று நம்பிக்கையுடன் கூறினள் மாதவி

உடல் இன்பந்தர புகார் நகரிலே பரத்தையர் வேண்டிய பேர் உண்டு. ஆனல், ஒழுக்கத்தோடு கூடிய கலை இன்பம் தர அந்தப் பூம்புகாரிலே மாதவி ஒருத்திதானே உண்டு. இந்த உண்மையை ஒரு இரவிலே புரிந்துகொண்டு மறுநாள் விடிந்ததும் கோவலன் தன் மனைக்குத் திரும்பி விடுவான் என்றே மாதவி எதிர்பார்த்தாள். அதற்கு மாருக, பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியின் மனையைத் துறந்ததும் நேரே பத்தினியின் இல்லத்திற்குச் சென்றான். அங்கும் தங்காமல், குலமகளைக் கைப்பிடித்து மதுரைக்குப்

பயணமானன். பிறர் பாராவண்ணம் இருள் சூழ்ந்த இரவு நேரத்திலே புகாரிலிருந்து வெளியேறினன். இந்தச் செய்திகளைக் கேட்டதுமே, தனது காதலன் பழைய கோவலன் அல்ல; அவன் ஐம்புலன்களையும் வென்று அறவோனுகி விட்டான்; அதுகாறும் பிடித்திருந்த காம வெறியைத் துறந்து விட்டான்; 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' அன்ன மானஸ்தனுகி விட்டான்—என்றெல்லாம் அவனை மதிப்பிட்டு, தனது தந்தையின் நிலையிலே தன் பழைய காதலனை வைத்து, அவனுக்கு, மாதவி ஓலை எழுதி யனுப்பினுள். அதனுல்,

'எற்பயந் தோற்குஇம் மண்உடை முடங்கல்
பொற்புடைத் தாகப் பொருள்உரை பொருந்தியது
மாசில் குரவர் மலரடி தொழுதேன்
கோசிகமாணி, காட்டு!' [சிலம்பு. 13: 76-79]

என்று கூறி, கோசிகனிடமிருந்து தான் பெற்ற ஓலையைத் திரும்பவும் அவனிடமே கொடுத்து, அதைத்தன் தந்தையிடம் சேர்க்குமாறு வேண்டுகிருன் கோவலன். ஆம்! மாதவி அனுப்பிய கடிதத்தில் அடித்தல் திருத்தல் புகுத்தல் எதுவும் செய்யாமல் அதை அப்படியே தான் எழுதிய கடிதம் போன்று தன் தந்தைக்கு அனுப்பி வைக்கின்ருன்.

மாதவி ஓலையின் வாசகத்தை ''இசை மொழி'' என்கிருர் இளங்கோ. கவிதை நடையில் எழுதப்பட்டது போலும்! கோவலனுக்கு மாதவி அனுப்பிய இரண்டாவது ஓலை இலக்கிய உலகிலேயே மிகவும் புதுமையானதாகும். காதலனைத் தந்தையாகக் கருதி ஓலை எழுதுவதும், அவனும் அந்தப் பொருளிலேயே ஓலையை ஏற்று, அதனைத் தன் தந்தைக்கு அனுப்புவதும் புதுமையான நிகழ்ச்சிகள்தானே!

## வையையின் கண்ணீர்!

மாதவியிடமிருந்து தூது வந்த கோசிகனுக்கு விடை கொடுத்தனுப்பிய பின்னர், கண்ணகியைக் கைப்பிடித்து

கவுந்தியடிகளின் துணையோடு மதுரைப் பயணத்தைத் தொடர்ந்தான் கோவலன். முந்தைய நாட்களைப்போல, பகல்நேரத்தில் பாதுகாப்பான இடத்தில் தங்கியிருந்து, இரவு நேரத்தில் வழி நடந்தனர்

கோவலனுதியர் மதுரை மாநகரை நெருங்கி விட்டனர். இவர்களுடைய வரவைக் கண்டு வையை நதியாள் கண்ணீர் வடித்தாள்.

**"வையை யென்ற பொய்யாக் குலக்கொடி**
**தையற்கு உறுவது தான் அறிந் தனள்போல்**
**புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்**
**கண்நிறை நெடுநீர் கரந்தனள் அடக்கி"**

[சிலம்பு. 13: 170-73]

கண்ணகிக்கு இனி ஏற்படவிருக்கும் துன்பங்களை அறிந்ததால் பனித்த கண்ணீரை அம்மாபத்தினி காணாமல் மறைத்துக்கொண்டு, அமைதியாக நடை போட்டாளாம் வையை நதியாள். அந்த வையையைக் காட்டி, "புனல் ஆறு அன்று; இது; பூம்புனல் ஆறு" என்று கவுந்தியடிகள் கண்ணகிக்குக் கூறினார். கண்ணகியும் கோவலனும் வையை ஆற்றைக் கை கூப்பித் தொழுதனர். ஆற்றைத் தொழுது வழிபடுவதிலே வடபுலத்தவருக்கும் தென்புலத்தவருக்கும் பண்டை நாளிலேயே ஒற்றுமை இருந்ததுபோலும்!

வையை ஆற்றின் வடகரையிலே குதிரை முக ஓடம், யானை முக ஓடம், சிங்க முக ஓடம் ஆகியவை உள்ளன. ஆற்றைக் கடப்போர் ஓடத்தில் செல்வதுதான் வழக்கம். ஆனால், கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளோடு சேர்ந்து மரப்புணை யொன்றில் ஏறி, வையையாற்றின் வடகரையைக் கடந்து தென்கரையைச் சேர்ந்தனர்.

**"வாராதீர்!"**

மதுரையானது தெய்வத் தலமாதலால் அதனை வலம் வருவதில் புண்ணியம் உண்டு என்பது தமிழ் மக்களின் நம்பிக்கை. அதன்படி, கண்ணகியும் கோவலனும் அகழால் சூழப்பட்ட மதுரையை வலம் வந்து வழிபட்டு, நகரைச் சார்ந்துள்ள புறஞ்சிறை மூதூர் புகுந்தனர். அப்போது கோட்டை மதில்மேலே சுதந்திரக் காற்றால் அசைக்கப்பட்டு பறந்து கொண்டிருக்கும் பாண்டி வேந்தனின் மீனக் கொடியானது புகார் நகர தம்பதிகளின் கண்களுக்குக் காட்சியளித்தது.

**"போர்உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி**
**'வாரல்'என் பனபோல் மறித்துக்கை காட்ட**
**அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்**
**புறஞ்சிறை மூதூர் புக்கனர்..."** *[சிலம்பு. 13:189-92]*

பகைவரைப் போரிலே வென்று, பாண்டியரின் வானளாவ வளர்ந்த கோட்டையின் மீது உயர்ந்து பறக்கின்ற மீனக் கொடியானது, "கண்ணகி—கோவலன் தம்பதிகளே! மதுரையம்பதிக்கு வாராதீர்!" என்று கையை அசைத்துக் காட்டிக் கூறுவதுபோலப் பறந்து கொண்டிருந்தது.

கண்ணகி தேவிக்கு இனி நேரவிருக்கும் துன்பத்தை வையையாற்றைக் கொண்டும், கோட்டைமீது பறந்து கொண்டிருக்கும் மீனக் கொடியைக் கொண்டும் உணர்த்துகின்றார் இளங்கோவடிகள்.

சிவ தனுசை வளைத்துச் சீதையை மணக்க மிதிலைக்கு இராமன் சென்றபோது அம் மாநகரின் கொடிகளெல்லாம் இராமனை வரவேற்ற காட்சிபற்றிக் கம்பர் கூறுவதையும் இங்கு பார்ப்போம் :

மையறு மலரின் நீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை 'ஒல்லை வா' என்று அழைப்பது போன்ற தம்மா!

கம்பன் காட்டும் மிதிலைக் கொடிகள் சீதையின் சுயம்வர விழாவை முன்னிட்டு நகரை அலங்கரிக்கக் கட்டியுள்ள—தொங்கவிடப்பட்டுள்ள—தோரணக் கொடிகளாகும். அதனால், கைகளை நீட்டி 'விரைவில் வா' என்று அழைப்பது போன்று பறக்கின்றன. இளங்கோ காட்டும் மதுரைக் கொடி, கோட்டை மதில் மீது நின்று பறக்கும் நிலையில் காட்சியளிக்கின்றது. அதனால், 'வாராதே!' என்பதுபோல் பறக்கின்றதென்கிறார் இளங்கோ

குவளை, ஆம்பல் மலர்களிலிருந்து பிலிற்றும் தேன் துளிகளை கண்ணகிக்கு இனி நேரவிருக்கும் துன்பத்தை அறிந்து அவை வடிக்கும் கண்ணீர்த் துளிகளாகவும், அந்தத் தேன் துளிகளை உண்ண வரும் வண்டுகள் செய்யும் ரீங்காரத்தைப் புலம்பலாகவும் இளங்கோ வருணிக்கிறார்.

## கவுந்தியின் ஆறுதல்

ஒரு நாள் இரவு முடிந்து, பகற்பொழுது புலர்ந்து கொண்டிருந்த அதிகாலையிலே கோவலனும் கண்ணகியும் கவுந்தியும் மதுரையம்பதியை யடுத்துள்ள புறநகரையடைந்தனர். இதனை, 'புறஞ்சேரி' என்கிறார் இளங்கோ. இப்புறஞ்சேரியை அடைந்ததும், அங்குள்ள அறவோர் பள்ளியைச் சேர்ந்து தவக்கோலம் கொண்டார் கவுந்தியடிகள். அன்றின் தவம் முடிந்ததும், அவரையணுகி, கோவலன் கூறுகிறான் :

"நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி
கறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து ஆரிடை யுழந்து,
சிறுமை யுற்றேன் செய்தவத்தீர் யான்"

[சிலம்பு. 14: 17–20]

"தவத்திறன் உடையீர்! யான் ஒழுக்கப் பாதையினின்று வழுக்கிய வாழ்க்கை நடத்தி, பிறரால் பழிக்கத்தக்க தன்மையனுகிவிட்டேன். மலர்போன்ற மேனியையுடைய கண்ணகி நடுங்கும் வகையில் முன்னர் அறிந்திராத நாட்டிலே—துயரம் தரும் வழிகளிலே—நடந்து அலைந்து சிறுமையடைந்தேன்."

கவுந்தியடிகள் கோவலனுக்கு ராமாயணத் தலைவனை இராமனையும், பாரதத்தில் வரும் நளனையும் சான்று காட்டி ஆறுதல் கூறுகிறர். அது வருமாறு:

"இராமன், தன்னுடைய தந்தையான தயரதனின் ஆணைக்கிணங்க அரசு துறந்து, வனம் சென்று, அங்கு மனைவியைப் பிரிந்து அல்லலுற்றதை நீ அறியாயோ? அவன் சாமான்யனு? பிரம்மாவை ஈன்ற திருமாலின் அவதாரமன்ருே? ராமாயணக் கதை நம் தமிழ் நாட்டில் நீண்ட நெடுங்காலமாக வழங்கி வந்தும், நீ அதனை அறிந்ததில்லையோ?

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதலன் பயந்தோன் என்பது
நீஅறிந் திலையோ, நெடுமொழி அன்றே?
வல்லாடு ஆயத்து மண்ணரசு இழந்து
மெல்லியல் தன்னுடன் வெங்கான் அடைந்தோன்
காதலிற் பிரிந்தோன் அல்லன்: காதலி
தீதொடு படூஉஞ் சிறுமையன் அல்லன்

**அடவிக் கானத்து ஆய்இழை தன்னை**
**இடையிருள் யாமத்து இட்டு நீக்கியது**
**வல்வினை யன்றோ மடந்தைதன் பிழையெனச்**
**சொல்லலும் உண்டேல் சொல்லாயோ நீ;**
**அனையையும் அல்லை ஆயிழை தன்னொடு**
**பிரியா வாழ்க்கை பெற்றனை யன்றே**
**வருந்தாது ஏகி மன்னவன் கூடல்**
**பொருந்துழி அறிந்து போது ஈங்கு"**

[சிலம்பு. 14; 46-61]

"சூதாட்டத்திலே நாட்டை இழந்த நளச் சக்ரவர்த்தியானவன் தன்னுடைய மனைவியான தமயந்தியோடு வெம்மையான கானகத்தை அடைந்தான். அவனும் தன் மனைவியின்பால் அன்பில்லாதவன் அல்லன். அவன் மனைவியும் தீமை புரியும் சிறுமையுடையவள் அல்லள். அப்படியிருந்தும், அடர்ந்த காட்டிலே அவளை நள்ளிரவிலே விட்டுப் பிரிந்து சென்றான். அது, பூர்வ வினையாலன்றோ? தமயந்தி செய்த பிழையால் அது நிகழ்ந்ததென்று சொல்லத்தான் முடியுமோ?

"நீ இராமனையும் நளனையும் போன்றவன் அல்லன். மனைவியோடு பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கிறாய், வருந்தாதே! பாண்டிய மன்னனின் மதுரைக்குள் சென்று, அங்கு நீ உன் மனைவியோடு தங்குவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து, விரைவில் வந்துவிடு"

இது, கோவலனுக்குக் கவுந்தியடிகள் கூறிய ஆறுதல் மொழியாகும். வேத முதல்வனை நான்முகனை ஈன்ற திருமாலே இராமனாக அவதரித்தான் என்றும், இந்த நம்பிக்கை தமிழகத்தில் நெடுங்காலமாக நிலைத்திருக்கின்றதென்றும் கவுந்தியடிகள் கூறுவது சிந்தனைக்குரியதாகும்.

திருமாலின் அவதாரமாக இராமனை முதலில் அறிமுகப் படுத்தியவர் கம்பர்தான் என்று புலவர்களில் சிலர் கூறு

கின்றனர். இதனை பொய்ப்படுத்துகிறது கவுந்தியடிகளின் வாக்கு. கம்பர் தோன்றுவதற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ராமனைத் திருமாலின் அவதாரம் என்று சிலம்பில் இளங்கோ கூறியிருக்கிறார். ஆய்ச்சியர் குரவையுள்ளும் இராமனை திருமாலின் அவதாரமாகவே இளங்கோ காட்டு கின்றார். இராமனை மக்கள் வழிபடும் தெய்வமாகச் செய்தது குற்றம் என்றால், அந்தக் 'குற்றத்'தை முதன் முதலில் செய்தவர் கம்பர் அல்ல; இளங்கோவே!

மகாபாரதத்தின் கருப்பொருளாக உள்ள பாண்டவர்—கௌரவர் கதையேயன்றி, அதிலே வரும் நளன் சரிதம் போன்ற குட்டிக் கதைகளும் சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் வழக்கில் இருந்தனவென்று அறிகிறோம்.

## மதுரை வீதிகளிலே கோவலன்

கவுந்தியடிகளின் அறிவுரைகளால் ஆறுதலடைந்த கோவலன், மதுரைக்குள் சென்று தானும் தன் மனைவியும் தங்குவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து வருமளவும் கண்ணகியைப் பார்த்துக் கொள்ளுமாறு அவரை வேண்டுகிறான்.

> "தொன்னசர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
> என்னிலை உணர்த்தி யான் வருங்காறும்
> பாதக் காப்பினள் பைந்தொடி..." [சிலப்பு. 14: 21-23]

கண்ணகியை கவுந்தியடிகளின் காப்பில் வைத்துவிட்டு மதுரைக்குள் செல்கிறான் கோவலன். நீண்ட துதிக்கைகளை யுடைய யானைக்கூட்டம் செல்வதற்கென அமைக்கப்பட்டுள்ள பாதாளச் சுரங்கத்தின் வழியாக கோவலன் நகருக்குள் புகுந்தான். அங்கு தமிழகத்திற்கு அந்நியரான யவனர்கள் கையில் வாள் ஏந்தியவாறு காவல் புரிவதைக் கண்டவனாகச் சென்றான்.

மதுரையின் நுழைவாயிலைக் கடந்தவுடனே அந்நகரின் அமைப்பு முழுவதையும் கோவலன் பார்க்க முடிந்ததாம். ஆம்; 'டவுன் பிளானிங்' என்று இந்நாளில் சொல்லப்படும் பொறியியல் திறமையோடு அந்நாளைய மதுரையம்பதி அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இதனை ஒரு உவமையின் மூலம் உணர்த்துகின்றார் இளங்கோ—அதாவது, ஆயிரம் கண்களைப் பெற்றவனான இந்திரனுடைய பெட்டகமானது வாய் திறந்து வைத்தாற்போலத் திறந்து வைக்கப்பட்டிருந்த தலைவாயிலை அடைந்தவுடனே மதுரை நகரம் முழுவதும் கோவலன் கண்களுக்குப் புலப்பட்டது என்கிறார்.

சிலப்பதிகாரத்தில், ஊர்காண் காதையில் மதுரை நகர வீதிகளிலே கோவலனை நடைபோடவிட்டு, அந்நகரம் முழுவதையும் நமக்குக் காட்டுகின்றார் இளங்கோ. இந்நாளில், திரைப்படத்தின் தொடக்கத்திலே, கதாநாயகன் தெருக்களிலே சுற்றியலையும் காட்சிகளைக் காட்டிக் கொண்டே, அந்தக் காட்சிகள் மீது நடிக நடிகையரின் பெயர்கள் போடப் படுகின்றன. இந்த சினிமா டெக்னிக் போலத்தான் ஊர்காண் காதையை அமைத்துள்ளார் இளங்கோ.

இந்தக் காதையிலே, கோவலன் மதுரை நகருக்குள் புகுந்தது, தன் குலத்தினரான வணிகர்கள் வாழும் வீதிக்குச் சென்று, அங்கு தன் மனைவியுடன் தங்குவதற்குத் தகுதியுடைய இல்லத்தைத் தேடிப் பிடிப்பதற்காகத்தான். இதனை, "மன்னர் பின்னோர்க்கு என்னிலை உணர்த்தி யான் வருங்காறும், பாதக் காப்பினள் பைந்தொடி" என்று கோவலன் கவுந்தியடிகளிடம் கூறியதால் அறிகிறோம். 'மன்னர் பின்னோர்க்கு' என்பது, நால் வருணங்களிலே அரச வருணத்தவருக்கு அடுத்தவரான வணிக வருணத்தவரையே குறிக்கும். கோவலனைச் சுற்றவைத்து பரத்தையர் வீதிகள், அங்காடி வீதிகள், இரத்தினக் கடைத் தெரு ஆகியவற்றையெல்லாம் படம் பிடித்தாற்போன்று இளங்கோ நமக்குக் காட்டுகின்றார்.

சிலம்பிலே ஊர்காண் காதை இல்லையென்றால், மதுரை நகரம் பற்றிய பல செய்திகளைப் பிற்காலத்தவர் அறிந்துகொள்ள முடியாமல் போயிருக்கும்.

கோவலன் மதுரைக்குள் புகுந்தது நல்ல வெயிற்காலத்தில் ஆகும். அந்தக் காலத்திலே இரவிலும் பகலிலும் மதுரை நகர மக்களுடைய வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது என்பதனைக் கூறுவதோடு நில்லாமல், மழைக் காலத்திலும் பனிக்காலத்திலும் கூட அவர்களின் வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதையும் இளங்கோ வருணிக்கிறார். சிலம்பை ஒரு சரித்திர நூலாகவும் செய்துவிடவேண்டுமென்ற ஆர்வத்தால் பருவ காலங்கள் அனைத்தையும் அவர் கூறுகின்றார்.

மதுரை நகருள் புகுந்த கோவலன் எல்லா வீதிகளையும் பார்த்தது போல, பரத்தையர் வாழும் தெருக்களையும் பார்த்தான். அங்கு உடலின்பம் கருதி அவன் எந்த வீட்டிலும் நுழைந்ததாக இளங்கோ கூறவில்லை. அப்படியிருந்தும், "கோவலன் மதுரைக்குள் சென்றது, பரத்தை இல்லம் செல்லத்தான்" என்று புலவர்களிலே சிலர் சொல்லி வருகின்றனர். இதற்கு, சிலப்பதிகாரத்திலே சான்றில்லை.

நகரம் முழுவதையும் பார்த்துவிட்டு, கண்ணகியும் கவுந்தியும் இருந்த புறஞ்சேரிக்குத் திரும்புகின்றான் கோவலன். ஆம், தன் குலத்தவரான வணிகர் வாழும் பிரதேசத்திலே தான் தங்கி வாழ்வதற்கான இடத்தைத் தேடப் போவதாகக் கவுந்தியடிகளிடம் கூறிச் சென்றவன், அதைத் தேடிப் பிடிக்காமலே திரும்பிவிட்டான்.

புறஞ்சேரியிலே கவுந்தியடிகளைக் கண்டதும், மதுரையின் அழகையும், பாண்டியனின் செங்கோன்மையையும் அவ்வம்மையாரிடம் வருணித்துக் கூறி மகிழ்ந்தான். கவுந்தியும், 'சென்ற காரியம் என்ன ஆயிற்று?' என்று கோவலனைக்

கேட்கவில்லை. இது, சிலம்பிலுள்ள ஒரு குறைதான் என்றாலும், கதையை வளர்ப்பதற்கு இந்தக் குறை கவிஞருக்குத் தேவைப்பட்டு விட்டது,

## மாடலன் வந்தான்!

கோவலன் புறஞ்சேரி திரும்பிய நேரத்திலே அவனுடைய நெடுநாளைய நண்பனான மாடலன் என்னும் அந்தணன் அறவோர் பள்ளியையடைந்து, அங்கு கோவலனைக் காண்கிறான். மாடல மறையோன், தலைச்செங்கானம் என்னும் ஊரினைச் சேர்ந்தவன். நான்மறைகளைப் பழுதற ஓதி, ஐம்புலன்களையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் பெற்ற அப்பழுக்கற்ற அந்தணன். அவன், மாதவ முனிவனான அகத்தியன் வாழும் பொதிகை மலையை வலம் வந்த பின்னர், புனிதமான குமரி முனைக் கடலில் நீராடி, தன் சுற்றத்தாரை அணுகத் திரும்பி வந்து கொண்டிருந்தான், வழித் துன்பத்திற்கு ஆறுதல் தேடும் பொருட்டு, கவுந்தியடிகள் இருந்த அறவோர் வாழும் பொழிலை அவ்வந்தணன் அடைந்தான். கோவலன் மாடலனைக் கண்டதும், அவன் திருவடிகளை வணங்கினான். தனக்கு நேர்ந்த இன்னல்களைக் கூறி வருந்தினான். நாவன்மையுடையவனான மாடலன், கோவலன் பூம்புகாரில் நிகழ்த்திய அறச் செயல்களை அவனுக்கு நினைவூட்டுகிறான்.

மறையாளனான மாடலன், கோவலனுடைய துயரைத் தவிர்க்க விரும்பியவனாகி, நான்கு செய்திகளை அவனிடம் கூறுகிறான் மாடல மறையோன் கோவலனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறுவதனால் அவர்கள் இருவரும் பிள்ளைப் பருவந்தொட்டு நெருங்கிய தோழர்களாக இருந்திருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது.

## மணிமேகலை பிறந்தாள்

கண்ணகியுடன் கோவலன் சில ஆண்டுகள் வாழ்ந்தானே. அந்தக் காலத்து நிகழ்ச்சிகளை மாடல மறையோன் கூற

வில்லை. நடனக் கணிகையான மாதவியுடன் வாழ்ந்த காலத்து நிகழ்ச்சிகளைத்தான் கூறுகின்றான். அவன் கூறிய முதல் செய்தி வருமாறு:

கோவலனுக்கு மாதவியிடத்து ஒரு மகள் பிறந்தாள். அம்மகவுக்குப் பெயர் சூட்டும் விழாவைப் புகார் நகரத்தார் அறியும் வகையில் சிறப்பாகக் கொண்டாடினான். தலைக் குழந்தையாதலால், அதற்கு அருமையான பெயரை வைக்க வேண்டுமென்று கலையரசியான மாதவி விரும்பினாள். அதனால், "நம்முடைய மகவுக்கு என்ன பெயர் வைக்கலாம்?" என்று கோவலனைக் கேட்டாள். கோவலன் சற்றும் தயங்காமல், "எங்கள் குலத் தெய்வமான மணிமேகலையின் பெயரையே வைக்கலாம்" என்றான். இதன்படி, அணிகள் பல பூண்ட பெண்மணிகள் கூடி, மாதவியின் மகளைத் தொட்டிலிலிட்டு, "மணிமேகலை வாழ்க!" எனக் கூறி, வாழ்த்துப் பா இசைத்தனர்.

விலைமகளிர் வழியில் தோன்றிய மாதவியைக் குலமகளாகவே கருதி, அவள் வயிற்றிற் பிறந்த பெண் மகவுக்குத் தன் குலத்தார் போற்றும் தெய்வத்தின் பெயரைக் கோவலன் வைத்தது, அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கையின் புனிதத் தன்மையைக் காட்டுவதாகும்.

## அந்தணனுக்கு அபயம்

அடுத்து, மாடலன் கூறும் இரண்டாவது செய்தியையும் பார்ப்போம்:

மாதவிக்கும் கோவலனுக்கும் பிறந்த தலைமகவுக்குப் பெயர் சூட்டும் விழாவிலே வறியவர்களுக்குப் பொருள் வழங்கினான் கோவலன். அந்த நேரத்திலே, அவனிடம் பொன் பெறுவதற்காக முதிய அந்தணன் ஒருவன் வந்து கொண்டிருந்தபோது, மதம் பிடித்த யானை ஒன்று தனது துதிக்கையால் அவ்வந்தண முதியோனைத் தூக்கிக் கொண்டது. அம்முதியோன், அலறித் துடித்து, அபயக் குரல்

கொடுத்தான். அவனது குரல் மகவுக்குப் பெயரிடும் விழா காரணமாக மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த கோவலன் காதில் விழுந்தது. "ஐயோ!" என்ற அலறல் குரல் கேட்டு, கோவலன் மனம் அதிர்ச்சியடைந்தது, மடி மீதிருந்த மகவை எடுத்து மாதவியிடம் கொடுத்துவிட்டு, அந்தணனைக் காப்பாற்ற விரைந்து ஓடினான். யானையின் மொழி அவனுக்குத் தெரிந்திருந்ததால், "ஒய்" என்று உரத்த குரல் கொடுத்து, அதன் புரை பொருந்திய துதிக்கையிடத்துப் புகுந்து அந்தண முதியோனை விடுவித்தான். பின்னர், போர் செய்யும் அதன் இரண்டு வெண் கொம்புகளைப் பிடித்து ஏறி, முதுகின் மீது அமர்ந்து, அதன் மதத்தை அடக்கினான். இதனைச் சொல்லும் மாடல மறையோன்,

> "மையிரும் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்
> பிடர்த்தலை யிருந்து பெருஞ்சினம் பிறழாக்
> கடக்களிறு அடக்கிய கருணை மறவ!"
>
> [சிலம்பு. 15: 51-53]

என்று, அவன் முகத்தெதிரே நின்று அவனது வீரத்தை வருணிக்கிறான். பிறர் உயிரை வாங்குவது மறத்தனம். பிறர் உயிர் காக்கத் தன்னுயிர் கொடுக்கத் துணிவது கருணை கலந்த மறம். இதிலே கொலையுணர்வு இல்லையாதலால், இந்த வீரத் தன்மையை வெளிப்படுத்திய கோவலனுக்குக் "கருணை மறவன்" என்று பட்டம் தருகிறார் இளங்கோ. அதையும் நான்மறை யுணர்ந்த மறையவனைக் கொண்டு வழங்குகின்றார்.

## பார்ப்பினி தந்த வடமொழி ஏடு

கோவலன் நிகழ்த்திய மற்றொரு அறத்தையும் மாடல மறையோன் கூறுகின்றான். அதையும் பார்ப்போம்.

பார்ப்பனப் பெண்ணொருத்தி, தன் மகவைக் காத்த கீரிப் பிள்ளையை, அந்த நிகழ்ச்சியை அறியாமல் கொன்றுவிட்டாள்.

இந்தக் கொலை கண்டு அவளுடைய கணவன் வேதனையுற்றான். கீரியைக் கொன்ற மனைவியின் செயல் மிகவும் பாவமானது என்று கருதினன். அவள் கையால் உணவு உண்பதும் பாவம் என்று அவன் எண்ணினன். அதனுல், அவளைவிட்டுப் பிரிந்தான். பிரியுங்கால், ஒரு ஏட்டிலே வடமொழி வாசகம் ஒன்றை எழுதி, தன் மனைவியின் கையிலே அதனைக் கொடுத்து: "இதனைப் படித்துப் பொருள் உணர்வார் கையில் கொடுப்பா யானல், அவரிடம் உனக்குப் பொருள் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு பிழைத்துப் போ!" என்று சொன்னன்.

கணவனல் கைவிடப்பட்ட அந்தணப் பெண்மணி, காரி நகரிலே வீடுதோறும் சென்று, தன் கணவன் தந்த ஓலையைக் காட்டி, "எனக்குப் பொருள் கொடுத்து புண்ணியத்தைப் பெறுங்கள்!" என்று கூறி அழுதாள். ஒருவருக்கும் ஓலையி லுள்ள வடமொழி வாசகம் புரியாததால், யாரும் அவளுக்குப் பொருள் உதவ முன்வரவில்லை. இறுதியில் கோவலனை நாடி, 'இதழ் இது வாங்கி, கைப்பொருள் தந்து, என் கடுந்துயர் களைக!" என்று அவனை வேண்டினள். அவனும் ஓலையை வாங்கி படித்துப் பார்த்து,

"அஞ்சல்! உன்தன் அருந்துயர் களைகேன்;
நெஞ்சுறு துயரம் நீங்குக!"

[சிலம்பு 15: 68-69]

என்று கூறினன். அவளுக்குப் பொருள் கொடுத்து, அவளை விட்டுப் பிரிந்த கணவனையும் தேடிப் பிடித்து அவளுடன் சேர்த்து வைத்தான். இதுவும் கோவலனிடம் மாடலன் கூறிய செய்தியாகும். இன்னொரு செய்தியையும் மாடல மறை யோன் கூறுகிருன்.

## பூதம் புடைத்த பொய்யன்

புகாரிலே கயவன் ஒருவன் பத்தினி ஒருத்தியின் கணவ னிடம் சென்று, அவனுடைய மனைவியின் கற்புக்குக் களங்கம்

கற்பிக்கும் வகையில் பொய் கூறினன். அதனால், அவனைத் தன் கறைகெழு பாசத்தால் பற்றிப் புடைத்துண்ண முயன்றது பூதம். பொய்யனைப் பெற்றெடுத்த தாய், கோவலனையணுகி, பூதத்திடமிருந்து தன் மகனைக் காத்துத் தருமாறு அவனை வேண்டினாள். கோவலனும் அவள் வேதனையைக் கண்டு மனமிரங்கி, பூதத்திடம் சென்று, 'என் உயிரை ஏற்றுக்கொண்டு இந்த முதியோள் மகன் உயிரைத் தா!" என்று கெஞ்சினன். பூதம் இணங்கவில்லை. 'கீழ்மகனுடைய உயிருக்குப் பதில் நல்ல உயிரினை ஏற்றுக்கொண்டு மேலான தன்மையை இழந்துவிடும் எண்ணம் எனக்குக் கிடையாது' என்று கூறி, பத்தினி மீது பழி சொன்னவனைக் கோவலன் கண்காண அறைந்து கொன்றுவிட்டது.

மகனை இழந்த முதியவள்பால் இரக்கங்காட்டி, அவளும் அவளுடைய சுற்றத்தாரும் பசியின்றி வாழப் பொருள் கொடுத்து உதவினன் கோவலன்.

பூம்புகாரில் புகார் சொல்வோரைப் புடைத்துண்ணும் பூதம் இருந்தது உண்மையா? இல்லை, கவிஞர் தரும் கற்பனைச் செய்திதானா? இந்த ஐயம் எழலாம். இதனை, கவிஞரின் கற்பனையென்றே நான் கருதுகிறேன். 'இந்தக் கற்பனை தேவையா?" என்று கேட்டால், 'தேவை' என்பதே எனது பதில். குற்றஞ் சொல்லுவது வேறு; புகார் சொல்லுவது வேறு. ஒருவர் மீது குற்றஞ் சொல்லுவோர் அதனை நிருபிக்கவும் பொறுப்பேற்பார்கள். அதனால் அவர்கள் மீது அந்நாளில் அரச மன்றத்திலோ, இந்நாளில் நீதி மன்றத்திலோ வழக்கு தொடுத்துப் பரிகாரம் காணலாம். ஆனால், புகார் சொல்லுவோர், அதனை நிருபிப்பதற்குப் பொறுப் பேற்கமாட்டார்கள். 'நான் சொல்லவில்லை; அவர்கள் சொல்லுகிறார்கள்; இவர்கள் சொல்லுகிறார்கள்; ஊரிலே வதந்தி இருக்கிறது!' என்று சொல்லிவிட்டுத் தப்பித்துக் கொள்ளுவார்கள். அப்படிப்பட்டவர்களை அரச மன்றத்

திலோ, நீதி மன்றத்திலோ நிறுத்தித் தண்டிக்க முடியாது. ஆகவே, 'புகார் சொல்பவர்களைத் தண்டிக்க ஒரு தெய்வீகப் பூதம் இருந்தால் நன்றாயிருக்குமே!' என்று நினைக்கிறது, சேர இளவரசரான இளங்கோவின் உள்ளம். அதனால், தமது காப்பியத்திலே அதனைக் கற்பனை செய்துவிட்டார். காப்பியத்திலேனும் புகார் கூறும் பொய்யர்களைத் தண்டிக்கும் பூதத்தைப் பார்த்து ஆறுதலடைகிறோம் அல்லவா!

"புகார் நகரிலே புகார் சொல்லுவோரைத்தானே பூதம் தண்டிக்கும்? நகருக்கு வெளியே நாட்டிலுள்ள புகார்ப் பேர் வழிகளை யார் தண்டிப்பது?" என்று கேட்கலாம். புகார் கூறித் திரியும் பொய்யர்கள் அந்நாளில் நகரங்களில்தான் மிகுதியாக இருந்திருப்பார்கள். எந்நாளிலுமே அத்தகையவர்கள் கிராமங்களிலே அதிகமாக இருக்கமாட்டார்கள். கிராமங்களிலுள்ள சமூகக் கட்டுப்பாடு அத்தகைய பொய்யர்கள் தோன்ற விடாது. அதனாற்றான், புகார் நகரில் மட்டும் பொய்யர்களைப் புடைத்துண்ணும் பூதம் இருந்ததாக இளங்கோ கற்பித்துள்ளார்.

இனி, பூதத்தை விட்டுக் கோவலனிடம் வருவோம் :

## இடம் மாறிக் கூறியதேன்?

மாடல மறையோன் நால்வேதங்களைப் பயின்றவன். ஐம்புலன்களை வென்ற அப்பழுக்கற்ற அந்தணாளன். அவனே கோவலனின் வள்ளண்மையை, வீரச் செயலை, சான்றாண்மையைப் புகழ்கின்றான் :

> "இம்மைச் செய்தன யானறி நல்வினை;
> உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
> திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
> விருத்த கோபால! நீ..."

"அறிவாளியான கோவலனே! இப் பிறப்பிலே நீ செய்தனவாக நான் அறிந்தனவெல்லாம் நல்ல வினைகளே யாம் ஆயினும், முற் பிறப்பில் நீ செய்த தீவினைப் பயனுக, திருமகள் போன்றவளான உன் மனைவியுடன் இங்கு வந்து துன்புறுகின்றனை போலும்!"

கோவலனுக்கு மாதவியின் மூலமாக மணிமேகலை பிறந்ததையும், கணவனால் கைவிடப்பட்ட அந்தண மாதுக்குக் கோவலன் பொருள் கொடுத்துக் காத்த அறச் செயலையும், முதியோளின் மகனை பூதத்திடமிருந்து காக்க முயன்ற தியாக உணர்வையும், மதம் பிடித்த யானையிடமிருந்து அந்தண முதியோனைக் காத்த வீரச செயலையும் கவிஞர் புகார்க் காண்டத்திலேயே கூறியிருக்கலாம். அவை, கோவலன் புகார் நகரில் வாழ்ந்தபோதுதானே நிகழ்கின்றன! அப்படியிருந்தும், மதுரைக் காண்டத்தில் கூறக் காரணமென்ன?

புகாரில் மாதவியும் கோவலனும் நடத்துவது அப்பட்டமான காதல் வாழ்க்கை; கலை வாழ்க்கை. அங்கே வைத்து, அவன் கடைப்பிடித்த வீர தீரச் செயல்களைச் சொல்வது படிப்போருக்குச் சுவை தராது என்று இளங்கோ எண்ணியிருக்கலாம். அதனால், அங்கு சொல்லாமல் மதுரைக் காண்டத்தில் மாடலனைக் கொண்டு சொல்ல வைத்திருக்கலாம்.

இந்த மாற்றத்திற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. சிலம்பில் அடைக்கலக் காதையை அடுத்துள்ளது கொலைக்களக் காதைதானே! அதனால், கோவலன் கொலையாவதற்கு முன்னர் அவனுடைய சிறப்பியல்புகளைத் தொகுப்பாகத் தருவது, அவன்பால் வாசகருக்கு நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் என்றும் அடிகள் கருதியிருக்கலாம்.

மாதவியுடன் கோவலன் நடத்தியது காமத்தோடு கலந்த கலை வாழ்க்கைதான் என்றாலும், பத்தினியோடு கூடிவாழும்

இல்லறத்தான் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையெல்லாம் பரத்தைக் குலத்திற் பிறந்தவளோடு கூடி வாழ்ந்த நேரத்திலும் அவன் கடைப்பிடித்திருக்கிறான். இதனைச் சொல்லாமல் சொல்லுகிறார் இளங்கோ. கோவலன் தன்னை விட்டுப் பிரிந்திருந்ததால்,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்துஎதிர் கோடலும் இழந்தேன்"

(சிலம்பு. 16 : 71—73)

என்று, மாதரி இல்லத்தில் அவனிடம் கூறி வருந்துகின்றாள் கண்ணகி.

கண்ணகிக்குரிய இத்தனைக் கடமைகளும் அவளுடைய கணவனான கோவலனுக்கும் உண்டு. ஆகவே, கண்ணகியைப் பிரிந்து மாதவியின் இல்லத்திலிருந்த கோவலன் அறவோர்க்களித்தான், அந்தணர்களை ஓம்பினான் என்பதனை மாடல மறையோன் மூலம் அறிவிக்கிறார் இளங்கோ.

## வடமொழி அறிந்தவன்

பூதத்திடமிருந்து தன் மகனைக் காத்துத் தருமாறு முதியவள் ஒருத்தி கோவலனிடம் அடைக்கலம் புகுகிறாள்; மதம் பிடித்த யானையிடம் சிக்கிக் கொண்ட தன்னைக் காக்குமாறு அந்தண முதியவன் அபயக் குரல் கொடுத்துக் கோவலனை அழைக்கிறான். இவற்றால் புகார் நகரத்து மக்களிடையே கோவலனைப்பற்றி உயர்வான எண்ணம் இருந்ததனை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. நமக்கு உணர்த்துவதற்காகவே மாடல மறையோனைப் படைத்துள்ளார் இளங்கோ.

கணவனால் கைவிடப்பட்ட அந்தண மங்கை தந்த வட மொழி வாசகம் எழுதிய ஓலையைப் படித்து, அதன் பொருளை யுணர்ந்து, தன் கைப்பொருளை அவளுக்கு வழங்குவதும், கை விட்டுச்சென்ற அவள் கணவனையும் முயற்சி எடுத்துத் தேடிக் கொண்டு வரச்செய்து அவளோடு சேர்த்து வைப்பதுமான உயர் குணங்களைக் கேவலம் பரத்தையுடன் கூடி காம வாழ்க்கை நடத்தும் ஒருவனிடம் காண முடியுமா? உண்மை யென்னவென்றால், மாதவி ஒரு பரத்தைக்குரிய இழி குணங் களால் கோவலனைக் கவர்ச்சிக்கவில்லை. மாறாக, குலமகளுக் குரிய உயர் குணங்களைக் காட்டி அவனைக் கவர்ச்சித்தாள்; அதனால், அவளுடன் கூடி இல்வாழ்க்கைக்குரிய ஒழுக்கங்கள் அனைத்தையும் கோவலன் கடைப்பிடிக்க முடிந்தது.

வடமொழி வாசகத்தைக் கோவலன் படித்தறிய முடிந்ததென்றால், அவனுக்கு அம்மொழியிலும் புலமை இருந்திருக்க வேண்டுந்தானே! வடமொழிப் புலமையென்றால், வேதாகம சாத்திர இலக்கியங்களில் ஞானம் என்றுதானே பொருள்? கோவலன் யாழிசைத்துப் பாடக்கூடிய கலைஞனாக இருந்ததால், தனது தாய்மொழியான தமிழிலே அவனுக்கு முழு அளவில் புலமை இருந்தது புலனாகிறது. இப்படி, தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் நிறை புலமை பெற்ற கோவலன் காமப் படுகுழியில் விழுந்திருக்க மாட்டான்தானே!

இந்த உண்மைகளையெல்லாம் வாசகர்களுக்கு உணர்த்து வதற்காகக் கொலைக்களக் காட்சிக்கு முன்புள்ள காட்சியை இளங்கோ தேர்ந்தெடுத்தது, நாடக இலக்கியம் படைப்பதில் அவருக்கிருந்த திறமையைக் காட்டுகிறது. கோவலனுடைய ஒழுக்க நெறிகள்பற்றிச் சாட்சியம் கூற நான்மறையுணர்ந்த மாடலனைத் தேர்ந்தெடுத்தது, பாத்திரப் படைப்பில் கவிஞ ருக்கிருந்த திறமையைக் காட்டுகிறது.

மாதவியுடன் கூடி வாழ்ந்தபோது கோவலன் கடைப் பிடித்த இல்லற நெறிகளைக் கண்ணகி அறிந்திருப்பதற்குச் சந்தர்ப்பமில்லை. அதனால், அடைக்கலக் காதையிலே அவளு

டைய காதுகள் கேட்கும்படியாகக் கோவலனுடைய ஒழுக்க நெறிகளை மாடலன் கூறுகின்றான். கண்ணகிக்கும் அறிவிக்கும் பொருட்டாகத்தான் அடைக்கலக் காதையிலே வைத்துக் கோவலனுடைய அருங் குணங்களை மாடலன் மூலம் அறிவிக்கின்றார் இளங்கோ.

## வறுமையடையக் காரணமென்ன?

மாதவியுடன் கூடி வாழ்ந்தபோது தன் பெற்றோர் தந்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டு, கோவலன் வறுமையெய்தினான். அதற்கு மாதவி காரணமல்லள். வாணிபத்தில் ஈடுபட்டுப் பொருளை ஈட்டி, ஈட்டிய பொருளிலே ஒரு பகுதியைப் பிறருக்கு வழங்குவதுதான் வணிகனுக்குரிய வாழ்க்கை நெறி. கோவலன், மாதவி இல்லத்திலிருந்தபோது கலையார்வம் காரணமாக வாணிபத்தை மறந்தான். பொருளை ஈட்டாமலே பெற்றோர் தந்த செல்வத்தைச செலவழித்துக் கரைத்தான். இவ்வுண்மையை நமக்கு உணர்த்துவதற்காகவும் கொலைக்களக் காதைக்கு முன்னுள்ள காதையிலே, கோவலன் தன் பெற்றோர் தந்த பொருளை எப்படியெல்லாம் செலவழித்தான் என்பதனை மாடலனைக் கொண்டு இளங்கோ விளக்குகிறார். ஆம்; அறவழியிலன்றி வேறு வழியில் அவன் கைப் பொருளைக் கரைக்கவில்லை யென்பதற்கு ஆன்றவிந் தடங்கிய சான்றோனான மாடலனே சாட்சி கூறுகின்றான். மாதவிக்குக் கொடுத்துக் கோவலன் வறியனானான் என்பதற்குச் சிலம்பிலே சான்று இல்லை. அது, பிற்கால நாடகக்காரர்கள் மாதவிமீது சுமத்திய பழி! சிலம்பிலே பொருள் பறிக்கும் மாதவியை நாம் பார்க்க முடியவில்லை. மாதவியைப் பிரிந்து கண்ணகி இல்லத்தை யடைந்ததும்,

> —...''யாவும்
> சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
> குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தரும்எனக்கு.''
>
> (சிலம்பு. 9: 68-71)

என்று கோவலன் கூறுகின்றான் என்றால், அது மாதவியின்பால் அப்போது அவனுக்கிருந்த வெறுப்பு உணர்ச்சியால் செய்யப் படும் விமர்சனந்தான்! கோவலனுடைய கூற்றிலேயும், மாதவியின் இல்லத்தில் இருந்தபோது பொருள் எல்லாம் தொலைந்தது என்பதன்றி, மாதவி பறித்துக் கொண்டாள் என்று பொருள் கொள்வதற்கில்லையே!

## தீக்கனா

மாடலன் ஆறுதல் மொழி புகன்ற பின்னரும் கோவல னுடைய மனம் அமைதி கொள்ளவில்லை. தன்னுடைய நண்ப னிடம் முதல்நாள் இரவில் தான் கண்ட தீய கனவினைக் கூறு கின்றான்.

"பாண்டி வேந்தனின் பெருநகரிலே கீழ்மகன் ஒருவனால் மணங் கமழும் கூந்தலையுடையவளான என் மனைவி நடுங்கித் துயர் எய்தவும், யான் உடுத்த ஆடையும் பிறரால் பறித்துக் கொள்ளப்படவும், எருமைக் கடாவின் மீது யான் ஊர்ந்து செல்லவும் கனவு கண்டேன். பின்னர், என் மனைவியோடு பிறவிப் பிணியை ஒழித்தோர் அடையும் உயர் நிலையை யான் எய்தினேன்.

"தன் மலர் அம்புகளை வறண்ட நிலத்தில் எறிந்த வனாகி காமக் கடவுள் செயலற்று ஏங்கிப் புலம்புமாறு, அணிதிகழும் போதி அறவோனின் முன்னிலையிலே என் மகள் மணிமேகலையை மாதவி கொடுத்தனள். நனவிலே நடப்பதுபோல நள்ளிரவு நேரத்தில் இப்படியொரு கனவு கண்டேன்"

இதைக்கேட்டு, கோவலனுக்குக் கவுந்தியடிகளும் மாடல மறையோனும் கூறியது வருமாறு:

"அறத்துறையிலே ஈடுபட்டு வாழ்வோர்க்கு அல்லது நின்போன்ற இல்லறத்தாருக்கு இந்தப் புறஞ்சிறை

வாழ்க்கை பொருந்தாதாகலின், மதுரைவாழ் வணிகப் பெருமக்களையணுகினல், நின் குடும்பத்தின் புகழினை அறிந்து, உன்னை அவர்கள் ஏற்றுக் கொள்வர். ஆதலால், நின்மனைவியோடு கதிரவன் மறைவதற்கு முன்னர் மதுரை மாநகருக்குள் செல்வாயாக!"

மாதவியொடு கூடி வாழ்ந்த காலையில் கோவலன் ஆற்றிய அறப்பணிகளை யெல்லாம் அவனுக்கு நினைப்பூட்டி ஆறுதல் கூறிய பின்னர், அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்றான் மாடல மறையோன். இவர்களிருவரும் இளம்பருவ நண்பர் களாயினும், காப்பியத்தில் அடைக்கலக் காதையில்தான் இவர்கள் முதன் முதலாக சந்திக்கக் காண்கின்றோம். இதுவே அந்த ஆருயிர்த் தோழர்களின் இறுதிச் சந்திப்பும் ஆகிவிடுகிற தல்லவா!

மாடலன் சென்ற பின்னர், இடைக் குலத்தைச் சேர்ந்த மாதரி என்னும் முதுமகள் வருகிறாள். புறஞ்சிறைப் பிரதேசத் தில் கோயில் கொண்டுள்ள இசக்கியம்மனுக்கு பால்சோறு படைத்து வழிபட்டுவிட்டு வரும் வழியில் தற்செயலாக மாதரி கவுந்தியடிகளைச் சந்திக்கிறாள். சந்தித்தவள், அம்முதாட்டி யின் திருவடிகளில் விழுந்து வணங்கி ஆசி பெற்றாள்.

மாதரியை அரங்கிற்குக் கொண்டு வரும் அடிகள், அவள் பிறந்த குலத்தையும், அந்தக் குலத்தின் மரபுவழிப்பட்ட தொழிலையும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

"ஆகாத்து ஓம்பி, ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கைஓர் கொடும்பாடு இல்லை;
தீதிலன்; முதுமகள்; செவ்வியள்; அளியள்"

[சிலம்பு. 15: 120-23]

அடிகள் 'கோவலர்' என்று குறிப்பிடுவது 'இடையர்' எனப்படும் குலத்தாரையாகும். அன்னார், பசுக்களைப் பேணி

வளர்ப்பவர் என்பதை "ஆகாத்து ஓம்பும் கோவலர்" என்ற வாசகத்தால் அடிகள் அறிவிக்கின்றார். பசுவிடமிருந்து கிடைக்கும் பாலையும், அதிலிருந்து பெறும் தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய பொருள்களையும் மனிதசமுதாயத் திற்கு அளிப்பதால், இடையர்களுடைய வாழ்க்கையானது கொடுமையற்றது என்றும் ஆசிரியர் கூறுகின்றார்.

மாதரியை அறிமுகப்படுத்துமிடத்து, "தீதிலள்," "முது மகள்," "செவ்வியள்," "அளியள்," என்றெல்லாம் சிறப் பித்துக் கூறுகின்றார். இவ்வளவையும் தவ மூதாட்டியான கவுந்தியடிகளைக் கொண்டுதான் கூற வைக்கின்றார். மாடல னும் கோவலனும்போல கவுந்தியடிகளும் மாதரியும் இதற்கு முன் தங்களுக்குள் அறிமுகமானவர்கள் என்றே அனுமானிக்க வேண்டியிருக்கிறது.

கவுந்தி மாதரியைப் பார்த்துக் கூறுகின்றாள்:

**' மாதரி! கேள்; இம் மடந்தைதன் கணவன்**
**தாதையைக் கேட்கின், தன்குல வாணர்**
**அரும்பொருள் பெறுநரின் விருந்துஎதிர் கொண்டு**
**கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்;**
**உடைப்பெருஞ் செல்வர் மனைப்புகும் அளவும்**
**இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்."**

"மாதரி! நான் சொல்வதைக் கேள். இம்மங்கையின் கணவனுடைய தந்தை இன்னாரென்று மதுரையிலுள்ள வணிகர் அறிந்தால், பெறுதற்கரிய செல்வத்தினைப் பெற்றவர் போல இவளையும் இவள் கணவனையும் விருந்தினராக ஏற்றுக் கொண்டு, தங்கள் பெரிய மாளிகையிலே தங்க வைத்து உபசரிப்பார்கள். அதுவரை இடைக்குல மடந்தையான உன்னிடம் மண்ணக மாதர் போற்றும் பெண்ணணங்கான

கண்ணகியை அடைக்கலமாகத் தந்துள்ளேன். பாது காப்பாயாக!"

மாதரியைப் பல்வேறிடங்களில் "முதுமகள்" என்றே ஆசிரியர் குறிப்பிடுவதாலும், "ஐயை" என்னும் பெயருடைய மகள் ஒருத்தி இவளுக்கு இருத்தலானும் இவள் வயதானவளாக இருக்கவேண்டுமென்று எண்ணத் தோன்றுகிறது.

மற்றும், இசக்கியம்மன் கோயிலுக்குச் சென்று பால் சோறு படைத்து வழிபடும் வழக்கத்தைக் கடைப் பிடித்ததாலும், மேலே ஆய்ச்சியர் குரவையின் முடிவில் திருமாலை வழிபடக் கோயிலுக்குச் செல்வதாலும், இவள் கணவனை இழந்த விதவை போலும்!

தான் அடைக்கலம் பெற்ற கண்ணகியின் மறைவு கேட்டு இவள் தீக்குளித்து உயிர் நீத்ததாலும் கணவனை இழந்தவள் என்பது உறுதிப்படுகிறது கணவனோடு வாழுங் காலத்திலே தெய்வந் தொழாத நிலையைக் கடைப் பிடிப்பதன்றோ தமிழ்ப் பெண்களின் கற்பு நெறி. இவள் கணவனுடன் வாழும் நிலையில் இருந்திருந்தால், திருமால் கோயிலுக்குத் தனியே சென்று வழிபாடு நடத்துவது சாத்தியமில்லை தானே!

மாதரியிடம் கண்ணகியை அடைக்கலம் தரும் கவுந்தியடிகள் அப்பெண்ணரசியை உபசரிக்க வேண்டிய வழிமுறைகளையும் விவரிக்கின்றார்:

"மங்கல மடந்தையை நன்னீ ராட்டி,
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டி
தேமென் கூந்தல் சின்மலர் பெய்து,
தூமடி உடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு..." (சிலம்பு. 15: 131-36)

என்பது மாதரிக்குக் கவுந்தியடிகள் கூறும் அறிவுரை.

புகார் நகரில் கணவனைப் பிரிந்தவளாக இருந்தபோது, அணி கலன்களையும் அலங்காரங்களையும் துறந்து, துயரமே குடி கொண்ட நிலையில் கண்ணகி வாழ்ந்தாளாதலாலும்; கணவன் தன்னையடைந்த பின்னரும் அவனுடன் ஒன்றிரு நாள்கூடத் தன் வீட்டில் தங்கி வாழ்க்கை நடத்தாமல், அவனைக் கைப்பிடித்து, ஒரு மாத காலம் வழி நடந்து அல்லலுற்றவளாதலாலும்; அவளை நீராட்டி, அவளுடைய கண்களுக்கு அஞ்சனந் தீட்டி, இயற்கை மணம் பெற்றுள்ள அவளது கூந்தலிலே மலர்களைச் சூட்டி, அழகிய தூய ஆடைகளை உடுப்பித்து, அவளுடைய தாயாகவே தன்னைப் பாவித்து, அவளைக் காப்பாற்றுமாறு கவுந்தி கூறுகின்றார்.

''ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே ஆகித் தாங்கு...''

என்று கவுந்தியடிகள் கூறுவது மாநாய்கன் மகள்பால் அடிகளுக்கு இருந்த அன்பைக் காட்டுகின்றது. இன்னும்,

''என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்''

என்றும் கவுந்தி கூறுவது, புகார் நகரில் கண்ணகி வாழ்ந்த காலத்திய நிலைமையை அவள் நன்கறிந்தவள் என்பதைப் புலப்படுத்துகின்றது. ''மண்மகள் அறியாத வண்ணச் சீறடி'' என்னும் வாக்கு, கண்ணகியின் புகார் நகர வாழ்க்கைக்குத் தானே பொருந்தும்!

புகாரை விட்டுப் புறப்பட்ட பின்னர், வழி நடையின் போது கண்ணகி அடைந்த துன்பத்தைப் பெண் துறவியான கவுந்தி சிலம்பைப் படிப்போருடைய மனங்களை யெல்லாம் உருக்கிவிடும் வகையில் வருணிக்கின்றார்!

'கடுங்கதிர் வெம்மையின் காதலன் தனக்கு
நடுங்கு துயரெய்தி, நாப்புலர வாடி,
தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி.''

'கணவன் துயர் துடைப்பதையே தொண்டாகக் கருதி, தன் துயர்பற்றிச் சிந்திக்காதவளாகி, அவனைப் பின் தொடர்ந்து பாலை வனங்களிலே நா உலரும்வண்ணம் வழி நடந்தாள் கண்ணகி' என்கிறாள் கவுந்தி.

கண்ணகியை இடைக்குல மகளிடம் அடைக்கலம் தரும்போது கவுந்தியின் மனம் கனிந்து விடுகின்றது. அடைக்கலம் தந்தபின் அவளை விட்டுப் பிரிய நேர்வதால், அப்பிரிவுக்குக் கவுந்தியின் மனம் வருந்தி இருக்க வேண்டும். அதனால், கண்ணகியைப் புகழ்ந்தும், அவளுடைய அல்லல்களுக்கு வருந்தியும், அவளிடம் பொருந்தியுள்ள தெய்விகத் தன்மையை விளக்கியும் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்துகிறாள். கண்ணகியின் கற்புத் திறத்தைக் கவுந்தியடிகள் வருணிப்பதைப் பார்ப்போம் :

''கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்;
வானம் பொய்யாது; வளம்பிழைப்பு அறியாது;
நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது;
பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு; என்னும்
அத்தகு நல்லுரை அறியா யோநீ''

கவுந்தி, சமண சமயத் துறவி. அவளே, "கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" என்று பெருமிதத்துடன் கூறுகின்றாள். இதன் மூலமும் கண்ணகியாள் மண்ணக மாந்தர்க்குத் தெய்வமாகப் போகும் செய்தியை முன் கூட்டியே வழங்குகின்றார் இளங்கோ. ஏற்கனவே, ''வேட்டுவ வரி'' யில் சாலினியானவள்,

''இவளோ, கொங்கச் செல்வி; குடமலை யாட்டி;
தென்தமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து;
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி—''

என்று கூறியதையும் கேட்டு விட்டோம் அல்லவா!

கற்புக் கடம்பூண்ட தெய்வமான கண்ணகி தேவியை அடைக்கலம் பெற்ற மாதரியானவள், எல்லையற்ற இன்பத்தை இதயத்திலே நிறைத்தவளாகி, கண்ணகியுடனும் கோவலனுடனும் ஆயர்சேரியிலுள்ள தனது இல்லத்தைத் அடைந்தாள்.

## ஐயை அறிமுகம்

அங்கு தன் மகள் ஐயை என்பாளைக் கண்ணகிக்கும் கோவலனுக்கும் அறிமுகப்படுத்தினாள். அணிகலன்களின்றியும் அலங்கரித்துக் கொள்ளாமலும் நாடுவிட்டு நாடு பெயர்ந்து வந்த கண்ணகியின் நிலையைக் கண்டு ஆய்ச்சியர் வருந்தினர். அவளை அன்போடு பார்த்து, "இனி, கவலையை விட்டு, மகிழ்ச்சியுடன் எங்கள் மனையில் இருங்கள்" என்று ஆறுதல் மொழி புகன்றனர். ஐயையைப் பார்த்து,

**"சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்,**
**அடிசில் ஆக்குதற்கு அமைந்தநற் கலங்கள்**
**நெடியாது அளிமின்!"** (சிலம்பு.16: 18-20)

என்று மாதரி கூறினாள். கோவலனைச் "சாவக நோன்பினன்" என்று மாதரி கூறியது, சமணன் என்று கருதியதனால். இந்தக் கூற்று கோவலனுடைய சமயத்தை அவள் நன்கு அறிந்திருந்தாள் என்பதைக் காட்டுவதாகாது. சமணத் துறவியான கவுந்தியடிகளுடன் கோவலன் வந்ததால், அவனும் சமணனாகத்தான் இருக்க வேண்டும் என்று மாதரி கருதிவிட்டாள் என்றே கொள்ள வேண்டும்.

மாதரியின் ஆணைப்படி சமைத்தற்குரிய பாத்திரங்களும் அரிசி, பால், நெய், காய்கறி ஆகிய பண்டங்களும் கண்ணகிக்கு அளிக்கப்பட்டன. அவற்றைப் பெற்ற கண்ணகி தன் மெல்லிய விரல்கள் சிவக்கும் வண்ணம் கறிகாய் வகைகளை அரிவாள் மணையிலே இட்டு அரிந்தாள். அவளுடைய அழகிய முகம் வியர்த்தது. செவ்வரி படர்ந்த கண்கள் சிவந்தன. ஐயையின் துணையோடு ஒருவிதமாக உணவு சமைத்து முடித்தாள்.

## நிலமகள் மயங்கினுள்!

மென்மையான பனே ஓலேயால் பின்னப்பட்ட தடுக்கைப் போட்டு, அதன்மீது கோவலனே அமரச் செய்தாள். பின்னர் சுட்ட மண் பாத்திரத்திலே நிரப்பிய நீரைச் சொறிந்து, தன் கணவனின் பாதங்களேக் கழுவினுள்.

தண்ணீரைத் தெளித்து, தன் கையாலேயே தரையைத் தடவி, அதன்மேல் வாழையின் குருத்தினே விரித்துப்போட்டு அந்த இலேயின்கண் உணவினேப் படைத்து, கணவனே உபசரித்தாள். பல்லாண்டு பிரிந்திருந்த கணவன் திரும்பவும் தன்னே அடைந்தபின் அவனுக்குத் தன் கையால் சமைத்து கண்ணகி போடும் முதல் சோறு இதுதான். இதைக் கண்டு நிலமகள் மயக்கமடைந்து மூர்ச்சித்து விட்டாளாம்! ஆம்; இதுவே கண்ணகி போடும் கடைசி சோறு என்பதை அவள் அறிவாளல்லவா! அவளும் பெண்ணுதலால், கண்ணகிக்கு நேரவிருப்பதை நினேந்து, மயக்கமடைந்து விட்டாள் கண்ணகி தண்ணீர் தெளித்துத் தரையை மெழுகியதானது மண் மகளின் மயக்கத்தைத் தெளிவிப்பது போன்று இருந்தது என்று வருணிக்கின்ருர் இளங்கோவடிகள்.

மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்து - ஈங்கு
'அமுதம் உண்க அடிகள்! ஈங்கு' என.
(சிலம்பு. 16: 40—43)

கண்ணகி படைத்த உணவை நன்கு சுவைத்து உண்டான் கோவலன், அறுசுவை உணவருந்தி ஒரு திங்கள் ஆகிவிட்டதல்லவா!

கோவலன் தன் பத்தினியை மறந்து நடனப் பரத்தையின் இல்லத்தில் பல்லாண்டுகள் வாழ்ந்த குறையுடையவன் என்ருலும், வருணுசிரம நெறிகளில் நம்பிக்கையுடையவன்.

மாதரி இல்லத்தில் கண்ணகி படைத்த உணவை உண்ணத் தொடங்கு முன் வணிக வருணத்தினருக்குரிய வைதிகச் சடங்குகளை அவன் நிறைவேற்றியதாக அடிகள் கூறுகின்றார். இதனை,

"அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்
உரிய வெல்லாம் ஒருமுறை கழித்து"
(சிலம்பு. 16: 44—45)

என்னும் வரிகளால் அறிய முடிகிறது. நால் வருணங்களிலே அரச வருணத்தை அடுத்தது வணிக வருணம். அதனால் மறைகளிலே சொல்லப்பட்ட முறையில் நிவேதனம் செய்த பின் உணவு கொள்ளத் தொடங்கினான் கோவலன்.

## கண்ணனும் பின்னையும்

கண்ணகி தன் கணவனுக்கு உணவு படைப்பதையும் அதனைக் கோவலன் உண்டு மகிழ்வதையும் கண்டு மாதரியும் ஐயையும் மனம் பூரித்தனர்.

"தென் மதுரையின் ஆயர்பாடியான நமது குடியிருப்பிலே வந்து அமுதுண்ணும் இக் கோவலன், முன்னாளில் வட மதுரை ஆயர்பாடியிலே யசோதை பெற்றெடுத்த காயாம்பூ மேனியனான கண்ணனைப்போல் காட்சியளிக்கின்றான். பல வண்ணங்களாலான வளையல்களை யணிந்த கண்ணகியோ பண்டு நம் குலத்தில் தோன்றி கண்ணனுடைய துயர் தீர்த்த நப்பின்னைபோன்று இருக்கிறாள். இவள் நம் குலவிளக்கு". என்று கூறி, ஐயையும் அவளுடைய அன்னையான மாதரியும் விம்மிதம் எய்தினர். "இவர்கள் காட்சி நமக்குக் கண் கொள்ளாக் காட்சி" என்றும் கூறி மகிழ்ந்தனர்.

ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ,
நல்லமுது உண்ணும் நம்பி! ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்

தொழுனே யாற்றினுள் தூமணி வண்ணனே
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்!' என
ஐயையுந் தவ்வையும் விம்மிதம் எய்திக்
'கண்கொளா நமக்குஇவர் காட்சி, ஈங்கு.'

முன்பு கோவலனே இருட்டியபின் உணவு கொள்ளாத விரதம் உடைய சமணனுக்குக் கூறிய மாதரி, இங்கு வைணவர் தெய்வமான யசோதை பெற்றெடுத்த கண்ணனைக் காண்கின்றாள். இதற்கு அவள் வைணவ சமயத்தவளென்பதும் காரணமாகலாம். புகார் நகர மாதர்கள் 'கண்டேத்தும் செவ்வேள்' என சைவத் தெய்வமாக வருணித்ததையும் மங்கல வாழ்த்துக் காதையுள் கேட்டோம். இதனால், கோவலனுடைய சமயம் இதுவெனத் தெளிவதற்கில்லை

## மன்னிப்புக் கோருகிறான்!

கண்ணகி அளித்த உணவை உண்டு முடித்தபின், தனியே ஒருபுறத்தில் சென்று அமர்ந்து, அங்கு கண்ணகியை அழைத்தான் கோவலன். அழைத்தவன், அவளைத் தன் அன்புக் கரங்களால் தழுவி, அருகில் அமர்த்திக் கொண்டான். முன்னரே அவள் தந்த வெற்றிலையையும் பாக்கையும்மென்று சுவை பார்த்த வாயால், அந்தக் கற்புத் தெய்வத்தின் அருட் குணங்களைப் புகழலானான். அவள் அடைந்த வழிநடைத் துன்பத்தை நினைந்து, "கல்லதர் அத்தம் கடக்க யாவதும் வல்லுந கொல்லோ மடந்தை மெல்லடி!" என்று இரங்கிக் கூறினான். அதுகாறும் தன் மனத்தை வருத்திய ஒன்றையும் அவளிடம் கூறுகிறான். முதுமைப் பருவத்திலுள்ள பெற்றோரைத் தனியே தவிக்கவிட்டு, அவர்களிடம் சொல்லிக்கொள்ளாமலே நாடு விட்டு நாடு வந்த தவறைச் சொல்லி வருந்துகிறான். ஆம்; "எம்முது குரவர் என்னுற்றனர்கொல்?" என்கின்றான்.

"எனது பிரிவு கேட்டு என் பெற்றோர் என்ன துன்பம் அடைந்தார்களோ? இந்த நிலை நேர்ந்தது மாயத்தாலோ

எனது வல்வினையாலோ?" என்று சொல்லி அங்கலாய்த்தான். ஆழ்ந்து சிந்தித்துப் பாராமல் இவ்வளவு தவறுகளைச் செய்து விட்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டான்

கோவலனுக்கு மாதவியோடு கூடி வாழ்ந்த காலம் நினைவிற்கு வருகிறது. அந்த நினைப்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை "வம்பு பேசியும் பரத்தையரொடு கூடியும் வாழ்வோருடன் சேர்ந்து என் வாழ்நாட்களைக் கழித்தேன். என்னைப் பார்த்து பிறர் சிரிக்கவும், சிறுமை பேசவும் காரணமானேன். வணிக வருணத்திற்குரிய ஒழுக்கங்களிலே ஒன்றைக்கூடக் கடைப்பிடிக்காமல், அவையனைத்தையும் துறந்தேன். அறிவுடையோர் கூறிய பொருளுடைய சொற்களை நஞ்செனக் கருதி ஒதுக்கினேன்" என்றெல்லாம் கூறி நெஞ்சம் குமுறினான்.

"இனி, திரும்பவும் ஒழுக்க வாழ்வினை யான் பெறுவதும் உண்டோ? ஐயோ! பெற்றோர் இட்ட கட்டளைகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றாமல் அவற்றிலிருந்து வழுவினேனே! சிறிய பருவத்தினளாயினும் அறிவில் முதிர்ந்தவளான உனக்கும் என்னால் சிறுமை நேரும்படி நடந்து கொண்டேனே!" என்றான்.

"பொருள் தேடச் செல்லுங்கால், மனைவியை உடன் அழைத்துச் செல்வது வணிகருடைய மரபுக்கு மாறானது என்பதனை அறிந்திருந்தும், 'மதுரை மூதூர் செல்வோம்; ஏடலர் கோதாய் எழுக!' என்று கூறி, நமது பெரிய நகரினின்றும் இந்த நகருக்கு உன்னை அழைத்து வந்தேனே; நீயேனும், 'இது நம் மரபுக்கு மாறானது' என்று கூறி, புகாரிலேயே நின்றிருக்கக் கூடாதா?" என்று பலவாறாகக் கூறித் தன்னுடைய கடந்த காலச் செயல்களுக்காக வருந்தினான். அதனை இளங்கோ வாக்காலேயே கேட்போம் :

வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி
எம்முது குரவர் என்னுற் றனர்கொல்!

மாயம் கொல்லோ? வல்வினை கொல்லோ?
யானுளம் கலங்கி யாவதும் அறியேன்;
வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருள்உரை யாளர்
நச்சுக்கொன் றேற்கும் நன்னெறி உண்டோ?
இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழுஎனும் பாரேன் மாநகர் மருங்குஈண்டு
எழுகஎன எழுந்தாய் என் செய்தனை!

(சிலப்பு. 16: 59—70)

கோவலன், கடந்த காலத்தில் தானிழைத்த தவறுகளை யெல்லாம் சொல்லிச் சொல்லி கண்ணகியின் அடிமனத்தைக் கிளறி விட்டான். அவன் சொன்னவையெல்லாம் அவளுக்குப் புதியவை அல்ல. தன்னுடைய நினைவிலே அவள் வைத்திருப்பவையே. அதனால், அவனைப் பற்றித் தனக்குள்ள வேதனையை வெளிப்படுத்தலானாள்.

## கண்ணகியின் மனத்துயர்

புகாரில் கோவலன் தன்னை விட்டுப் பிரிந்திருந்ததனால், மனை வாழ்க்கைக்குரிய அறங்களைக் கணவனோடு கூடி நிறைவேற்றும் மனைவியாக வாழ முடியாத நிலையில் தான் இருந்ததனை,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்தேன்..."

(சிலப்பு. 16: 71—73)

என்று இதயக் குமுறலோடு எடுத்துக் கூறினாள்.

கோவலன் பிரிவால் தனது இளமை பாழானதற்காகக் கண்ணகி வருந்தவில்லை. "கணவனோடு கூடி இன்பம் துய்க்க

வேண்டிய பருவத்திலே துன்பத்தைச் சுமந்து கொண்டு வாழ் நாளைக் கழித்தேனே!'' என்று அவள் கூறவில்லை. ''ஒரு மனைவிக்குரிய அறங்களைச் செய்வதற்கு உதவியாகத் தாங்கள் என்னுடன் கூடி வாழவில்லையே!'' என்றுதான் கூறினாள். இத னால். ஒருத்தனும் ஒருத்தியும் கூடி நடத்தும் மனைவாழ்க்கை யின் மாண்பினை தமிழர் சமுதாயத்திற்கு நினைவூட்டுகின்றார் இளங்கோ.

''நும்மைப் பிரிந்த வருத்தத்தால் மிகுந்த வேதனையோடு வாழ்நாட்களை நான் கழித்தபோது, இருநிதிக் கிழவனான நுமது தந்தையும் தாயும் என்னைக் காணவந்தனர். அவர்கள் என்பால் அன்புடையவர்களாக, அருள் நிறைந்த சொற்களைக் கூறி, என்னைப் பாராட்டினர்.

''நுமது பிரிவால் என் மனத்துள் துயரமே நிறைந்திருந்த தென்றாலும், நுமது பெற்றோர் அறியா வண்ணம் அதனை மறைத்துக்கொண்டு, என் உதட்டிலே புன்சிரிப்பை வரவழைத்து, அவர்களை மகிழவைக்க முயன்றேன். ஆனால், நிறைமதியினரான நுமது பெற்றோர் என் மனத் துயரை யறிந்து வருந்தினர். என் செய்வது? குலத்திற்கு ஒவ்வாத ஒழுக்கக் கேடுகளைத் தாங்கள் புரிந்தீர்கள். யான் பெண் களுக்கேயுரிய கற்பு நெறியைக் கடைப்பிடித்து, 'எழுக!' என்று தாங்கள் ஆணையிட்டவுடன், அந்த ஆணையை ஏற்று தங்களைப் பின்பற்றி வந்தேன்'' என்றாள் கண்ணகி. இதுதான் கோவலனுடன் கண்ணகி நிகழ்த்திய கடைசி உரையாடல். ஆதலால், அவளே பேசக் கேட்போம்:

......''நும்
பெருமகன் தன்னொடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவுஇகந் தனனா,
அற்புளம் சிறந்தாங்கு அருண்மொழி அளைஇ,
எற்பா ராட்ட, யானகத்து ஒளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலுமென்

வாயல் முறுவதற்கு அவர் உள்ளகம் வருந்தப்
போற்றா ஒழுக்கம் புரிந்தீர்; யாவதும்
மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்,
ஏற்றெழுந் தனன், யான்."

(சிலப்பு. 16 : 73—83)

## வருந்துவதேன்?

கதைப் போக்கின்படி, கோவலனும் கண்ணகியும் தங்கள் வாழ்க்கையில் துன்ப கட்டங்களையெல்லாம் கடந்து இன்ப கட்டத்தை நெருங்கிக்கொண்டிருக்கின்றனர். ஆம்; பிரிந்தவர் கூடினர் புகார் நகரிலே! சிலம்பை விற்றுப் பொருள் தேடி வாணிபம் செய்து வாழ்வாங்கு வாழ வேண்டுமென்ற நன்னோக்குடன் புகாரை விட்டுப் பிரிந்து மதுரைக்குப் பயண மாயினர். வழித் துன்பங்களை யெல்லாம் அனுபவித்து மதுரையை அடைந்ததும், அத்துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றனர். அன்பின் வடிவமான மாதரி நல்லாளிடம் அடைக்கலம் புகுந்தனர். கணவனுக்குத் தன் கையால் உணவு சமைத்துப் படைக்கும் பேற்றினையும் பல்லாண்டு களுக்குப் பின்னர் மாதரி இல்லத்தில் முதன் முதலாகப் பெற்றாள் கண்ணகி. இதிலே, அவளுக்கு எல்லையற்ற இன்பம் ஏற்பட்டிருக்க வேண்டும். கோவலனும், பல்லாண்டுகளுக்குப் பின்னர் மாதரி இல்லத்தில்தான் தன் மனைவி சமைத்துப் படைத்த அறுசுவை உணவை உண்ணும் பேற்றினைப் பெற் றான். இது, அவனுக்கும் பெரு மகிழ்ச்சியைத் தந்திருக்க வேண்டும். சிலம்பை விற்றுப் பொருள் தேடுவதற்காகப் புறப்படத் தயாராகிவிட்டான். இன்னும் சில மணி நேரத் திலே சிலம்பை விற்பதால் கிடைக்கும் பொருள் அவன் கைக்கு வந்துவிடும். அதைக் கொண்டு வாணிபம் செய்து, நாளுக்கு நாள்—வாரத்திற்கு வாரம்—மாதத்திற்கு மாதம் அவர்களுடைய வாழ்க்கை வளம் பெற்று, வரும்பினால், பிறந்த இடமான புகாருக்கே திரும்பிச் செல்லக் கூடிய அந்நிலைதையும் பெற்று விடுவார்கள்.

இப்படி யெல்லாம் கற்பனை செய்து மகிழ்வதற்குக் காரணம் இருந்தும், இதற்கு மாறாக, தனது கடந்த காலத் தவறுகளை நினைத்துக் கோவலன் கண்ணீர் வடிப்பானேன்? பொறுமையின் வடிவமான கண்ணகியும், "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்!" என்று கோவலன் மனம் வருந்தும்படி அவனது இழி செயலை இடித்துக் கூறுவானேன்?

## இறுதிச் சந்திப்பு

இந்த இடத்திலே அந்தமில் இன்பத்து அரசாளும் ஆன்ம ஞானியாகிய இளங்கோவடிகள் மிகப் பெரிய மெஞ்ஞான உண்மையை வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறார் எனலாம்.

கோவலனும் கண்ணகியும் மாதரி இல்லத்திலிருந்தகாலை, வினைகளிலிருந்து விடுபடுவதற்கான பக்குவத்தைப் பெற்று விட்ட பரிசுத்த ஆன்மாக்களாக நமக்கு அறிமுகமாகின்றனர். கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிவது கதைப் போக்கின் படி சிலம்பு விற்றுப் பொருள் தேடித் திரும்புவதற்காகத்தான் என்றாலும், இது மீளாப் பிரிவு என்பதை அவனுடைய ஆன்மா அறிந்து கொள்ளுகின்றது அப்படியே கதைப் போக்கின்படி, கோவலன் சிலம்பு விற்று மீண்டும் வருவான் என்று கண்ணகி நம்ப வேண்டியவளாக இருந்தும், இது மீளாப் பிரிவு என்பதனை அவளுடைய ஆன்மாவும் அறிந்து கொள்ளுகின்றது.

இப்படி, வருங்காலத்தை யறிந்த இரண்டு பரிசுத்த ஆன்மாக்களின் கடைசிச் சந்திப்பு ஆதலால், ஒருவர்பற்றி மற்றொருவர் மனத்திலுள்ள குறையை எடுத்துச் சொல்லி விடும்படி, அவர்கள் மனச்சாட்சி தூண்டுகின்றது. தான் கண்ணகிக்கு இழைத்த தவறுகளுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்பவன்போல,

**"சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்"**

என்று கோவலன் கூறுகின்றான். இத்துடனன்றி, திரும்ப

வும் கடைசியாக ஒருமுறை கண்ணகியைத் தன் வாய் மணக்கப் புகழ்ந்து பேசுகின்றான்.

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங்கு என்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீள்நில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!
சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்
மாறி வருவன் மயங்காது ஒழிக!" (சிலப்பு. 16:84—93)

இது, தன் கற்புத் தெய்வத்திற்கு வினைகளிலிருந்து விடுபடும் நிலையை யடைந்துவிட்ட கோவலன் சூட்டும் புகழ் மாலையாகும்.

## பொருளுடைய புகழுரை

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு பண்பு களையும் பெண்களுக்கு உரிமையாக்கினர் பெரியோர். அவற் றில், அச்சத்தையும் பயிர்ப்பையும் புகாரிலேயே போட்டு விட்டாள் கண்ணகி. ஆம்; புரட்சி விளைவிக்க மதுரையை நோக்கிப் புறப்பட்டவளுக்கு அச்சமும் பயிர்ப்பும் தேவை யில்லைதானே! ஆயினும், கணவனைக் கைப்பிடித்து, அவனு டைய அடிச்சுவட்டைப் பின்பற்றி மதுரைக்குப் புறப்பட்டா ளாதலால், நாணத்தையும் மடத்தையும் நல்லோர் ஏத்தும் கற்பையும் தனக்குத் துணையாகக் கொண்டு மதுரை புகுந்தாள். உத்தமக் கற்பினளான கண்ணகிக்குத் துணை, அவள் கணவனான கோவலன் மட்டுமல்ல; நாணமும் மடமும் கற்பும் கூடத்தான்!

புகார் நகரில் முதல் இரவிலே கோவலன் கண்ணகியைப் புகழ்ந்தான். ஆம்; பள்ளியறையிலே! அவளுடைய கண்களை

முருகப் பெருமானுடைய இரண்டாகப் பிளவுபட்ட வேற்படையாகவும், இடையை இந்திரனுடைய வச்சிராயுதமாகவும், இரு புருவங்களையும் காமனுடைய இரண்டாகப் பிளக்கப்பட்ட கரும்பு வில்லாகவும், ஒளி பொருந்திய நெற்றியை சிவபெருமானின் சடை முடியிலுள்ள பிறைச் சந்திரனைகவும் வருணித்தான். இன்னும்,

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அருமபெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!
தாழிருங் கூந்தல் தையால்! நின்னை!"

(சிலம்பு. 2: 73—80)

என்றெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து பேசினன்.

இது, முதலிரவில், பள்ளியறையில் இருந்தபோது, தீராக் காதல் காரணமாக கண்ணகியின் திருமுகத்தை நோக்கிக் கோவலன் கூறிய வருணனை. இதனை, "உலவாக் கட்டுரை"— அதாவது, "பொருளற்ற வார்த்தைகளின் தொகுப்பு" என்று குறை கூறினர் இளங்கோ.

இதற்கு மாறுக, மாதரி இல்லத்திலே கண்ணகியைத் தனது வலது கரத்தால் அணைத்துக் கொண்ட வண்ணம் கோவலன் கூறிய புகழுரையிலே உண்மை ஒளி வீசுகிறது. பொருள் பொதிந்த சொற்களையே அவன் கூறுகிறன். இப்போது அவனது இதயம் பேசுகிறது! இறுதியிலே,

"கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்
மாறி வருவன்; மயங்கா தொழிக" (சிலம்பு. 16: 91-93)

என்கிறன்.

## ஒற்றைச் சிலம்பு

"மாறி வருவன்" என்னும் சொற்றொடர் இருபொருள் கொண்டதாகும். "மானுட யாக்கையோடு உன்னை விட்டுப் பிரிகிறேன். விரைவில் தேவ யாக்கையில் வந்து உன்னைச் சந்திப்பேன்" என்று கோவலன் சொல்வதாகவும் பொருள் கொள்ள இடம் இருக்கிறது. இது மீளாப் பிரிவு என்பதனை அவனுடைய ஆன்மா அறியுந்தானே! புகாரில் மாதவியைப் பிரிந்ததும் கண்ணகியை யடைந்து,

"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலந்தரு வான்பொருள் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு..."

என்று அவன் கூறியபோது, "சிலம்பு உள கொள்ளுங்கள்!" என்றுதான் கண்ணகி கூறினாள். ஆம்; தன் காற்சிலம்பு இரண்டையும் கொடுப்பதாகத்தான் கண்ணகி கூறினாள். அப்படியிருந்தும், மாதரி இல்லத்திலே கண்ணகியிடம் விடை பெற்ற கோவலன், ஒற்றைச் சிலம்பைத்தான் விற்றுவரப் புறப்பட்டான் என்பது வியப்பைத் தருவதாக இருக்கிறது.

கண்ணகி தந்த இரண்டு சிலம்புகளையும் விற்றுப் பொருள் தேடக் கோவலன் முயன்றிருப்பானானால், பொற்கொல்லன் கூட அவனைச் சந்தேகித்திருக்க மாட்டான். கதையின் போக்கே வேறுவிதமாக அமைந்திருக்கும். கோவலன் ஒற்றைச் சிலம்பைக் கொண்டு சென்றதற்கு இளங்கோ சொல்லும் காரணம் வினைவிளை காலம் என்பதுதான்.

கண்ணகியை விட்டுப் பிரியும் கோவலன், உறவினர்களும் பணிப்பெண்களும் இல்லாமல் அவள் தனித்திருப்பது கண்டு கண் கலங்கினான். தன் கண்கள் துளிர்க்கும் நீரை அவள் காணுவண்ணம் அவளுடைய கண்களைத் துடைத்து விடை பெற்றுப் பிரிந்தான்.

# 5

# வளையாத செங்கோல் வளைந்தது!

மாதரி இல்லத்திலே "நின் சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு யான் போய் மாறி வருவன்; மயங்கா தொழி!" என்று கூறி கண்ணகியைவிட்டுப் பிரிந்த கோவலன், பசுக்கள் நிறைந்த ஆயர்களின் வீடுகளைக் கடந்து, மிகுந்த மனச் சோர்வுடன் மதுரை நகர வீதிகளில் நடக்கலானான். மாதரி யின் வீட்டைவிட்டு வீதியில் இறங்கியதும் காளை மாடு ஒன்று எதிர்ப்பட்டது இதனைத் துர்ச்சகுனமாகக் கருதுவது ஆயர் களின் வழக்கமாயினும், வணிக வருணத்தாரிடம் அந்த வழக்கமில்லையாதலால், கோவலன் அதுபற்றிக் கவலைப்படா தவனாகி, மேலே நடந்தான்.

## பொற்கொல்லனைக் கண்டான்

பல வீதிகளைக் கடந்து கடைவீதியில் சென்று கொண் டிருந்தான். அப்போது பொற்கொல்லர் நூறு பேர் பின் தொடர, உடம்பில் சட்டையணிந்து, கையில் சின்னஞ்சிறு கோல் ஒன்றைத் தாங்கி, தலைமைக்குரிய கம்பீரநடையுடன் பொற்கொல்லன் ஒருவன் கோவலன் எதிரே வந்துகொண் டிருந்தான்.

அவனைக் கண்ட கோவலன், 'இவன் அரண்மனைப் பொற்கொல்லனாக இருக்கலாம்' என்று அனுமானித்து, அவனை நெருங்கினான். இதற்கு முன்னர் கோவலனுக்கு அறி முகமாகாதவன் பொற்கொல்லன். அப்படியிருந்தும், அவனை

யணுகி, "மன்னனுடைய தேவிக்குப் பயன்படத்தக்க சிலம்பு ஒன்று என் வசமுள்ளது. அதன் விலையை மதிப்பிட்டுக் கூற இயலுமோ?" என்று கேட்டான்.

கோவலன் பெண்களணியும் சிலம்பை முன்னர் விற்றறி யாதவனாதலால், தன் மனைவியின் சிலம்பை விற்கப் புகுமுன் விலையை மதிப்பிட்டறிய விரும்பினான்.

பொற்கொல்லன், "அடியேன் அறியேன்" என்று கூறினான். அத்துடன் நில்லாமல், அவன் தன் இரு கைகளா லும் கோவலனைக் கும்பிட்டு,

> "ஆயினும், வேந்தர்
> முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்"
> (சிலம்பு. 16: 113—14)

என்றான். எமனுடைய தூதுவனைப் போன்று கோவலனை அணுகிய அப்பொற்கொல்லன், தான் அரண்மனைப் பொற் கொல்லன் என்று கூறி, தன்னை அறிமுகப்படுத்திக் கொண் டான். தான் அனுமானித்தது உண்மையாகிவிட்டது கண்டு கோவலன் மகிழ்ச்சியடைந்தான். தன் கைவசமிருந்த கண்ணகிதேவியின் காற்சிலம்பினைப் பொற்கொல்லனிடம் கொடுத்தான்.

சிலம்பைப் பெற்ற பொற்கொல்லன் அதன் வேலைப்பாடு களை யெல்லாம் நன்கு ஆராய்ந்தான். உள்ளிருந்து ஒலி யெழுப்பும் மாணிக்கப் பரல்களையுடைய அச் சித்திரச் சிலம்பின் வேலைப்பாடுகளையெல்லாம் பொய் சொல்வதையே தொழிலாகக் கொண்ட அப்பொற்கொல்லன் கண்டு மகிழ்ந் தான்.

## தொழில் மாறியது!

கோவலனிடமிருந்து சிலம்பைப் பெற்றபின் பொற் கொல்லன் அடைந்த நிலையை இளங்கோவின் வாக்காலேயே அறிவோம்.

"மத்தக மணியொடு வயிரம் கட்டிய
பத்திச் சேவணப் பசும்பொன் குடைச்சூற்
சித்திரச் சிலம்பின் செய்வினை யெல்லாம்
பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துடன் நோக்கி"

(சிலப்பு, 16: 117—20)

கோவலன் எதிரே பொற்கொல்லன் வந்தபோது, 'பொன் வினைக்கொல்லன்' என்று குலத்தொழிலின் பெயரால் அவனை அறிமுகப்படுத்திய இளங்கோ, இங்கு; 'பொய்த் தொழில் கொல்லன்' என்று கூறுகின்றார். பொன் தொழிலுக்கும் பொய்த் தொழிலுக்கும் உள்ள வேறுபாடு நினைவிற் கொள்ளத் தக்கதாகும். "பொன் தொழிற் கொல்லன்" என்னும் பெயரால் இனி அவனை அழைத்தால், அது அவன் சார்ந்த குலத்தை இழிவுபடுத்துவதாகும் என்று கருதி, அதனைத் தவிர்ப்பதற்காகப் பொய்த்தொழிற் கொல்லன் என்று இளங்கோ கூறினார் போலும்! உண்மையில் அவனும் குலத் தொழிலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, கோவலனுக்கு எதிராகக் கோவேந்தனிடம்போய் பொய் சொல்லும் தொழிலை மேற்கொள்ளப் போகிறானல்லவா!

சிலம்பின் வேலைப்பாடுகளை ஆய்ந்து பார்த்த பின்னர் "பாண்டியன் மனைவியான கோப்பெருந்தேவிக்கு அல்லாது வேறு யாருக்கும் பொருந்தாது" என்று கோவலனிடம் கூறினான் பொற்கொல்லன்.

"விறன்மிகு வேந்தற்கு விளம்பி யான்வர என்
சிறுகுடில அங்கண் இருமின் நீர்"

(சிலப்பு. 16: 123—24)

என்று கூறி, கோவலனைத் தன் இல்லத்தில் தங்கும்படிச் செய்துவிட்டு, அரசனிடம் சென்றான் பொற்கொல்லன். கோவலன், சிலம்பின் விலை மதிப்பைக் கூறும்படித்தான் கேட்டான். பொற்கொல்லனோ அரசனிடம் சிலம்பை விற்று வருவதாகவே கூறிவிட்டுச் சென்றான்.

பாவம்! கோவலன், உண்மையாகவே பாண்டியனிடம் சிலம்பை விற்றுப் பொருள்பெற்று வருவான் பொற்கொல்லன் என்று நம்பி, எமனுடைய குகை வாயில் போன்ற அவன் வீட்டினுள் நுழைந்து, அங்கு தங்கலானான்.

அரண்மனைக்குச் சென்று கொண்டிருக்கும் வழியில்,

**"கரந்துயான் கொண்ட காலணி ஈங்கு,**
**பரந்து வெளிப்படா முன்னம் மன்னற்குப்**
**புலம்பெயர் புதுவனிற் போக்குவன் யான்"**

(சிலம்பு, 16: 127-29)

என்று நினைக்கலானான் பொற்கொல்லன். ஆம்; "யான் கோப்பெருந்தேவியின் சிலம்பைக் களவாடிக் கொண்டது வெளிப்படுமுன், பாண்டிநாடு வந்துள்ள இப்புதியவனைக் கள்வனாக்கி விடுவேன்" என்று தன் மனத்துள் நினைத்தவனாய் அரண்மனை நோக்கிச் சென்றான்.

## மரண தண்டனை!

பாண்டியன் தன் பட்டத்தரசியான கோப்பெருந்தேவியுடன் அரசவையிலே அரியாசனத்தில் வீற்றிருந்தான். நடனக் கணிகையர் இருவர் மன்னன் காண நாட்டியமாடிக் கொண்டிருந்தனர். அவர்களின் ஆடலிலும் பாடலிலுமே யன்றி, அழகிலும் மனதைப் பறிகொடுத்து, மெய்ம்மறந்திருந்தான் பாண்டியன். 'இவன் நடனமாடும் கணிகையரின் அழகிலே மயங்கி, அவர்களைக் காமுற்றுவிட்டான்' என்று

பாண்டிமாதேவி நினைத்துவிட்டாள். அதனால், 'தலை நோகிறது' என்று தோழியிடம் பொய்யாக ஒரு காரணத்தைக் கூறிவிட்டு, நடனம் முடிவதற்கு முன்பே அரசியிடமிருந்து அவையிலிருந்து வெளியேறிவிட்டாள். செழியன் நாட்டுக்கு வேந்தனாயினும், பெருந்தேவிக்குக் கணவன்தானே!

பாண்டியன், அரசியாரின் மனநிலையை அறிந்துகொண்டான். அரசவையைக் கலைத்துவிட்டு, அரசியாரின் ஊடலைத் தீர்க்கும் உள்ளத்துடன் அந்தப்புரத்திற்கு பணிப் பெண்கள் சூழ விரைந்து கொண்டிருந்தான்.

அந்த நேரத்திலே, பொற்கொல்லன் அந்தப்புரத்தின் நுழைவாயிலில் மன்னனைக்கண்டு, அவன் காலடியில் விழுந்து, பலவாறு துதிபாடி அவனைப் புகழ்ந்துவிட்டு, பின் கீழ் வருமாறு கூறினான்:

**"கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்**
**துன்னிய மந்திரம் துணையெனக் கொண்டு,**
**வாயி லாளரை மயக்குத் துயில் உறுத்துக்**
**கோயில் சிலம்பு கொண்ட கள்வன்**
**கல்லென் பேரூர்க் காவலர்க் கரந்துஎன்**
**சில்லைச் சிறுகுடில் அகத்துஇருந் தோன்"**

(சிலம்பு. 16: 142-47)

'அரசே! கன்னக்கோல் இல்லாமலும், கவைக்கோலின்றியும் அரண்மனையிலுள்ளோர் அனைவரையும் உறங்கவைக்கும் மந்திரம் ஒன்றையே துணைகொண்டு, வாயிற் காப்போரையெல்லாம் மயக்கித் துயிலும்படிச் செய்து, அரண்மனைச் சிலம்பினைக் கவர்ந்து சென்ற கள்வன் பிடிபட்டுவிட்டான்; அவன் எளியேனுடைய சிறிய குடிசையிலே இருக்கின்றான்."

இது, அரசியின் ஊடலைத் தீர்க்கவேண்டுமே யென்ற கவலையுடன் சென்று கொண்டிருந்த மன்னனிடம் பொற் கொல்லன் கூறியது.

மன்னன் சிறிதும் சிந்தியாதவனாகி, கொலைஞர் இருவரைக் கூவியழைத்து,

"...ஈங்கு என்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகில்,
கொன்றுஅச் சிலம்பு கொணர்க ஈங்கு!"

(சிலம்பு. 16: 150-53)

"என் தேவியின் காற்சிலம்பு பொற்கொல்லனிடம் பிடிபட்ட கள்வனின் கையகத்தே இருந்ததென்றால், அவனைக் கொன்றுவிட்டு, அச்சிலம்பினை இங்கே கொண்டு வருக!"

இது, மனைவியின் ஊடலைத் தீர்ப்பதிலேயே மனதைச் செலுத்தியிருந்த நிலையில் பாண்டியன் பிறப்பித்த ஆணை.

## வினைவிளை காலம்

கள்வனைப் பிடிக்கவேண்டியது ஊர்க் காவலர் செயல். அது அரண்மனைப் பொற்கொல்லன் வேலையல்ல. தற்செயலாக கள்வன் பொற்கொல்லன் பார்வையில் பட்டிருப்பினும் அதுபற்றி அவன் தகவல் தரவேண்டியது ஊர்க்காவலரிடமேயன்றி ஊராளும் மன்னனிடம் அல்ல. வஞ்ச நெஞ்சினனான பொற்கொல்லன் 'கள்வன்' பிடிபட்ட தகவலை மன்னனிடமே அறிவித்திருப்பினும், பிடிபட்ட கள்வனைச் சிறையில் வைக்குமாறு ஆணையிட்டு, மறுநாள் அரசவைக்கு அவனைக் கொண்டுவரச் செய்து, அவையிலுள்ள அமைச்சர்களுடன்

ஆலோசித்து, கள்வனுடைய வாக்கு மூலத்தையும் கேட்டு, அதன்பின் தீர்ப்பளிக்க வேண்டியது அரசனுடைய கடமை. இந்த நடைமுறை சிலப்பதிகார காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது. ஆனால், அரசியின் ஊடலால் மனக் குழப்பமடைந்திருந்த பாண்டிவேந்தன் அந்தக் கடமைகளைக் கைவிட்டான்.

அரசன் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிப்பது அரியாசனத்தில் இருக்கும்போதுதான். இதற்கு மாறாக, கோவலன் மீது பொற்கொல்லன் கொண்டுசென்ற பொய் வழக்கிலே, அந்தப்புரத்திற்குச் சென்றுகொண்டிருக்கும் போது இடைவழியில் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தான் மன்னவன்.

"என் தேவியின் காற்சிலம்பு கள்வனுடைய கையில் இருந்ததென்றால், அவனைக் கொன்று, அச்சிலம்பு கொணர்க" என்பது காவலர்களுக்கு மன்னன் பிறப்பித்த ஆணை. இதன்படி, சிலம்பு அரசியினுடையதுதானா? சிலம்பைக் கையில் வைத்திருப்பவன்தான் அதைத் திருடினனா?—என்பவற்றையெல்லாம் அறிந்து கொள்ளும் பொறுப்பை கொலைஞரிடமே விட்டு விட்டான் பாண்டி வேந்தன். இதற்கு இளங்கோ,

"வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினை அலர் வேம்பன் தேரான்"

[சிலம்பு. 16 148-49]

என்று சமாதானம் கூறுகின்றார்.

மன்னனிடம் ஆணைபெற்ற கொலைஞர் இருவரும் கொடுவாள்களைக் கைகளில் ஏந்தி, பொற்கொல்லனைப் பின்பற்றிச் கோவலன் இருக்குமிடத்திற்குச் சென்றனர்.

அரசன் கோவலனுக்கு மரணதண்டனை விதித்தது கண்டு பொய்த்தொழில் கொல்லன் பூரிப்படைந்தான். 'நினைத்ததை முடிப்பவன்' என, தன்னைப்பற்றிப் பெருமித மடைந்தான். கொலைஞர்களை அழைத்துக்கொண்டு பழைய தீவினை வலையில் சிக்கியிருந்த கோவலனை அணுகினான் கொல்லன். அணுகியவன்,

"வலம்படு தானை மன்னவன் ஏவ,
சிலம்பு காணிய வந்தோர், இவர்"

[சிலப்பு. 16: 158–59]

"மன்னன் ஏவ, நின் கையிலுள்ள சிலம்பினைக் காண இவர்கள் வந்திருக்கிறார்கள்" என்று கோவலனிடம் உண்மையை அரைகுறையாகச் சொன்னான்.

கொலைஞர்கள், கோவலன் கையிருந்த சிலம்பை வாங்கி, அது கோப்பெருந்தேவியினுடையதுதானா என்று ஆய்ந்து பார்த்தனர்.

பொய் சொல்வதைத் தொழிலாகக் கொண்டவனான கொல்லனானவன் கள்வனாக்கப்பட்டுள்ளவனிட மிருந்து தான் பெற்ற சிலம்பின் வேலைப்பாடுகளையெல்லாம் விவரித்துக் கூறி அது அரசியினுடையதுதான் என்று கொலைஞர்கள் நம்பும் படிச் செய்ய முயன்றான்.

## காவலர்களுக்குள் கருத்து வேற்றுமை

இந்நிலையில், அரசனால் ஏவப்பட்ட காவலர் இருவரிலே ஒருவன் உத்தமனுக்குரிய இலக்கணங்களை அறிந்தவன் அவன் தன்னுடன் வந்த மற்றொரு காவலனிடம்,

"இலக்கண முறைமையின் இருந்தோன், ஈங்கிவன்
கொலைப்படு மகனலன்"

[சிலம்பு 16: 162-63]

''உத்தமனுக்குரிய இலக்கணங்களையெல்லாம் பெற்றவனாக இவன் விளங்குகிறான். இவன் கொலைத் தண்டனைக்குரிய களவுத் தொழில் புரியும் இழி மகன் அல்லன்" என்று உறுதியாகக் கூறினான்.

பொற்கொல்லனுக்கு உள்ளூர உதைப்பு! ஆயினும், அதனை வெளிக்குக் காட்டாமல், கோவலன் உத்தமன் என்று வாதாடிய காவலனை எள்ளி நகையாடினான். காவலன் கூற்றை மறுப்பவனாகி, கள்வனுக்குரிய இலக்கணங்களை யெல்லாம் விவரித்தான். தான் கூறும் இலக்கணத்துடன்கூடிய கள்வர்கள் அரண்மனையிலே நிகழ்த்திய களவுகளை நியாய புத்திபடைத்த காவலனுக்கு நினைவுபடுத்தினான்.

இதற்குள் மற்றொரு காவலன் பொறுமை யிழந்தவனாகி, தன் கையிலிருந்த கொலை வாளால் கோவலனை வெட்டிக் கொன்றுவிட்டான். இதனை,

''கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள்வாள் எறிந்தனன் விலங்கூடு அறுத்தது
புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
மண்ணக மடந்தை வான்துயர் கூரக்
காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்தென்''

[சிலம்பு. 16 : 212-17]

என்று கூறுகிறார் இளங்கோ.

குற்றஞ் சாட்டப்பட்டவனைத் தன் கண்களால் காணாமலே, அவனைத் தன் எதிரே நிறுத்தி விசாரணை செய்யாமலே, அவனுடைய வாக்குமூலத்தைக் கேட்டறியாமலே, 'அவன் வசமிருப்பது தன் மனைவியின் சிலம்புதானா?' என்பதனை தானே நேரில் ஆராய்ந்தறியாமலே, பாண்டி நாட்டிற்கு அயலானான சோழ நாட்டுக் குடி மகனுக்கு மரண தண்டனை

விதித்து விட்டான் பாண்டியன் நெடுஞ்செழியன். அதனையும் உடனடியாக அமுல் நடத்துமாறு ஆணையிட்டு கொலைஞர்களை ஏவினன். இதற்கு முன்னுதாரணமாக, பாண்டிய நாட்டின் அரசியலிலே முன் எப்போதும்—பாண்டியரிலே எவரும் நடந்துகொண்டதில்லை. வரலாறு காணாத ஒரு கொடுமைக்கு தான் முதல்வனாகி விட்டான் நெடுஞ்செழியன்.

கோவலன்மீது பொற்கொல்லன் கொண்டுவந்த வழக்கிலே நெடுஞ்செழியனின் நிலை என்ன? அவன் கோவலனை பற்றிய வழக்கை விசாரித்து அவனுக்குத் தண்டனையளிக்கும் உரிமை பெற்ற மன்னன் அல்லன். கோவலன் கோப்பெருந்தேவியின் சிலம்பைக் களவாடியவன் என்றால், சிலம்பை களவு கொடுத்தவளின் கணவனாவான் நெடுஞ்செழியன். அந்த வகையில் அவனுடைய தகுதி ஒரு நீதிபதிக்குரிய ஸ்தானத்திலிருந்து விலகி விடுகிறது. ஆம்; கோவலன் வழக்கிலே மன்னன் ஒரு கட்சிக்காரன்; இல்லையேல், சாட்சியாகவேனும் விசாரிப்பதற்குரியவன். அப்படிப்பட்டவன், தன் மனைவியின் சிலம்பு களவு போய்விட்டதென்ற ஆத்திரத்திலே, தன்னுடன் ஊடல் கொண்டு அந்தப்புரம் சென்றுவிட்ட மனைவியின் ஊடலை விரைவில் தீர்க்க வேண்டுமென்ற அவசரத்திலே,

> "சிலம்பு, கன்றிய கள்வன் கையது ஆகின்,
> கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு,"

என்று ஆணையிட்டு விட்டான்.

பாண்டியன் நெடுஞ்செழியனிடத்தில் காணப்படும் இந்தக் குறைபாடுகளையெல்லாம் நினைவில் கொண்டுதான் "வளையாத செங்கோல் வளைந்ததே!" என்று மிகுந்த வேதனையோடு கூறுகின்றார் இளங்கோவடிகள். இதற்குக் காரணம், "பண்டைய விளைவாகி வந்த வினை" என்றும் கூறி, தன் மனத்திற்கு ஆறுதல் தேடிக் கொள்கிறார்.

ஊழ்வினை வலிது என்பதனை மக்கள் சமுதாயத்திற்கு உணர்த்த கோவலன் கொலையுண்டதனையும், அது காரண மாகப் பாண்டியன் செங்கோல் வளைந்ததனையும் எடுத்துக் காட்டி, அகில உலகினுக்கும் இளங்கோ அறிவுரை கூறுகின் ருர். அதற்கெனக் கொலைக்களக் காதையின் இறுதியிலே தனியாக ஒரு வெண்பாவையும் படைத்துள்ளார்.

**''நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்அறமே**
**கண்ணகி தன் கேள்வன் காரணத்தால் – மண்ணில்**
**வளையாத செங்கோல் வளைந்ததே; பண்டலை**
**வினைவாகி வந்த வினை !**

## ஆய்ச்சியர் குரவையின் அவசியம்

கோவலன் கொலையாகும் கொலைக்களக் காதையை அடுத்து, ஆய்ச்சியர் குரவையை வைத்திருக்கிருர் இளங்கோ. ஆய்ச்சியர் குரவையிலே திருமாலை வழிபடும் வகையில் குர வைக் கூத்து நிகழ்த்துகின்றனர் ஆய்ச்சியர்கள் கொலைக்களக் காட்சியை அடுத்துத் திருமாலை வழிபடும் காட்சியை வைத்த தில் பொருளுண்டு.

கோவலன் கொலையானவுடனே அந்தச் செய்தியை ஆயர் சேரியிலுள்ள கண்ணகி அறியச் செய்வதுதான் நிகழ வேண்டும். அப்படிக்கின்றி, திருமால் வழிபாட்டை இடை யில் நுழைப்பானேன்?

சிலப்பதிகாரம் ஓர் நாடகக் காப்பியம். அதனுல், துன் பியல் காட்சியான கோவலன் கொலையை அடுத்து, இன்னெரு துன்பியல் காட்சியை வைக்க இளங்கோ விரும்ப வில்லை. கொலைக்களக் காட்சியை அடுத்து ஆய்ச்சியர் குரவையை வைத்திருக்க வில்லையானுல், துன்பமாலை, ஊர் சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சினமாலை ஆகியவற்றை நாம் அடுத்தடுத்துச் சந்திக்க வேண்டியவர்களாகிருேம். இந்தக் காதைகளும் துன்பியற் காட்சிகளே.

கொலைக்களக் காதையிலே கோவலன் கொலையாகும் காட்சியே நம்மால் தாங்கிக்கொள்ள இயலாததாகும். உத்தமனான கோவலன் கள்வனாக்கப்படுவதே நமது மனத்தைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது. அதற்குமேல் அவன் கொலை செய்யப்படுவது நமது மனத்துயரை அதிகப்படுத்தி விடுகிறது. கோவலன் கொலையால் வளையாத செங்கோல் வளைந்ததே என்று இளங்கோவுடன் சேர்ந்து நாமும் வேதனையடைகிறோம். இந்நிலையில், கண்ணகியைச் சந்தித்து, அவள் புழுப்போலத் துடித்து, புரண்டழுது புலம்புவதைப் பார்க்க நமக்குச் சக்தி ஏது? இதனை உணர்ந்தே, கொலைக்களக் காதையை அடுத்து, திருமாலை வழிபடும் ஆய்ச்சியர் குரவையை இளங்கோ வைத்துள்ளார். இதனால், அடுத்த துன்பியற் காட்சியைச் சந்திப்பதற்கு முன் நமது மனத்தைத் தேற்றிக் கொள்ள சிறிது அவகாசம் கிடைக்கிறது.

## இசைப் பாடல்கள்

சிலப்பதிகார ஆசிரியரின் மதம் இன்னதென இதுவரை முடிவு செய்யப்படவில்லை. அவர் சமணர் என்ற கருத்தே ஓங்கி நிற்கிறதென்பது உண்மைதான். ஆயினும், அதனை மறுப்பதற்கும் சிலம்பிலேயே சான்றுகள் இருக்கின்றன அவற்றுள், ஆய்ச்சியர் குரவை மிகச் சிறந்த சான்றாகும்.

சிலம்பிலே-கானல்வரி, வேட்டுவவரி, குன்றக் குரவை ஆகிய இசைப்பாடல்கள் உள்ளன. ஆயினும், ஆய்ச்சியர் குரவை பாடல்களில்தான் இசைத்திறன் மிகுந்து காணப்படுகிறது. திருமால் பக்தியிலே பின்னால் தோன்றிய ஆழ்வார்களும் இளங்கோவடிகளை வெல்ல முடியவில்லை.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே இசைப் பாடல்களை இலக்கிய ஏடு ஒன்றில் ஏற்றிய பெருமை இளங்கோவுக்கே உரிமை என்பதை உணர்கிறோம். சிலம்புக்கு முன்பு பரிபாடல்கள் இருப்பினும், அவை வழக்கிலில்லாப் பாடல்கள்தானே!

அவற்றை நீக்கிப் பார்த்தால், சிலப்பதிகார இசைப்பாடல் களே—அவற்றுள்ளும் ஆய்ச்சியர் குரவைப் பாடல்களே தமிழ் ஏடு தரும் முதல் பாடல் தொகுதியாகும். ஆனால், ஏனோ, ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் தமிழரால்—குறிப்பாக வைணவர்களால் வழிவழி போற்றப்படவில்லை. திருமாலைப் பற்றிய பாடல்களென்றாலும், பாடிய கவிஞர் சமணர் என்ற நினைப்பால் ஆய்ச்சியர் குரவைப் பாடல்களை வைணவத் தமிழர்கள் போற்றாது விட்டனர் போலும்! என்ன சொல்லு கிறார் என்பதைவிட, சொல்லுபவர் யார்? அவரது சாதி என்ன? மதம் என்ன?—என்று பார்த்துப் பார்த்துப் பழக்கப் பட்டு விட்டோம்!

## வைணவத்தின் சிறப்பு

தமிழகத்திலே திருமாலை வழிபடும் பக்தி நெறியிலே மகத்தானதொரு மாறுதலைத் தோற்றுவித்து விட்டார் சிலப் பதிகார ஆசிரியர். சிலம்புக்கு முற்பட்ட சங்க இலக்கியங் களிலே ஐவகை நிலங்களுள் ஒன்றான முல்லை நிலத்தில் வாழும் ஆயர் குலத்தவரின் தெய்வமாக மட்டுமே திருமால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளார். தொல்காப்பியத்தில் "மாயோன் மேய காடுறை உலகம்" என்றுள்ள சூத்திரம் இதற்குச் சான்றாகும். இதற்கு மாறாக, சிலம்பிலேதான் ஐவகை நிலத்தைக்கொண்ட தமிழ் நாடு முழுவதிலும் திருமால் வழிபாடு நிகழ்ந்ததாகவும், ஆயர் குலத்தவர் மட்டுமேயல்லாமல் அந்தண—வணிக வருணங்களைச் சார்ந்த வர்களும் திருமாலை வழிபட்டதாகவும் இளங்கோ கூறு கின்றார்.

கண்ணகியும் கோவலனும் புகாரை விட்டு மதுரைக்குப் புறப்பட்டபோது, மணிவண்ணன் கோயிலை வலம் வந்து சென்றதாகக் கூறுகின்றார்.

மதுரை செல்லும் வழியில் எதிர்பட்ட மாங்காட்டு மறையவன் மூலம் திருவரங்கத்தில் பெருமான் கிடந்த

வண்ணமும், திருவேங்கடத்தில் திருமால் நின்ற வண்ணமும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. திருவரங்கமும், வேங்கடமும் முல்லை நிலப் பிரதேசங்கள் அல்ல. அப்படியே, மதுரை செல்லும் வழியில் திருமாலிருஞ்சோலையிலுள்ள திருமாலின் சிறப்புக்களை மறையவனைக் கொண்டு மிகுந்த பக்தியோடு ஆசிரியர் கூற வைக்கிறார். சேரன் செங்குட்டுவன் வடபுலம் நோக்கிப் புறப்பட்ட போது திருவனந்தபுரம் திருமால் கோயிலிலிருந்து அந்தணர்கள் துளபம் கொண்டு வந்து அவனுக்குக் கொடுத்ததாகவும் கூறுகின்றார்.

இப்படி, திருவனந்தபுரம், திருவரங்கம், திருவேங்கடம், பூம்புகார், திருமாலிருஞ்சோலை ஆகிய இடங்களில் எல்லாம் திருமால் கோயில்கள் இருந்தனவென்றும், அக்கோயில்களுக்குத் தமிழக மக்கள் யாத்திரை சென்றனர் என்றும் இளங்கோ கூறுகின்றார். மாங்காட்டு மறையவனை வைணவனாகவே அறிமுகப்படுத்துகின்றார். இதனால், முல்லை நிலத் தெய்வமாக மட்டுமே சங்க இலக்கியங்கள் அறிமுகப்படுத்திய திருமாலை தமிழ் நிலம் முழுவதற்குமான பொதுத் தெய்வமாக முதன் முதலில் நமக்கு அறிமுகப்படுத்தும் இலக்கியம் இளங்கோ படைத்த சிலப்பதிகாரம்தான் என்பது புலனாகும் ஆயினும், முல்லை நில மக்களுக்குக் குலத் தெய்வமாவார் திருமால் என்பதைக் காட்ட ஆய்ச்சியர் குரவையைப் படைத்தார்.

சிலம்பிலே வைணவத்திற்குத் தரப்படும் இன்னொரு சிறப்பையும் பார்க்கிறோம். சிலம்புக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களிலே நான்கைந்து இடங்களில்தான் இராமாயண, மகாபாரதச் செய்திகள் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றன. ஆனால், சிலம்பிலே—ஆய்ச்சியர் குரவையில் ராமாயண, மகாபாரதச் செய்திகள் குவியலாகக் கொட்டி வைக்கப்பட்டுள்ளன,

சமய சமரசம்

ஆய்ச்சியர் குரவையிலே, இராமாயண—மகாபாரதக் காப்பியங்களிலுள்ள செய்திகளேயன்றி, இவற்றிற்குப் பின் தோன்றியவையாகச் சொல்லப்படும் பாகவதக் கதைகளும் இடம் பெற்றுள்ளன. ஆய்ச்சியர் குரவையில் தரப்படும் வைணவ சமய சம்பந்தமான செய்திகள் எல்லாம் சிலப்பதிகாரத்திற்கு முன்பே தமிழகத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் இதற்கு, பரிபாடலிலுள்ள திருமாலைப் பற்றிய பாடல்களும் சான்று பகர்கின்றன. தனிப் பாடல்களாக வுள்ள சங்க இலக்கியங்களிலே அவை அதிக அளவில் இடம் பெறவில்லை யென்பதை இன்னொரு முறையும் நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும். சிலப்பதிகாரம், சைவம்—வைணவம்—சமணம்—பௌத்தம் ஆகிய சமயங்களிடையே ஒருமைப்பாடு போதிக்கும் சர்வசமய சமரசக் காப்பியமாதலால், அந்தந்த சமயத்தினரிடையே வழங்கி வந்த கதைகளேயும் செய்திகளேயும் தமது காப்பியத்தில் இளங்கோ தொகுத்துக் கொடுத்திருக்கிருர்.

சமண சமயச் செய்திகளேச் சொல்வதற்கென்றே கவுந்தியடிகளேப் படைத்திருக்கிருர். சமணத் துறவியரான சாரணர்களேயும் புகுத்தியிருக்கிருர். வைணவ சமயத்தின் சிறப்புகளேச் சொல்வதற்கென்றே மாங்காட்டு மறையவனேயும் இடைக்குலப் பெண்களேயும் காப்பியத்தில் கொண்டு வருகிருர். முல்லை நிலத் தெய்வமாக மட்டுமே தமிழருக்கு அறிமுகமாகி யிருந்த திருமாலானவர் ஒரு மதத் தெய்வமாகக் காட்டப்படுகிருர்.

திருமால் எடுத்த மானுட அவதாரங்களிலே பரசுராம அவதாரத்தைத் தவிர, மற்றுள்ள வாமன—இராம—கிருஷ்ண—பலராம அவதாரங்கள் நான்கையும் இளங்கோ ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிட்டுள்ளார்.

கி. பி. 2ஆம் நூற்றாண்டிலேயே தமிழ் மொழிக்கேவுரிய மிகச் சிறந்த பண்களோடு கூடிய இசைப் பாடல்கள் இறை வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டன என்பதற்கு ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் மிகச் சிறந்த சான்றாகும்.

இளங்கோவடிகள் சேர நாட்டின் இளவரசர் என்பது நாம் அறிந்ததே. அவர், கற்பு நெறியைப் போதிக்கும் தமது காப்பியத்துள் ஆங்காங்கே அரசியல் செய்திகளையும் சேர்த்து வைத்துள்ளார்.

## இமயத்தில் மூவேந்தர் சின்னங்கள்

ஆய்ச்சியர் குரவையின் தொடக்கத்திலேயே தம் காலத்தில் தமிழ் மூவேந்தர் கடைப்பிடித்த வீர சாகசங்களை விளக்குகின்றார்.

கயல்எழுதிய இமய நெற்றியின்
அயல்எழுதிய புலியும் வில்லும்
நாவலம் தண் பொழில் மன்னர்
ஏவல் கேட்பப் பார்அரசு ஆண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன்

இது, தமிழ் மூவேந்தர்கள் பாரதத்தின் வடக்கெல்லையி லுள்ள இமய மலையின் நெற்றியிலே தங்கள் வில், புலி, மீன் சின்னங்களைப் பொறித்த செய்தியைக் கூறுகின்றது. ஆய்ச்சியர் குரவை மதுரைக் காண்டத்தில் வருவதால் மற்றிரு வேந்தர்களை விடவும் பாண்டியனுக்கு முதன்மை தருவது கவிஞரின் கடமையாகின்றது. அதனால், இமய நெற்றியில் மதுரை மன்னன் கயல் எழுதிய செயலை முதலில் சொல்லி விட்டு, மற்றுள்ள சோழனும் சேரனும் அந்தக் கயலுக்கு வலப்புறத்திலும் இடப்புறத்திலுமாகத் தங்கள் புலியையும் வில்லையும் பொறித்தனர் என்கிறார்.

தமிழகத்தின் வரலாறு வில்—புலி—மீன் ஆகியவற்றைத் தமிழ் மூவேந்தர்களின் அரசியல் சின்னங்களாக நமக்கு அறிமுகப்படுத்துகின்றது. இந்தச் சின்னங்களுக்கு நிலையான வாழ்வு தேட நினைத்தனர் தமிழ் மூவேந்தர்கள்,

தங்களின் சின்னங்களை இமயத்தில் பொறித்து செயற்கரிய செயல் புரிய அவர்கள் விரும்பினார்கள். இமயத்திலும் அடிவாரத்திலே அல்லாமல் நெற்றியிலே பொறிக்க விரும்பியிருக்கிறார்கள். அதையும் தாங்களே செய்யத் துணிந்து இமயமலை மீது அரும்பாடுபட்டு ஏறியிருக்கிறார்கள். அரசியல் சின்னத்தைப் பொறிப்பதனால், அதற்கு உரிய இடம் இமய நெற்றிதான் என்பதை ஆய்ச்சியர் குரவையின் தொடக்க வரிகள் அறிவிக்கின்றன. செயற்கரிய செய்பவன் தானே தமிழன்!

இமயத்தின் நெற்றியிலே தத்தம் அரசியல் சின்னங்களைப் பொறிப்பதிலே தமிழ் வேந்தர்கள் ஆர்வம் காட்டிடக் காரணம் என்ன? வடபுலத்தை அடிமைப்படுத்தி, ஒரு ஏகாதிபத்தியத்தைப் படைத்து, அதைச் சாதித்த வெற்றிச் சின்னமாக இமய நெற்றியில் பாண்டியன் மீன் சின்னத்தைப் பொறித்தானா? அதையே பின்பற்றி, சேரனும் சோழனும் தங்கள் வில், புலிச் சின்னங்களை இமய நெற்றியிற் பொறித்தார்களா? அப்படிச் சொல்வதற்கு இலக்கியங்களிலே சான்று இல்லை.

## இமயப் படையெடுப்பு ஏன்?

தமிழ் மூவேந்தர் கடல் கடந்த நாடுகளான பர்மா, மலாசியா, இலங்கை ஆகிய அயல் நாடுகளிலே அரசியல் ரீதியில் ஆதிக்கம் பெற்றதுண்டு. ஆனால், கலாசார ரீதியில் தங்கள் தாயகமாகக் கருதிய வடபுலத்தை அடிமைப்படுத்தி ஆதிக்கஞ் செலுத்த அவர்கள் நினைத்ததில்லையென்று துணிந்து சொல்லலாம். ஆனால், வடவேந்தருக்கு தமிழகத்

தின் மீது ஆதிக்கம் பெறும் விருப்பம் இருந்திருக்கிறது. இதற்கு, கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் கலிங்கம்வரை அசோகன் நடத்திய படையெடுப்பே சான்று. கி.பி.யிலும் களப்பிரரும், பல்லவரும், ஆந்திரரும், மராத்தியரும், சாளுக்கியரும் தமிழகத்தை ஆண்டிருக்கின்றனர் அல்லவா !

சிலப்பதிகார காலத்திலேயும் வடபுல வேந்தர் பற்றிய அச்சம் தமிழ் வேந்தருக்கு இருந்திருக்கிறது. அதனாற்றான், தமிழ் மூவேந்தரானோர் அடிக்கடி வடபுலத்தின் மீது படை நடத்தி, எதிர்த்த வடவேந்தரை வென்று, நட்பு கொண்டோரிடம் பரிசுகள் பெற்று, இமயத்தில் தத்தம் கொடிச் சின்னங்களைப் பொறித்துத் திருப்புவதனை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது. இதனை எடுத்துக் காட்டவே ஆய்ச்சியர் குரவையின் தொடக்கத்தில் "கயல் எழுதிய இமய நெற்றியில் அயல் எழுதிய புலியும்,வில்லும்" என்று இளங்கோ பாடியுள்ளார்.

சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னர் தமிழ் மூவேந்தர்— குறிப்பாக, கரிகால் வளவன் வட லத்தின் மீது படை நடத்திச் சென்றதை வரலாற்று நிகழ்ச்சியாக அல்லாமல் கவிஞரின் கற்பனையென்றே கொண்டாலும், பிற்காலச் சோழர்களான இராசராசனும் இராசேந்திரனும் கங்கை வரை படை நடத்திச் சென்றதைக் கற்பனையாகக் கருதுவதற்கில்லை. அந்தப் படையெடுப்புகள் பற்றிக் கல்வெட்டுகளும் மெய்க்கீர்த்திகளும் கூறுகின்றன.

இராசராசனும் இராசேந்திரனும் வடபுலத்தரசரை வென்றபின், அங்கு தங்கள் படைகளை நிறுத்தி, அதனை அடிமைப்படுத்தி, அங்குள்ள மக்கள்மீது தங்கள் மொழியான தமிழை, தமிழருக்கேயுரிய சமயமான சைவத்தைத் திணித்ததாகச் செய்தியில்லை. சிலம்பிலே கண்ணகி சிலைக்குக் கல்லெடுக்க இமயஞ் சென்ற சேரன் செங்குட்டுவன், காவா நாவினராய் தமிழ் வேந்தரைப் பழித்துப் பேசிய கனகனையும்

விசயனையும் வென்று, அவர்களைத் தமிழகம் கொண்டு வரு கின்றான். ஆனால், அந்த வெற்றிக்குப் பின் செங்குட்டுவன் ஆட்சி வடபுலத்தில் நடந்ததாக சிலம்பு கூறவில்லை. மாறாக, வீழ்ச்சியுற்ற—கைதிகளாகத் தமிழகம் கொண்டு வரப்பட்ட—கனகவிசயரை விடுதலை செய்து, அவர்களைத் தன் விருந் தினராக சேரன் ஏற்று, அவர்களும் கண்ணகி விழாவில் கலந்து கொள்ளச் செய்கின்றான்.

## ஆக்கிரமிப்பு அல்ல!

சிலம்பு கூறும் இந்தச் செய்தி ஒன்றே தமிழ் மூவேந்தர் வடபுலத்தை அடிமைப்படுத்தி ஆள விரும்பியதில்லை என்பதனை உணர்த்துவதாகக் கொள்ளலாம். ஆனால், வட புலத்தின் மீது தமிழரசர் அடிக்கடி படைநடத்தி, அங்குள்ள வேந்தர்களுக்குத் தங்கள் ஆற்றலை உணர்த்தி வந்தனர் என்று தெரிகிறது. இதனை, ஆக்கிரமிப்புப் போராக அல்லாமல், தற் காப்புக்கான ராச தந்திர நடவடிக்கையாகவே கருத வேண்டும்.

ஏகாதிபத்திய வாதிகள் கடைப்பிடித்த கொடிய நடை முறைகளில் ஒன்று, காலனி முறையாகும்—அதாவது, தாங்கள் அடிமை கொண்ட பிரதேசம் மொழியால் மதத்தால் வேறுபட்டதாயின், அங்கு தங்கள் படைகளை நிறுத்தி, தங்கள் நாட்டு மக்களை அணி அணியாகக் குடியேற்றி, அடிமைப்பட்ட நாட்டைத் தங்கள் காலனியாக மாற்றுவார்கள். வடபுலத் தின் மீது படை நடத்திய தமிழ் வேந்தரில் எவரும் அப்படி நடந்து கொண்டதாகத் தமிழ் இலக்கியங்களிலோ வரலாற்றிலோ சான்றில்லை.

தமிழகத்தில் ஆந்திர நாயக்க மன்னர்கள் ஆதிக்கஞ் செலுத்தியபோது, அவர்களால் ஆந்திர மக்கள் இங்கு குடி அமர்த்தப்பட்டார்கள். அதனால், அவர்கள் சந்ததியார் தற்

போதைய தமிழகத்தில் பல லட்சத்துக்கு அதிகமானவர்—தமிழரோடு தமிழராகக் கலந்து—வாழக் காண்கின்றோம். மராத்தியரும் மொகலாயரும் தமிழகத்தில் ஆதிக்கஞ் செலுத்தியதன் அடையாளமாக மராத்திய மரபினரும் மொகலாய பாரம்பர்யத்தினரும் இன்றளவும் தமிழகத்தில் வாழ்வதைப் பார்க்கிறோம்.

ஆங்கிலேயர் தமிழகத்தை ஆண்டதன் அடையாளமாக, ஆங்கிலோ—இந்தியர் என்ற ஒரு புதிய சாதியே தமிழர் மத்தியில் தோன்றிவிட்டது. இதுபோல, தமிழ் மூவேந்தராலோ, பிற்காலச் சோழர்களாலோ வேங்கடத்துக்கு வடக்கே நிறுவப்பட்ட தமிழர் குடியிருப்பு ஏதேனும் இருக்கிறதா? அப்படி குடியேற்றப் பட்டவர்களின் மரபினர் என்று சொல்லத்தக்க வகையில் தமிழர் வடபுலத்தில் வாழ்கிறார்களா? இல்லையே.

இதனால், சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் தமிழ் வேந்தரின் வடபுலப்படையெடுப்புகளெல்லாம் வரலாற்று நிகழ்ச்சிகளென்றே கொண்டாலும், அவை ஏகாதிபத்தியம் படைப்பதற்கான ஆக்கிரமிப்புகள் அல்ல; தற்காப்புக்கான ராசதந்திர நடவடிக்கைகள் என்றே கருத வேண்டும். தமிழ் வேந்தர்கள் என்றுமே வடபுலத்தை பகைப்புலமாகவோ அங்குள்ள மக்களை அன்னியராகவோ கருதியதில்லை என்று சொல்லலாம்.

இனி, கோவலன் கொலையை யடுத்து ஆயர்சேரியின் நிகழ்ந்ததை பார்ப்போம்.

# 6

# மன்னன்மீது கண்ணகி தொடுத்த வழக்கு

கோவலன் கொலையுண்ட பின்னர், கண்ணகி தங்கியிருந்த மாதரி இல்லத்திலே தீய குறிகள் காணப்படுகின்றன. குடத்தில் உறையிட்ட பால் உறையவில்லை; உறியில் வைத்த வெண்ணெய் உருக்கியும் உருகவில்லை. ஆட்டுக்குட்டிகள் துள்ளி விளையாடவில்லை; காளை மாடுகள் கண்களிலிருந்து நீர் சொரிகின்றன. பசுக்களின் கழுத்திலுள்ள மணிகள் அறுப்பாரின்றியே அறுந்து நிலத்தில் வீழ்கின்றன. இத் தீய சகுனங்களைக் கண்ட மாதரி, தன் மகள் ஐயையைப் பார்த்து, "ஏதோ தீங்கு நேர இருக்கின்றது" என்று கூறுகின்றாள். பின்னர், தன் மனத்தைத் தேற்றிக்கொண்டு, தன்னுடைய மகளையும் தேற்றுபவளாகி, குலத் தெய்வமாகிய திருமாலை வழிபடுவதற்கு ஆயர் சேரியிலுள்ள பெண்களையெல்லாம் ஒருங்கு திரட்டினாள். அவர்களி லிருந்து திருமணமாகாத கன்னிப் பெண்களாக எழுவரைத் தேர்ந்தெடுத்து, குரவைக் கூத்தின் முறைப்படி, அவர்களுக்குப் புனைபெயர்களைக் கொடுத்து, முறைப்படுத்தி நிறுத்தினாள். குரவைக் கூத்தில் முதியவளான மாதரி நேரடியாகப் பங்கு பெறவில்லை. ஆயினும், கூத்தின் முறையறிந்தவளாதலால், அவளே முன்னின்று நடத்தினாள்.

பொதுவாக, திருமாலை வழிபடும் இந்தக் குரவைக் கூத்து கண்ணகியின் கதைக்கு நேரடியாகத் தொடர்பில்லாது

தாகும். சிலப்பதிகாரம் நாடகக் காப்பியமாதலால், நாடு முழுவதையும் அதிலே காட்ட வேண்டியது ஆசிரியரின் கடமையாகிறது.

## நிலத்தெய்வ வழிபாடு

நாட்டை ஐந்து வகையாகப் பிரித்தனர் சான்றோர். அவை மருதம், நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி ஆகியன வாம். இந்த ஐவகை நிலத்திற்கும் ஐவேறு தெய்வங்களையும் கூறினர். இந்த ஐவகை நில வேறுபாடுகளையும், அங்கெல்லாம் நிகழும் வேறுபட்ட தெய்வ வழிபாடுகளையும் சிலம்பிலே காட்டுகின்றார் இளங்கோ.

புகார்க் காண்டத்தில் இந்திர விழவூரெடுத்த காதையிலே, மருத நிலமான புகார் நகரத்து மக்கள் தங்கள் நிலத் தெய்வமான இந்திரனுக்கு வழிபாடு நிகழ்த்துவதைக் காட்டினார். மதுரைக் காண்டத்தின் தொடக்கத்திலே பாலை நிலத்து மக்களான எயினர்கள் தங்கள் நிலத் தெய்வமும் குலத் தெய்வமுமான கொற்றவையை வழிபடுவதனை வேட்டுவ வரியிலே காட்டினார். கானல் வரியில் "மாக்கடல் தெய்வம்! நின் மலரடி வணங்குதும்" என்று மாதரியைப் பாட வைத்து, நெய்தல் நிலத்துக்குரிய வருண வழிபாட்டையும் சுட்டிக் காட்டினார். இப்போது, ஆய்ச்சியர் குரவையிலே, முல்லை நிலத்தில் வாழும் ஆயர்குலப் பெண்களைக் கொண்டு திருமால் வழிபாட்டினைக் காட்டுகின்றார். மேலே வஞ்சிக் காண்டத்தின் தொடக்கத்தில் குன்றக் குரவையிலே குறவர்கள் தங்கள் குலத் தெய்வமான முருகனை வழிபடுவதனைக் காட்டுவார்.

முல்லை நில மக்களின் வழிபாடாக ஆய்ச்சியர் குரவை தேவைப்பட்டிருப்பினும், அதனைக் கண்ணகியின் கதையோடு பிணைக்க வேண்டியது அவசியமாகிறது அல்லவா? அதற்காகத்

தான் மாதரியின் இல்லத்தில் துர்ச்சகுனங்களைக் கற்பித்து அச்சகுனங்களைக் கண்டு அஞ்சிய மாதரி, ஆயர் குலத்துக்கு—தன்னிடம் அடைக்கலம் புகுந்த கண்ணகிக்கு—தீங்கு ஏதும் வராதவாறு காக்குமாறு திருமால் வழிபாடு நடத்துவதாக இளங்கோவடிகள் கூறுகின்றார்.

## காளையை அடக்கிய காளை!

குரவைக் கூத்தில் கலந்துகொள்ளும் கன்னிப் பெண்கள் எழுவரைக் கூறும் மாதரி,

> "தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்
> எழுவர் இளங் கோதை யார்"

என்று கூறுகின்றாள். இதன் பொருள், தம்மொடு சேர்ந்து வளரும் ஏழு ஏறுகளைக்கொண்ட கன்னியர் எழுவர் என்பதாகும்.

பண்டைய நாளில் பெண் பிறந்தால், அவளை வளர்க்கும் பெற்றோர், அவளோடு சேர்த்து 'ஏறு' எனப்படும் காளை ஒன்றையும் வளர்ப்பார்கள். அந்தப் பெண்ணை மணம் செய்து கொள்ள விரும்பும் ஆடவன், அவளோடு சேர்ந்து வளரும் காளை மாட்டை அடக்கி, தனது ஆண்மையை வெளிப்படுத்திக் காட்டவேண்டும். ஏற்றினுக்குரிய கன்னி, ஒரு பரண் அமைத்து, அதன்மீது தோழியோடு அமர்ந்திருப்பாள். திறந்த வெளித் திடலில் மணம் விரும்பும் இளைஞன் காளையை அடக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

இயற்கையாகவே கொல்லுந் தன்மை வாய்ந்த கொம்புகளைப் பெற்றிருக்கும் அந்தக் கொல்லேறு, போதாக்குறைக்கு நிகழ்ச்சி நடக்கும் நாளிலே அதன் கொம்புகள் மேலும் கூர்மையாகச் சீவி விடப்படும். அந்தக் காளையுடன் போராடி, அதனை அடக்கி, அதன் முதுகின் மீது மணம் விரும்பும் தமிழ்

மகன் அமர்ந்துவிடுவானுனல், அந்த நிகழ்ச்சி கண்டு, பரண் மீது அமர்ந்திருக்கும் கன்னியானவள் ஓடிவந்து காளையை அடக்கிய இளைஞனுக்கு மலர் மாலை சூட்டுவாள். இது, காரணமாகத்தான் இளந்தமிழனைக் 'காளை' என்று சிறப்பித்துச் சொல்லும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். காளையை அடக்கி வெற்றி பெறத்தவறி, அந்தச் சோதனையிலே மணத்தை விரும்பும் மகன் தோற்று விடுவானுனல், 'இந்தப் பிறவியில் மட்டுமின்றி, மறு பிறவியிலும் என் மகள் அவனை மணக்கமாட்டாள்' என்கிருள் கலித்தொகையில் வரும் ஆய மகள்.

## திருமணச் சடங்கு

சிலப்பதிகாரக் காலத்திலே முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் குலத்தவர் கடைப்பிடித்த இந்தப் பழக்கத்தை ஆய்ச்சியர் குரவையில் வரும் ஏழு கன்னிப் பெண்களின் மேல் ஏற்றிக் கூறுகின்ருர் இளங்கோ. அந்தக் கன்னியரை அறிமுகப்படுத்துபவர், அவர்களுடைய பெயர்களைக் கூருமல் அவர்கள் திருமணத்திற்காக வளர்க்கப்பட்டு வரும் காளைகளின் பெயர்களைச் சொல்லி, அவர்களை அறிமுகப்படுத்துகிருர்:

காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும்இவ்
வேரி மலர்க் கோதையாள்.
நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரியஇப்
பொற்ருெடி மாதராள் தோள்.
மல்லல் மழவிடை ஊர்ந்தாற்கு உரியள்இம்
முல்லையம் பூங்குழல் தான்
நுண்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும்இப்
பெண்கொடி மாதர்தன் தோள்
பொற்பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும்இந்
நற்கொடி மென்முலை தான்.

வென்றி மழவிடை ஊர்ந்தாற்கு உரியள், இக்
கொன்றையம் பூங்குழ லாள்.
தூநிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள்இப்
பூவைப் புதுமல ராள்.

பண்டை நாளில், மூவேந்தர்களிலே ஒரு வேந்தரும் இந் நாளில் உள்ளதுபோன்று நிரந்தரமான இராணுவப் படையைப் பெற்றிருக்கவில்லை. ஒருகால், தமிழ் மூவேந்தரிடம் நிரந்தரமாக இராணுவம் இருந்திருப்பினும், அது உள் நாட்டில் அமைதியைக் காப்பதற்குப் பயன்படுத்தக் கூடியதாக சிறிய அளவில்தான் இருந்திருக்கக் கூடும்.

பகைவன் படையெடுத்தால் அல்லது பகை நாட்டின் மீது தான் படையெடுக்க நேர்ந்தால், வீட்டுக்கொரு ஆண் மகனை அனுப்ப வேண்டுமென்று ஆணையிட்டு, தற்காலிகமாக இராணுவ வீரர்களைத் திரட்டுவது வழக்கமாக இருந்திருக்கிறது இதனால், குடி மக்களில் ஆண்—பெண் அனைவரையுமே இராணுவ மனப்பான்மை யுடையவர்களாகச் செய்து வைத்தனர் தமிழ் வேந்தர்கள். இதற்காக, ஆண்கள் விளையாடும் விளையாட்டுகளையும் வீர விளையாட்டுகளாகவே படைத்தனர்.

திருமணச் சடங்குகள் வெற்றுச்சடங்குகளாக அல்லாமல் வீரச் சடங்குகளாகவே இருந்து வந்தன. திருமணத்தின்போது, மணமகன், தானே கொன்ற புலியின் பற்கள் இரண்டைப் பொன் தகட்டால் பிணைத்து, அதனை ஒரு கயிற்றில் கோத்து, 'தாலி' என்ற பெயரில் திருமணப் பரிசாக மணமகள் கழுத்தில் கட்டினான். இது, குறிஞ்சி நிலத்துத் தமிழர் திருமணத்தில் நடக்கும் சடங்காக இருந்திருக்கிறது.

இப்படியே, முல்லை நிலத்தில் வாழும் தமிழ் மகன் தான் மணக்க விரும்பும் கன்னியோடு சேர்ந்து வளர்ந்த காளையை அடக்கும் சடங்கு நிகழ்ந்திருக்கிறது.

கோவலன் பிணம் கொலைக்களத்தில் கிடக்கும் நிலையிலே, அவன் கொலையுண்ட செய்தியை கண்ணகி அறிவதற்கு முன் உள்ள இடைக் காலத்தில், ஆய்ச்சியர் குரவையைக் காட்டும் அடிகளார், தமிழினத்தாரின் வீரத்தையும் சேர்த்துச் சொல்ல விழைந்திருக்கிறார்.

## பால சரிதக் கூத்து

குரவைக் கூத்தில் இசைப் பாடல்கள் பாடப்படுகின்றன. பண்டை நாளில் பாட்டும் கூத்தும் மக்களுடைய வாழ்க்கையிலே சிறப்பிடம் பெற்றிருந்தன. பலர் கூடி ஆடிப் பாடி மகிழ்வதே அந்நாளைய கலை வாழ்க்கையாக இருந்திருக்கிறது. பலர் கூடி இறைவனை வழிபடும் கூட்டு வழிபாட்டையே பண்டைத் தமிழர் கடைப்பிடித்திருக்கின்றனர். இதனை, ஏற்கனவே கொற்றவை வழிபாட்டால் அறிந்தோம். இப்போது ஆய்ச்சியர் குரவையாலும் அறிந்து கொள்ளுகிறோம்.

குரவைக் கூத்துதான் என்றாலும், அதற்கும் ஒரு கதை வேண்டும் அல்லவா? அந்தக் கதையும் ஆயர் குலத்துத் தெய்வமான கண்ணனைப் பற்றியதாகத்தானே இருக்க வேண்டும்? இதனையுணர்ந்து, பண்டு ஆயர்பாடியில் தன் அண்ணனான பலராமனுடன் கூடி கண்ணன் விளையாடிய பால சரித நாடகங்களுள் ஒன்றை மாதரி தேர்ந்தெடுத்தாள். "கண்ணன் தன் மனங்கவர்ந்த பின்னைப் பிராட்டியுடன் கூடி ஆடிய அந்நாடகத்தை, 'கரவைகளும் கன்றுகளும் துயர் நீங்குக' என்று வேண்டி, நாமும் ஆடலாம், வருக" என்றாள் மாதரி.

குரவைக் கூத்து நிகழ்கின்றது. கன்னிப் பெண்களின் இசைக் குரல் எழுகின்றது. மாயவன், பின்னைப் பிராட்டி, பலராமன் என்னும் பாத்திரங்களைத் தாங்கி கன்னிப் பெண்கள் நடிக்கின்றனர். இது, பக்திக் கூத்து! தாமே

திருமாலின் பக்தராக இருந்துகொண்டு, சேர முனியாகிய இளங்கோவடிகள், ஆய்ச்சியர் குரவைப் பாடல்களை அற்புதமாகப் பாடியுள்ளார். தமிழிலுள்ள இசைப் பாடல்களிலே ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் பெற்றுள்ள இடம் தனிச் சிறப்புக்குரியதாகும் சந்த வேறுபாடுகளுடன் அடிகள் அப் பாடல்களைப் பாடியுள்ளார்.

## மூவேந்தர் பெருமை

காக்குந் தெய்வமான திருமாலின் பிரதிநிதியாகத்தான் மன்னன் தன் குடி மக்களை ஆளுகிறான் என்பது இந்திய சமுதாயம் கண்ட அரசியல் சித்தாந்தம். இந்த சித்தாந்தத்தைச் சிலம்பிலேயும் சேர்த்து வைப்பவர் போல, தமிழ் மூவேந்தரையும் திருமாலோடு ஒப்பிட்டுப் பாடல்கள் புனைந்துள்ளார் இளங்கோ.

> கோவா மலை ஆரம் கோத்த கடல் ஆரம்
> தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
> தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
> கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்.
>
> பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
> மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
> மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
> பொன்னம் திகிரிப் பொருபடையான் என்பரால்
>
> முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பு எறிந்தான்
> மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
> மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
> கன்னவில் தோள் ஓச்சிக் கடல்கடைந்தான் என்பரால்.

திருமாலுக்குப் பரத்துவம் கூறும் பாடலிலே இறைவனை வழிபடும் முறையையும் கூற விரும்பி,

"சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே!
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!"

என்கிறார் அடிகள். கேள்வியால் தோட்கப்படாத செவியைக் குறைகூறினார் வள்ளுவர். அவருடைய வாரிசான இளங்கோவடிகள், திருமால் சீர் கேளாத செவியைக் குறை கூறுகிறார். இன்னும், "கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே, கண் இமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!" என்றும் சிலம்பிலே சேரமுனி இளங்கோ கூறுகின்றார். ஐம்புலன்களும் ஒன்றுபட்ட நிலையில் மனத்துள் பக்தி பெருக்கெடுக்குமானால், கண்கள் இமையா நாட்டம் பெற்று விடும். இதயத்தில் பக்தி வற்றிவிடும்போதுதான் கண்கள் இமைக்கும். "கரியவனை திருமாலைக் காணாத கண் என்ன கண்ணே" என்று கூறியவர், காணுகின்ற போதும் கண்கள் இமைக்குமானால், அது பக்தியோடு கூடிய பார்வையாகாது என்பதனை உணர்த்த, "கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே" என்கிறார். மேலும்,

'பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நவென்ன நாவே!
"நாராயணா!" என்னா நாவென்ன நாவே!'

என்றும் பாடுகின்றார். மனிதன் நாவைப் படைத்தது, பண்டங்களைச் சுவைப்பதற்கன்று; பகவான் பெயரைச் சொல்லிச் சுவைப்பதற்காகத்தான் என்பது இளங்கோவின் சித்தாந்தம். எடுத்துக் கொண்டது திருமால் வழிபாடானதால், வைணவ மரபுப்படி "நாராயணா" என்று கூறியிருப்பினும், சிவனை வழிபடுவோருக்கும் இதுவே இலக்கணமாகும்.

குரவைக் கூத்துக்கு மாதரியாள் ஏற்பாடு செய்தது தனது இல்லத்தில் தோன்றிய தீய சகுனங்களைக் கண்டு அஞ்சியதால் தானே? அந்த அச்சத்தினால் துன்பம் ஏதும் நேராதவாறு

ஆயர் குலத்தைக் காக்கத் திருமாலே வேண்டத்தானே? இந்த வேண்டுதலோடு குரவைக் கூத்தில் கலந்து கொண்ட ஆயர் குலப் பெண்களின் அபயக் குரல் இதோ :

"............யாம்
கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம்நம்
ஆத்தலைப் பட்ட துயர்தீர்க்க! வேத்தர்
மருள வைகன் வைகல் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னே கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை உடைத்த
தொடித்தோள் தென்னவன் கடிப்பிகு முரசே!"

## சொல்லாமல் சொல்லிய செய்தி

ஆய்ச்சியர் நிகழ்த்திய குரவைக் கூத்து முடிந்ததும், நாடகக் காப்பியமான சிலப்பதிகாரத்திலே காட்சி மாறு கின்றது. திரும்பவும் துன்பியல் காட்சியைக் காட்டுகின்றார் நாடகாசிரியர். அதற்குத் "துன்ப மாலை" என்றே பெயர் தருகின்றார்.

குரவைக் கூத்து முடிந்ததும், ஆயர் முதுமகளான மாதரி யாள், ஆய்ச்சியர்களைத் திரட்டி குரவைக் கூத்து நடத்தித் திருமாலை வழிபட்டதோடு ஆறுதலடையாமல், தானேயும் தனியாக வழிபடுவதற்கென்று வைகை யாற்றங்கரையிலுள்ள திருமால் கோயிலுக்குச் சென்றாள். இதனை,

"ஆயர் முதுமகள் ஆடிய சாயலாள்
பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும்
நீடுநீர் வையை நெடுமால் அடிஏத்தத்
தூவித் துறைபடியப் போயினாள்"

(சிலப்பு. 18: 2–5)

என்ற வரிகளால் அறிகிறோம். இந்த வரிகளைக் கொண்டு சிலப்பதிகாரத்தில் "துன்பமாலை" என்னும் காதை தொடங்கு கிறது.

மாதரி சென்றபின் ஆயர்சேரியைச் சார்ந்த இடைக்குலப் பெண்ணொருத்தி கோவலன் கொலையுண்டதறிந்து அதனைக் கூறுவதற்காகக் கண்ணகியை நெருங்கினாள்.

நெருங்கியவள், கண்ணகியின் எதிரே கற்சிலை போன்று நின்றுவிட்டாள். அவள் வாய் பேசவில்லை. ஆனால், அவள் முகம் பேசுகிறது. அதனைக்கண்டு, அவள் ஏதோ ஒரு தீய செய்தியை அறிந்து வந்திருக்கிறாள் என்பதனை உணர்ந்து கொள்கிறாள் கண்ணகி. கோவலன் கொலையுண்டுவிட்டான்! கண்ணகி வாழ்விழந்து விட்டாள் என்பதனை இடைக்குல மகளின் வாய் சொல்லவில்லை; ஆனால், அவள் முகம் சொல்லி விட்டது. அகத்தில் உள்ளதை முகத்தில் அறியலாந்தானே! இதனை,

> "அவள்தான்
> சொல்லாடாள்; சொல்லாடா நின்றாள்; அந் நங்கைக்குச்
> சொல்லாடும் சொல்லாடுந் தான்"

என்ற வரிகளில், புலமை நயம் தோன்றச் சொல்லு கின்றார் இளங்கோ. "அவள்தான் சொல்லாடாள், சொல் லாடா நின்றாள்" என்றது, அந்த ஆய மகள் பேசாமடந்தை யாகி விட்டதைக் குறிக்கும். "அந் நங்கைக்குச் சொல்லாடுந் தான்" என்பது கண்ணகிக்கு வாயால் சொல்லாமல் முகத்தாலேயே சொல்லிவிட்டாள் என்று பொருள் தரும். இடைக்குல மகளின் நிலைகண்டு கண்ணகி புழுப்போல் துடித்தாள். "எல்லா ஓ!"—"என்ன செய்தியை அறிந்து வந்தனையோ?" என்று கேட்டாள்.

## பொங்கி எழுந்தாள்!

கண்ணகி படும் துன்பத்தைச் சகிக்க முடியாதவளாகி தான் கேட்டுவந்த செய்தியைக் கூறுகின்றாள் ஆய மகள். இதோ, அந்தச் செய்தி ;

அரசுறை கோயில் அணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே
கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே
குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே

*இந்தச் செய்தியைக் கேட்ட கண்ணகியின் நிலையை,*

பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; பொழிகதிர்த்
திங்கள் முகிலொடுஞ் சேண்நிலங் கொண்டெனச்
செங்கண் சிவப்ப அழுதாள் தன்கேள்வனை
'எங்கணா அ' என்று இணைந்தேங்கி மாழ்குவாள்.

*என்ற வரிகளில் வருணிக்கிறார் இளங்கோ.*

## ஆறுதல் கூற ஆளில்லை

*ஆயர்சேரியிலுள்ள பெண்கள் கோவலன் மரணச் செய்தியைக் கேட்டுக் கதறியழும் கண்ணகியின் கண்ணீரைத் துடைத்தார்களில்லை; அவளுக்கு ஆறுதல் மொழி கூறவும் அவர்கள் முயலவில்லை. கண்ணகியை மாதரியிடம் அடைக்கலம் தந்த போது,*

'ஆயிழை தனக்குத் தாயும் நீயே ஆகித் தாங்கு'

*என்று அறிவுரை கூறினாள் கவுந்தி. மாதரியும் தாய்மை உணர்வோடுதான் கண்ணகியை அடைக்கலம் பெற்றாள். ஆனால், இப்போது அவள் ஆயர்சேரியில் இல்லை.*

*ஆயர்சேரியை அடைந்தபோது, "இவள் உன் நாத்தி" என்று தன் மகள் ஐயையை கண்ணகிக்கு அறிமுகம் செய்து வைத்தாள் மாதரி. அந்த நாத்தியும் கண்ணகியின் கண்ணீரைத் துடைக்க முன் வராதவளாகி, தொலைவில் நின்றாள்.*

குரவைக் கூத்தில் கலந்து கொள்ளவும் அதைப் பார்த்து மகிழவும் திரண்டிருந்த ஆய மகளிர், "இவள் கள்வனின் மனைவியாமே!" என்ற ஐய வினைவைக் கண்களில் தேக்கிய வண்ணம் கண்ணகியைப் பார்த்தனர்.

ஐயையும் ஆய மகளிரும் தன்னையணுகி ஆறுதல் வார்த்தை கூறுதது, கண்ணகியின் நெஞ்சைப் பிளப்பதாக இருந்தது. அவர்களும் தன் கணவனைக் கள்வன் என்றே கருதி விட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தாள்.

தன் கணவன் கள்வனல்லன் என்பதனை ஆயர் சேரியி லுள்ளவர்கள் அறிய வைப்பதற்கு, கண்ணகிக்குத் துணைபுரிய மதுரையில் ஆள் ஏது? அதனுல், கதிரவனைச் சாட்சிக்கு அழைக்கலானுள்.

"வாய்வதின் வந்த குரவையின் வந்தீண்டும்
ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டீமின்;
ஆய மடமகளிர்எல்லீருங் கேட்டைக்க;
பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி,
காய்கதிர்ச் செல்வனே! கள்வனே, என்கணவன்?"

"ஆயர் குலப் பெண்களே! நீங்கள் எல்லோரும் கேளுங்கள்! இந்த ஆயர் குலப் பெண்களறிய, காய்கதிர்ச் செல்வனே! நீயே சொல். என் கணவன் கள்வனு? இந்த உலகில் நீ அறியாதது ஒன்றுமில்லை. நீயே சொல், என் கணவன் கள்வனு?"

என்று கூறி, அடிவானத்திலிருந்து உச்சிவானத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் கதிரவனைச் சாட்சிக்கு அழைத்தாள். அந்த நேரத்திலே வானத்திலிருந்து,

"கள்வனே அல்லன்; கருங்கயற்கண் மாதராய்!
ஒள்ளெரி உண்ணும்இவ் வூர்"

''கரிய விழிகளையுடைய கண்ணகி தேவியே! நின் கணவன் கள்வனல்லன். அவனைக் கள்வன் என்ற இவ்வூரைத் தீ உண்ணும்'' என்று ஒரு குரல் ஒலித்தது.

இது கண்ணகியின் சார்பில் கதிரவன் தந்த சாட்சியம். தன் கணவன் கள்வனல்லன் என்பதனை ஆயர்குல மகளிர் அறியும்படிச் செய்துவிட்டதாக ஆறுதலடைந்தாள் கண்ணகி. அதற்கு மேல் ஆயர்சேரியில் தங்கியிருக்க விரும்பாதவளாகி, தன்னிடம் எஞ்சியிருந்த ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி, புறப்பட்டு விட்டாள்!

## மதுரை வீதிகளிலே கண்ணகி!

ஆயர் சேரியை விட்டுப் புறப்பட்டவள், கூந்தலை விரித்த கோலத்துடன் மதுரை நகருக்குள் புகுந்து வீதிகளில் நடக்கலானாள். வீடுகளுக்குள்ளிருந்த பெண்களெல்லாம் வெளியே வந்து கண்ணகியைக் கண்டு, வியப்பும் வேதனையும் அடைந்தனர். அவர்களைப் பார்த்துக் கண்ணகி பேசுகின்றாள்:

> ''முறையில் அரசன்தன் ஊரிருந்து வாழும்
> நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈதொன்று;''

''செங்கோல் முறை பிறழ்ந்த பாண்டியனுடைய ஊரிலிருந்து வாழ்கின்ற நிறையுடைய பத்தினிப் பெண்களே! இது ஒன்று கேளுங்கள்!''

மதுரைப் பெண்களைப்பார்த்து, 'பரிபூரண பத்தினிகளே! என்று கண்ணகி கூறுவது, அவர்களை நிந்தித்ததாகும். அவர்கள் தன் அருகே வந்து தனக்கு ஆறுதல் மொழி கூறாததால், அவர்கள் மீது அவளுக்குக் கோபம்!

> ''நீள்நில வேந்தர் கொற்றஞ் சிதையாது;
> பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு''

என்று மாதரியிடம் தன்னை அடைக்கலந் தந்தபோது கவுந்தியடிகள் கூறியதைக் கண்ணகி கேட்டாளல்லவா! அதனாலும், முறையற்றவனான பாண்டியன் ஆட்சியில் வாழ்வதற்காக மதுரையம்பதிப் பெண்களை நிந்திப்பவளானாள்! கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டதும், மன்னனை நிந்தித்தாள்: 'அறனெனும் மடவோய்' எனக் கூறி, அறக் கடவுளையும் நிந்தித்தாள். இப்போது மதுரைப் பதிவாழ் பத்தினியரையும் நிந்தித்துப் பேசுகின்றாள்.

பத்தினியரைப் பழித்துப் பேசிய கண்ணகி, அவர்களிடம் மன்னனுக்கு எதிராக வழக்குரைக்கிறாள்.

பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றேன் உறாதது உறுவனே? ஈதொன்று:
கள்வனோ அல்லன் கணவன்; என்காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே! ஈதொன்று:
மாதர்த் தகைய மடவார்கண் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே ஈதொன்று:
காதற் கணவனைக் கண்டால் அவன்வாயில்
தீத்று நல்லுரை கேட்பனே ஈதொன்று
தீதறு நல்லுரை கேளா தொழிவனேல்,
நோதக்க செய்தாளென்று என்னல் இது ஒன்று.

"இன்னொன்று சொல்லுகிறேன், கேளுங்கள்; கணவனைப் பிரிந்து வாழ்ந்த துன்பம் அகன்று, அவனைக் கைப்பிடித்து மதுரை புகுந்த நேரத்திலே, இதுவரை யான் அடையாத பெருந் துன்பத்தினை இங்கு அடைந்து விட்டேன்.

இன்னுங் கேளுங்கள்.

"என் கணவன் கள்வனல்லன், அவன் விற்கப் புகுந்தது எனது காற்சிலம்பே! அதனை விலை கொடுத்து வாங்கத் திறனற்றவர்கள் என் கணவனைக் கொன்றுவிட்டார்கள்,

"கணவன்மாரால் காதலிக்கப்பெறும் மதுரைப்பதி மாதர்களே! உங்கள் கண் முன்னரே, என் காதற் கணவனைக் காணத்தான் போகிறேன்; இது உறுதி. என் கணவனைக் கண்டால், அவன் வாய்திறந்து என்னுடன் பேசத்தான் போகிறான்; இதுவும் உறுதி. அப்படிப் பேசும்போது தீதற்ற நல்ல வார்த்தைகளை நான் கேட்கத்தான் போகின்றேன்; இதுவும் உறுதி. அப்படி, தீதற்ற நல்ல வார்த்தைகளைக் கோளாமற் போவேனாகில், 'இவன் கள்வனின் மனைவியே!' என என்னை இகழுங்கள்."

## மதுரை மக்கள் துயரம்

மதுரை வீதி வழியே அழுது செல்லும் கண்ணகியைக் கண்டும், அவள் கூறிய சொற்களைக் கேட்டும் வேதனை தாங்க மாட்டாது மதுரை மூதூர் மாதர்கள் மயங்கினர். அவர்கள் கண்ணகிபற்றி ஆருந்துயர்கொண்டு அரற்றியதை இளங்கோ வின் வாக்காலேயே அறிவோம்!

கலையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது! இதுவென்கொல்?
மன்னவர் மன்னன் மதிக்குடை வாள்வேந்தன்
தென்னவன் கொற்றம் சிதைந்தது! இதுவென்கொல்?
மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை
தண்குடை வெம்மை விளைத்தது! இதுவென்கொல்?
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி, நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்தது! இதுவென்கொல்?
ஐயரி உண்கண் அழுதேங்கி அரற்றுவாள்
தெய்வம் உற்றாள்போலும் தகையள்! இதுவென்கொல்?

கண்ணகியின் அரச நிந்தனைக்கு மதுரை மக்களும் இரையாகி விட்டனர். அவளுடைய பேச்சுக்களைக் கேட்ட அவர்கள் அவன்பால் அனுதாபம் உடையவர்களாகி,

"வளையாத செங்கோல் வளைந்தது" என்றும், 'தென்னவன் கொற்றம் சிதைந்தது" என்றும் கூறலாயினர்.

கண்ணகியின் தோற்றம் தெய்வ மேறியவள்போல மதுரை மக்களுக்குத் தோன்றுகின்றது. அதனால், "வம்பப் பெரும் தெய்வம் வந்தது" என்று கூறி, தங்கள் அச்சத்தை வெளிப்படுத்தினர். கண்ணகியின் அரச நிந்தனைப் பிரசாரத்தில் மயங்கிய மதுரை மக்களின் நிலையைக் கூறுமிடத்து,

"வன்பழி தூற்றும் குடியதே மாமதுரை"

என்று கவிஞர் கூறுகின்றார். அரசனை நிந்தித்துப் பேசுவதிலே கண்ணகியுடன் மதுரை மக்களும் சேர்ந்து கொண்டு விட்டனராம்!

## கொலைக்களத்தில் கண்ணகி

இந்நிலையில், ஊர் மக்களில் சிலர் கண்ணகியை அணுகி, அவளைக் கொலைக்களத்திற்கு அழைத்துப் போய், வெட்டுண்டு கிடக்கும் அவள் கணவனுடைய உடலை அவளுக்குக் காட்டினர். அவள் தன்னைக் கண்டும் தான் அவளைக் காண முடியாத நிலையில் கோவலன் பிணமாகக் கிடந்தான். இதனை,

"கம்பலை மாக்கள் கணவனைத் தாங்காட்டச்
செம்பொன் கொடியனையாள் கண்டாளை; தான்காணான்"

என்று மிகுந்த அனுதாபத்துடன் கூறுகிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

கோவலன் வெட்டுண்டு கிடக்கும் கொலைக்களத்தைக் கண்ணகி அடைந்ததைக் கண்ட கதிரவன், உலகம் முழுவதையும் இருளிலே ஆழ்த்திட்டு, மேற்றிசையிலுள்ள மலைக்குப் பின்னே மறைந்து கொண்டானாம்! இதனை,

"மல்லன்மா ஞாலம் இருளூட்டி மாமலைமேல்
செவ்வென் கதிர்சுருங்கி செங்கதிரோன் சென்றொளிப்ப
ஒல்லென் ஒலி படைத்தது ஊர்"

என்று வருணிக்கிறார் இளங்கோ.

காலையிலே, தன் கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு கொலையுண்ட செய்தியைக் கேட்டதுமே, அடிவானத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த கதிரவனைப் பார்த்து,

"காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ, என் கணவன்?"

என்று கண்ணகி ஆவேசத்துடன் கேட்டாளாதலால், இப்போது கொலைக்களத்திலே கணவன் வெட்டுண்டு கிடக்கும் கொடுமையைக் கண்டதும், "காய்கதிர்ச் செல்வனே! என் கணவன் கொலையானதை நீயும் கண்டனையோ?" என்று அதட்டிக் கேட்பாளோ எனக் கதிரவன் அஞ்சிவிட்டான். அதனாற்றான், கண்ணகியாள் கொலைக்களம் புகுந்ததும், அவள் பார்வையில் படாமல் தப்பித்துவிட, மேற்குத் தொடர் மலைக்குப் பின்னால் போய் மறைந்து விட்டான் என்கிறார் இளங்கோ.

பகற்பொழுது சாயும் மாலை நேரத்தில் கண்ணகி கொலைக் களத்தை அடைந்தாள் என்பதனை மிகுந்த கற்பனைத் திறனோடு கவிஞர் கூறுகின்றார்.

## அவள் கண்டும், அவன் காணான்!

கொலைக்களத்தையடைந்த கண்ணகி, தன் கணவன் உடல் வேறு தலை வேறாக வெட்டுண்டு கிடப்பது கண்டு வாடியழத் தொடங்கினாள். அவளது ஒப்பாரிக் குரலைக் கேட்க மதுரை நகர் முழுவதுமே அமைதியாகிவிட்டது! "ஒல்லென்

ஒலிபடைத்தது ஊர்" என்பதற்கு, "அமைதியான பொருளற்ற ஒரு ஒலிக் குறிப்பை மதுரை வெளிப்படுத்தியது" என்று பொருள்.

கண்ணகி கோவலனைக் கண்டாள் என்பதைக் கூறுமிடத்துக் கவிஞர்,

"வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பால் காலைவாய்;
புண்தாழ் குருதி புறம்சோர மாலைவாய்,
கண்டாள் அவன்தன்னைக் காணாக் கடுந்துயரம்!"

காலைப் பொழுதிலே, தன் கணவனை ஆரத் தழுவி, அவன் தலையிற் சூடியிருந்த மாலையை மகிழ்ச்சியுடன் வாங்கி தனது கரிய கூந்தலிலே சூட்டி, கண்ணகி மகிழ்ந்தாள். மாலை நேரத்திலோ, கொலைஞரின் கொடுவாளால் வெட்டுண்ட பகுதியிலிருந்து இரத்தம் குபுகுபுவெனப் பெருகி, அவனைச் சுற்றிலும் படிந்து கிடந்ததைக் கண்டாள். தான் அவனைக் கண்டும், அவன் தன்னைக் காணாத கொடுந்துயரைத் தாங்க முடியாதவளாகி வாய்விட்டுப் புலம்புகின்றாள்.

கொலைக்களத்தில் கோவலனுடைய வெட்டுண்ட உடலைக் கண்ட கண்ணகியின் நிலையை இளங்கோவின் வாக்காலேயே அறிவோம்!

"என்னுறு துயர்கண்டும் இடருறும் இவள்' என்னீர்!
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ?
மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதேற்கு
'என்னுறு வினைகாண் இது' என உரையாரோ?

"யாருமில் மருள்மாலை இடருறும் தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ?
பார்மிகு பழிதூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
'ஈர்வதோர் வினைகாண் ஆ! இது' என உரையாரோ?

"கண்பொழி புனல்சோரும் கடுவினை உடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ?
மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
'உண்பதோர் கினைகாண்; ஆ!இது' என உரையாரோ?"

## கோவலன் உயிர் பெற்றான்?

கணவனை தான் கண்டும் அவன் தன்னைக் காணவில்லையே என்று கண்ணகி ஏங்கினாள். "ஏன் அழுகின்றாய்?" என்று கேட்டு, தன் கண்ணீரைத் துடைத்து, தனக்கு ஆறுதல் கூற வில்லையே என்று அங்கலாய்த்தாள். தன் கண்ணெதிரே கணவனின் பொன்னான தேகம் புண்பட்டு, அந்தப் புண்ணி லிருந்து இரத்தம் ஆறாய்ப் பெருகுவதனை அவளால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. திருமகள் உறையும் தன் கணவனுடைய மார்பு தரை மூழ்கிக் கிடப்பது கண்டு விம்மினாள். தன் கணவனிடம் தனக்காக யாரேனும் சென்று, "உன் கண்ணகி அழுது துடிக்கிறாள்!" என்று சொல்ல மாட்டார்களா?—என ஏங்குகிறாள்.

இப்படி அழுபவள், கோவலனது பிணத்தைத் தழுவிய நிலையில் செயலற்று விட்டாள். ஆம்; கோவலனும் கற்புத் தெய்வமாம் கண்ணகியும் ஈருடலும் ஒருயிருமாயினர்.

இந்நிலையிலே, கோவலன் உயிர் பெற்று எழுந்தான். எழுந்தவன், கண்ணகியைப் பார்த்து, "ஒளி பொருந்திய முழு நிலவு போன்ற உன் முகம் ஒளியிழந்து கன்றி விட்டதே!" என்று வேதனையுடன் கூறினான். தன் கையால் அவளுடைய கண்ணீரைத் துடைத்தான். பின்னர், "இரு" என்று சொல்லி மறைந்து விட்டான்.

கோவலன் உயிர் பெற்றெழுந்ததும், கண்ணகியின் கண்ணீரைத் துடைத்ததும், 'நிறைமதி வாள்முகம் கன்றியதே' என்று கூறியதும், 'இரு' என்று சொல்லி மறைந்ததும்,

கண்ணகி தன் கணவன் உடலைத் தழுவியிருந்த நிலையிலே அவளுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வுகளேயாகும். மூர்ச்சை யுற்றிருந்த நேரத்தில் அவள் கண்ட கனவுக் காட்சிகள் என்றும் சொல்லலாம்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த கண்ணகி, உள்ளுணர்வு காரணமாகத் தன் அகக் கண்கள் கண்ட காட்சிகளை நினைவு கூர்ந்தாள். கண்ணெதிரே கணவன் தலை வேறு உடல் வேறாக வெட்டுண்டு கிடப்பதையும் கண்டாள். "உயிர் பெற்று எழுந்த நிலையில் நான் என் கணவனைக் கண்டது மாயமோ? வேறு ஏதேனும் ஒரு தெய்வம் என் கணவன் வடிவில் வந்து என்னை மருட்டியதோ? ஐயோ! என் கணவனை எங்கு போய் தேடுவேன்?" என்று திரும்பவும் புலம்பினாள். இதோ, கொலைக்களத்தில் கண்ணகி—கோவலன் சந்திப்பு பற்றி இளங்கோவே கூறுகிறார், கேட்போம்:

"என்றிவை சொல்லி அழுவாள் கணவன்தன்
பொன்துஞ்சும் மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
நின்றான் எழுந்து; 'நிறைமதி வாள்முகம்
கன்றியது!' என்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
அழுதேங்கி நிலத்தின்வீழ்ந்து ஆயிழையாள் தன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்.

'எழுதெழில் மலர்உண்கண்! இருந்தைக்க' எனப்போனான்
மாயங்கொல்? மற்றென்கொல்? மருட்டியதோர் தெய்வம்
கொல்?
போயெங்கு நாடுகேன்? பொருளுரையோ இதுவன்று;
காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் தனைக்கண்டு இத்திறம் கேட்பல் யான்
என்றாள்"

## அரச நிந்தனைப் பிரசாரம்!

இதற்கு மேல், புகார் நகரில் கண்ணகி கண்ட கனவு அவளுடைய நினைவிற்கு வருகின்றது. தான் கண்ட கனவைத் தன் தோழியான தேவந்தியிடம் கூறியபோது,

"கோவலற்கு உற்றது ஓர்தீங்கு என்று அதுகேட்டு
காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்;"

என்றுள் அல்லவா? அந்தக் கனவின்படி கோவலனுக்குத் தீங்கு நேர்ந்துவிட்டது. இனி, காவலன் முன்னர் கட்டுரைக்கக் கொலைக்களத்திலிருந்து புறப்பட்டாள். புறப்பட்டவள், அரசனுடைய அரண்மனையை நோக்கி நடந்தாள்.

கொலைக்களத்தை விட்டுப் புறப்பட்ட பின்னும் அரண் மனைக்குச் செல்லும் வழி நெடுக மதுரையம்பதியிலுள்ள பெண்களையும், சான்றோர்களையும், தெய்வத்தையும் நிந்தித்துப் பிரசாரம் செய்த வண்ணம் செல்கிருள். ஆம்! தான் செல்லும் வழியில் இருபுறமும் கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்க்கும் மக்களைப் பார்த்துக் கண்ணகி பேசுகின்றுள்:

பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்.
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்றகுழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்.
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்!

"தன் கணவன் கொலையுண்டால் அதனைத் தாங்கிக் கொள்ளும் பெண்கள் இந்த மதுரையம்பதியில் உண்டா?

தாங்கள் ஈன்ற குழவியை எடுத்து வளர்த்து மகிழாத சான்றோரும் உண்டா? கொலை வாளால் என் கணவனைக் கொல்லுவித்த பாண்டியன் நகரிலே தெய்வந்தான் உண்டா?''

'ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோரும் உண்டுகொல்?' என்று கண்ணகி கேட்பதால், தனக்கு ஒரு குழந்தை பிறக்காத நிலையில் தான் கணவனை இழந்துவிட்ட கொடுமையை மதுரை மக்களிடம் சொல்லாமல் சொல்லுகின்றாள் என்றே கொள்ளவேண்டும்.

கொடுங்கோலன் நகரான மதுரையிலே கற்புடைப் பெண்கள் இல்லை; அறிவுடைச் சான்றோர் இல்லை; அருளுடைத் தெய்வமும் இல்லை என்ற முடிவுக்கே வந்தாள் கண்ணகி.

மதுரை வீதிகளின் வழியே அழுது சென்று மக்களிடம் வழக்குரைத்தும், அவர்களில் ஒருவரும் தனக்கு ஆறுதல் கூறவோ, மன்னனிடம் தன்னைக் கூட்டிச் சென்று குற்ற மற்ற கோவலனைக் கொன்றதற்கு அவனிடம் காரணம் கேட்கவோ முன் வராததால், கோவலனுக்கு மரண தண்டனை கொடுத்து மன்னன் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து, அவனிடமே மேல்வழக்கு(அப்பீல்) தொடுக்க விரும்பி, கண்ணகி, அரண்மனை வாயிலை அடைந்தாள்.

கொலைக்களத்தை விட்டகன்ற கண்ணகி பாண்டியனுடைய அரண்மனையை நோக்கி நடந்து கொண்டிருந்த நேரத்திலே, பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியும் அரண்மனையின் அந்தப்புரத்திலிருந்து வெளிப்பட்டு அரசவையை நோக்கி நடக்கலானாள். ஒருபுறம், மறக் கற்பினளான கண்ணகியும், மற்றொரு புறம் அறக் கற்பினளான கோப்பெருந்தேவியும் அரசனைக் காணச் சென்றனர். முன்னவள், கணவனைப் பறிகொடுத்தவள்; பின்னவள், இனி பறிகொடுக்க இருப்பவள்.

தோழியர்கள், 'பாண்டியன் பெருந்தேவி வாழ்க!' என்று வாழ்த்தொலி எழுப்பியவண்ணம் தன்னைச் சூழ்ந்துவர, அரசி அரசவையை யடைந்தாள். அடைந்தவள், அரியாசனத்தில் அரசனுடைய அருகில் அமர்ந்து, முதல் நாளிரவில் தான் கண்ட கனவினைக் கூறினாள்.

கோவேந்தனின் வெண்கொற்றக் குடையொடு, அவன் கையில் தாங்கிய செங்கோலும் தரையில் வீழவும், அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணி நடுங்கும் குரல்போல இடையறாது ஒலிக்கவும், எட்டுத் திசைகளும் அதிரவும், கதிரவனை இருள் மறைத்துக் கொள்ளவும், இரவில் இந்திரவில் வானத்தில் தோன்றவும், பகற் பொழுதிலே நட்சத்திரங்கள் வானத்திலிருந்து கீழே விழவும் தான் கனாக் கண்டதாகக் கோப்பெருந்தேவி தன் அரசனிடம் கூறினாள். அது வருமாறு:

''செங்கோலும் வெண்குடையும்
செறிநிலத்து மறித்து வீழ்தரும்
நங்கோன்தன் கொற்ற வாயில்
மணிநடுங்க நடுங்கும் உள்ளம்
இரவு வில்லிடும் பகல் மீன்விழும்
இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பம் உண்டு.''

இந்நிலையில், அரண்மனை வாயிலில் கண்ணகி தோன்றினாள்.

## வாயிற் காவலன் நடுங்கினான்

பாண்டி வேந்தனின் அரண்மனை வாயிலை அடைந்த கண்ணகி, அங்கு ஆயுதபாணியாக நிற்கும் வாயிற் காவலனைக் கண்டாள். அவன் மூலம் தன் வருகையை மன்னனுக்கு அறிவிக்க நினைத்தாள். மன்னனது அழைப்பு தனக்குக்

கிடைக்கும்வரை அரண்மனை வாயிலிலே காத்திருக்கவும் விரும்பினாள். ஆவேசம் கொண்ட நிலையிலும் அவளது அறிவு நன்றாக வேலை செய்தது.

வாயிற் காவலனைப் பார்த்து, "வாயிலோயே, வாயிலோயே!" என்று அழைத்தவள், அவன் காப்பது செங்கோலனின் வாயிலை அல்ல; கொடுங்கோலனின் வாயிலைத் தான் என்பதை அவனுக்கு உணர்த்த விரும்பி, "அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!" என்று கூறினாள்.

"கொடுங்கோலாட்சிக்குச் சேவகம் செய்வதும் குற்றம்" என்றார் காந்தியடிகள். அந்த ஒத்துழையாமைத் தத்துவத்தைத்தான் கண்ணகியின் மூலம் இளங்கோவடிகளும் உணர்த்தினார், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு!

தொடர்ந்து, வாயிலோனைப் பார்த்துக் கண்ணகி பேசுகின்றாள் :

"இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாள்என்று
அறிவிப்பாயே, அறிவிப்பாயே!"

கண்ணகியைப் பார்த்த காவலன் நடுநடுங்கினான். அவளுடைய தோற்றம் அவனைப் பயமுறுத்தி விட்டது. அதுவரை குடிமக்களிலே எவரும் கண்ணகியைப் போன்ற பயங்கரத் தோற்றத்துடன மன்னனைக் காண அனுமதி கோரி அவன்முன் நின்றதில்லையல்லவா? கண்ணகியிடம் அவன் ஒன்றுமே பேசவில்லை. பேசுவதற்கு அவனது நா எழவில்லை. அவள் எதிரே அவன் ஊமையாகி விட்டான். கண்ணகி கூறியதைக் கேட்டதும், அரண்மனைக்குள்ளே ஓடி, அவளுடைய வரவை மன்னனுக்கு உரைக்கலானான். அவன் கண்ணகியின் வரவை உரைத்த விதம் புதுமையானது.

## மன்னனை வாழ்த்தினான்!

அரசவையை அடைந்த வாயிற் காவலன், முதலில், "வாழி!" என்று கூறி, அரசவை முழுவதையும் வாழ்த்தினான்.

அதற்குமேல், "எம் கொற்கை வேந்தே, வாழி!" என்று கூறி, கொற்கை என்னும் துறைமுக நகரின் வேந்தனை வாழ்த்தினான்.

மேலும், "தென்னம் பொருப்பின் தலைவ வாழி!" என்றான் பாண்டியனுக்குள்ள சிறப்புக்களிலே ஒன்று தெய்விகமான பொதிகை மலையை அவன் பெற்றிருப்பது அல்லவா!

அதற்குமேல் தென்னாடு முழுவதையும் அவன் ஆளுகின்ற பெருமையை நினைத்து, "தென்னவ வாழி!" என்று வாழ்த்தினான்.

நெடுஞ்செழியன் என்னும் பெயரே பெருமையுடையதாதலால், "செழிய வாழி!" என்றும் கூறினான்.

அதற்குமேலும் தன் மன்னனுடைய செங்கோன்மையை நினைத்தவனாகி, "பழியொடு படராப் பஞ்சவ வாழி!" என்று வாழ்த்தினான்.

இப்படி, பாண்டியனுக்குள்ள சிறப்புக்களிலே ஒவ்வொன்றையும் சொல்லிச் சொல்லி வாயிற் காவலன் வாழ்த்துக்களைப் பெருக்கக் காரணம் உண்டு. அவன் இனிமேல் நெடுஞ்செழியனை வாழ்த்தப்போவது இல்லையல்லவா? அவன் வாழ்த்துவது இதுதானே கடைசிமுறை!

"பழியொடு படராப் பஞ்சவ வாழி!' என்று கூறினானென்றாலும், 'பழிகூற ஒருத்தி வந்திருக்கிறாள்' என்பதையும் சொல்லத் தொடங்கினான்.

மன்னனைக் காண வந்திருப்பவளின் தோற்றத்தை வருணிக்க விரும்புகின்றது வாயிற் காவலனின் உள்ளம். அவள் அரசவைக்கு வருவதற்கான தோற்றத்தில் இல்லை யல்லவா? அதைச் சொல்லிவிட்டால், அப்புறம் மன்னன் விரும்பினால் அழைக்கட்டும் என்று கருதினான் காவலன் கண்ணகி எப்படியெல்லாம் இருக்கிறாள் என்பதனை வருணிக்க நினைத்த வாயிலோன், முதலில், அவள் எப்படியெல்லாம் இல்லை என்பதனை வருணித்துக் காட்டுகின்றான்.

## காவலன் கண்ட கண்ணகி

மதுரை மன்னனின் வாயிற் காவலன் பல தெய்வங்களை அறிந்தவன்—குறிப்பாக, பராசக்தியின் பல்வேறு வடிவங்களைச் சில வடிவில் பார்த்தவன். அந்த வடிவங்களிடம் பக்தி கொண்டவனுங்கூட. கண்ணகியைப் பார்த்த அளவிலே, ஒரு கணம் அவள் கொற்றவையாக அவன் கண்களுக்குக் காணப் பட்டாள். மறுகணத்திலே, பிடாரியாகத் தோற்றமளித் தாள்; அடுத்த கணத்திலே காளியைப் போலக் காட்சியளித் தாள்; அந்தக் காட்சியும் மறைந்து, பத்ரகாளி போன்று நர்த்தனமாடினாள்; அதுவும் மறைந்து துர்க்கையாகத் தோற்றமளித்தாள் இப்படி, ஐந்து பயங்கரத் தெய்வங்களின் மொத்த வடிவமாகக் கண்ணகி தோற்றமளித்தாள் காவல னுக்கு! அதை அவனே சொல்லக் கேட்போம்:

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை; இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு; சூர்உடைக்
கானகம் உகந்த காளி; தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்;

பாண்டியனுடைய வாயிற்காவலன் இயற்கையிலேயே பாமரன். அதனால் நினைத்ததையெல்லாம் உளறிக் கொட்டு கிறான்.

"கொற்றவை போலிருக்கிறாள்" என்று கூறி, ஆனால், "அவள் அல்லள்" என்று மறுக்கிறான்.

"ஏழு கன்னியரில் இளையவளான பிடாரியைப் போலிருக் கிறாள்" என்று கூறி, "அவளும் அல்லள்" என்று மறுக்கிறான்.

"இறைவனுடன் போட்டியிட்டு நடனமாடிய பத்ர காளியைப் போன்றிருக்கிறாள்" என்று சொல்லிவிட்டு, பின்னர், "அவளும் அல்லள்" என்கிறான்.

"பாலை நிலத்தை விரும்பிய—பார்ப்போரை அஞ்சச் செய்கின்ற—காளியோ?" என்றால், "அவளும் அல்லள்" என் கிறான்.

"தாருகா சூரனுடைய மார்பினைப் பிளந்த துர்க் கையோ?" என்றால், "அவளும் அல்லள்" என்று கூறி முடிக் கிறான்.

தனக்குத் தெரிந்த பயங்கரத் தோற்றமுடைய பெண் தெய்வங்களின் பெயர்களை யெல்லாம் ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லி, அந்தத் தெய்வங்கள் அல்ல வந்திருப் பவள் என்று உறுதியாகக் கூறிவிட்டான். அதற்குமேல், அரண்மனை வாயிலில் வந்திருப்பவளின் உண்மையான தோற்றத்தை வருணிக்கிறான் வாயிற் காவலன்.

இதுவரை அவன் வருணித்தது கண்ணகி பற்றி அவன் அகக் கண்கள் கண்ட காட்சியை! இப்போது, அவன் புறக் கண்கள் கண்ட காட்சியை வருணிக்கிறான்.

"செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொற்றொடிச் சிலம்பொன்று ஏந்திய கையள்;

**கணவனை இழந்தாள் கடையகத் தாளே!**
**கணவனை இழந்தாள் கடையகத் தாளே!**

'நெஞ்சிலே பழி வாங்கும் நினைவு கொண்டவள் போலவும், ஆறுப் பெருஞ்சினத்தை வெளிப்படுத்தும் நிலையிலும் தோற்றமளிக்கிறாள். அழகிய வேலைப்பாடமைந்த பொன்னாலான ஒற்றைச் சிலம்பினைத் தன் கையிலே தாங்கியிருக்கிறாள், கணவனை இழந்தவளாம்! நமது அரண்மனையின் தலைவாயிலின்கண்ணே வந்து நிற்கின்றாள்''.

## 'அழைத்து வா!'

இது, வாயிற் காவலன் மன்னன் செழியனுக்குத் தந்த தகவல். "கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று அறிவிப்பாயே, அறிவிப்பாயே!" என்று, கண்ணகி இரண்டு முறை கூறினாள் அல்லவா? அதனால் அப்பாவியான வாயிற் காவலன், கண்ணகி தந்த செய்தியை இரண்டுமுறை அறிவிக்க வேண்டுமென்று அவள் ஆணையிட்டதாகக் கருதி, "கணவனை இழந்தாள் கடையகத்தாளே, கணவனை இழந்தாள் கடையகத்தாளே!" என்று இரண்டுமுறை கூறுகிறான்.

வாயிற் காவலனின் நீண்ட உரையை அமைதியாகக் கேட்ட மன்னன், "அவள் இங்கே வரட்டும்!" என்று கூறினான். வாயிற் காவலன் மிகவும் பயந்து போயிருக்கிறான் என்பதனை மன்னன் உணர்ந்து கொண்டானதலால், வந்திருப்பவளுக்கு மரியாதை காட்டி அழைத்துவரத் தவறிவிடுவானோ என்று ஐயுற்று, முதலில் "அவள் வரட்டும்" என்று கூறியவன், பின்னர், "தருக!"—அதாவது, "மரியாதை காட்டி அழைத்து வா!" என்றும் கூறுகிறான்.

வாயிற்காவலன் கண்ணகியை அணுகினான். மன்னனுடைய அழைப்பை வாயால் கூறாமல் மௌனியாகி, இரு கைகளையும் பணிவோடு நீட்டி அரண்மனைக்குள்ளே செல்லும்

வழியைக் காட்டி, கண்ணகியை அழைத்தான். இங்கு, வாயில் காவலன் வாய் இல்லாத காவலனாகிவிட்டான்.

கண்ணகி அரண்மனைக்குள் சென்று மதுரை மன்னனின் எதிரே நின்றாள். அரசவைக்கு வருவதற்கு மரபு உண்டு, அரசனைக் கண்டதும் முதலில் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துவது குடிமக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க மாகும். ஆனால், கண்ணகி அப்படிச் செய்யவில்லை. அந்த வீரத் தமிழ் மகளின் தலை கொடுங்கோலனை வணங்காது தானே!

## அரசவையில் பத்தினி!

அரசவைக்குள் புகுந்தவள், அரசனுக்கும் தனக்கும் இடைவெளி இருக்கும் வகையிலே தொலைவில் நின்றிருக்க வேண்டும். கணணகி அப்படி நிற்கவில்லையாம்! மன்னனுக்கு மரியாதை காட்ட மறுப்பவள் போல அவனுடைய அரி யாசனத்தின் அருகிலேயே போய் நின்றாளாம்! வாயிலோன் வந்து கண்ணகியை அழைத்ததையும், அவள் மன்னனுக்கு எதிரே போய் நின்றதையும்,

> "வாயில் வந்து கோயில் காட்டக்
> கோயில் மன்னனைக் குறுகினள்..."

என்ற வரிகளில் புலமை நயம் தோன்றக் கூறுகின்றார் கவிஞர். "கோயில் மன்னனைக் குறுகினள்"! என்பதால், மன்னனுக்குச் சற்று தொலைவில் நிற்கும் மரியாதையை கண்ணகி கடைப் பிடிக்கவில்லை என்பது புலனாகின்றது.

கண்ணகியின் தோற்றம் மதுரை மன்னனின் மனத்தை உருக்கி விட்டது. விரித்த கூந்தல்: மதுரை வீதிகளிலே புரண் டழுத காரணத்தால் மேனி முழுவதும் புழுதி; விழிகளி லிருந்து இடையறாது ஒழுகும் கண்ணீர்; சினத்தால் துடிக்கும்

உதடுகள்: வேதனையால் விம்முதலுற்ற முகம்! இந்தக் கோலத்தோடு கண்ணகியைக் கண்டான் மதுரை மன்னன்.

**'யாரம்மா, நீ?'**

அவலத் தோற்றத்தோடு கண்ணகி அரசவைக்கு வந்ததே அவையை அவமதித்த குற்றமாகும். "கன்டெம்ப்ட் ஆப் கோர்ட்" என்று இன்று நீதி மன்றத்தில் சொல்கிறார்களே, அதுபோல. அந்நாளைய அரசவை நீதி மன்றமும் ஆகுமல்லவா! ஆனால், அரசன் அப்படிச் சொல்லவில்லை. அவள் வடித்த கண்ணீர் கண்டு அவன் நடுங்கினான். அரசவையின் அந்தஸ்தை அவன் பெரிதாகக் கருதவில்லை. "ஏழைகள் அழுத கண்ணீர் கூரிய வாள் ஒக்கும்" என்ற பழமொழியைப் பாண்டியன் அறிவானாதலால், கண்ணகியின் கையிலுள்ள ஒற்றைச் சிலம்புக்குக் காரணம் கேட்காமல், அவளுடைய கண்ணீருக்குக் காரணம் கேட்க நினைத்து,

> "நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்!
> யாரை யோநீ? மடக்கொடி யோய்?..."

என்று கேட்டான். மன்னனுடைய வினா கண்ணகியின் சினத்தை அதிகரிக்கச் செய்துவிட்டது.

அவள் நினைத்தாள், தன் கையிலுள்ள ஒற்றைச் சிலம்பைக் கண்டதுமே அதன் இணைச் சிலம்பு கோவலனிடமிருந்து தான் கவர்ந்தது என்ற உண்மை மன்னனுக்குப் புலனாகியிருக்குமென்று. "கணவனை இழந்தாள் கடையகத்தாள்" என்று வாயிற் காவலன் மூலம் தான் அனுப்பிய செய்தியை மன்னன் கேட்டு விட்டானாதலால், தன்னால் கொல்லப்பட்ட கோவலனின் மனைவிதான் தன் எதிரே வந்து நிற்கிறாள் என்பதை அவன் உணர்ந்திருப்பான் என்று நம்பினாள். இதற்கு மாறாக,

"யாரையோ, நீ மடக்கொடி யோய்!"

என்று மன்னன் கேட்டதால், "தேரா மன்ன!"—உண்மையை அறிந்து கொள்ள முடியாத, மன்னனே—என்று அழைத்து, "சொல்லுகிறேன், கேள்" என்கிருள் கண்ணகி.

"செங்கோல் பிறழாத மன்னர்களால் வழிவழி ஆளப் பட்டு வரும் சோழ நாட்டின் குடிமகள்" என்று பெருமிதத் துடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்ருள்.

புருவின் உயிரைக் காக்கத் தன் உடம்பிலிருந்து தசையை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி, கன்றையிழந்த பசு வுக்கு நீதி வழங்கும் பொருட்டு, தன் ஒரே மைந்தன் மீது தேரேற்றிய மனுநீதிச் சோழன்—ஆகிய சோழ மன்னர்களின் பெருமையைப் பேசுகின்ருள். ஒரு சொற்பொழிவே நிகழ்த்து கின்ருள். அதைக் கேட்போம்.

" எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட, தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்;
பெரும்பெயர்ப் புகார்என் பதியே:..."

அந்நாளைய அரசியல் முறைப்படி பாண்டி மண்டலம் தனி நாடு. அதற்கு அயல்நாடு சோழ மண்டலம். அதனுல், பாண்டி நாட்டிற்கு அயலாளாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிருள் கண்ணகி. பண்டை நாளில், மக்கள், தங்கள் தாய் நாடாகக் கருதினர். இந்த உண்மையைக் கண்ணகி மன்னனுடைய ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பையே தங்கள் மூலம் உணர்த்துகின்ருர் இளங்கோ. கண்ணகி, தனக்குள்ள அரச பக்தியை இங்கு வெளிப்படுத்துகின்ருள்.

'நீதி மன்னன் குடிமகள்!'

*இதற்கு மேல் தன்னுடைய கணவன் யார் என்பதையும், அவனுடைய குடிப் பெருமையையும் கூறுகின்றாள்.*

**.........''அவ்வூர்**
**ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி**
**மாசாத்து வாணிகன் மகனை ஆகி,**
**வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்பச்**
**சூழ்கழல் மன்னா! நின்நகர்ப் புகுந்து ஈங்கு**
**என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பாற்**
**கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;**
**கண்ணகி என்பது என் பெயரே!''...**

*''ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி மாசாத்து வாணிகன் மகன்'' என்று தன் கணவனைக் கண்ணகி அறிமுகப் படுத்துவதால், மாசாத்துவானை மதுரை மன்னனும் அறிந்தவன் என்பது புலனாகின்றது. மன்னன் அறிந்த ஒருவனைக் கொண்டுதானே, அவன் அறியாத கோவலனை அறிமுகப் படுத்த முடியும்? அடைக்கலக் காதையிலே கவுந்தியடிகள்.*

**''மாதரி! கேள்; மடந்தைதன் கணவன்**
**தாதையைக் கேட்கின் தன்குல வாணர்**
**அரும்பொருள் பெறுநரின் விருந்து எதிர் கொண்டு**
**கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்''**

*என்று மாதரியிடம் கூறியதாலும், சோழநாட்டில் அரச குலத்துக்கு அடுத்த நிலையில் புகழ் பெற்று விளங்கிய மாசாத்துவானை மதுரை மன்னனேயன்றி, மக்களும் அறிந்தவர்கள் என்பது உறுதிப்படுகிறது.*

குற்றமல்ல; கொற்றம்!

கண்ணகி 'தேரா மன்னா!' என்று தன்னைப் பழித்துரைத்ததைக் கேட்டும் மன்னன் சினங்கொள்ளவில்லை. அமைதி காத்து அவளுடைய வழக்கைக் கேட்டறிந்தான். அதற்கு மேல் அவள் தொடுத்த வழக்குபற்றித் தனது நிலையைத் தெளிவுபடுத்துபவனாகி,

"பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோலன்று;
வெள்வேற் கொற்றம்காண்"

என்று கூறினான். கண்ணகி, எதைப் பாண்டியன் செய்த குற்றமாகக் கூறினாளோ, அதுவே தனது செங்கோலுக்குரிய கொற்றம் என்கிறான் பாண்டியன்.

சிலப்பதிகார காலத்தில் களவானது கொலையினும் கொடிய குற்றமாகக் கருதப்பட்டது. வள்ளுவரும்,

"கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல்
பைங்கூழ் களைகட் டதனோடு நேர்"

என்று கூறினாரல்லவா!

"கொலையிற்கொடியார்" என்று வள்ளுவர்குறிப்பிடுவது கள்வர்களையேயாகும். இக் குறட்பாவை நினைவில் வைத்தே கள்வனான கோவலனைத் தான் கொல்லுவித்தது குற்றமல்ல; கொற்றம் என்கிறான் பாண்டியன். மன்னனது விளக்கத்தைக் கேட்டுக் கண்ணகியின் சீற்றம் அதிகரித்துவிட்டது. "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!" என்று அழைத்து, "என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே!" என்கிறாள். மன்னனும் சற்றும் தயங்காமல்,

"தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே!"

என்று கூறினன். அத்துடன் நிற்காமல், கோவலனிடமிருந்து முன்னர் பொற்கொல்லன் கைப்பற்றிக் கொண்டு வந்த சிலம்பினை அவைக்குக் கொண்டுவரச் செய்தான்.

அந்தச் சிலம்பைக் கண்டதும் கண்ணகிதேவி சீற்றத்தின் சிகரத்திற்கே சென்றுவிட்டாள். தன் காலிலிருந்தே ஒலி யெழுப்பித் தன்னை மகிழ்வித்தது எந்தப் பொற்சிலம்போ, அந்தச் சிலம்பே தான் தன் கணவனைப்பறிகொடுக்கக் காரண மானதை நினைந்து, அந்தச் சிலம்பைத் தன் கண்ணால் கண்ட துமே கடுங்கோபம் கொண்டாள். அரசவையில் வைக்கப் பட்ட அந்தப் பொற்சிலம்பைத் தன் கையில் எடுத்து, ஆவேசம் கொண்டவளாகி, அவையோர் கண்முன்பு தரையில் அடித்து நொறுக்கினாள். சிலம்பிலிருந்து மாணிக்கக் கற்கள் சிதறின. அவற்றில் ஒன்று மன்னவன் உதட்டில் பட்டு, உதட்டைக் கிழித்தது.

இந்த இடத்தில் ஓர் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. கண்ணகி, "என் காற்சிலம்பு மணியுடை அரியே!" என்று கூறியபோது, மன்னனும், "யாமுடைச் சிலம்பும் மணியுடை அரியே!" என்று சொல்லியிருப்பானானால், கண்ணகி தொடுத்த அப்பீல் வழக்கு என்ன ஆகியிருக்கும்? தோற்றுப் போயிருக்கும்! கோவலன் கள்வன் என்பது மெய்ப்பிக்கப் பட்டிருக்கும்! அரசனையே குற்றவாளியாக்கும் வகையில் பொய் வழக்குக் கொடுத்ததற்காகக் கண்ணகியும் தண் டிக்கப்பட்டிருப்பாள்!

கண்ணகி "என் காற்சிலம்பு மணியுடையரியே" என்று கூறியது மன்னனுடைய மனைவியின் காற்சிலம்புக்குள் மாணிக்கப் பரல்கள் இருக்க முடியாது என்ற நம்பிக்கை யினால்தான். அவள் ஏன் அப்படி நம்பினாள்? மதுரை

நகரிலே மாணிக்கக் கற்கள் கிடைக்காவென்ற நம்பிக்கையாலா? இல்லை. சிலப்பதிகாரத்திலுள்ள ஊர்காண் காதையிலே, கோவலன் மதுரை நகரிலுள்ள தெருக்களையெல்லாம் சுற்றுகிறான் அல்லவா? அப்போது, மாணிக்கம் உள்ளிட்ட நவரத்தினங்கள் விற்கும் கடைகளுள்ள தெருவிற்கும் சென்றானதலால், மதுரை நகரிலே மாணிக்கக் கற்கள் விலைக்குக் கிடைக்கும் என்பது புலனாகின்றது. மாணிக்கக் கற்கள் விலை உயர்ந்தவைதான். ஆனால், எவ்வளவு விலையானாலும் அதனைக் கொடுத்து வாங்க மன்னனால் முடியுமே! பின் மன்னனுடைய மனைவியின் காற்சிலம்புக்குள் மாணிக்கக் கற்கள் இருக்க முடியாவென்று கண்ணகி நம்பியது எதனால்?

அந்நாளைய தமிழ் மன்னர்கள், ஆடம்பரத்தை வெறுத்து, எளிய வாழ்க்கை நடத்தினார்கள். அவர்கள் வாழ்ந்த அரண்மனைகள்கூட காலத்தால் அழியாத கற்கோயில்களாக இருக்கவில்லை. அதனாற்றான், தமிழ் வேந்தர்கள் வாழ்ந்த அரண்மனை என்பதாக ஒன்றைக் கூட இன்று நாம் பார்க்க முடியவில்லை. 13-ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த பிற்காலச் சோழர்களின் அரண்மனைகளைக் கூடக் காணோம். ஆனால், சங்க காலத்து மன்னர்கள் கட்டிய கற்கோயில்களை யெல்லாம் இன்றும் நாம் காண முடிகின்றது.

கண்ணகி சந்தித்த பாண்டி வேந்தனும் எளிய வாழ்க்கைக்கு விலக்கானவன் அல்லன். அதனாற்றான், அவனுடைய மனைவியின் காற்சிலம்புக்குள் விலையுயர்ந்த மாணிக்கக் கற்கள் இருக்காவென்று கண்ணகி நம்பினாள்.

## மன்னனின் சுதேசிப்பற்று

"தென்பாண்டி நாடு முத்துடைத்து" என்பது பழமொழி. அன்று மட்டுமல்ல; இன்றுங்கூடத்தான். கொற்

கைக் கடலிலே மூழ்கி முத்துச் சிப்பிகளை எடுப்பது இன்றுங் கூட வளமிக்க தொழிலாக நடந்து வருகிறது. மாணிக்கம் தமிழ் நாட்டுப் பொருள் அல்ல; இறக்குமதியாகும் பொருளாகும். பாண்டிவேந்தன் தனது சொந்த நாட்டின் பொருளான முத்தைப் புறக்கணித்து இறக்குமதியாகும் மாணிக்கத்தைப் பயன்படுத்துபவன் அல்லன் என்று கண்ணகி நம்பியிருக்க வேண்டும். மன்னனுடைய சுதேசிப் பற்றைக் கண்ணகி நம்பினாள். அயல் நாட்டுப் பொருளில் மோகங் கொண்டு உள்நாட்டுப் பொருளைப் புறக்கணிக்கும் தேச விரோத மனப்பான்மை அந்நாளைய மன்னர்களிடம் இருக்கவில்லை.

தன்னுடைய எளிமையையும், சுதேசிப் பற்றையும் கண்ணகி நம்பியதனை மெய்ப்பித்து விட்டான் மன்னன். சிலம்பை உடைத்து, அதிலுள்ள மாணிக்கப் பரல்களை வெளிப்படுத்திக் காட்டியதோடு கண்ணகியின் அப்பீல் வழக்கு வெற்றி பெற்றுவிட்டது. கோவலன் கள்வனல்லன் என்பதனை அவனுடைய வீர மனைவி மெய்ப்பித்துக் காட்டி விட்டாள்.

## நெடுஞ்செழியனின் உயிர்த் தியாகம்!

இனி, முன்னர் பொற்கொல்லன் கொண்டு வந்த வழக்கின் மீது தான் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்துக் கண்ணகியாள் தொடுத்த அப்பீல் வழக்கின் மீது மன்னன் தீர்ப்பளிக்கிறான்.

"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது; கெடுகஎன் ஆயுள்!"

(சிலம்பு. 26 : 74—77)

இது, மன்னன் அளித்த தீர்ப்பு. கோவலனிட மிருந்து தான் கைப்பற்றிய காற்சிலம்பிலிருந்து மாணிக்கப் பரல்கள் வெளிப்படக் கண்டதுமே, மன்னனுடைய கையிலிருந்த செங்கோல் நழுவி வீழ்ந்தது; அதுவரை அவனுக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருந்த வெண்கொற்றக் குடையானது சாய்ந்து தரையில் வீழ்ந்தது; உயிர் உடலைவிட்டுப் பிரிந்து கொண்டிருந்த நிலையிலே மன்னன் தனது தீர்ப்பைக் கூறினன். தீர்ப்பைச் சொல்லி முடித்ததும், மயக்கம் போட்டு அரியணையிலேயே சாய்ந்து உயிர் விட்டான்.

பாண்டியன் அளித்த தீர்ப்பு இந்நாளைய நீதி மன்றங்களில் நிகழ்வது போன்று அவனால் எழுதிப் படிக்கப்பட்டதன்று; வாயுரையாக வழங்கப்பட்டதுதான். அதிலே, "பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன்?" என்று செழியன் வினா எழுப்புகிறான். தன் முன் வரும் வழக்குபற்றி அமைச்சர்களின் ஆலோசனையைக் கேட்பவனே அரசன் என்கிறது தமிழினத்தின் அரசியல் மரபு. பாண்டியனோ, பொற்கொல்லன் சொல்லையே நம்பி, கோவலனுக்குத் தண்டனையளித்து விட்டான். அதனால், "யானோ அரசன்?" என்ற வினா எழுப்பி, "யான் அரசனல்லன்" என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டான். அதற்குமேல், "யானே கள்வன்" என்றும் கூறுகின்றான். இதனால், "கோவலன் கள்வனல்லன்" என்று கூறாமல் கூறி, அவனுக்கு விடுதலை கொடுத்து விட்டான். இதனால், கோவலன் உயிர் பெற்று வந்துவிடவில்லை. என்றாலும், 'கள்வன்' என்ற பழிச் சொல்லிலிருந்து அவனுக்கு விடுதலை கிடைத்து விடுகிறதல்லவா! செழியனின் தீர்ப்பு இத்துடன் முடியவில்லை.

"தென்புலம் காவல் என்முதல் பிழைத்தது" என்றும் சொல்லுகிறான். அதாவது, "பாண்டிய அரசர்கள் வழிவழி காத்து வந்த மரபை அழித்த முதல் குற்றவாளி யான்" என்கின்றான். இதற்குப் பிறகும் தான் உயிர் வாழ்ந்தால்,

தன்னை முன் மாதிரியாகக் கொண்டு வழிவழி கொடுங்கோலர்கள் தோன்றி விடுவார்கள் என்று அஞ்சுகின்றது நெடுஞ்செழியனின் உள்ளம். தான் உயிர் விடுவதன் மூலம் தன் முன்னோரான செங்கோல் முறை காத்த மன்னர்களின் மரபு தொடரும் என்று நினைக்கிறான். அதனால், "மன்பதை காக்கும் தென்புலங் காவல் என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்!" என்கிறான். இதுதான் நெடுஞ்செழியன் வழங்கிய தீர்ப்பின் இறுதி வாசகம்.

அவன் ஒருவனே தான் செய்த தவறுக்காகத் தன்னையே அழித்துக் கொள்ள விரும்பி, "நான் ஒழிக" என்று கோஷித்தான். இன்றைய அரசியல்வாதிகளோ, தங்களுக்குப் பிடிக்காதவர்கள் பெயர்களையெல்லாம் சொல்லிச் சொல்லி, 'ஒழிக' என்று கோஷம் போடுகிறார்கள்.

## இளங்கோவின் அனுதாபம்

பாண்டியனுடைய உயிர்த்தியாகம் சிலப்பதிகார ஆசிரியரின் உள்ளத்தை உருக்கி விட்டது. அதனால், வழக்குரை காதையை முடித்துவிட்டு, இரண்டு வெண்பாக்கள் பாடி, அம் மாமன்னனுக்குத் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

**"காவி உகுநீரும் கையில் தனிச்சிலம்பும்**
**ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்**
**காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்**
**கூடலான் கூடாயினான்"**

அரியாசனத்தில் மதுரை மன்னனின் அருகில் இருந்த கோப்பெருந்தேவி, கணவனை இழந்தோர் புகலிடம் பெறுவதற்கு இந்த உலகில் எதுவுமே இல்லை என்று கருதி, தன் கணவனின் திருவடிகளைத் தொட்டுத் தொழுதுகொண்டே தானும் உயிர் நீத்தாள்.

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்**
**கண்டளவே தோற்றான் அக் காரிகைதன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்.**

# 7

# எரித்தது குற்றமா?

## தீர்ப்பா? வாக்குமூலமா?

பாண்டியன் நெடுஞ்செழியன், "யானோ அரசன்?" என்று வினா எழுப்பி, "யானே கள்வன்" என்று விடையும் அளித்து, அதற்குமேல் "கெடுக என் ஆயுள்" என்றும் கூறினனே, அது "கண்ணகி தொடுத்த அப்பீல் வழக்கின் மீது அவன் அளித்த தீர்ப்பு" என்று ஏற்கனவே கூறினேன். அதனை இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால், அது தீர்ப்பு அல்ல; வாக்கு மூலம் என்று பொருள் கொள்ள வேண்டி வரும்.

"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட யானோ அரசன்?" என்று அவன் கூறியதால், "யான் அரசன் அல்லன்" என்று அவன் சொல்லாமல் சொல்லி விட்டான் என்று பொருளாகிறது. அவன் அரச பதவியிலிருந்து விலகிக் கொள்ளவில்லை. தான் குற்றமற்ற கோவலனைக் கொல்லு வித்ததால், அந்தப் பதவியே தன்னிடமிருந்து விலகிச் சென்று விட்டது—என்று பாண்டியன் சொல்லாமல் சொல்லி விட்டான். "யான் அரசன் அல்லன்" என்று அவன் சொல்லி விட்டபின், அவனுடைய தகுதி என்ன? அவன் சாதாரண நெடுஞ்செழியன்தான்! அதனால் கண்ணகி உரைத்த அல்லது தொடுத்த மேல்வழக்கில் தீர்ப்பளிக்கும் உரிமை அவனிட மிருந்து போய்விட்டது.

"யானே கள்வன்" என்றும் அவன் கூறிவிட்டான். திருடன் தீர்ப்பளிக்கும் நீதிபதியாக முடியுமா? இது, ஒரு சட்டப் பிரச்சினை. நீதித்துறை நிபுணர்கள் யான் சொல்லுவதிலுள்ள நுட்பத்தை உணர்ந்து கொள்வார்கள்.

பாண்டியன், 'கோவலன் கள்வனல்லன்" என்று தீர்ப்பளித்திருக்க வேண்டும். ஆனால் அவன், அதை வெளிப்படையாகச் சொல்லாமல், "யானே கள்வன்" என்று சொன்னதன் மூலம் "கோவலன் கள்வனல்லன்" என்றும் சொன்னது போலாகிவிட்டது. பாண்டியன் சொன்னதை இன்னொரு முறையும் பார்ப்போம்:

பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்

இது, அரசன் அளித்த தீர்ப்பு அல்ல; செழியன் அளித்த மரண வாக்குமூலம்—அவ்வளவுதான்! அரச பதவியால் துறக்கப்பட்டவனுக்கு தீர்ப்பு அளிக்க உரிமையில்லையாதலால், தன் வாக்குமூலத்தை உலகத்தாரறிய அளித்துவிட்டு, உயிர்த் தியாகம் புரிந்து, மறைந்துவிட்டான்.

செழியன் நினைத்திருந்தால், பொற்கொல்லனை தேடிப் பிடித்துக் கொண்டுவரச் சொல்லி, கோவலன் மீது பொய் வழக்கு தொடுத்ததற்காக, அவனுக்கு மரண தண்டனை விதித்திருக்கலாம். அதற்குமேல் பாண்டியன் தொடர்ந்து உயிர் வாழ்ந்திருக்கலாம். அரியாசனத்தில் நிலைத்து நின்று ஆட்சியும் செய்திருக்கலாம். ஆனால், நெடுஞ்செழியன், பொற்கொல்லன் செய்த குற்றத்தை விடவும் தான் செய்த குற்றமே பெரிது என்று கருதினான்.

## நியாயம் வேறு; தருமம் வேறு!

பொற்கொல்லனைக் கண்டு பிடித்து அவனுக்கு மரண தண்டனை கொடுத்து விடுவதானால் கோவலன் திரும்பவும் உயிர்பெற்று எழுந்துவிடப் போவதில்லை. கண்ணகியும் வாழ் வரசியாகி, கோவலனுடன் கூடி மதுரை நகரிலோ, பூம்புகாருக்குத் திரும்பிச் சென்றோ வாழ்வு நடத்தப் போவதில்லை. அதனாற்றான், உயிர்த் தியாகம் புரிந்து தனக்கு ஏற்பட்டுவிட்ட பழியைத் துடைத்துக் கொண்டான் செழியன். கோவலனைக் கொன்றதால் வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்தி விட்டான். இந்தியப் பெருநாட்டின் இதிகாசங்களிலே செழியனின் உயிர்தியாகத்திற்கு இணையான ஒரு நிகழ்ச்சியை நாம் காண முடியவில்லை.

தருமம் வேறு; நியாயம் வேறு. சில நேரங்களில் இந்த இரண்டும் ஒத்துப் போவதும் உண்டு. வேறு சில நேரங்களில் இந்த இரண்டுக்குமிடையே மோதல் ஏற்படுவதும் உண்டு.

பொய் வழக்கு கொடுத்த பொற்கொல்லனைக் கண்டு பிடித்து, அவனுக்கு மரண தண்டனை கொடுத்துவிட்டு, நெடுஞ்செழியன் தொடர்ந்து ஆட்சி நடத்தியிருந்தால், அது நியாயமாக இருந்திருக்கலாம். ஆனால், அரசியல் தருமமாக இருக்கமுடியாது. நியாயத்தைக் கடைப்பிடித்துவிட்டு, அத்துடன் மனத் திருப்தியடைவோர் சாமான்யர்கள். நியாயத்தைவிடவும் தருமத்தையே பெரிதாக மதித்து அதற்காகத் தியாகம் புரிவோர் சரித்திர நாயகர்கள். இந்த உண்மையை வடமொழியிலுள்ள காப்பியங்களிம் நாம் பார்க்க முடிகிறது

இராமாயணத்திலே, தந்தையின் ஆணைப்படி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இசைந்தான் இராமன். பின்னர், அதே தந்தை, கைகேயியின் வற்புறுத்தலால் வனஞ் செல்லுமாறு ஆணையிட்டான். இராமனும் சக்கரவர்த்தியின்

ஆணையை மறுக்காமல், அதை ஏற்று வனம் சென்றுவிட்டான். இங்கே இராமன் கடைப்பிடித்தது நியாயத்தை அல்ல; தருமத்தை!

நியாயத்தைக் கடைப்பிடிப்பதானால், கூனியும் கைகேயியும் உருவாக்கிய சதியை முறியடித்து, அரசபதவியை அடைவதற்கு அவன் முயன்றிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், கோசல நாட்டு மக்கள் அவன் பக்கம்தான் இருந்திருப்பார்கள். ஆனால், அது அரசியல் தருமமாகாது என்பது ராமனுக்குத் தெரிந்திருந்தது.

## சாமான்யரும் சரித்திர நாயகரும்

மகாபாரதக் கதையில், தருமன் சகுனியுடன் சூதாடினனே, அது அவன் செய்த மாபெரும் தவறு. சூதிலே தோற்றுவிட்ட பின்னர், தான் செய்த தவறுக்கான கொடிய விளைவுகளை அமைதியாக தருமன் ஏற்றுக் கொண்டான். தன் மனைவியையே அரசவையில் துச்சாதனன் துகிலுரிந்தபோதும் தருமன் அமைதி காத்தான். அவன் ஆணையிட்டிருந்தால் துரியோதனாதியாரை அடித்து நொறுக்கி வீமனும் பார்த்தனும் பாஞ்சாலியின் மானத்தைக் காத்திருப்பார்கள். அது நியாயமாகவும் இருந்திருக்கும். ஆனால், தருமமல்ல. அதனால், சூதாட்ட உடன்படிக்கைக் கேற்பத் தருமன் தன் மனைவியோடும் தம்பியரோடும் வனஞ்சென்று துன்பங்களை அனுபவித்தான்.

நிடத தேசத்து மன்னனான நளன் புஷ்கரனுடன் சூதாடி ராஜ்யத்தைத் தோற்றுவிட்டான். நிடத நாட்டைவிட்டே மனைவி மக்களுடன் வெளியேறுமாறு ஆணையிட்டான் சூதில் வென்ற புஷ்கரன். மாவிந்த நகரத்து மக்களெல்லாம் நளன் வெளியேறுவதை விரும்பவில்லை. தத்தம் வீட்டில் வைத்து விருந்தோம்புவதாக வேண்டுகோள் விடுத்தார்கள். மக்களின்

விருப்பத்தை ஏற்று நளன் நகரில் தங்கியிருந்தால் அது நியாயமாக இருந்திருக்கலாம். ஆனால், அது தருமமாக இருந் திருக்காது.

இப்படி, நியாயத்திற்கும் தருமத்திற்குமான போராட் டத்தை நூற்றுக்கணக்கான மன்னர்கள் சந்தித்திருக்கின் றனர். ஆனால், அவர்களிலே சிலர்தான் நியாயத்தை விடவும் தருமத்தைப் பெரிதாக மதித்துத் தியாகம் புரிந்திருக்கின் றனர் எல்லோருமே நெடுஞ்செழியனாகவும், இராமனாகவும், நளனாகவும், தருமனாகவும் இருந்து விடுவது சாத்தியமில்லை தானே!

## பத்தினிப் பொறாமை!

பாண்டியன் உயிரிழந்த அக்கணமே அவன் மனைவி பாண்டிமாதேவியும் உயிர் நீத்தது கண்ணகிக்கு ஒரு வகையில் வேதனையையும், இன்னொரு வகையில் வியப்பையும் தந்தது.

வேதனைக்குக் காரணம் தன்னொத்த பெண்ணொருத்தி ஒரு குற்றமும் செய்யாத நிலையில் தன்னுயிரைத் துறந்து விட் டாளே என்பதாகும். வியப்புக்குக் காரணம், பாண்டியன் உயிர்நீத்த அக்கணமே தன்னுயிர் கொண்டு தன் கணவன் உயிரைத் தேடிச் செல்லும் பொருட்டு, பெருங்கோப்பெண்டு மாண்டு விட்டாளே என்பதாகும்.

பொறாமை பலவிதமானது. இங்கே கண்ணகிக்குப் பத்தினிப் பொறாமை பிடித்து விட்டது. தன் கணவன் கோவலன் உயிர் நீத்து மூன்று நாட்களாகியும் தான் உயிர் சுமந்து வாழ்வதையும், பாண்டியன் உயிர் விட்ட கணத்தி லேயே பாண்டிமாதேவி உயிர் நீத்ததையும் ஒப்பிட்டுப் பார்க் கிறாள் கண்ணகி. கற்பு நெறியிலே கோப்பெருந்தேவி தன்னை முந்திக் கொண்டு விட்டது அவளுக்குத் தெரிகிறது. கணவ னோடு உடன் உயிர் விடுவதிலே தான் பின்தங்கி விட்டதற்குச்

சமாதானம் சொல்ல நினைக்கிறது கண்ணகியின் உள்ளம். அதற்கு முன் கோப்பெருந்தேவியின் உயிர்த் தியாகத்தால் தனக்கு ஏற்பட்ட மனவேதனையை வெளிப்படுத்துகிறாள் பூம்புகாரிப் பத்தினி.

"கோவேந்தன் தேவி! கொடுவினை யாட்டியேன்;
யாவுந் தெரியா இயல்பினேன்; ஆயினும்
முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்."

"மதுரை மன்னனின் மனைவியே! யான் ஒரு கொடிய வினைக்குரியவளாகிவிட்டேன். தேவி! நீ உயிர்த் தியாகம் புரிவதற்கு நான் காரணமல்லேன். ஆயினும், 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்றொரு பழமொழி உண்டு. அதைத்தான் உன் விஷயத்தில் நான் கண்ணெதிரில் காண்கின்றேன்" என்கிறாள் கண்ணகி.

## பத்தினியர் வரலாறு

இதற்குமேல், தான் மட்டுமல்லாமல், தனது பூப்புகாரிப் பதியிலே வழிவழி பத்தினிப் பெண்டிர் பலர் தனக்கு முன்னேயும் தோன்றியிருக்கின்றனர் என்பதனைக் கோப்பெருந்தேவிக்கு உணர்த்த நினைத்து, சிறந்த பத்தினியர் எழுவருடைய வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுகின்றாள் :

"பத்தினி ஒருத்தியின் கற்பொழுக்கத்தைக் களங்கப்படுத்தும் வகையில் பொய் சொன்னான் ஒரு பாதகன். அதனால், அவள், பஞ்சாயத்தாரிடம் வழக்கு கொடுத்தாள். பஞ்சாயத்தார், "சாட்சி உண்டா?" என்றனர். பத்தினி, "உண்டு; வன்னி மரமும் மடைப்பளியும்" என்று சொன்னாள். "என்னம்மா! வன்னி மரமும் மடைப்பளியும் உனக்காக இங்கு வந்து சாட்சி சொல்லுமா?" என்றனர் பஞ்சாயத்தார். தன் கற்பின் வலிமையால் வன்னி மரத்தையும் மடைப்பளியையும்

பஞ்சாயத்தார் கண் முன்னே வரவழைத்துக் காட்டினாள். அவள் ஒரு பத்தினி.

"காவிரி கடலொடு கலக்குமிடத்திலே தன் தோழியருடன் விளையாடிக் கொண்டிருந்தாள் ஒரு நங்கை அவள் மணலால் பிடித்த உருவத்தைக் காட்டி, "இந்த மணற் பாவைதான் நின்கணவன்" என்றனர் தோழியர். அவர்கள் அப்படிச் சொல்லிவிட்டதனால், மணற் பாவை பிடித்த கன்னியானவள், தன் வீட்டிற்குத் திரும்பாமல், கடற்கரையிலேயே இருந்து கொண்டு, தான் பிடித்த மணற் பாவையை—தன் தோழியர் தனக்குக் கணவனாக்கியதை—அலைகள் வந்து அழித்துவிடாமல் காவல் காத்தாள். அவள் ஒரு பத்தினி.

"கரிகால் வளவன் மகள் ஆதிமந்தி என்பவள், தன் கணவன் ஆட்டனத்தி என்பவனுடன் காவிரியாற்றங்கரையில் இருந்தபோது, ஆற்று வெள்ளமானது அவனை அடித்துக் கொண்டு போய்க் கடலில் சேர்த்து விட்டது. அதுகண்டு வேதனையடைந்தவளாகி, "மலைபோன்ற தோள் படைத்தவனே!" என்று கதறினாள் ஆதிமந்தி. அந்தப் பத்தினியின் கதறலைக் கேட்டு, கடலானது தன்னில் மறைந்த ஆட்டனத்தியைக் கொண்டு வந்து, அவள் முன் நிறுத்திக் காட்டியது. ஆதிமந்தியும் தன் கணவனைத் தழுவிக் கொண்டு ஊர் திரும்பினாள். அவள் ஒரு பத்தினி.

"தன் கணவன் கடல் மார்க்கமாக அயல்நாடு சென்றபோது அவன் திரும்பி வருமளவும் கடற்கரையில் கல்லுருவம் கொண்டு நின்றாள் ஒரு நங்கை. தன் கணவன் திரும்பி வந்த நாளில் கல்லுருவம் நீத்து, பழைய உருவத்தைப் பெற்றாள். அவள் ஒரு பத்தினி!"

"சற்பு வாழ்க்கை நடத்திய ஒருத்தி, தன் சக்களத்தியின் குழவி கைதவறி கிணற்றில் விழுந்துவிட, அவளது துயரிலே தானும் பங்கு பெற விரும்பி, தன் குழந்தையையும் கிணற்றில்

விழ்த்திஞள். அவளது தியாகச் செயல் கண்டு கிணற்று நீர் மேலே பொங்கி யெழுந்து, இரண்டு குழந்தைகளையும் அவளிடம் தந்துவிட்டது. அவள் ஒரு பத்தினி.

''இன்ஞெரு பத்தினியின் கணவன் வேற்றூர் சென்றிருந்த நேரத்திலே, மாற்ருன் ஒருவன் அவள் இல்லத்தையடைந்து காம நோக்குடன் அவளைக் கண்டான். அது கண்டஞ்சிய அவள், தனது கற்பின் திறத்தால் முழுமதி போன்ற தன் முகத்தை 'ஒரு குரங்கு முகம் ஆருக!' என்று கூறி, தான் விரும்பிய முகத்தைப் பெற்ருள். வெளியூர் சென்ற கணவன் ஊர் திரும்பிய நாளிலே குரங்கு முகத்தைப் போக்கி, தன் பழைய முகத்தைப் பெற்ருள்.

''பெண்ணறிவு என்பது பேதமையுடையது'' என்றனர் நுண்ணறிவுடைய பெரியோர். அதனை உணராமல், காவிரி யாற்றங்கரையிலே என் தோழியுடன் வண்டல் இழைத்து நான் விளையாடியபோது, 'தோழி! யான் ஒரு மகள் பெறு வேனுயின், நீயும் ஒரு மகனைப் பெற்ருயென்ருல், என் மகளுக்கு உன் மகனே கணவனுவான்' என்று சொன்னேன். ஏதோ விளையாட்டாக நான் உரைத்த அச் சொற்களை என் தோழியானவள் உண்மையாகவே கொண்டு விட்டாள். அதனை நினைந்து துன்பத்தால் என் மனம் வருந்துகின்றது' என்று தன் தந்தைக்கு தாய் சொல்லக் கேட்டாள் மகள். கேட்டதும், ஒரு புதுப் புடவையை உடுத்திக்கொண்டு, தன் கூந்தலை அழகுபெற முடித்துக்கொண்டு, தன் தாயினுடைய வாக்குறுதியை நிறைவேற்றுபவளாகி, அந்த முடத்தைத் தலையிற் சுமந்து கொண்டு வந்து, அவனை மணந்தாள் ஒரு பத்தினி.

''இத்தகைய பத்தினியர் பலர் பிறந்த பூம்புகார்ப் பட்டினத்தில் பிறந்தவள் நான். யானும் ஒரு பத்தினியே! ஆனுல், கணவன் இறந்து நாட்கள் பலவாகியும் நான் உயிர் வாழக் காரணம், என் கணவனைக் கொன்று என் வாழ்வைப்

யறித்த கொடுங்கோலரசை அழித்து அதைப் பார்த்துக் கொண்டிருந்த இந்த மதுரையை எரிப்பதற்காகத்தான்.''

இது, கண்ணகி நிகழ்த்திய சொற்பொழிவு! உயிரிழந்து கிடக்கும் கோப்பெருந்தேவியைப் பார்த்துத்தான் இந்த நீண்ட சொற்பொழிவை நிகழ்த்தினுள் கண்ணகி.

கண்ணகி புகழ்ந்த ஏழு பத்தினியரின் வரலாற்றை இளங்கோ படைத்தபடியே பார்ப்போம்:

(1)

—''நற்பகலே,
வன்னி மரமும் மடைப்பளியுஞ் சான்ருக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழ லாள்;

(2)

—''பொன்னிக்
கரையில், ''மணற்பாவை நின்கணவன் ஆம்'' என்று
உரைசெய்த மாதரொடும் போகாள், திரைவந்து
அழியாது சூழ்போக, ஆங்கு உந்தி நின்ற
வரிஆர் அகல் அல்குல் மாதர்;

(3)

—''உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
''கன்னவில் தோளாயோ!'' என்னக், கடல்வந்து,
முன்னிறுத்திக் காட்ட, அவனைத் தழீஇக்கொண்டு,
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்;

(4)

—''மன்னி
மணல்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள்;

(5)

—"இணையாய
மாற்றாள் குழவிவிழத் தன்குழவி யும்கிணற்று
வீழ்த்து, ஏற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள்;

(6)

—"வேற்றொருவன்
நீள்நோக்கம் கண்டு, "நிறைமதி வாள்முகத்தைத்
தானோர் குரக்குமுகம் ஆக!" என்று, போன
கொழுநன் வரவே, குரக்குமுகம் நீத்த
பழுமணி அல்குற்பூம் பாவை;

(7)

—"விழுமிய
பெண்ணறிவு என்பது பேதைமைத்தே என்றுரைத்த
நுண்ணறிவி னோர்நோக்கம்; நோக்காதே எண்ணிலேன்
வண்டல் அயர்விடத்து, யானோர்மகள் பெற்றால்
ஒண்டொடி! நீயோர் மகன் பெறின், கொண்ட
கொழுநன் அவளுக்கு என்று, யான் உரைத்த மாற்றம்
கெழுமி அவள் உரைப்பக் கேட்ட விழுமத்தால்
சிந்தைநோய் கூரும், திருவிலேற்கு" என்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய், முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக், குழல்கட்டி,
நீடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவை அவள்போல்வார் நீடிய
மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன்; அரசோடு ஒழிப்பேன் மதுரையையும் என்
பட்டிமையும் காண்குறுவாய் நீ..."

(சிலம்பு: 21: (24—37)

பூம்புகாரில் மக்களிடையே அந்நாளில் வழங்கி வந்த பத்தினியர் பற்றிய கதைகளைத்தான் கண்ணகி கோப்பெருந்

தேவியைப் பார்த்துக் கூறினாள். கூறிய பின், அரண்மனையை விட்டு வெளியேறி, தேரோடும் ராச வீதிக்கு வந்தாள். அதற்குள் மதுரை மாநகரை எரிப்பதென்ற முடிவுக்கு வந்து விட்டாள். "ஒட்டேன், அரசோடு ஒழிப்பேன் மதுரையை யும்" என்று வஞ்சினங் கூறினாள் அல்லவா!

## "குற்றமிலேன்!"

முன்னரே மாதரி இல்லத்தி லிருந்த போது, "காய்கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?" என்று கண்ணகி கேட்க, "கள்வனோ அல்லன்; கருங்கயற்கண் மாதராய் ஒள் எரி உண்ணும் இவ்வூர்" என்று கதிரவன் கூறினான். அது, இப்போது அவள் நினைவுக்கு வந்தது. அதற்கும் முன்பு, பூம்புகாரிலிருந்த நாளில், தான் கண்ட கனவைத் தன் தோழி யான தேவந்தியிடம் கூறியபோது, 'காவலன் முன்னர் யான கட்டுரைத்தேன்; காவலனோடு ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால் உரையாடேன்' என்றாள். "ஊர்க்குற்ற தீங்கு" என்று அவள் குறிப்பிட்டது, மதுரையைத் தீயுண்பதுதான்! அதனால், புகாரில் தான் கண்ட கனவை ஆயர்சேரியில் கதிரவன் சொன்னதைச் செயல்படுத்திக் காட்ட முனைந்தாள்.

மதுரை ராச வீதிகளிலே செல்லுங் கண்ணகி, தன்னைப் பார்த்து நிற்கும் நகர மக்களை நோக்கிக் கூறுகின்றாள்:

"நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
வானக் கடவுளரும் மாதவரும் கேட்டீமின்;
யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன்; குற்றமிலேன் யான்"

(சிலப்பு. 21 : 39-42)

மதுரை மாநகரை "கோநகர்" என்று கண்ணகி கூறியது "குடி மக்கள் நகர் அல்ல" என்ற பொருளிலாகும். கொடுங் கோலுக்கு அஞ்சி வாழும் மதுரை மக்களையும் பழிவாங்கக் கண்ணகி துணிந்துவிட்டாள். துணிந்தவள்,

'இடமுலை கையால் திருகி, மதுரை
வலமுறை மும்முறை வாரா, அலமந்து,
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து,
விட்டாள்..."

என்கிறார் இளங்கோ. ஆம்; தனது வலக் கையால் இடப் பக்கத்து முலையைத் திருகியெடுத்துக் கொண்டு, மதுரையை மூன்று முறை வலம் வந்தாள். அப்போது, சினங்கொண்ட அவள் மனம் சொன்னது. "முலையை விட்டெறிந்து மதுரையைக் கொளுத்து!" என்று. அவளது அறிவு கேட்டது, "மன்னன் ஒருவன் செய்த தவறுக்காக மக்கள் வாழும் மதுரையை எரிப்பது நீதியோ?" என்று. இன்னொரு வகையில் சொன்னால், "கொளுத்து" என்றது மனம். "நிறுத்து" என்றது மதி. இப்படி, தன் மனத்துக்கும் மதிக்குமாகப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நிலையில் மதுரையை மும்முறை வலம் வந்தாள். இறுதியில் மதியை வென்று விட்டது மனம். அதனால், வலது கையை வேகமாகச் சுழற்றி, முலையை எறிந்தாள்.

## "தீத்திறத்தார் பக்கமே சேர்க!"

அந்நிலையில், கண்ணகியின் எதிரில் அக்கினிக் கடவுள் தோன்றி,

"மாபத்தினி! நின்னை மாணப் பிழைத்த நாள்
பாயெரி இந்தப் பதியூட்ட, பண்டே யோர்
ஏவல் உடையேன்; யார்பிழைப்பார் ஈங்கு?"

[சிலம்பு. 21: 50-52]

என்று கேட்க, கண்ணகி பதிலளிக்கிறாள்.

"பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க."

[சிலம்பு. 21: 53-55]

எரிக்கப்பட வேண்டியவர்களை "தீத்திறத்தார்" என்று பொதுப்படக் கூறிவிட்டு, எரிக்கப்படக் கூடாதவர் இன்னின்னாரென விவரமாகக் கூறியது, அவர்களில் யாரும் தவறாக எரிக்கப்பட்டு விடக் கூடாதென்ற இரக்கத்தால் போலும்! 'பார்ப்பார்' என்று கண்ணகி கூறியது, அவர்கள் பிறப்பு காரணமாக அல்ல; ஓதல், ஓதுவித்தல் ஆகிய அறிவுத் தொழிலுக்குரியவர் என்ற சிறப்புக் காரணமாகத்தான்.

## தெய்வங்கள் ஓடின!

கண்ணகியிடம் ஏவல் பெற்ற அழற் கடவுள் கூடல் நகரைக் கொளுத்த, எங்கும் நெருப்பும் புகையும் பரவின. கண்ணகி மதுரைக்குத் தீ மூட்டிய புரட்சிச் செயலை,

"காய்த்திய
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்."

[சிலப்பு. 21: 55-57]

என்று கூறி வஞ்சின மாலையை முடித்த இளங்கோவடிகள்,

"ஏவல் தெய்வத்து எரிமுகம் திறந்தது"

என்னும் வரியை முதலாகக் கொண்டு, அழற்படு காதையைத் தொடங்குகிறார். ஆம்; கண்ணகி ஏவினாள்; அழல் தெய்வத்தின் எரிமுகம் திறந்தது!

மதுரை மாநகர் தீப்பற்றி எரியத் தொடங்கியதுமே, அதுவரை அந்நகரைக் காவல் புரிந்து வந்த தெய்வங்கள் பத்தினியின் சீற்றத்தைக் கண்டு பயந்து, வெளியேறிச் சென்று விட்டனவாம். பாண்டியன் கோன்முறை பிறழா திருந்த காலம்வரை நால்வருணப் பூதங்கள் அந்தப் பதியைக் காத்து வந்தனவாம். இப்போது, அந்த வருணப் பூதங்களும் மதுரையைவிட்டு வெளியேறினவாம்.

அடிகள் அந்தண வருணம், அரச வருணம், வணிக வருணம், வேளாண் வருணம் ஆகிய நான்கு வருணங்களையும் நான்கு பூதங்களாகக் கற்பித்துக் கொண்டு, அவை நகரிலிருந்து வெளியேறி விட்டன என்கிறார். மன்னன் செங்கோலனாக இருக்கும் வரைதான் தருமங்கள் அவனைக் காக்கும். அரசு நெறி பிறழ்ந்து விட்டால், தருமங்களும் கைவிட்டு விடும். திருக்குறளிலும்,

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.

சிலப்பதிகாரம் நாடகக் காப்பியமாதலால், மனிதரிலே நால் வருணத்தாருக்குரிய தருமங்களை, "பூதங்கள்" என்னும் பெயரில் பாத்திரங்களாகக் கற்பனை செய்து, அவை நகரை விட்டு ஓடிவிட்டன என்கிறார் ஆசிரியர். ஓடிப்போகிற பூதங்கள் சும்மா போகவில்லையாம். "கூட்டறிக்கை" விட்டனவாம்.

"கோமுறை பிழைத்த நாளில் இந்நகர்
தீமுறை உண்பது ஓர் திறன் உண்டு என்பது
ஆம் முறை யாக அறிந்தனம் ஆதலின்,
யாம்முறை போவது இயல்பு அன்றோ?"

[சிலப்பு. 22: 10?-106

"அரசன் செங்கோல் முறையிலிருந்து பிறழுங்கால் இந்த மதுரை மாநகரைத் தீயுண்ணும் என்பது எங்களுக்குத் தெரியுமே! அதனால், யாங்கள் இந்நகரை விட்டு வெளியேறுவது இயல்புதானே!" இது, வருண பூதங்கள் விடுத்த கூட்டறிக்கையின் பொருளாகும். வருண பூதங்கள் மதுரையம்பதியின் எதிரியாகிவிட்ட கண்ணகியின் கண்கள் காணும்படியாக வெளியேறினவாம். இதனை,

"பொங்கை குறித்த கொற்ற நங்கைமுன்
நாற்பால் பூதமும் பாற்பாற் பெயர"

[சிலம்பு. 22; 107-8]

என்ற வரிகளில் இளங்கோ அறிவிக்கிறார்.

கண்ணகி, 'பசுக் கூட்டங்களை எரிக்காதே!' என்று அழற் கடவுளுக்கு ஆணையிட்டாள் அல்லவா! அதனால், மதுரை நகரம் முழுவதிலும் பரவிக் கிடந்த பசுக்களும் கன்றுகளும் நெருப்புக்குத் தப்பி, கண்ணகி தேவிக்கு அடைக்கலம் தந்த ஆயர் சேரியை அடைந்து, உயிர் பிழைத்தனவாம். ஆற்றல் மிக்க போர் யானைகளும் பெண் யானைகளும் விரைந்து செல்லும் திறனுடைய குதிரைக் கூட்டங்களும் நகரின் மதிலுக்குப் புறத்தே சென்று உயிர் பிழைத்தனவாம்.

கறவையும் கன்றும் கனல்எரி சேரா
அறவை ஆயர் அகன்தெரு அடைந்தன
மறவெங் களிறும் மடப்பிடி நிரைகளும்
விரைபரிக் குதிரையும் புறமதிற் பெயர்ந்தன.

[சிலம்பு. 22: 115-18

## பத்தினியர் தப்பினர்!

குழந்தைகளையும் வயது முதிர்ந்தோரையும் எரிக்க வேண்டா மென்றும் கண்ணகி கனல் தெய்வத்திற்குக் கட்டளையிட்டிருந்தா ளாதலால், மதுரை நகரிலுள்ள இல்லக்கிழத்தியர், தொட்டிலிலும் கட்டிலிலுமாகத் தூங்கிக் கொண்டிருந்த தங்கள் குழந்தைகளை எழுப்பி, தங்கள் கைகளில் சுமந்துகொண்டு, மூத்தோரான பெண்டிர் முன் செல்ல, அவர்களைப் பின்பற்றிச் சென்றனராம்.

திதலை அல்குல் தேங்கமழ் குழலியர்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வரொடு

பஞ்சிஆர் அமளியில் துஞ்சுதுயில் எடுப்ப,
வால்நரைக் கூந்தல் மகளிரொடு போத.

[சிலப்பு. 22: 128-31]

பத்தினிப் பெண்டிரைத் தீண்ட வேண்டாமென்றும் பூம்புகார்ப் பத்தினி அக்கினி தேவனுக்கு ஆணையிட்டிருந்தாள் அல்லவா? அதனால்,

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு"

மான அறங்களைக் கடைப்பிடித்து, கற்பு நெறியில் வாழ்க்கை நடத்தும் பத்தினியர் நிலையை இளங்கோ வருணிக்கிறார். அவர்களைத் தீக்கடவுள் தீண்டவில்லை என்று தகவல் தருகிறார். அவர்கள், 'கோவலனைக் கொன்ற குற்றத்திற்காகக் கூடற் பதியைக் கண்ணகி கொளுத்தியது நியாயந்தான்'' என்று கூறுகிறார்களாம். தங்களைத் தீண்டாமல் விட்ட அக்கினித் தேவனைத் துதித்துப் போற்றி வணங்கினராம்.

வருவிருந்து ஓம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ்வு எய்தி,
'இலங்குபூண் மார்பிற் கணவனை இழந்து,
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று'என,
பொங்கெரி வானவன் தொழுதனர் ஏத்தினர்.

[சிலப்பு. 22: 132-37]

## பரத்தையர் என்ன ஆயினர்?

மதுரை நகரிலே, பாட்டும் கூத்தும் பயின்று, அவற்றையே தொழிலாகக் கொண்டு ஆடலிலும் பாடலிலும்

அழகிலும் சிறந்து விளங்கும் பரத்தையர் வாழும் தெருவும் உண்டுதானே!

புகாரிலே நடனப் பரத்தையர் வாழும் வீதியைக் கூறுமிடத்து, "நகர நம்பியர் திரிதருதெரு" என்று அடிகள் வருணித்தார். பின்னர் மதுரையிலுள்ள "நகர நம்பியர் திரிதரு தெருவை"யும் ஊர்காண் காதையிலே கவிஞர் நமக்குக் காட்டியிருக்கிறார். அந்தத் தெருவிலுள்ள நடனப் பரத்தையர் என்ன ஆயினர்? தீயால் எரிந்து ஒழிந்தனரா? இந்த வினாவுக்கு அழற்படு காதையிலே அடிகள் தரும் விளக்கம் வருமாறு!

**எண்நான்கு இரட்டி இருங்கலை பயின்ற**
**பண்ணியல் மடந்தையர் பயங்கெழு வீதித்**
**தண்ணுமை முழவம், தாழ்தரு தீங்குழல்**
**பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்ப் பாணியொடு**
**நாடக மடந்தையர் ஆடரங்கு இழந்து.**

(சிலம்பு, 22: 138-42)

"64ஆகக் கணித்துக் கூறப்படும் பெருமைமிகு கலைகளையெல்லாம் பயின்று, பண்ணொடு கலந்து பாடத்தக்க இசை ஞானமும் உடையவர்களான நடனப் பரத்தையர் வாழும் வீதியும் தீப்பிடித்துக் கொண்டது. அதனால், தண்ணுமை, முழவம், இனிய குழல் ஆகிய இசைக் கருவிகளை ஆடற் பரத்தையர் இழந்தனர். அத்துடனின்றி, அவர்கள் ஆடுவதற்குப் பயன்பட்ட நாடக அரங்குகளும் எரிந்து ஒழிந்தன" என்கிறார் இளங்கோ. இங்கு, நடனக் கணிகையர் தீயில் அகப்பட்டு இறந்ததாக அவர் கூறவில்லை. நாடகக் கலையின் அருமை பெருமைகளையெல்லாம் அரங்கேற்று காதையிலும், வேறு பல இடங்களிலும் விளக்கமாகக் கூறிய அடிகள், அந்தக் கலைத்தொழிலுக்குரிய கணிகையரெல்லாம் தீயில் அகப்பட்டு அழிந்து ஒழிந்தனர் என்று கூற விரும்பவில்லை போலும்!

மதுரை நகரம் எரியும்போது, ஆடரங்கு இழந்த நாடக மடந்தையர், "இந்நாட்டில்—இவ்வூரில் தன் கணவனை இழந்து, அதனால் கொண்ட சீற்றத்தால் செங்கோல் பிறழ்ந்த மன்னவனைத் தன் சிலம்பினால் வென்று இவ்வூரைத் தீக்கு இரையாக்கிய நங்கை எந்நாட்டைச் சேர்ந்தவளோ? யாருடைய மகளோ?" என்று வாய்விட்டுச் சொல்லி அரற்றுகின்றனராம்.

**எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?**
**இந்நாட்டு இவ்வூர் இறைவனை இழந்து**
**தேரா மன்னனைச் சிலம்பின் வென்று இவ்**
**ஊர் தீ ஊட்டிய ஒருமகள்.**

## மதுரையின் அவலம்

கண்ணகி மதுரையை தீக்கு இரையாக்கியது மாலை நேரத்தில்! அன்று வெள்ளிக்கிழமையுங்கூட. அதனால், கோயில்களிலே மாலை நேர விழா ஒலியும், அந்தணர்கள் நடத்தும் யாக சாலைகளிலிருந்து எழக்கூடிய மந்திர ஒலியும், தெய்வங்களைப் பிரார்த்திப்போர் எழுப்புகின்ற பாட்டொலியும், மாலை நேரத்தில் அரண்மனையிலே முழங்கும் முரசொலியும் அன்று ஒலிக்கவில்லை. வீடுதோறும் இளம்பெண்கள் மாலை நேரத்தில் விளக்கேற்றும் காட்சியையும் அன்று காண முடியவில்லை. இன்னும், மாலை நேரத்தில் நிகழ்கின்ற களியாட்டங்களையெல்லாம் இழந்து நின்றது மதுரை நகரம்.

**அந்தி விழவும் ஆரண ஓதையும்**
**செந்தீ வேட்டலும் தெய்வம் பரவலும்**
**மனைவிளக் குறுத்தலும் மாலை அயர்தலும்**
**வழங்குகுரன் முரசமும் மடிந்த மாநகர்**

(சிலம்பு. 22: 147-150)

இந்த இடத்தில் ஒன்றை நினைவிற்குக் கொண்டு வருவது அவசியமாகிறது. இளங்கோவடிகள், மதுரையம்பதியிலே

தீக்கிரையாகாது பிழைத்த உயிர்களையெல்லாம் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். "பசுக்களும், கன்றுகளும், யானைக் கூட்டங்களும், குதிரைக் கூட்டங்களும் தீக்கிரையாகாமல் தப்பிவிட்டன" என்கிறார். "முதியோரும் குழந்தைகளும் அக்கினியால் அழிக்கப்படவில்லை" என்கிறார். "பத்தினிப் பெண்டிர் பாதுகாக்கப்பட்டனர்" என்று பறைசாற்றுகிறார். ஆனால், இவர்கள் யார் யார் என்று அவர் விவரிக்கவில்லை.

## காட்சிப்படுத்தாததேன்?

வியாச பாரதத்திலேயும் சரி; தமிழில் வில்லிபுத்தூரார் எழுதிய பாரதத்திலேயும் சரி; அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரிக்கும் காட்சி டெலிவிஷன் காட்சி போலக் காட்டப்படுகிறது. வான்மீகியிலும் சரி; கம்பனிலும் சரி; அனுமன் இலங்கையைத் தீக்கிரையாக்கும் காட்சியையும் டெலிவிஷனில் காண்பதுபோலக் காண்கிறோம். அனுமன் இலங்கையிலுள்ள அரக்கர் வீடுகளில் ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனியே தீ வைத்ததாக அவகாசம் எடுத்துக் கூறுகிறார் வான்மீகி. இலங்கை தீக்கிரையாகும்போது அரக்க மாதர் உரத்த குரல் எழுப்பி அலறி அழுவதைத் தம் கவிதைத் திறத்தால் ஒலி பரப்பிக் காட்டுகிறார் வான்மீகி. கம்பனும் 60 கவிதைகளில் இலங்கை எரியூட்டப்பட்ட காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறார். வீடுகள் சரிந்து விழுவதை, புகை மண்டலங்கள் வான மண்டலத்தை நோக்கி எழுவதைச் சுவைபட வருணிக்கின்றனர் வான்மீகியும் கம்பரும்.

அதுபோல, மதுரை எரியுண்டதை இளங்கோ டெலிவிஷன் காட்சிபோலக் காட்டவில்லை. வானொலியில் செய்தி அறிவிப்பு நேரத்தில் தரப்படும் தகவல்களைப்போல மிகவும் சுருங்கிய அளவில் தருகிறார் இளங்கோ. நாசக் காட்சிகளை வருணிப்பதிலே இளங்கோவுக்கு மகிழ்ச்சி இல்லை. மதுரை தீக்கிரையாவது அந்த மகா கவிக்கே மகிழ்ச்சி தராத ஒரு நிகழ்ச்சி

தானே! அதனுற்றுன், மதுரையின் அழிவை அவர் சுவைபட வருணிக்கவில்லே. காப்பியங்களிலே, வன்முறை நிகழ்ச்சிகளேச் சுவைபட வருணிப்பது கூடாதென்பதும் இளங்கோ கொள்கை யாதல் வேண்டும். வில்லனேயே உருவப் பாத்திரமாக அல்லாமல் அருவப் பாத்திரமாகப் படைத்தவரல்லவா!

அழற்படு காதையில் மூன்றே வரிகளில்தான் மதுரை எரிவது பற்றி இளங்கோ கூறுகின்றுர். இதோ:

**கூல மறுகும் கொடித்தேர் வீதியும்**
**பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்**
**காவெரி ஊட்டிய நாள்போல் கலங்க.**

இந்த வரிகளில், "கூலம் விற்கும் கடைவீதியும், கொடிகளேயுடைய தேர்கள் செல்லக்கூடிய ராச வீதியும், நன்கு பிரித்துச் சொல்லக்கூடிய வகையில் அமைந்த நால்வேறு தெருக்களும் அர்ச்சுனனுல் எரிக்கப்பட்ட காண்டவ வனத்தைப்போல எரியுண்டன" என்கிறுர். "அறவோர் வாழும் இடங்களில் தீயானது பரவாமல் ஒதுங்கிச் சென்று, மறவோர் எனத்தக்க தீயோர் வாழும் பகுதிகளில் அவர்கள் துன்புறும் வண்ணம் பரவியது" என்கிறுர்.

கண்ணகி மதுரையை எரித்தபோது அரசு என்ன செய்தது? அவளேத் தடுத்து நிறுத்தி மதுரையை தீ விபத்திலிருந்து காப்பாற்றுத காரணம் என்ன? மணிமேகலேக் காப்பியத்திலே உதயணன் கொலேக்குக் காரணமானவள் என ஐயுற்று மணிமேகலேயானவள் சிறை செய்யப்படுகிறுள். அதுபோல, மன்னன் இறந்ததுமே கண்ணகியைச் சிறை செய்திருந்தால் அவள் மதுரையை எரித்திருக்க மாட்டாள் அல்லவா? இந்த விஞக்களுக்கு அழற்படு காதையிலேயே விடை தரப்படுகிறது.

## கைது செய்யாததேன்?

நெடுஞ்செழியனுடைய அவையில் கண்ணகி நின்ற போது, அமைச்சர்கள் அவையிலிருந்தனர். இன்னும் அரசனுடைய உயர் அலுவலர்களும் அவையில்தான் இருந்தனர். ஆனால், அவர்கள், அரசனும் அவனைப் பின்பற்றி அரசியும் உயிர் விட்டதை அறியாதவர்களாகி, பேசாப் பதுமைகள் போல் இருந்தனராம். மெய்யிற் பொடியும் விரித்த கருங் குழலும் கையில் தனிச் சிலம்புமாக வந்த கண்ணகியைக் கண்டவுடனே "கூடலான் கூடாயினான்" என்கிறார் இளங்கோ. அதுபோல, பாண்டி வேந்தனுடைய அரசியல் சுற்றத்தாரும் அவைக்கு வந்த கண்ணகியைக் கண்ட அளவி லேயே அச்சத்தால் செயலற்று, உயிரற்ற சித்திரம் போலாகி விட்டனர்.

**அரைசர் பெருமான் அடுபோர்ச் செழியன்**
**வளைகோல் இழுக்கத்து உயிராணி கொடுத்தாங்கு**
**இருநில மடந்தைக்குச் செங்கோல் காட்டப்**
**புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்**
**அரைசு கட்டிலில் துஞ்சியது அறியாது;**
**ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர்**
**காவிதி, மந்திரக் கணக்கர் தம்மொடு**
**கோயின் மாக்களும், குறுந்தொடி மகளிரும்**
**ஓவியச் சுற்றத்து உரையவிந் திருப்ப.**

[சிலம்பு. 22: 3-11]

அரண்மனைக்குள்ளே அரசவையில் இருந்தவர்கள் நிலை இதுவாக, அரண்மனைக்கு வெளியேயிருந்த குதிரைப் படையினர், தோப்படையினர், காலாட்படையினர் ஆகிய ராணுவத்தோ ரெல்லாம் அரண்மனைக்குள்ளே நடந்ததனை அறியாது, அரண்மனை தீப்பற்றி யெரிவதை மட்டும் பார்த்துத் திகைத்தனர். அந்தத் தீயை அணைப்பதற்கு முழு மூச்சுடன் முயன்றனர்.

அரண்மனைக்கு வெளியே இருந்த படை வீரர்களின் நிலையை இளங்கோவடிகளே வருணிக்கக் கேட்போம்.

**காழோர், வாதுவர், கடுந்தேர் ஊருநர்,**
**வாய்வாள் மறவர் மயங்கினர் மலிந்து,**
**கோமகன் கோயில் கொற்ற வாயில்**
**தீ முகம் கண்டு தாம்மிடை கொள்ள**

## இளவரசன் எங்கே?

அரசனும் அரசியாரும் உயிர்துறந்த நேரத்திலே இளவரசனான வெற்றிவேற் செழியன் மதுரைக்கு நெடுந் தொலைவிலுள்ள துறைமுக நகரமான கொற்கையிலே இருந் தான். அரண்மனைக்குள்ளே இருந்த மன்னனுடைய அரசியல் சுற்றத்தார் செயலற்று விட்டனர். அரண்மனைக்கு வெளியே யிருந்த படை வீரர்கள் உள்ளே நடந்ததனை அறியாதவர் களாகித் திகைத்தனர். இந்த நிலையில்தான் கண்ணகியின் அராஜகப் புரட்சி நிகழ்ந்தது. சுருங்கச் சொன்னால், மதுரை யிலே "அரசு" என்பதாக ஒன்று இயங்காத நேரத்திலே—தன்னைத் தடுப்பாரற்ற நிலையிலே—கண்ணகி மதுரையைக் கொளுத்தினாள். இது, இளங்கோ தரும் அரசியல் சித்திரம். அவர் சேர நாட்டின் இளவரசராதலால், மதுரைக்கு அன்னிய ளான கண்ணகி அந்த நகரத்திற்குத் தீயிட்ட சந்தர்ப்ப சூழ் நிலையை மிகுந்த எச்சரிக்கையோடு சித்தரித்துக் காட்டியிருக் கிறார்.

மதுரை எரிந்து கொண்டிருந்த நேரத்தில் கண்ணகி என்ன செய்து கொண்டிருந்தாள்? அதை இளங்கோவடிகளே கூறக் கேட்போம்.

**காதலற் கெடுத்த நோயொடு உளங்கனன்று**
**ஊதுஉலைக் குருகின் உயிர்த்தனள்; உயிர்த்து,**
**மறுகிடை மறுகும் கவலையிற் கவலும்**
**இயங்கலும் இயங்கும் மயங்கலும் மயங்கும்.**

"கணவனை இழந்த துன்பத்தால் மனம் கொதிப்படைந்து, உலைக்களத்துத் துருத்தியில் எழும் தீக்காற்று போல, வெப்ப மூச்சு விட்டனள் கண்ணகி. தன் கால் போன வழி மதுரைத் தெருக்களிலே நடந்தாள். இப்படியும் அப்படியுமாகச் சுழன்று திரிந்தாள். சிறிய சந்துக்களிலும் பெரிய தெருக்களிலும் அலைந்து திரிந்தாள். சிறிது நேரம் ஓரிடத்திலே நிற்பாள்; திரும்பவும் குறிக்கோள் எதுவுமின்றி மேலே நடப்பாள். பின்னர், செயலற்று மயங்கி நிற்பாள். இப்படி, அடங்காப் பெருஞ்சினங் கொண்டு மதுரைத் தெருக்களிலே உலவும் கண்ணகியைப் பின்பற்றியது ஒரு தெய்வம்.

கொலைக்களத்தை விட்டு வெளியேறி ராச வீதியிலே நடைபோட்டபோது,

> "தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
> வைவாளில் தப்பிய மன்னவன் கூடலில்
> தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?"

என்று வினா எழுப்பி, மதுரையைக் காக்கும் தெய்வத்தைக் கண்ணகி தேடினாளல்லவா? அப்போது வராத அந்தத் தெய்வம், அவள் மதுரையை எரித்து முடித்திருந்த நேரத்திலே, அவள் எதிரே வர அஞ்சி, பின்பற்றி வந்தது

அந்தத் தெய்வத்தின் வருகையை ஒரு வெண்பாவால் அறிவிக்கிறார் இளங்கோ.

> மாமகளும் நாமகளும் மாமயிடன் செற்றுகந்த
> கோமகளும் தாம்படைத்த கொற்றத்தாள் — நாம
> முதிரா முலைகுறைத்தாள் முன்னரே வந்தாள்
> மதுரா பதிஎன்னும் மாது.

## மதுராபதி தோன்றினள்!

மதுரை நகரை "மதுராபதி" என்னும் பெயரில் ஒரு பெண் தெய்வமாகக் கற்பித்துள்ளார். இது, கவிஞர் மரபு. குமரி முதல் இமயம்வரை பரந்து கிடக்கும் பெருநாட்டை 'பாரத தேவி' என்று கற்பனை செய்து, அந்தத் தேவியை வழி பட்டு உய்யுமாறு தமிழ் மக்களை வற்புறுத்தி, அந்த வழி பாட்டுக்கெனப் பாடல்கள் பலவற்றையும் புனைந்தருளினார் பாரதியார்.

நிலம் முழுவதையும் பெண் தெய்வமாகக் கற்பனை செய்யும் வழக்கம் இந்தியப் புலவரிடமிருந்துதான் தோன்றியதோ, என்னவோ! இளங்கோவுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவரான திருவள்ளுவர், "நிலம் என்னும் நல்லாள்" என்கிறார் உலகத்தை! இளங்கோவடிகளும், "இருநில மடந்தை" என்கிறார் அழற்படு காதையிலே!

இந்த மரபை யொட்டித்தான் மதுரை மாநகரை மட்டுமே ஒரு பெண் தெய்வமாகக் கற்பித்து, "மதுராபதி" என்னும் பெயரில் அத்தெய்வத்தை சினங்கொண்ட கண்ணகி தேவியின் பின்னே கொண்டுவந்து இளங்கோ நிறுத்துகிறார்.

"கொற்கைக் கொண்கன் குமரித் துறைவன்
பொற்கோட்டு வரம்பன் பொதியிற் பொருப்பன்
குலமுதல் கிழத்தி."

என்னும் வரிகளிலே, மதுராபதியானவள் பாண்டியரின் குலத் தெய்வம் என்றும் கூறுகின்றார். அரசர்களுக்கேயன்றி, செல்வச் சிறப்புடைய வணிகர் குடும்பங்களுக்கும் குலத் தெய்வங்கள் உண்டு. கோவலன், மாதவியிடம் தனக்குப் பிறந்த ஒரே மகளுக்கு "மணிமேகலை" என்னும் தன் குலத் தெய்வத்தின் பெயரை வைத்தானல்லவா!

நாட்டின் எல்லைகளைத் தெய்வங்கள் காப்பதாகக் கற்பனை செய்வது கவிஞர்களின் மரபாக இருந்திருக்கிறது. இமய மலை தொடங்கி குமரி முனை வரையுள்ள நிலப்பரப்பு முழுவதிலும் முன்னொரு காலத்தில் தமிழரே வாழ்ந்திருந்தனர்—தமிழ் மொழியே வழங்கி வந்தது என்கின்றனர் நில நூல் வல்லார். அந்தப் புராதனத் தமிழ் நாட்டின் வடக்கெல்லையில் சிவபெருமானும், தெற்கெல்லையில் குமரித் தெய்வமும் இருந்து காவல் புரிந்து வந்ததாகவும் பண்டை நாள்தொட்டுத் தமிழர் நம்பி வந்திருக்கின்றனர். இந்த நம்பிக்கை இலக்கிய ஏடுகளிலேயும் இடம் பெற்று வந்திருக்கிறது. தமிழகத்தின் வடக்கெல்லையானது, இமயத்திலிருந்து விந்தியம்வரை குறுகி, பின்னர், விந்தியத்திலிருந்து வேங்கடம்வரை குறுகியது தமிழ் நிலம் சிறுத்துக் கொண்டே வந்த காலத்திற்குப் பிறகுதான் தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கட மலை என்று ஆனது. அப்போதும், வடக்கே திருமாலும் தெற்கே குமரியும் எல்லைத் தெய்வங்களாக நின்றுகொண்டு தமிழகத்தைக் காத்து வருவதாகத் தமிழ்க் கவிஞர்கள் கற்பித்தனர். இந்தக் கற்பனையை முதலில் சிலப்பதிகாரத்தில்தான் காண்கின்றோம்.

> ''நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு.''

என்று வேனிற் காதையில் இளங்கோ கூறுகின்றார்.

## தெய்வத் திருநகர்

கண்ணகியும் கோவலனும் மதுரை நகருள் நுழைந்த போது, அதனை, தெய்வங் காக்கும் புனிதப் பதியாகக் கருதி வலம் வந்தனர் என்று ஊர்காண் காதையில் கவிஞர் கூறியதைக் கேட்டோம். வஞ்சின மாலையிலும், மதுரையை எரிப்பதற்காகத் தனது வலது கையால் இடது கொங்கையைப் பிய்த்து எடுத்துக்கொண்ட கண்ணகி, அந்தணரை

மும்முறை வலம் வந்து பின்னர்தான் கூடற்பதியைக் கொளுத்தியதாகக் கூறுகிறார்.

பாண்டிய நாட்டின் தலைநகரைக் காக்கும்—பாண்டிய மன்னர்களின் குலத் தெய்வமாக விளங்கும்—மதுராபதித் தெய்வம் கண்ணகியைப் பார்த்து, "கேட்டிசின் வாழி, நங்கை! என்குறை" என்று கூறினாள். தனக்குள்ள மனக்குறை ஒன்றை தான் சொல்லப் போவதாகவும், அதனைப் பொறுமையுடன் கேட்டருளுமாறும் கற்புத் தெய்வமான கண்ணகிக்கு மதுராபதித் தெய்வம் வேண்டுகோள் விடுத்தது. கற்புத் தெய்வமாம் கண்ணகியின் எதிரே வர அஞ்சி, அவளது முதுகின் பின்னால் நின்று வேண்டுகோள் விடுத்தாள மதுராபதி மதுரையை எரித்த பின்னும் சினம் தணியாதிருந்த கண்ணகி, "என்னைப் பின்பற்றி வருபவளே! நீ யார்?" என்று கேட்டாள். அதற்கு மேல், "என்னுடைய மனத் துயரை நீ அறிவாயோ?" என்றும் வினா விடுத்தாள்.

> "யாரை நீ என்பின் வருவோய்? என்னுடை
> ஆரஞர் எவ்வம் அறிதி யோ?"

என்றாள்.

கண்ணகி, தனது முகத்தை வலப்புறமாகத் திருப்பி, அச்சத்துடன் தன் பின்னே நிற்கும் மதுராபதியைப் பார்க்கும் பாவனையிலே, இந்த வினாவை விடுத்தாளாம். கண்ணகியின் வினாவுக்கு மதுராபதியாள் விடையளித்தாள்.

> ஆரஞர் எவ்வம் அறிந்தேன் அணியிழாஅய்!
> மாபெரும் கூடல் மதுராபதி என்பேன்;
> கட்டுரை யாட்டியேன் யான்நின் கணவற்குப்
> பட்ட கவற்சியேன் பைந்தொடி கேட்டி.

"அணியிழாய்! உன்னுடைய வருத்தத்தையும் அறிவேன். உன்னுடைய கணவனுக்கு என் மன்னனால் நேர்ந்த கொடு

மைக்காகவும் நான் கவலைப்படுகிறேன். இந்த மாபெரும் கூடற்பதியைக் காப்பவள் நான். என் பெயர் மதுராபதி. உன்னிடம் யான் சொல்ல வேண்டியவை உண்டு'' என்று மதுராபதியாள் கூறினாள். இன்னும் கூறுகிறாள் மதுராபதி.

பெருந்தகைப் பெண்! ஒன்று கேளாய்; என் நெஞ்சம்
வருந்திப் புலம்புறு நோய்;
தோழி! நீ ஈதொன்றுகேட்டிஎம் கோமகற்கு
ஊழ்வினை வந்தக் கடை;
மாதராய்! ஈதொன்றுகேள்; உன் கணவற்குத்
தீதுற வந்த வினை.

''பெருந்தன்மையுடையவளே! எனது நெஞ்சம் வருந்திப் புலம்புவதற்குக் காரணம் ஒன்று உண்டு, கூறுகிறேன்; அதனைக் கேட்பாயாக! என் கோமகனாகிய நெடுஞ்செழிய னுக்கு வந்த ஊழ்வினை ஒன்று உண்டு, அந்த ஊழ்வினை வந்த விதத்தையும் கூறுகிறேன், நீ கேட்பாயாக! பெண்ணே! நின் கணவன் கொலையாவதற்குக் காரணமாக அவனுக்கும் பழைய வினை ஒன்று உண்டு. அதனையும் கூறுகிறேன், நீ கேட்பாயாக!''

## 'என் மன்னன் செங்கோலன்!'

இவ்வளவும், தான் சொல்லப் போவதைப் பொறுமை யுடன் கேட்டருளுமாறு, கொதிப்பேறிய நெஞ்சத்தை யுடைய கண்ணகியாளுக்கு மதுராபதியாள் விடுத்த வேண்டு கோள்.

—காதில்

மறைநா ஓசை அல்லது யாவதும்
மணிநா ஓசை கேட்டதும் இலனே;
அடிதொழுது இறைஞ்சா மன்னர் அல்லது
குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்.

"என் மன்னனுடைய காதுகள் அந்தணரின் நாவி லிருந்து எழும் மறையோசையை அல்லது ஆராய்ச்சி மணியின் அலறல் ஓசையினை இதற்கு முன் கேட்டதே இல்லை. தனக்கு அடங்காத பகை மன்னர் அல்லாது தன் குடி மக்களிலே யாரும் பழிதூற்றி அவன் கேட்டறி யாதவன்."

இது, பாண்டியன் நெடுஞ்செழியன் செங்கோலன் என்ப தற்கு மதுராபதியாள் தந்த சாட்சியம்.

பூம்புகாரில், மனுநீதிச் சோழனுடைய ஆட்சிக் காலத் திலே கன்றை யிழந்த பசுவானது ஆராய்ச்சி மணியை அடித்து ஒலியெழுப்ப, அந்த ஒலி கேட்ட மன்னன், பசுவின் குறையை அறிந்து, அதற்கு நீதி வழங்கினன் என்பதனை வழக்குரை காதையிலே செழியனிடம் கண்ணகி கூறக் கேட்டோம். அதனுல், சோழ நாட்டின் தலைநகரில் ஆராய்ச்சி மணி இருந்ததை அறிந்தோம். இங்கு, "மணி நா ஓசை கேட்டதும் இலனே" என்று மதுராபதியாள் கூறுவதால், பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையிலேயும் ஆராய்ச்சி மணி இருந்ததென்ற உண்மையை அறிய முடிகிறது. இதனுல், சேர நாட்டின் தலைநகரான வஞ்சிமா நகரிலும் ஆராய்ச்சி மணி இருந்திருக்க வேண்டுமென்பது உறுதிப்படு கின்றது.

இதற்குமேல் பாண்டிய நாட்டு மன்னர் பலருடைய செங்கோன்மையைக் குறிக்கும் பழைய கதைகளை மதுராபதி யாள் கண்ணகிக்குக் கூறுகின்ருள். பாண்டிய மன்னர்கள் காமவெறி காரணமாகவும் செங்கோல் பிறழ்ந்தவர்கள் அல்லர் என்பதனை கண்ணகிக்குக் கூறுகிருள் மதுராபதி.

"கண்ணகி, கேள்:

"மனிதனுடைய மனம் மதம் பொருந்திய யானை போன்றது. மங்கையர் பார்வையிலே அந்த மனம் வசப்

பட்டு விட்டால், காம இச்சை வரம்பு கடந்து விடுமானால், நெஞ்சானது அறிவு என்னும் பாகனுக்கு அடங்காத நிலையில் கட்டறுத்து ஓடும் என்பர் சான்றோர். ஆனால், பாண்டிய மன்னர்கள், வரம்பு கடந்த காமத்தால் ஒழுக்க நிலையிலிருந்து பிறழாதவாறு ஐம்புலன்களையும் அடக்கும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதை நீ அறிவாயாக!"

இது பாண்டியன் நெடுஞ்செழியனின், அவனுக்கு முன் வழிவழி தோன்றிய பாண்டிய வேந்தர்களின் புலனடக்கம் பற்றி மதுராபதி கொடுத்த சாட்சியமாகும்.

## கீரந்தையின் மனைவி

'கூடல் மாநகரைக் கொங்கையால் கொளுத்திய மங்கையே! இன்னும் கேள்!' என்று கூறி, மேலும் சொல்லுகிறாள் மதுராபதியாள்.

"கீரந்தை என்பவன் மனைவி, தன் கணவன் பொருள் தேடுவதன் நிமித்தம் அயலூருக்குச் சென்றபோது, "நான் யார் காவலில் வாழ்வேன்?" என்று கேட்க, "அரசனுடைய காவல் அல்லது வேறு காவலும் வேண்டுமோ? அதெல்லாம் உண்மையான காவல் ஆகுமோ?" என்று கூறி, மன்னன் காவலை நம்பி வாழுமாறு மனைவிக்கு ஆறுதல் புகன்று, அயலூர் சென்றான். இந்த உரையாடலை நள்ளிரவில நகர் சோதனைக்கு வந்த மதுரை மன்னன் கேட்டான். அதனால், கீரந்தை திரும்பி வரும்வரை அவன் வீட்டை இரவு நேரங்களிலே மாறுவேடம் பூண்டு காவல் காத்து வந்தான்.

"அயலூர் சென்ற கீரந்தை, தான் வருவதாகச் சொல்லி விட்டுச் சென்ற நாளுக்கு முன்னதாகவே ஊர் திரும்பி விட்டான். அன்றிரவும் மன்னன் வழக்கம்போல் கீரந்தையின் வீட்டைக் காவல் புரிந்தபோது, வீட்டுக்குள்ளே ஆடவன் குரல் ஒலிக்கக் கேட்டான். அவன் எவனோ

அயலான் என்று தவறுகக் கருதி, கடமை உணர்ச்சியால் தூண்டப்பட்டு, கீரந்தை வீட்டின் கதவைத் தட்டினுன் மன்னன். உண்மை அறியாத கீரந்தையின் மனைவி,

''அரைச வேலி அல்லது யாவதும்
புரைதீர் வேலி இல்என மொழிந்து
மன்றத்து இருத்திச் சென்றீர்! அவ்வழி
இன்றவ் வேலி காவா தோ?''...

என்று, தன் கணவனைக் கேட்டாள். அவள் புகன்ற சொல்லானது பழுக்கக் காய்ச்சிய ஆணி போன்று மன்னனின் காதில் புக, தான் செய்த தவறுக்காக அவன் அஞ்சினுன். அதற்குக் கழுவாயாக, பிறன் மனையின் கதவைத் தட்டிய குற்றம் புரிந்த தன் கையை வெட்டி எறிந்தான். அத்தகைய செங்கோலன் பிறந்த பாண்டியர் மரபில் கொடுங்கோலனும் தோன்றுவானே?'' என்றுள் மதுராபதி.

## பொற்கைப் பாண்டியன்

இங்கு மதுராபதி கூறுவது பொற்கைப் பாண்டியன் கதையாகும். சிலம்பில் நான்கே வரிகளில் இந்தக் கதை சுருக்கமாகத்தான் சொல்லப்படுகிறது. ஆனல், புலவர் களால் இது விரிவுபடுத்தப்பட்டு நாட்டில் வழங்கி வருகிறது. மதுராபதி மேலும் சொல்லுகிருள்:

'பாண்டிய நாட்டில் திருத்தங்கால் என்னும் சிற்றூரில் வார்த்திகன் என்னும் பார்ப்பனன் வாழ்ந்து வந்தான். வழிப் போக்கனுன பராசரன் என்னும் நான்மறையாளன் தந்த பரிசுப் பொருள்களால் வார்த்திகன் திடீர் வாழ்வு பெற்ருன். 'இவன் அரசனுக்குரிய பொருள்களைக் களவாடித்தான் புது வாழ்வு பெற்ருனே?' என்று ஐயுற்ற ஊர்க்காவலர், வார்த்தி கனை கள்வர்களை அடைக்கும் சிறையில் தள்ளினர்.

"வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பாள், தன் கணவன் மீது களவாடியதாகக் குற்றஞ் சாட்டி, அவனைச் சிறையில் தள்ளிய கொடுமைக்கு ஆற்றாது அழுதாள்; நிலத்தில் வீழ்ந்து புரண்டாள். அது கண்டு, ஐயை என்னும் தெய்வம் தனது கோயிற் கதவை அடைத்துக் கொண்டது. தெய்வம் சினங் கொண்டதைக் கேள்வியுற்ற மன்னவன்,

"கொடுங்கோல் உண்டுகொல்? கொற்றவைக் குற்ற
இடும்பை யாவதும் அறிந்தீ மின்."

"எனது ஆட்சியில் கொடுங்கோலும் நிகழ்ந்ததுண்டோ? கொற்றவைத் தெய்வத்திற்கு உற்ற இன்னலும் உண்டோ? அறிந்து வந்து கூறுங்கள்!" என்று மன்னன் தன் காவலர்களுக்கு ஆணையிட்டான். அவர்கள் சென்று, சிறையிலிருந்த வார்த்திகனைக் கொண்டுவந்து மன்னன் முன்பு நிறுத்தினர்.

மன்னன், வார்த்திகனுக்குத் தன் காவலர் இழைத்த தீமைக்காக வருத்தம் தெரிவித்து, அவனுக்கு விடுதலை தந்தான்.

அறியா மாக்களின் முறைநிலை திரிந்தவென்
இறைமுறை பிழைத்தது; பொறுத்தல்நும் கடன்.

"அறியா மாக்களின் மனம் திரிந்ததால் என் இறைமுறை பிழைத்தது; வார்த்திகனே! நேர்ந்துவிட்ட பிழையைப் பொறுத்தருள்வாயாக!" என்று வேண்டிக் கொண்டான். வார்த்திகன் வாழ்ந்து வந்த திருத்தங்கால் என்னும் ஊரை அவனுக்கே பூதானமாகத் தந்தான். அத்துடன், நல்ல விளைவிளையுடைய வயலூரையும் அரச மான்யமாகத் தந்தான். அதன்பின், கொற்றவையின் கோயிற் கதவம் பேரொலியுடன் தானே திறந்து கொண்டது.

"கொற்றவைத் தெய்வம் சினந்தணிந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் பொருட்டு, சிறைக் கோட்டங்களைத் திறந்து,

அவற்றில் அடைப்பட்டிருந்த கைதிகளுக்கு மன்னன் விடுதலை தந்தான். யானைப் பிடரி மீது அணிபுனைந்த முரசினை வைத்து, தன்னுடைய செங்கோன்மையை நாட்டு மக்கள் அறியும்படிப் பறையறையச் செய்தான்.''

## நீலி தந்த சாபம்

''அப்படிப்பட்ட செங்கோல் மன்னனே வினைவயத்தால் கொடுங்கோன்மை புரிந்தான். கணவனை இழந்ததால் கடுங்கோபம் கொண்டுள்ள கண்ணகியே! அந்தக் கதையையும் சொல்லுகிறேன் கேள்!'' என்றது மதுராபதித் தெய்வம். அந்தக் கதை வருமாறு:

''கலிங்கம் என்னும் நல்ல நாட்டிலே சிங்கபுரம் என்னும் ஊரை வசு என்பவனும், கபிலபுரம் என்னும் ஊரை குமரன் என்பவனும் ஆண்டு வந்தனர். இருவரும் செல்வ வளமுடைய பெருங்குடியிற் பிறந்த ஒன்றுவிட்ட சகோதரர்கள். சிங்கபுரமும் கபிலபுரமும் ஒன்றுக்கொன்று அண்டையிலுள்ள ஊர்களாகும். வசுவும் குமரனும் பகை கொண்டனர். அதனால், இரண்டு ஊர்களுக்குமிடையே மக்களுடைய போக்குவரத்து தடைப்பட்டது சிங்கபுரத்துக்கும் கபிலபுரத்துக்குமிடையிலே மக்கள் நடமாட்டமற்ற நிலப்பரப்பு ஒன்றும் ஏற்பட்டது செல்வம் தேடும் ஆசை காரணமாக, சிங்கபுரத்து வணிகனான சங்கமன் என்பான், வாணிபம் செய்யும் பொருட்டு, தன் மனைவியான நீலி என்பாளை உடனழைத்துக் கொண்டு கபிலபுரத்தில் புகுந்து, அங்கு கடை வீதியில் தான் கொண்டு வந்திருந்த அணிகலன்களை விற்றுக்கொண்டிருந்தான் அந்த நேரத்திலே சங்கமனுக்கு நேர்ந்த இன்னலையும் நீ கேட்பாயாக!

''நின் கணவனான கோவலன் முற்பிறப்பில் பரதன் என்னும் பெயருடன் கபிலபுரத்து அரசனுக்கு அலுவல்

புரிபவனாக இருந்தான். அவன் சிங்க புரத்திலிருந்து வந்து அணிகலன்களை விற்றுக் கொண்டிருந்த சங்கமனை, 'இவன் ஒற்றன்' எனக் குற்றஞ் சாட்டி, அரசனிடம் அவனை அழைத்துச் சென்று, அவனுக்கு மரண தண்டனை கிடைக்கச் செய்தான். சங்கமன் மனைவியான நீலி, கணவன் கொலையானதறிந்து துடித்தாள்.

"அரசர் முறையோ? பரதர் முறையோ?
ஊரீர் முறையோ? சேரியீர் முறையோ?"

என்று அழுதவளாகி, சிங்கபுரத்து மன்றங்களிலும் தெருக்களிலும் முறையிட்டுக்கொண்டு சென்றாள்.

"14 நாட்கள் சென்றபின்பு, தன் கணவனின் ஆவியொடு தான் ஐக்கியமாகும் நாள் அதுவெனக் கண்டு, அவனைப் போற்றி, ஊரிலிருந்த ஒரு மலையுச்சியிலே ஏறி நின்று,

"எம்முறு துயரம் செய்தோர் யாவதும்
தம்முறு துயரமிற் றாகுக!"

"எமக்கு இத்தகைய கொடுமையைச் செய்தவர், எம்மைப் போன்றே பெருந்துயரம் அடைவாராக!" என்று சபித்து விட்டு, மலையுச்சியிலிருந்து உருண்டு விழுந்து இறந்தாள். கண்ணகி! அந்த நீலி கொடுத்த சாபத்தின்படி கோவலனும் நீயும் இப்பிறப்பில் துன்பமடைந்தீர்கள்."

## மதுரை எரியுண்ட நாள்

இப்படி, கண்ணகியின் முன்னால் வர அஞ்சி அவளுடைய முதுகுப்புறத்தில் நின்ற மதுராபதியாள், பாண்டிய மரபில் தோன்றிய செங்கோலர் பலரின் கதைகளைச் சொல்லி, கோவலன் கொலையுண்டதற்கும் கண்ணகி துன்புற்றதற்கும் காரணமாகவுள்ள அவர்களுடைய பழைய வினையையும் சொல்லி, கண்ணகியின் கோபத்தைத் தணிவிக்க முயன்றாள்.

மதுரை எரிந்ததற்கான பழைய ஆணை ஒன்றையும் மதுராபதி கண்ணகிக்கு அறிவித்தாள்.

"ஆடித் திங்கள் பேரிருள் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி உண்ண
உரைசால் மதுரையொடு அரைசுகே டுறும்எனும்
உரையும் உண்டே நிரைதொடி யோயே!"

[சிலப்பு. 23: 133-37]

இவ்வளவையும் கண்ணகிக்குக் கூறிய பின்னர், மதுராபதித் தெய்வம் கூடல்மாநகரைக் கொளுத்திய அழலைத் தணித்துவிட்டு, மறைந்தது.

கோவலனுடைய பூர்வ வினை பற்றிய கதையை கண்ணகிக்குக் கூறிய பின்னர், "இன்னும் 14 நாள் கழித்து நின் கணவனை மானுட வடிவில் அல்லாமல் தேவ வடிவில் நீ காண்பாய்" என்று கூறி மறைந்து விட்டது மதுராபதித் தெய்வம். அதனை இளங்கோவடிகள் வாக்காலேயே பார்ப்போம்:

"வாரொலி கூந்தல்! நின் மணமகன் தன்னை
ஈரேழ் நாள்அகத்து எல்லை நீங்கி,
வானோர் தங்கள் வடிவின் அல்லதை
ஈனோர் வடிவிற் காண்டல் இல்எனா,
மதுரைமா தெய்வம் மாபத் தினிக்கு
விதிமுறை சொல்லி அழல்வீடு கொண்டது."

[சிலப்பு. 23: 173-78]

## வளையலை உடைத்தாள்

மதுராபதியின் நீண்ட "சொற்பொழிவை" மிகவும் பொறுமையுடன் கேட்ட கண்ணகி, மதுரையில் தான் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றிவிட்டதாகக் கருதினாள்.

அதாவது, தன் கணவன் கள்வனல்லன் என்பதனை மெய்ப்பித்துக் காட்டிவிட்டாள். அவனைக் கொலைசெய்த பாண்டியனை வாதில் வென்று, அவனது கூடற்பதியையும் கொளுத்திப் பழி தீர்த்துக் கொண்டாள். இனி மதுரையில் தனக்கு வேலையில்லையென்று நினைத்தாள். கணவனைக் கூடுவது ஒன்றே தான் கடைப்பிடிக்கும் கற்புநெறிக்கு உகந்தது என்பதனை உணர்ந்தாள்.

"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன்; நிற்றலும் இல்"

"என் கருத்திற்கிசைந்த கணவனைக் கண்டபின் அல்லது ஓரிடத்தில் நான் தங்கியிருக்கமாட்டேன்" என்று கூறி, மதுரை நகரின் மேற்குத் திசையிலிருந்த கொற்றவைத் தெய்வத்தின் கோயிலுக்குச் சென்றாள். அங்கு பலிபீடத்தின் மீது தன் இரண்டு கைகளையும் ஓங்கி அறைந்து, அந்தக் கைகளிலிருந்த வலையல்களைத் தகர்த்தாள். இது, இன்னமும் அவளது சினம் அடங்கவில்லை யென்பதைக் காட்டுகின்றது கொற்றவைத் தெய்வத்தின் முன்பு கண்ணகியாள் தன் கை வளையல்களைத் தகர்த்தது, விதவைக் கோலம் கொள்ளும் விருப்பத்தாலன்று; சினமிகுதியால் இராமாயணத்தில் கைகேயி தன் கணவன் உயிருடனிருந்தபோதே வளையல்களை உடைத்துக் கொள்வதனைப் பார்க்கிறோம்.

இராமனுக்கு முடிசூட்டவிருப்பதை அறிவிக்கத் தயரதன் கைகேயியின் அந்தப்புரத்திற்குச் செல்கிறான். அவனது முடிவுக்குத் தனது எதிர்ப்பைக் காட்ட விரும்பிய கைகேயி,

"விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்ன
கிளைகொள் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைதுறந்தனள் மதியினில் மறுத்துடைப் பாள்போல்
அளக வாள்நுதல் அரும்பெறல் திலகமும் அழித்தாள்."

என்கிறார் கம்பர். இந்தச் செய்யுளில் "வளை துறந்தனள்" என்று கம்பர் கூறுவது நினைவிற் கொள்ளத் தக்கதாகும்.

**"கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்;**
**மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கு"**

என்று, சோகம் ததும்பும் குரலில் சொல்லியவாறு மதுரையை விட்டு கண்ணகி வெளியேறினாள்.

"மதுரை மாநகரே! என் கணவனைக் கைப்பிடித்து கீழ்த் திசையில் புகுந்த நான், அவனை உன்பால் பறிகொடுத்து விட்டு, மேற்றிசை வழியாகத் தன்னந் தனியளாக வெளி யேறுகின்றேன்!" என்பது கண்ணகியின் வாக்கு.

## நெடுவேள் குன்றம்

மதுரை நகரிலிருந்து வெளியேறியவள் இரவு பகல் பாராது, வைகையாற்றின் ஒருகரை யோரமாக மேற்றிசை நோக்கி நடந்தாள். இன்னமும் அவளது சினம் அடங்கவில்லை யாதலால், மேடு என்றும் பாராமல், பள்ளம் என்றும் பாரா மல் வழித்துன்பங்களை ஒரு பொருட்டாக மதியாமல் பல பகல் களும் பல இரவுகளும் நடந்தாள். கணவனோடு சேருவது ஒன்றையே நினைவில் கொண்டு நடந்தாள்.

நடந்தவள், சேரநாட் டெல்லையிலுள்ள முருகன் உறை யும் நெடுவேள் குன்றத்தை யடைந்து, அதன் படிகளிலே தன் பாதங்களை வைத்து நடந்து, குன்றத்தின் உச்சியை அடைந்தாள். அங்கு நன்கு பூத்திருக்கும் வேங்கை மரத்தின் நிழலின் கீழ் இருந்து, "தீத்தொழிலாட்டியேன் யான்" என்று கூறி ஏங்கி அழுது கொண்டேயிருந்தாள். மதுரையை விட்டுப் புறப்பட்டு 14 நாட்கள் முடிந்தபோது, தன் கணவனைத் 'தொழுநாள் இது' என அறிந்து, அவனுடைய புகழைக் கூறி, அவனை வாயார வாழ்த்தினாள்.

அந்நிலையில், இந்திரனால் அனுப்பப்பட்ட தேவர்கள் அங்கு வந்து, பெருமை மிக்க மறக் கற்பினையான கண்ணகி யின் பெயரைச் சொல்லி, 'வாழ்க! வாழ்க!' என வாழ்த்தி, அவள் மீது மலர்மாரி பொழிந்தனர். அத் தேவர்கள், ஏற் கெனவே அமரர் நாடு அடைந்திருந்த கோவலனையும் தம் முடன் அழைத்து வந்தனர்.

தமிழ்ப் பத்தினி, தன் கணவனில்லாத இடம் போகங்கள் துய்க்கும் சொர்க்கமேயானாலும் அங்கு தான்மட்டும் தனித் துச் செல்ல விரும்பமாட்டாள் என்பதனைத் தேவர்களும் அறிந்திருந்தனர். அதனால், கோவலனையும் தம்மொடு அழைத்து வந்து, அவனோடு கூடி சொர்க்கத்திற்கு வருமாறு கண்ணகியை அழைத்தனர். அவளும் கோவலனுடன்கூடி சொர்க்கத்திற்குச் சென்றாள். இதனை,

**"பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ், ஓர்**
**தீத்தொழி லாட்டியேன் யான்' என்று ஏங்கி,**
**எழுநாள் இரட்டி எல்லை சென்றபின்,**
**'தொழுநாள் இது'எனத் தோன்ற வாழ்த்தி,**
**பீடுகெழு நங்கை பெரும்பெயர் ஏத்தி,**
**வாடா மாமலர் மாரி பெய்து ஆங்கு**
**அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்தக்**
**கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு**
**வான ஊர்தி ஏறினள் மாதோ**
**கானமர் புரிகுழல் கண்ணகி"**

[சிலம்பு. 23: 191–200]

என்ற வரிகளில் அறிவிக்கின்றார் இளங்கோ.

வீரரானோர் சொர்க்கம் புகுவர் என்றும், பூர்வ கர்மங் களிலிருந்து விடுபட்டுப் பிறவியறுத்தோர் வீடுபேறு பெறுவர் என்றும் சொல்வர் பெரியோர். அதன்படி, வீராங்கனையான கண்ணகி வீரருக்குரிய சொர்க்கம் புகுந்தாள். அவள் பெற் றது வீடு பேறு அல்ல,

இத்துடன் மதுரைக் காண்டத்தை முடிக்கிறார் இளங்கோவடிகள். மதுரைக் காண்டத்தின் இறுதியில் கண்ணகியின் பெருமையை விளக்கும் வெண்பா ஒன்றையும் சேர்த்து வைத்துள்ளார். அது வருமாறு:

**தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுவாளைத்**
**தெய்வம் தொழுந்தகைமை திண்ணிதால் - தெய்வமாய்**
**மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி**
**விண்ணக மாதர்க்கு விருந்து.**

இந்த வெண்பாவைப் படிக்கும்போது,

**"தெய்வம் தொழாஅருள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

என்னும் குறட்பா நினைவுக்கு வருகிறதல்லவா! இந்தக் குறட்பாவுக்கு உரையாக அமைந்துள்ளது சிலம்பில் சொல்லப்படும் கண்ணகியின் வாழ்க்கை வரலாறு.

இத்துடன் மதுரைக் காண்டம் முடிகிறது. மண்ணகத்தவளாகிய கண்ணகி விண்ணவர் போற்றும் தெய்வமாகி விட்டாளாதலால், அந்தப் பத்தினித் தெய்வத்தை உலக மக்கள் வழிபடும்படிச் செய்வதற்காக வஞ்சிக்காண்டத்தைப் படைத்திருக்கிறார் இளங்கோ.

## அறக்கற்பும் மறக்கற்பும்

மதுரைக் காண்டத்தில் வழக்குரை காதை தொடங்கி அழற்படு காதைவரை கண்ணகி கடைப்பிடிக்கும் கற்புநெறி பற்றிச் சிறிது விமர்சிக்க வேண்டும்.

புகார்க் காண்டத்தில் கணவன் தன்னை மறந்து மாதவி வீட்டில் தங்கியிருந்தபோது, அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய, பவள வாள் நுதல் திலகம் இழப்ப, மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப, தாலியான மங்கல அணி ஒன்றைத்

தவிர மற்ற அணிகளைத் துறந்து கண்ணகி அவலநிலையில் வாழ்ந்தாளே, அது அறக்கற்பு! கோவலன் திரும்பவும் தன்னை யடைந்து,

"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலம்தரு வான்பொருள் குன்றந் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு"

என்று கூறி வருந்தியபோது, "சிலம்புள கொள்ளுங்கள்" என்று சொல்லி, தன்னிடம் எஞ்சியிருந்த காற்சிலம்புகள் இரண்டையும் கோவலனிடம் கொடுத்தாளே, அதுவும் அறக் கற்புதான்!

கண்ணகி தந்த சிலம்புகளைப் பெற்றுக் கொண்ட கோவலன்,

"சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு
உலந்தபொரு ளீட்டுதல் உற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்கு
ஏடலர் கோதாய் எழுக!"

என்று அழைத்தபோது, மறுப்பு ஏதும் சொல்லாமல், மண்மக ளறியாத வண்ணச் சீறடி படைத்த கண்ணகி தேவி கோவ லனைப் பின்பற்றி மதுரைக்குச் சென்றாளே, அந்தப் பண்பும் அறக்கற்புதான்.

மதுரையிலே பாண்டி மன்னனால் கோவலன் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்டதும், கொலைக்களத்திற்கு ஓடோடிச் சென்று வெட்டுண்டு கிடந்த கணவனைக் கண்டு வேதனைப்பட்டு அழுதாளே, அதுவும் அறக் கற்புதான்.

அதற்குமேல், கொலைக்களத்தில் வெட்டுண்டு கிடந்த கணவன் உயிர் பெற்று எழுந்து சொர்க்கம் சென்றானே, அப் போது அவனுடன் சேர்ந்து கண்ணகியும் சொர்க்கம் புகுந்

திருந்தால், அதுவரை அவள் கடைப்பிடித்த அறக்கற்புக்கு அது சிகரமாக அமைந்திருக்கும். அப்படிச் செய்யாமல்,

"காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் தனைக்கண்டித் திறம்கேட்பல் யான்"

என்று கூறி, மதுரை மன்னனுடைய அரசவைக்கு தானே வலுவிற் சென்றாளே, அது அறக்கற்பு ஆகாது. சென்றவிடத்தில், மன்னனிடம் வழக்குரைத்து, அவன் உயிர் துறப்பதற்குக் காரணமானாளே, அதுவும் அறக்கற்பு ஆகாது. மன்னன் உயிர் துறந்ததைக் கண்ணாரக் கண்டபின்னரும் சினம் தணியாமல்,

'ஒட்டேன்; அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்'

என்று சூளுரைத்துக் கூடற்பதியைக் கொளுத்தி முடித்தாளே அதுவும் அறக்கற்பு ஆகாது. அறக் கற்பிலிருந்து வேறுபட்ட இந்த வன்செயல்களுக்கு என்ன பெயர் வைப்பது? அரசை அழித்து. அணி மதுரையை எரித்த செயலானது அறக் கற்பு ஆகாதென்றால், 'அதனினும் இழிந்த ஒன்றுதானா?' என்றால், 'இல்லை' என்று உறுதியாகச் சொல்லுவேன். 'அப்படியானால், மதுரையில் கண்ணகி நிகழ்த்திய வன்முறைச் செயல்கள் அதற்குமுன் அவள் கடைப்பிடித்த அறக்கற்பை விடவும் சிறந்த ஒன்றுதானா?' என்று கேட்டால், "ஆம்" என்பதுதான் இளங்கோ தரும் பதிலாகும். அறக் கற்பினும் சிறந்தது என்றால், அதற்கு என்ன பெயர் வைப்பது? நாம் வைப்பானேன், உரையாசிரியர்களே அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள்!

கோவலன் கொலையாவதற்கு முன்வரை கண்ணகி கடைப்பிடித்த அமைதியை "ஆறிய கற்பு" என்றும், அவன் கொலையான பின்னர் கண்ணகி வெளிப்படுத்திய வீரத்தை "சீறிய கற்பு" என்றும் சொல்லுகிறார் அடியார்க்கு நல்லார்.

இளங்கோவடிகளும், ஆறிய கற்பைக் கடந்து சீறிய கற்பைக் கண்ணகி கடைப்பிடித்த பின்னர், அவளுக்கு "வீர பத்தினி"—"மா பத்தினி"—"பெரும் பத்தினி" என்றெல்லாம் பட்டங்கள் கொடுத்திருக்கிறார். இத்தகு வீரபத்தினியை சிலம்பில் தவிர, வேறு மொழியிலுள்ள காபியம் எதிலும் காண முடியவில்லை.

## கண்ணகியும் சீதையும்

இராமாயண நாயகியான சீதையானவள் கண்ணகியைப் போன்று இராவணனுடைய அரசவைக்கு தானே வலுவில் சென்று, தனது விடுதலையைக் கோரி அவனுடன் வாதாட வில்லை. அவனாக தான் இருந்த அசோக வனத்தை நாடி வந்து, தன்னுடன் உரையாடியபோதுதான் அவனுடைய இழி செயலை எடுத்துக்கூறி, அவனை ஏசுகின்றாள்.

பாஞ்சாலி, துரியோதனன் அவையில் நின்றுகொண்டு தன்னைச் சூதில் பணயம் வைத்த தருமனது செயல் நியாய மற்றது என்று வாதாடுகின்றாள். தன் துகிலை உரிந்து அவமானப்படுத்திய துச்சாதனனுடைய ரத்தத்தை எண்ணெய் ஆக்கித் தன் கூந்தலை முடிக்கப்போவதாகவும், அதுவரை தன் கூந்தலை முடிக்கப் போவதில்லையென்றும் சூளுரைக்கின்றாள். பாஞ்சாலி, தானாக விரும்பி—கண்ணகியைப் போன்று—துரியோதனனுடைய அவைக்கு வலுவிற் சென்று வாதாட வில்லை. துச்சாதனன்—தன் விருப்பத்திற்கு மாறாக—தன்னை வலுவில் இழுத்துப்போய் அரசவையில் நிறுத்தியதால்தான் பாஞ்சாலி வாது பேசத் தொடங்கினாள்.

காளிதாசர் புனைந்த சாகுந்தலம் நாடகத்தின் தலைவியான சகுந்தலை என்பவள், தன் கணவனான துஷ்யந்த மன்னனுடைய அரசவைக்கு தானே விரும்பிச் செல்கிறாள். அரசனுடன் வாதப் போர் நடத்த அல்ல; தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்க!

மதுரையில் கண்ணகி நிகழ்த்திய அரசியல் புரட்சி உலக காப்பியம் எதிலும் காணமுடியாத புதுமையாகும். கண்ணகிக்கு உவமை கண்ணகியேதான். அதுபோல, சிலம்புக்கு உவமை சிலம்பேதான்! உலக மகாகவிகளிலே இளங்கோவுக்கு உவமை இளங்கோதான்!

'கண்ணகி மதுரை மாநகரைக் கொளுத்தியது குற்றமாகாது' என்று ஏற்கனவே கூறினேன். அநீதியைச் சுட்டெரிப்பது காப்பியந்தோறும் நாம் காண்கின்ற காட்சியே என்றும் சொன்னேன். இராமாயணத்திலே அனுமன் இலங்கையை எரித்த காட்சியைச் சான்று காட்டி, கண்ணகி மதுரையை எரித்த செயலில் வான்மீகிக்கும் கம்பனுக்கும் உடன்பாடு உண்டு என்றும் சொன்னேன். ஆனல், "இராமாயணத்தில் இலங்கையை எரித்தது காப்பிய நாயகியான சீதை அல்ல; தூது சென்ற அனுமன்தான்" என்று கூறி, "சிலம்பில் காப்பிய நாயகியே மதுரையை எரிக்கிருளே, அது கம்பனுக்கு உடன்பாடாகுமா?" என்ற கேள்வியும் எழத்தான் செய்கின்றது இதற்கும் பதிலளிக்க வேண்டுமல்லவா? காப்பியங்களில் வரும் எரியூட்டும் காட்சிகள் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்பது முக்கியமல்ல, அந்தக் காப்பியங்களை இயற்றிய கவிஞர்கள் என்ன கருத்துடன் அந்தக் காட்சிகளைப் படைத்தார்கள் என்பதுதான் முககியம். சிலம்பில் காப்பிய நாயகியே மதுரை மாநகரை எரிககிருள். இராமாயணத்திலே காப்பிய நாயகியான சீதையே இலங்கையை எரிக்கவில்லை; அந்தக் காப்பியத்தின் மூன்ருந்தரப் பாத்திரமான அனுமன்தான் எரித்தான். இதனுல், அநீதியைச் சுட்டெரிக்கும் ஆவேசத்திற்கு சீதை விலக்கானவள் என்று யாரும் கருதிவிட வேண்டாம். அவளுக்கும் எரிக்கும் நினைப்பு இருந்திருக்கிறது.

சீதையைக் கண்டுபிடித்து, இராமன் கொடுத்த கணையாழியை அவளிடம் கொடுத்து விட்டான் அனுமன். ராமனிடம் கொடுக்கும்படி சீதை கொடுத்த சூடாமணியையும்

அவன் பெற்றுக் கொண்டான். சீதையிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படும் நேரத்திலே அந்த மிதிலைச் செல்வியிடம் ஒரு விண்ணப்பம் செய்கிறான் அனுமன். அது வருமாறு:

"அன்னாய்! இந்த அடியவனின் தோளின்மேல் தாங்கள் ஏறிக் கொண்டால், தங்களைக் கொண்டுபோய் இராம னுடைய திருவடிகளிலே வைத்து விடுகிறேன்."

அனுமனின் விண்ணப்பத்தை ஏற்க மறுத்து, சீதை கூறுகிறாள்:

**அல்லன் மாக்கள் இலங்கையது ஆகுமோ?**
**எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்**
**சொல்லினால் சுடுவேன்; அது தூயவன்**
**வில்லின் ஆற்றற்கு மாசு என்று, வீசினேன்.**

"அனுமனே! இங்கு நான் சிறைப்பட்டிருப்பது, என்னை விடுவித்துக் கொண்டு இராமனிடம் சொல்ல முடியாததால் அன்று! எனக்கும் ஒரு நினைப்பு வந்தது. இலங்கையை மட்டு மல்லாமல், இராவணன் எனக்கு இழைத்த அநீதியைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கும் உலகங்கள் அனைத்தையுமே ஒரு சொல்லால் சுட்டெரிக்க வேண்டும் என்று. ஆனால், என் தலைவனான இராமன் தன் கோதண்டத் தின் ஆற்றலைக் காட்டி இராவணனை வென்று என்னை மீட்கும் வரை நான் பொறுத்திருப்பது என்ற முடிவுக்கு வந்தேன். எனது ஆற்றலால் இராவணாதியரையும் இலங்கையையும் அழித்து என்னை விடுவித்துக் கொள்வது இராமனுடைய கோதண்டத்திற்கு இழுக்கு உண்டாக்குவதாகும் என்று எண்ணி, ஒரு சொல்லால் உலகத்தைச் சுட்டெரிப்பது என்ற எண்ணத்தைத் தூக்கி யெறிந்து விட்டேன்."

இதனால், ஊரை எரிக்கும் எண்ணம் கம்பன் கண்ட சீதைக்கும் உடன்பாடுதான் என்பது புலப்படுகிறதல்லவா?

-கண்ணகி மதுரை நகரை மட்டுந்தான் எரித்தாள். சீதை யானவள், இலங்கையுள்ளிட்ட இந்த நிலவுலகத்தை மட்டுமல் லாமல், அண்டாண்டங்களைக் கொண்டுள்ள உலகங்களை யாவையுமே தன் ஒரு சொல்லால் சுட்டெரிக்க வேண்டு மென்று நினைத்தாள். அப்படிச் செய்யாததற்குக் காரணம், எரிப்பது குற்றம் என்று அவள் எண்ணியதா? அல்ல; தன் னுடைய கணவன் இருக்கும்போது தான் அதைச் செய்வது குற்றம் என்றுதான் அவள் எண்ணினாள். கண்ணகியோ கணவனை இழந்தவள். அதனால், அவள் மதுரையை எரித் தாள்.

இனி, வஞ்சிக் காண்டத்துள் புகுவோம்.

# 8

# சேர மன்னனின் வடபுலப் படையெடுப்பு

வஞ்சிக் காண்டத்திலே குன்றக் குரவை முதல் காதை யாக அமைந்துள்ளது. அந்தக் குன்றக் குரவையில் முருகன் வழிபாடே பிரதானமாக அமைந்திருக்க வேண்டும். ஏனெனில், தொல்காப்பியர் சொன்ன நிலத் தெய்வங்களிலே குறிஞ்சிக்குரிய தெய்வம் முருகனே அல்லவா! ஆனால், குன்றக் குரவையில் தொடக்கத்திலும் இறுதியிலும் கண்ணகி வழி பாடே நிகழ்த்துகின்றனர் மலைக் குறவர்கள். இடையில் மூன்றே செய்யுள்களில் முருகனையும் வழிபடுகின்றனர். இவையன்றி, அகத்திணை இலக்கணப்படி, குறிஞ்சி நிலப் பெண் ஒருத்தி, தான் காதலித்த தலைவனை மணஞ் செய்து கொள்ள விரும்பி, அதற்கு முருகன் அருளை வேண்டுவதும் நிகழ்கின்றது

பொதுவாக, குன்றக் குரவையில் கண்ணகிதான் குரவர் மக்கள் வழிபடும் பிரதான தெய்வம், முருகனை வழிபடுவது அடுத்தபடியாகத்தான். புகார்க் காண்டத்தில் வரும் இந்திர விழவூரெடுத்த காதையில் இந்திரனுக்கு மட்டுமே வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது, புகார் நகர மக்களால். மதுரைக் காண்டத்தில் வரும் வேட்டுவ வரியிலே, பாலை நிலத் தெய்வ மான கொற்றவைக்கு மட்டுமே வழிபாடு நிகழ்கின்றது. அப் படியே, ஆய்ச்சியர் குரவையிலே முல்லை நிலத் தெய்வமான

திருமாலை மட்டுமே வழிபடுகின்றனர் ஆய்ச்சியர்கள். குன்றக் குரவையிலும் முருகனை மட்டுமே வழிபட்டிருக்க வேண்டும் மலைக் குறவர்கள். அப்படிச்கின்றி, கண்ணகியையே முதல் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். காரணம், வஞ்சிக் காண்டத் தொடக்கத்திலே கண்ணகி தெய்வமாகி விட்டதுதான். அவள் தெய்வமாகிவிட்ட பின்னர், வேறொரு தெய்வத்தை பிரதானமாகக் கருதி வழிபடுவது, காப்பியத் தலைவிக்கு சிறப்பு செய்வதாகாது. அதனாற்றான், வஞ்சிக் காண்டத்தின் தொடக்கக் காதையில் —குன்றக் குறவையில்—கதையின் தொடர்புக்கேற்பவும் கண்ணகி வழிபாட்டைக் காட்டுகிறார் ஆசிரியர்.

கொடுங்கோளூரை யடுத்துள்ள திருச்செங்குன்றத்தின் மீது ஏறி, அங்குள்ள வேங்கை மரத்தின் நிழலில் கண்ணகி நின்றபோது, குன்றத்தில் வாழும் குறவர்கள் அவளைக் கண்டனர். ஒரு முலை இழந்த கோலத்துடன் அவள் இருப்பது கண்டு வியப்படைந்தனர்.

> "மலைவேங்கை நறுநிழலில் வள்ளிபோல்வீர்! மனம்நடுங்க
> முலையிழந்து வந்துநின்றீர்; யாவிரோ?"

என்று கேட்டனர். "மலை வேங்கையின் குளிர்ந்த நிழலிலே எம் குலத் தெய்வமான வள்ளி நாயகியைப் போன்று வந்து நின்றுகொண்டிருக்கிறீரே! உம்மைப் பார்த்து எம்முடைய மனம் நடுங்குகின்றதே! நீர் யாவிரோ?" என்பது குறவர் குடியினர் விடுத்த கேள்வி.

இதற்குக் கண்ணகி அளித்த பதிலை இளங்கோவடிகளே கூறக் கேட்போம்.

> —முனியாதே
> மணமதுரையோடு அரசு கேடுற
> வல்வினைவந்து உருத்தகாலைக்
> கணவனையங்கு இழந்துபோந்த
> கடுவினையேன் யான்

''கலியாண மதுரையோடு அங்கு நிலவிய பாண்டியனது அரசும் தீவினைக்கு ஆட்பட்டவளான என்னால் அழிந்தது. என் கணவனையும் அந்த மதுரையிலேயே பறிகொடுத்தேன். பின்னர், தன்னந்தனியளாக, கண்டவர் நடுங்கும் கோலத்துடன் இங்கு வந்து நிற்கிறேன். தீவினையே என் வடிவத்தில் நிற்கின்றது'' என்றாள். இந்த நிலையில்தான் கோவலனுடன் வந்த வானவர்கள் கண்ணகியை விண்ணகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

குறவர் விடுத்த வினாவுக்கு, அவர்களைக் கோபிக்காமல் மிகுந்த அமைதியோடு கண்ணகி பதிலளித்தாள் என்பதைப் புலப்படுத்த, ''முனியாதே'' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் இளங்கோ. கண்ணகியை சொர்க்கத்திற்கு அனுப்ப வேண்டும் அல்லவா? மதுரையை எரித்த சீற்றந் தணியாத நிலையில் அந்த வீராங்கனையை சொர்க்கத்திற்கு அனுப்பினால், அதையும் எரித்து விடுவாளோ என்று இளங்கோவடிகளுக்கு அச்சம்! அதனால்தான் ''முனியாதே'' என்னும் சொல்லால், 'அவளுடைய கோபம் தணிந்து விட்டது' என்கிறார்.

தன்னால் எரிக்கப்பட்ட மதுரையை ''மணமதுரை'' என்கிறாள் கண்ணகி. இந்தச் சொல்லுக்குக் ''கலியாண மதுரை'' என்று பொருள் கூறுகிறார் அரும்பத உரைகாரர். இறைவனான சுந்தரேசுவரருக்கும் இறைவியான மீனாட்சிக்கும் திருமணம் நடந்தது மதுரையில்தானே! அதனாற்றான், ''மணமதுரை'' என்கிறார்போலும். அதன் உட்பொருளையுணர்ந்து 'கலியாண மதுரை' என்று விளக்கந் தந்தார் அரும்பதவுரைகாரர். மீனாட்சி—சுந்தரேசர் திருமணம் புராண வடிவம் பெற்றது பிற்காலத்தில்தான். ஆனால் சிலப்பதிகார காலத்திலேயே நாட்டில் அது வழங்கி வந்திருக்கும் என்று நம்பலாந்தானே!

குன்றக் குரவை முழுவதிலும் மூவர் போற்றப் பெறுகின்றனர். அவர்களிலே முதன்மை பெறுவது, குறிஞ்சி நிலத் தெய்வமான முருகன் அல்ல; அந்த முருகனுக்குரிய நெடுவேள்

குன்றத்தில் போய் நின்ற கண்ணகித் தெய்வமேயாவாள். இதனால், முருகனுக்குரிய குறிஞ்சி நிலத்தை கண்ணகித் தெய்வத்திற்கும் உரியதாக்கி விட்டார் இளங்கோ.

வஞ்சிக் காண்டத்தின் இறுதியில் வரும் வாழ்த்துக் காதையிலேயும் தன் தோழியரான தேவந்தி, ஐயை ஆகியோரைப் பார்த்து,

"வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்"

என்று கூறுகின்றாள் கண்ணகி.

## முதலில் வழிபட்டது யார்?

சிலப்பதிகாரப் பதிகத்திலே, "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்" என்கின்றார் ஆசிரியர். ஆனால் உண்மையில் கண்ணகி வழிபாட்டைத் தொடங்கி வைப்பது, உலக நியதிப்படி உயர்ந்தோராகக் கருதப்படும் அந்தணரோ, அரச குடியினரோ, வணிக மக்களோ அல்லர்; நாலாம் வருணத்தினரான வேளாண் குடிமக்களும் அல்லர்; நால் வருணப் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்டவராகத் தொல்காப்பியரால் கூறப்படும் மலைக் குறவர்களே முதன் முதலில் கண்ணகி வழிபாட்டைத் தொடங்கி வைக்கின்றனர். இதனால், கண்ணகி தேவி முதலில் குறிஞ்சி நிலத்தில்தான் கொண்டாடப்பட்டாள் என்பது புலனாகின்றது.

நெடுவேள் குன்றத்தின் மீது வேங்கை மரத்தின் நிழலில் நின்ற கண்ணகியானவள், வான ஊர்தியில் தன் கணவன் கோவலனுடன் ஏறி, வானகம் சென்ற பின்னர்,

"இவள்போலும் நங்குலக்கோர்
இருந்தெய்வம் இல்லை; ஆகலின்
சிறுகுடி யீரே! சிறுகுடி யீரே!
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!"

என்கின்றனர் குறவர் குலத்து மக்கள். இதனாலும், மண்ணகத்தில் கண்ணகி விழாவைத் தொடங்கி வைத்தது பெருங்குடியினரல்லர், சிறுகுடியினரே என்பது புலனாகின்றது.

கண்ணகித் தெய்வத்திற்கு முதன் முதலில் கோயில் எழுப்பிய பெருமையும் மலைவாழ் குறவர்களுக்கே உரியதாகும். இதனை,

"நிறங்கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை
நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடி யீரே!"

உயிரோடு வந்து கண்ணகி நின்ற வேங்கை மரத்தின் கீழேயே அவளுக்குக் கோயில் எடுப்பித்து அவளை வழிபட வேண்டும் என்கின்றனர் குறவர் குலத்து மக்கள். முதன் முதலில் கண்ணகிக்குக் கோயில் எழுப்பியது நெடுவேள் குன்றத்துக் குறவர்கள்தான். அதன் பின்னர்தான் கோவேந்தனான செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பினான்.

"பீடுகெழு நங்கை பெரும்பெயர் ஏத்தி
வாடா மாமலர் மாரிபெய்து ஆங்கு,
அமரர்க்கு அரசன் தமர்வந்து ஏத்தக்,
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான ஊர்தி ஏறினள் மாதோ!
கானமர் புரிகுழல் கண்ணகி"

என்று குன்றக் குரவையின் தொடக்கத்திலும் கூறப்பட்டிருக்கின்றது. அதனால், "முதன் முதலில் கண்ணகியை வாழ்த்தி வழிபட்டது வானகத்துத் தேவர் என்று சொல்லக் கூடாதோ? பதிக ஆசிரியர் கூற்றுப்படி, முதன் முதலில் உரைசால் பத்தினியை உயர்ந்தோர்தான் ஏத்தினர் என்று கொள்ளக் கூடாதோ?" எனக் கேட்கலாம்.

வானகத்துத் தேவர்களின் வரவும், அவர்கள் கண்ணகியை வாழ்த்தியதும், கோவலனுடன் கண்ணகி விண்ணகம் சென்றதும் கதையை மங்களகரமாக முடித்து வைக்கக் கவிஞர் இளங்கோ செய்யும் கற்பனைகள்தானே! அவற்றைக் கழித்துப் பார்த்தால், மண்ணக மாந்தர்களுக்குள்ளே கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்து, முதன்முதலில் அவளை வழிபட்டது நெடுவேள் குன்றத்து மக்கள்தானே!

குன்றக் குரவையின் இறுதியிலும் கண்ணகியையே வாழ்த்தித் தங்களுடைய வழிபாட்டை முடிக்கின்றனர் குறவர் குடியினர். அதையும் பார்ப்போம்:

"முலையினால் மாமதுரை கோளிழைத்தாள் காதல்
தலைவனை வானோர் தமராரும் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலை ஒன்று பாடுதும் யாம்"

"தன் ஒரு முலையினாலே மிகப் பெரிய மதுரை நகரை அழித்தவளின் காதலனான கோவலனை, வானகத்துத் தேவர்கள் தாமே அழைத்து வந்து அப்பத்தினிக்குக் காட்டிய காட்சியானது காண்பதற்கு அரியது; ஒப்புவமை அற்றது. ஆகவே, அந்த அற்புத நிகழ்ச்சியை இனி பாடுவோமாக!"

பாடுகம் வா, வாழி, தோழி!யாம் பாடுகம்,
பாடுகம் வா, வாழி, தோழி!யாம் பாடுகம்;
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை ஏத்தியாம் பாடுகம்;
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குல்நம் பைம்புனத்து உள்ளாளே;
பைத்தர வல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரே!
வானக வாழ்க்கை அமரர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே

**கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்**
**வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளே!"**

'தோழி! மதுரை வேந்தனானவன் தன்னுடைய செங் கோன்மையி லிருந்து தவறினான். அதனால், மீனக்கொடி பறக்கும் மாடங்கள் நிறைந்த மதுரையம்பதியே எரியுமாறு செய்தாள் அப்பத்தினி. அவளை நாம் போற்றுவோம் கைதொழுது ஏத்துவோம்.

"அவள் பெருமையுடையவள், பத்தினிப் பெண்களால் தொழுவதற்குரியவள்; அவள் பசுமையுடைய நமது புனத் திலே இருக்கின்றாள். அவளுடைய கணவனைத் தேவர்கள் தாமே கொண்டு வந்து அவளுக்குக் காட்டி அவளைப் போற்றியதை யாம் கண்ணாரக் கண்டோம்.

"விண்ணகத்தில் வாழ்வோரான தேவர்களும் தொழுது; போற்றும்படியாக நம் மலையகத்திலே வேங்கை மரத்தின் கீழே வந்து நின்றாள். அப்படி நின்றவள், தன் கணவனோடு கூடி வானுலக வாழ்க்கையையும் பெற்றனள். அவளைப் போற்றுவோமாக!"

இது, நெடுவேள் குன்றத்தில் வாழும் குறவர்குடிப் பெண்கள் எல்லோருமாகக் கூடி நடத்திய கண்ணகி வழிபாடு. ஆனால், அவர்களுடைய வாக்கிலே கண்ணகி என்ற பெயர் வரவில்லை. அவர்களுக்கு வேங்கை மரத்தின் கீழே வந்து நின்றவள் ஒரு மாபெரும் பத்தினி என்பதும், ஒரு முலையால் கூடற்பதியை எரித்தவள் என்பதும் மட்டுமே தெரியும். அதனால் அவள் பெயரை யறியாத நிலையில் "ஒரு முலையிழந்த நங்கை" என்று அழைத்து அவளை வழிபடுகின்றனர்.

நெடுவேள் குன்றத்தின் மீது கண்ணகியை முதன் முதலில் பார்த்த குறவர்கள், "எங்குலத்து வள்ளிபோல்வீர்" என்று கூறினார். அடுத்து, தங்கள் குலத்தவரைப் பார்த்து,

'இவள்போலும் நங்குலக்கோர் இருந்தெய்வம் இல்லை' என்றும் கூறினராதலால், கண்ணகி தேவியை, தங்கள் குலத்திற் பிறந்து, களவியல் முறைப்படி முருகனை மணந்த வள்ளி நாயகியாகவே அவர்கள் கருதினர் என்பது தெரிகிறது.

குன்றக் குரவையில், மலைநாட்டுக் காளை யொருவனைக் காதலித்த கன்னியொருத்தி, தன் தோழியருடன் கூடி, தான் காதலித்த தலைவனே தன்னை மணக்க அருள் புரியுமாறு முருகனை வேண்டிப் பாடுகிறாள்:

சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே!

அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே!

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கைவே லன்றே!
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே!

குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவநின் அடியிணை தொழுதேம்,
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநல் மணம்; விடு பிழைமணம் எனவே.

## செங்குன்றத்தில் சேரன்

குன்றக்குரவையை யடுத்து காட்சிக் காதையை வைத்திருக்கிறார் இளங்கோவடிகள். அந்தக் காதையிலே சேர மன்னன் செங்குட்டுவன் தன் பட்டத்து அரசியுடன் மலை வளம் காணும் பொருட்டு வஞ்சி நகரைவிட்டு நீங்கி நெடுவேள் குன்றத்துக்கு வருகிறான்.

"மாநீர் வேலிக் கடம்பெறிந்து இமயத்து
வானவர் மருள மலைவிற் பூட்டிய
வானவர் தோன்றல்"

என்னும் வரிகளிலே சேர மன்னனுடைய சிறப்புகளை யெல்லாம் கூறி, அவனை அரங்கிற்குக் கொண்டு வருகின்றார் இளங்கோ.

சேர மன்னரை "வானவர்" என்று சொல்வது இலக்கிய மரபு. கடலின் நடுவே விளங்கிய கடம்பினை வெட்டியெறிந்து தன் ஆற்றலைப் புலப்படுத்தியவன் என்று ஒரு சேர மன்னன் புகழப்படுகிறான். இதுபற்றி விவரமாக அறிந்துகொள்ள இலக்கியம் எதுவும் நமக்குக் கைகொடுக்கவில்லை. ஆயினும், இது கற்பனைச் செய்தியாக இருக்க முடியாது. வரலாற்று நிகழ்ச்சி என்றே நம்பலாம். வேறெந்தக் கவிஞரையும் விடவும், சேர மன்னன் கடல் நடுவே இருந்த கடம்பினை வெட்டியெறிந்த நிகழ்ச்சியை இளங்கோவடிகள்தான் உணர்ச்சியோடு கூறுகின்றார்.

இமயமலைப் பிரதேசத்திலுள்ள மன்னர்களெல்லாம் மருளுமாறு தனது வில் சின்னத்தினை இமயப் பிடரியில் பொறித்தானும் சேரமன்னன். இமயமலைப் பிரதேசத்திலுள்ள மன்னர்களையும், மக்களையும் "வானவர்" என்றழைப்பது இலக்கிய மரபு இதனையொட்டியே, "இமயத்து வானவர் மருள மலைவிற் பூட்டிய வானவர் தோன்றல்" என்று கூறி, தன் அண்ணனை சேரன் செங்குட்டுவனை இளங்கோ அறிமுகப் படுத்துகின்றார்.

தேவர்கள் தலைவனான தேவேந்திரன் விண்ணுலக மகளிரொடு, வண்ண வேறுபாடுகளுடைய மலர்கள் நிறைந்த அழகிய பூங்காவின்கண் விளையாட விரும்பி, தன் வெள்ளை யானையின் மீது ஏறிப் புறப்பட்டது போன்று சேரமன்னன் செங்குட்டுவன் மலைவளம் காணப் புறப்பட்டானும்! சேரமா

தேவி கோவேண்மாளைச் சூழ்ந்து ஆய மகளிர் பலரும் நெடு வேள் குன்றத்திற்கு வருகை தருகின்றனர். சேரனின் தளபதி வில்லவன் கோதை, அமைச்சர் அழும்பில்வேல், சிற்பக்கலை நூல் கற்ற புலவர்கள் ஆகியோரும் செங்குட்டுவனைச் சூழ்ந்த வர்களாகி குன்றத்தையடைந்தனர்.

அங்குள்ள குறவர் மக்களெல்லாம் ஒன்று கூடி, மலைவளங் காணவந்த மன்னனை யணுகி, அரிய பொருள்கள் பலவற்றை அவனுக்குக் காணிக்கையாக்கினர்

## சாத்தனார் கூறுகிறார்!

ஒரு முலையிழந்த கோலத்துடன் தாங்கள் வாழும் பெரு மலை மீது வேங்கை மரத்தின் கீழ் நின்றவண்ணம் தங்களுக்குக் காட்சியளித்த கண்ணகித் தெய்வத்தைப்பற்றி குறவர்கள் மன்னனிடம் கூறுகின்றனர். அது வருமாறு:

ஏழ்பிறப்பு அடியேம்; வாழ்கநின் கொற்றம்!
கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை இழந்து தனித்துயர் எய்தி,
வானவர் போற்ற மன்னொடும் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்;
எந்நாட்டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்நாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்;
பன்னூ றுயிர்த்து ஆண்டு வாழியர்!''

அப்போது, அவனருகில் தண்டமிழ் ஆசான் சாத்தனார் இருந்தார். அவர் சேரனின் அரசவைப் புலவர்போலும்! மதுரையில் கண்ணகி புரட்சி நடத்தியபோது சாத்தனார் அங்கு இருந்தார் அதனால், குற்றமற்ற கோவலன் மீது 'கள்வன்' எனக் குற்றம் சாட்டி மதுரை மன்னன் அவனைக் கொலை புரிந்ததும்; அதுகேட்டு, மன்னன் முன்பு சென்று கண்ணகி வழக்குரைத்ததும்; மன்னனும் அவன் மனைவியும் ஒருங்குடன்

மாய்ந்ததும்; பின்னர், கூடற்பதியைக் கண்ணகி கொளுத்தி முடித்ததும் தனக்குத் தெரிந்த வகையில் சாத்தனார் சேர மன்னனுக்குக் கூறினார். அதன்பின், கண்ணகி தேவி சேரநாடு வந்ததற்கான காரணத்தையும் அவர் கூறுகின்றார்.

"கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்று எனக் காட்டி, இறைக்குரைப் பனள்போல்,
தன்னாட்டு ஆங்கண் தனிமையிற் செல்லாள்
நின்னாட்டு அகவயின் அடைந்தனள் நங்கை ..."

கணவனை இழந்தபின் தனிமையாகத் தனது தாயகமான சோழநாடு செல்ல விரும்பாதவளாகி, சேரநாடு வந்தாள். பாண்டி வேந்தனின் கொடுங்கோன்மை இன்னதெனச் சேர மன்னனுக்கு அறிவிப்பதற்காகவே கண்ணகி தேவி சேர நாட்டிற்கு வருகை தந்தாள் என்கிறார் சாத்தனார். பாண்டியனின் உயிர்த் தியாகத்தைக் கேட்ட செங்குட்டுவன் மனமுருகி விட்டான்.

## சேரன் வருந்தினான்!

"நெடுஞ்செழியன் செங்கோல் பிறழ்ந்தான்" என்னும் இழுக்குடைய செய்தி என்போன்ற வேற்று மன்னர் செவி களில் விழுவதற்கு முன்பே வினைவசத்தால் வளைந்த செங்கோலைத் தன் உயிர் கொடுத்து நிமிர்த்தி விட்டான் பாண்டியன். அவன் நல்ல கதியை அடைவானாக!" என்றான் செங்குட்டுவன்.

"எம்மோ ரன்ன வேந்தற்கு உற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
'உயிர்பதிப் பெயர்த்தமை உறுக, ஈங்குஎன
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது"

'எவனோ ஒரு பொற்கொல்லன் பொய் சொல்லித் தொலைக்க, அதற்கு, பாராண்ட பாண்டியன் அல்லவா பழி ஏற்க வேண்டியிருந்தது?' என்றெண்ணி, மண்ணாள்வோருக்குள்ள தொல்லைகளைத் தன்னுடைய நினைவிற்குக் கொண்டு வந்து வருந்தினான் செங்குட்டுவன். அவனது வருத்தத்தை அவனே சொல்லக் கேட்போம்:

"மழைவளங் கரப்பின், வான்பேர் அச்சம்;
பிழையுயிர் எய்தின், பெரும்பேர் அச்சம்;
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி;
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்."

"அரசாளும் வாழ்வே அல்லல்பட்ட வாழ்வுதான்" என்று சொல்லி, "கோலோச்சும் மன்னர் குடியில் பிறப்பவன் துன்பத்தைத் தவிர வேறு எதனை அனுபவிக்க முடிகிறது?" என்று மிகுந்த சலிப்போடு சாத்தனாரிடம் சொன்னான் செங்குட்டுவன்.

செங்குட்டுவனுடைய அனுபவ வாசகம் இந்நாளைய ஆளுவோருக்கேயன்றி, ஆளத்துடிப்போருக்கும் கொடுத்த அறிவுரையாகும். இந்த அறிவுரை இந்நாளில் எடுபடவில்லையே! அல்லல் மிகுந்த அரசாளும் பொறுப்பை ஏற்பதற்காகத்தானே நாட்டில் ஆர்ப்பாட்டங்களும் அமளிகளும் நடக்கின்றன!

## அரசியின் 'ஆணை!'

"'வல்வினையால் வளைக்கப்பட்ட செங்கோலைத் தனது உயிர் கொடுத்து நிமிர்த்தினான் பாண்டிவேந்தன்' என்று அனுதாப உணர்ச்சியோடு தண்டமிழ் ஆசான் சாத்தனாரிடம் கூறிய சேரன் செங்குட்டுவன், அப்போது தன் அருகிலிருந்த கோவேண்மாளைப் பார்த்து,

"உயிருடன் சென்ற ஒருமகள் தன்னினும்,
செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னினும்,
நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்?"

என்று கேட்டான். "கணவன் உயிரைப் பின்பற்றித் தன்னுயிர் கொண்டு சென்ற உத்தமக் கற்பினளான கோபபெருந்தேவி, சினத்தோடு நம் சேர நாடு வந்த கண்ணகி; இவ்விருவருள் என்னுடைய பட்டத்தரசி வியக்கும் பத்தினி யாரோ?" என்பது சேர வேந்தனின் வினா. இதற்கு கோவேண்மாள் தந்த விடை வருமாறு:

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானகத்து;
அத்திறம் நிற்க நம அகல்நாடு அடைந்தஇப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்"

"தன் கணவனின் துன்பத்தைக் காணாது தன் உயிர் துறந்த பாண்டிமாதேவி வானகத்துக்குச் சென்று விட்டாள். அங்கு அம்மாபெரும் பத்தினி பேரின்பத்தை அடைவாளாக! நமது அகன்ற நாட்டினை தானே விரும்பி வந்தடைந்த இப்பத்தினிக் கடவுளைப் போற்றி வழிபட வேண்டும்."

இது, சேர மன்னனுக்கு அவன் மனைவி கோவேண்மாள் விடுத்த ஆணை என்றும் சொல்லலாம். கண்ணகியை பத்தினிக் கடவுளாக ஏற்று வழிபடவேண்டும் என்ற கோவேண்மாள் ஆணையை ஏற்றுக்கொண்டு, அருகிலிருந்த சிற்பநூல் வல்லாரை நோக்கினான் சேர மன்னன். பாவையர் ஆணையிடப் பணியாதார் யாவரே! அரசனின் நோக்கு, "அரசியார் கருத்து நிறைவேறுவதற்கு வழி சொல்லுங்கள்" என்று நூலறி புலவரைக் கேட்காமல் கேட்பது போலிருந்தது. அதனால்,

"ஒற்கா மரபிற் பொதியில் அன்றியும்,
விற்றலைக் கொண்ட வியன்பேர் இமயத்துக்
கற்கால் கொள்ளினும் கடவுள் ஆகும்;
கங்கைப்பேர் யாற்றினும், காவிரிப் புனலினும்,
தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்து"

"மங்குதல் இல்லாத புகழினையுடைய பொதிய மலையிலாவது, நம் வில் சின்னத்தைத் தன் தலையிலே சுமந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய இமய மலையிலாவது கல் எடுத்துப் பத்தினிக் கடவுளின் படிமத்தைப் படைக்கலாம். பொதிகையில் கல் எடுத்தால், காவிரிப் புனலில் நீராட்ட லாம்; இமயத்தில் கல் எடுத்தால் கங்கைப் புனலில் நீர்ப்படை செய்யலாம்" என்றனர் சிற்பக் கலைவல்ல அறிஞர்கள். உடனே சேரன் சொல்லுவான்:

பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு,
முதுநீர்க் காவிரி முன்துறைப் படுத்தல்,
மறத்தகை நெடுவாள் எம்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉம் செய்கையோ? அன்று,
இருபிறப் பாளரோடு பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவுள் எழுதவோர் கல்தா ரான்எனின்,
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்து, என்
வாய்வாள் மலைந்த வஞ்சி சூடுதும்"

"நம் தமிழ் நாட்டிலுள்ள பொதிகை மலையில் கல் எடுத்து தமிழ் மகளான பத்தினித் தெய்வத்திற்கு வஞ்சியிலே கோயில் எடுப்பதா? அது மறத் தன்மையுடைய நெடுவாளை ஏந்திய எமது சேரர் குடியில் பிறந்தோர்க்குச் சிறப்பு தருமா? நூலறி புலவோரே! சொல்லுகிறேன், கேளுங்கள்; இளமையிலேயே மாண்டுவிட்ட மாபெரும் பத்தினியின் வடிவத்தை எழுத இரு பிறப்பாளரான இமயத்திலிருக்கும் அந்தணரும் அப்பெருமலை நாட்டு மன்னனும் கல் தர மறுப்

பார்களா? மறுத்தால், அழகிய வஞ்சி நகரின் புறத்தே பகை வரைத் தாக்குவதற்கான வலிமை மிகுந்த என் வாளா யுதத்துக்கு வஞ்சிமாலை சூட்டுவோம்.''

## வடவாரியருடன் போர்!

இது, சேர வேந்தன் சினந்து சொன்ன உரை. இந்த நேரத்தில் நெடுவேள் குன்றத்தில் சேர மன்னனுடனிருந்த படைத்தலைவன் வில்லவன் கோதை தன் மன்னனை வணங்கி, அவன் கடந்த காலத்தில் பகைவர்களைப் புறங்கண்டு பெற்ற வெற்றிகளைக் கூறி, இமயம் சென்று கல் எடுப்பது என்ற அவனது முடிவை ஆதரித்தான்.

**நும்போல் வேந்தர் நும்மோடு இகலிக்**
**கொங்கர்செங் களத்துக் கொடுவரிக் கயற்கொடி**
**பகைப்புறத்துத் தந்தனர்; ஆயினும் ஆங்கவை**
**திசை முக வேழத்தின் செவியகம் புக்கன;**
**கொங்கணர், கலிங்கர், கொடுங்கரு நாடர்,**
**பங்களர், கங்கர், பல்வேற் கட்டியர்**
**வடவா ரியரொடு வண்தமிழ் மயக்கத்துஉன்**
**கடமலை வேட்டம்என் கட்புலம் பிரியாது.**

"நும்மைப் போன்ற தமிழ் வேந்தரான சோழரும் பாண்டியரும் கொங்கர் செங்களத்துத் தோற்று, தங்கள் புலிக் கொடியையும், மீன் கொடியையும் தந்து ஓடினர். அந்த வெற்றி அப்போதே எட்டுத் திக்கிலும் பரவியது.

"அத்துடனன்றி, கொங்கணர், கலிங்கர், கருநாடர், வங்காளியர், கங்கர், கட்டியர் ஆகிய வடவாரியர் வந்து, தமிழர் படையுடன் மோதிப் போர் புரிந்த நாளில், அரசே! நீ அவர்களுடைய போர் யானைகளை வேட்டையாடிய காட்சி என் கண்களினின்று என்றும் மறையாதே!''

முன்னொரு சமயம் சேரன் செங்குட்டுவன், தன் தாயும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மனைவியுமான நற்சோணை என்பாள் கங்கையில் நீராட விரும்பியதால், அவளை அழைத்துக் கொண்டு வடபுலம் சென்றான். அப்போது, ஆரிய மன்னர் ஆயிரம் பேர் ஒன்று கூடி வந்து எதிர்த்தனர். அவர்களை வீழ்த்தி, தன் தாயைக் கங்கை யாற்றில் குளிக்கச் செய்து, வட புலத்தில் புகழ் நாட்டித் திரும்பினான். அந் நிகழ்ச்சியை இப்போது செங்குட்டுவ னுக்கு நினைப்பூட்டினான் சேனாதிபதி வில்லவன் கோதை.

''கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எம்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ்ஞூற் றுவர்க்கும்
ஒருநீ ஆகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது, கடுங்கண் கூற்றம்''

இது, வில்லவன் கோதையின் வாக்கு. அவன் மேலும் சொல்கிறான்:

''இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய
இதுநீ கருதினை ஆயின், ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை.''

"மன்னவ! இமயத்தில் கல் எடுத்துப் பத்தினித் தெய்வத் தின் படிவம் சமைக்க நீ முடிவெடுத்து விட்டால், அதனை எதிர்ப்பவரும் இவ்வுலகில் உளரோ? இல்லை."

வில்லவன் கோதை, கடல் சூழ்ந்த நிலவுலகம் முழுவதை யும் சேரன் செங்குட்டுவன் தமிழ்நாடு ஆக்கினான் என்கிறான். இது, மிகைப்படுத்தப்பட்ட வருணனையாகும். தமிழ் வேந்த னன செங்குட்டுவன் ஆணைக்குக் கடல் சூழ்ந்த நிலவுலகத்து மன்னரெல்லாம் கட்டுப்பட்டிருந்தனர் என்று கொள்ளலாம். அன்று வில்லவன் கோதை அறிந்திருந்த உலகம் இலங்கை

உள்ளிட்ட இந்திய உபகண்டம்தானே! அந்த உபகண்டத்திலே தமிழ் வேந்தர் சொல்வாக்குக்குச் செல்வாக்கு இருந்தது என்பதனைப் புறநானூறு போன்ற இலக்கியங்களாலும் அறிகிறோம் அல்லவா?

## தண்டோரா!

"செங்குட்டுவன் இமயம் நோக்கி யாத்திரை புறப்படுவதை முறைப்படி வடபுலத்தில் வாழும் மன்னர்களுக்கு வில், புலி, கயல் ஆகிய சின்னங்களைப் பொறித்து செய்தி அனுப்புவோம்" என்கிறான் வில்லவன்கோதை. அப்போது அங்கிருந்த அமைச்சன் அழும்பில்வேள் என்பான், "வடபுலத்து அரசர்களின் ஒற்றர்கள் நமது வஞ்சி நகரத்தை விட்டுப் பிரியாது இங்கேயே தங்கி வாழ்கின்றனர். அதனால், நமது மன்னவன் வடதிசை புறப்படுவதை வஞ்சி நகர வீதிகளிலே பறையறையச் செய்து விட்டால் போதும்; அந்தச் செய்தியை இங்குள்ள ஒற்றர்களே தத்தம் மன்னர்களுக்கு அறிவித்து விடுவார்கள்" என்றான். அரசனும் அதற்கு இசைந்தான்; சேனாதிபதியும் செயல்பட்டான். பட்டத்து யானையின் பிடரிமேல் வைத்த முரசம் வஞ்சி நகர வீதிகளிலே முழங்கியது:

"வாழ்க எம்கோ, மன்னவர் பெருந்தகை;
ஊழிதொறு ஊழி உலகம் காக்க!"

என, மன்னனை வாழ்த்திப் பறையொலி எழுந்தது. இதற்கு மேல் செங்குட்டுவன் யாத்திரை பற்றிய செய்தி பிரகடனப்படுத்தப்படுகிறது:

"வில்தலைக் கொண்ட வியன்பேர் இமயத்துஓர்
கற்கொண்டு பெயரும் எம்காவலன்; ஆதலின்,
வடதிசை மருங்கின் மன்னர் எல்லாம்
இடுதிறை கொடுவந்து எதிரீர் ஆயின்,

கடற்கடம்பு எறிந்த கடும்போர் வார்த்தையும்,
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின்; கேளீர் ஆயின்,
தோள்துணை துறக்கும் துறவொடு வாழுமின்;
தாழ்கழல் மன்னன் தன்திரு மேனி,
வாழ்க, சேனுமுகம்!''

வஞ்சி நகர வீதிகளிலே பறையறைந்து அறிவிக்கப்பட்ட—பகை நாடுகளின் ஒற்றர்கள் செவிமடுத்துக் கேட்ட—பிரகடனத்தின் பொருள் வருமாறு:

''மன்னர் பெருந்தகையான எம் சேர மன்னன் வாழ்க! ஊழிதொறும் ஊழிதொறும் அவனே இவ்வுலகம் முழுமையும் காப்பானுக! சேர நாட்டின் வில் சின்னம் பொறிக்கப்பட்ட பேரிமயத்திலிருந்து பத்தினித் தெய்வத்தின் படிமத்திற்காகக் கல் எடுக்க எமது மன்னன் வடதிசை நோக்கி வருகிறான். ஆதலின், அங்குள்ள மன்னர்களெல்லாம் திறைப் பொருள்களைத் தந்து, எமது மன்னனை வரவேற்பீர்களாக! வரவேற்கத் தவறினுல், கடல் நடுவே எமது மன்னன் கடம்பினை வீழ்த்திய போது நடந்த கொடிய போரினைப் பற்றிய பேச்சையும், இமயத்தில் விற்கொடி பொறித்த பேராற்றலைப் பற்றிய பேச்சையும், கேட்டு, பொருமை கொள்ளாது பணிவோடு வாழுங்கள். அவற்றைக் கேட்க உங்களுக்கு விருப்பமில்லையானுல் மனைவியருடன் கூடிய உலக வாழ்வினைத் துறந்து தவத்தினை மேற்கொண்டு உயிர் வாழுங்கள். வெற்றித் அணிந்த எமது வீர மன்னனின் திருமேனி வாழ்க! சேனுமுகம் வாழ்க!''?

## 'திருமேனி!

இதிலே, சேர மன்னனைத் ''திருமேனி'' என்ற சொல்லால் குறிப்பிடுகின்முர் இளங்கோ. ''கேரளம்'' என்று பெயர் மாற்றம் பெற்றுவிட்ட சேர நாட்டிலே இன்றும் திருவிதாங்கூர் மன்னரைத் ''திருமேனி'' என்று அழைக்கும் வழக்கம் இருந்து

வருகிறது. சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் சேர நாட்டின் இளவரசராதலால், தனது நாட்டின் அரசியல் மரபை அறிந்து, அதனைக் காக்க விரும்பி, "திருமேனி" என்ற சொல்லால் சேரனைச் சுட்டுகின்றார்.

சேரன் செங்குட்டுவன் மலைவளங் காணும் பொருட்டு நெடுவேள் குன்றத்திற்கு வந்த அன்று மாலையே வஞ்சி நகர் திரும்பினான். பின்னர், அரசவை கூடியது. அவைக்கு செங்குட்டுவன் வந்தபோது, ஆசான்—பெருங்கணி (நிமித்திகன்)—அமைச்சர்—படைத் தலைவர்கள் ஆகியோர் "மன்னர் மன்னன் வாழ்க" என வாழ்த்தொலி எழுப்பி, வரவேற்றனர். மன்னன் அரியாசனத்தில் அமர்ந்தான். பின்னர், தனது வடதிசை யாத்திரை பற்றிக் கூறினான்:

"இமையத் தாபதர் எமக்கீங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவது ஆயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்"

"இமயத்திலிருந்து வந்த முனிவர்கள் கூறிய பண்போடு கூடிய வாழ்க்கையைப் பெறாதவரான ஆரிய அரசர்களின் பழிச் சொற்கள் நம்பால் நிலைத்து விடுவதென்றால் எம்போன்ற தமிழ் வேந்தர்க்கு அது இகழ்ச்சியைத் தருவதாகும்!"

இது சேர மன்னன் தன் அரசவையிலுள்ளவர்களுக்குத் தந்த தகவல்.

இளங்கோவடிகள், 'இமயத்தாபதர்' என்றது தமிழரைக் குறிப்பதாகாது. அந்நாளில் தமிழர் எவரும் இமயமலையில் தங்கித் தவஞ் செய்ததாகச் செய்தி இல்லையாதலால், அவர்களை ஆரியராகவே கருதவேண்டும். சேரன்—கனகவிசயர் போரைத் தமிழர்—ஆரியர் இனப்போராகப் பிற்காலத்தவர்

கருதிவிடக்கூடாது என்பதற்காகவே வடவாரிய வேந்தரின் பழிச் சொல்லை, ஆரிய முனிவர்களே வந்து தமிழ் வேந்தனிடம் சொன்னதாகக் கூறியிருக்கிறார். ஆனால், நம் காலத்தவர் புனைந்த நாடகங்களிலே, ஆரிய வேந்தரின் பழிச் சொல்லை வடபுலஞ் சென்ற தமிழர் கேட்டு வந்து சேரனிடம் சொன்னதாக மாற்றிவிட்டனர்.

## காவா நாவினர்

"ஆரிய மன்னர்கள் தமிழ் வேந்தர்களைப் பழித்துப் பேசினார்கள்" என்பது சேரன் தந்த செய்தி. இதற்குமேல், எதற்காகப் பழித்தார்கள்? எங்கு பழித்தார்கள்? பழித்த மன்னர் பெயர் என்ன?—என்ற விவரங்களை இங்கு சேரன் சொல்லவில்லை. அதனை, வடதிசை யாத்திரையில் நீலகிரியில் முகாம் செய்திருந்தபோது, நூற்றுவர் கன்னரால் அனுப்பப்பட்ட சஞ்சயனிடம் சேரன் கூறினான். அது வருமாறு:

> **பால குமரன் மக்கள், மற்றவர்**
> **காவா நாவிற் கனகனும் விசயனும்**
> **விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி,**
> **அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர்!**

இதிலே, தமிழ் வேந்தரைப் பழித்தவர்கள், பாலகுமரன் என்னும் வடவாரிய மன்னன் மக்களான கனகனும் விசயனும் என்பதும், ஒரு விருந்திலே வேறு மன்னர் சிலருடன் உரையாடியபோது அவர்கள் தமிழ் வேந்தரைப் பழித்தனர் என்பதும் தெரிகின்றன.

மேலே வாழ்த்துக் காதையின் தொடக்கத்தில் ஆசிரியர் இளங்கோவடிகளே இதுபற்றி இன்னும் சில செய்திகளைத் தருகிறார் :

வட ஆரிய மன்னர், ஆங்கோர்
மட வரலை மாலை சூட்டி
உடன் உறைந்த இருக்கை தன்னில்,
ஒன்று மொழி நகையினராய்,
'தென் தமிழ் நாடு ஆளும் வேந்தர்
செரு வேட்டுப் புகன்று எழுந்து,
மின்தவழும் இமய நெற்றியில்
விளங்கு விற்கயல் பொறித்த நாள்,
எம்போலும் முடிமன்னர்
ஈங்கு இல்லைபோலும்!"

"வடபுலத்திலே ஒரு பெண்ணின் சுயம்வரத்தின்போது கூடியிருந்த ஆரியமன்னர்கள் வாய் கொழுத்துப் பேசினர். தமிழ் வேந்தர்களைப் பழித்தனர். என்னவென்று தெரியுமா? "தென்னாட்டிலுள்ள தமிழ் வேந்தர் போரினை விரும்பி அடிக்கடி வடபுலம் வந்து தங்கள் வில், புலி, மீன் சின்னங்களை இமயமலையில் பொறித்த காலங்களிலே நம்மைப்போன்ற வீர மன்னர்கள் இங்கு இல்லை போலும்" என்று சொல்லிப் பழித்தனர்.

## சேரன் சூளுரை

இச்செய்தியை இமயமலையில் தவஞ் செய்யும் முனிவர்கள் தீர்த்த யாத்திரைக்காகத் தென்னகம் வந்தபோது சேர மன்னனிடம் சொன்னார்கள். அதைக்கேட்டு, சேரன் சினங் கொண்டான். தான் கேள்விப்பட்ட செய்தியைச் சொல்லி, வடவாரியருக்கு எதிரான தனது வஞ்சினத்தைப் பிரகடனம் செய்வதற்காகவே அரசவையைக் கூட்டினான். இதோ, அவனது வஞ்சின வாசகம்:

வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுதஓர் கற்கொண்டு அல்லது,

வறிது மீளும் என் வரய்வாள் ஆகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகைஅரச நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆக''

''தமிழ் வேந்தரைப் பழித்த வடவேந்தரான கனகன், விசயன் என்பாரின் முடியணிந்த தலைகளில் பத்தினித்தெய்வத்தின் படிமம் அமைக்க இமயத்தில் யான் எடுக்கும் கற்களைச் சுமத்திக்கொண்டு வருவேன். இது நிறைவேறாமல் என் வாள் வறிதே மீளுமானால், கொடிய போர்க்களத்திலே போர் செய்தலின்றி, எனது நாட்டின் குடிகள் நடுங்குமாறு பிழை செய்த கொடுங்கோலன் என்று என்னை இகழ்வீர்களாக!''

இது, சேரன் சொன்ன சினவுரை. அவையிலிருந்த ஆசான் எனப்படும் அந்தணன் சேரன் கூறிய வஞ்சினங் கேட்டு அஞ்சினான்.

''அஞ்சினர்க்கு அளிக்கும் அடுபோர் அண்ணல்!நின்
வஞ்சினத்து எதிரும் மன்னரும் உளரோ?''

(சிலப்பு. 26: 21-22)

என்று கூறி, சேரனுடைய சினத்தைத் தணிக்க முயன்றான். மேலும், புதிதாக ஒரு தகவலைத் தருகிறான் ஆசான்.

''இமைய வரம்ப!நின் இகழ்ந்தோர் அல்லர்;
அமைகநின் சினம்''

(சிலம்பு. 26: 23-24)

''இமய வரம்ப! ஆரிய மன்னர் இகழ்ந்தது நின்னையல்ல'' என்பது ஆசான் தந்த புதிய தகவல். ''அவர்கள் இகழ்ந்தது சோழனையும் பாண்டியனையும்'' என்னும் பொருளை உள்ளடக்கியது ஆசான் சொன்ன அறிவுரை. சேரன் பதில் சொல்லவில்லை. ஆயினும், ஆசான் கூறிய அறிவுரையை அவன் ஏற்க-

வில்லையாதலால், "என்னைப் பழிக்காவிட்டாலென்ன? சோழ பாண்டியரைப் பழித்தது தமிழ் இனத்தையே பழித்த தாகாதோ?" என்றுதான் சேரன் நினைத்திருப்பான்.

இந்த நேரத்தில் அரசவையிலிருந்த—பன்னிரு ராசிகளின் நிலையின் பயன்களை அறிந்த—நிமித்திகன் எழுந்து,

"வெந்திறல் வேந்தே வாழ்கநின் கொற்றம்!
இருநில மருங்கின் மன்னர்எல் லாம்நின்
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது; முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை ஆக"

[சிலம்பு 26: 27-31]

என்றான். "இந் நிலவுலகத்து மன்னரெல்லாம் நின் மலரடி பணிவதற்கான நல்ல நேரம் இது. அதனால், நீவிர் விரும்பிய வடதிசைப் போருக்குப் புறப்படுக" என்றான் நிமித்திகன்.

அரசவையிலே ஆசானுக்கும் நிமித்திகனுக்கும் கருத்து வேற்றுமை. ஆசானான அந்தணன், போரைத் தவிர்க்க விரும்பி, 'சினம் தணிக' என்றான். நிமித்திகன், 'போருக்கு எழுக' என்றான். நிமித்திகன் சொன்னதைக் கேட்டு, "வாளும் குடையும் வடதிசைப் பெயர்க்க" என்றான் செங்குட்டுவன். சேரன் மனைவி கோவேண்மாள், "நம் அகல் நாடடைந்த இப் பத்தினித் தெய்வத்தை வழிபடுவோம்" என்று சொன்ன வாசகம் ஒரு பெரும் போருக்குத் தொடக்கமாகிவிட்டது!

அந்நாளில், மன்னன் தன் மாற்றானுடன் போர் செய்யப் புறப்படுவதற்கு நாளும் முகூர்த்தமும் பார்ப்பது உண்டு. அரசவையைச் சார்ந்த நிமித்திகர் நல்ல நாளையும் முகூர்த்தத்தையும் தேர்ந்தெடுத்துக் கூறுவர். இந்த வழக்கத் தின்படி சேரன் செங்குட்டுவனின் அவையைச் சேர்ந்த நிமித் திகர் நல்ல நாளையும் முகூர்த்தத்தையும் தேர்ந்தெடுத்து அரச

னுக்கு அறிவித்தனர். அரசன் தளபதியைப் பார்த்து, "நிமித்திகர் குறித்த நேரத்திலே எனது வீரவாளையும், வெற்றி முரசையும் அரச யானையின் பிடரி மீது வைத்துக் கோட்டைக்கு வெளியே கொண்டு செல்க" என்று கூறினன். அப்படியே நடந்தது.

## இரவு பகலானது!

இது நிகழ்ந்தது நல்ல இரவு நேரத்திலே! இருளே இல்லை யென்று சொல்லும்படியாக வஞ்சிநகரமெங்கும் விளக்கொளி படர்ந்திருந்தது. மன்னன் செங்குட்டுவன் தனது அரண்மனைக் கோட்டையை விட்டுப் புறப்படலானன். அந்தி நேரத்திலே பல்வேறு தரப்பினரும் அணி அணியாக வந்து வந்து, "சேர மன்னன் வாழ்க! செங்குட்டுவ மன்னன் வெல்க!" என வாழ்த்தினர்.

பல போர்களுக்குச் சென்று வெற்றி கண்டவர்களான வீர மறவர் படையினர் அணியணியாகத் திரண்டனர். மண்ணுலகம் முழுவதையும் தன் ஆயிரம் தலைமீது சுமந்து கொண்டிருக்கும் ஆதிசேஷனும் நடுங்கும் வண்ணம் அவர்கள் ஆரவாரித்தனர். போர் முரசுகள் இடையறாது ஒலித்தன. வில், புலி, மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தமிழ் மூவேந்தர்களின் கொடிகள் இடைவெளியின்றி மிகவும் நெருக்கமாக அசைந்தாடிப் பறந்தன.

சேர மன்னனுக்கு மிகவும் நெருக்கமாகவுள்ள ஐம்பெரும் குழுவினரும், எண்பேராயத்தினரும், கரும வினைஞரும் கணக்கியல் அறிஞரும், தரும வினைஞரும், தந்திரத் தொழிலோரும் வீரர் குலத் தலைவஞன சேர மன்னனை அணுகி, "மண்ணுலகம் முழுவதையும் ஆளும் எம் செங்குட்டுவன் வாழ்க!" என வாழ்த்தொலி எழுப்பினர்.

தமிழ் வேந்தர் மூவரிலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாலை உண்டு, அதன்படி, சேர மன்னனுக்கு உரியது

பனம்பூ மாலை. வழக்கம் போல அதனை அவன் அணிந்திருந்தான். அத்துடன், போருக்குப் புறப்படுகின்ற நேரத்தில் வஞ்சினம் கூறியதன் அடையாளமாக அணியத்தக்க வஞ்சிப் பூமாலையையும் சேரன் சிறப்பாக அணிந்துகொண்டான். அவன் போர்க்கோலம் கொண்டு அரண்மனையை விட்டு வெளியே புறப்பட்டதானது, அவுணர்கள் மீது போர் செய்ய அமரர் குலத் தலைவனை தேவேந்திரன் தனது தலைநகரை விட்டுப் புறப்பட்டதுபோல் இருந்தது. இதனை,

''தானவர் தம்மேல் தம்பதி நீங்கும்
வானவர் போல வஞ்சி நீங்கினன்''

என்ற வரிகளில் இளங்கோ கூறுகின்றார்.

## தோளில் துளபம்

செங்குட்டுவன், கங்கையைத் தன் சடையிலணிந்த சிவபெருமானை வழிபடும் சைவனாவான். அதனால், எப்போதும் போல் போருக்குப் புறப்படும் இந்த நேரத்திலும் அவன் சிவ சின்னத்தைத் தன் சிரசின் மீது அணிந்திருந்தான். சேர நாட்டைச் சார்ந்த திருவனந்தபுரத்தில் கோயில் கொண்டுள்ள திருமாலின் துளபப் பிரசாதத்தை சிலர் கொண்டுவந்து சேரனை வாழ்த்திவிட்டு அவன் கையில் கொடுத்தனர். ஏற்கெனவே சிரத்தின் மேல் சிவ சின்னம் இருப்பதால், திருமாலின் துளபத்தை மிகுந்த பணிவுடன் வாங்கி, தன்னிரு தோள்கள் மீது வைத்தான் செங்குட்டுவன். இதனை, இளங்கோ வாக்காலேயே அறிவோம்!

''குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்கென
ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு சிலர்நின்று ஏத்த
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்

ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினன் ..."

[சிலம்பு. 26: 61-67]

## துதிப்பதும் மதிப்பதும்

உயிர்க்குலம் அனைத்துக்கும் தெய்வம் ஒன்றுதான். ஆயினும், அதனைப் பல வடிவங்களிலே வழிபடும் வழக்கம் சிலப்பதிகார காலத்திலும் தமிழர் வாழ்வில் இருந்தது. துதிப்பதற்கென ஒரு வடிவத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பின்னரும், மற்ற தெய்வ வடிவங்களை மதித்துப் போற்றும் வழக்கம் தமிழரிடம் அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது; இனியும் இருக்கும். துதிக்கும் வடிவம் வேறானாலும் பிற வடிவங்களை மதிக்கும் வழக்கத்தைத் தமிழர் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனைச் சேரன் செங்குட்டுவனைக் கொண்டு இளங்கோ போதிக்கிறார்.

சேரன் தன்னை வழியனுப்பக் குழுமியுள்ள அனைவரையும் வலம் வந்து, அவர்களிடம் விடைபெறலானான். அப்போது, ஆடலிலும் பாடலிலும் அழகிலும் வல்லவரான நாடக மகளிர் பலர் வந்து வாழ்த்துக் கூறினர்.

"நாடக மடந்தையர் ஆடரங்கு யாங்கணும்
கூடையிற் பொலிந்து கொற்ற வேந்தே!
வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோடு
ஓடை யானையின் உயர்முகத்து ஓங்க
வெண்குடை நீழலெம் வெள்வளை கவர்ந்து
கண்களி கொள்ளும் காட்சியை ஆக"

"போர்க்களம் புகுந்தபோதெல்லாம் வெற்றியையன்றி வேறொன்றைக் காணாத வெண்கொற்றக் குடையின் கீழ் வளர்ந்து வருகின்ற எம செங்குட்டுவனே! நீர் சென்று வருக!

எங்கள் கண்களை நின் பேரழகு கவர்கின்றது. எம் கைகளை தழுவுகின்றது. நினது இளமைத் தோற்றம் கவர்ச்சிகரமாக அமைந்திருக்கிறது. இந்தத் தோற்றம் என்றென்றும் நினக்கு நிலைப்பதாக!"

இது, நாடக மகளிர் கூறிய வாழ்த்துரை.

## வீர வணக்கம்

வாள் தாங்கிய காலாட் படையினர் மன்னன் எதிரே அணிவகுத்து நின்று தங்கள் கைகளிலுள்ள வாட்களை உயர்த்தி, "செங்குட்டுவன் வாழ்க, வெல்க!" என வாழ்த்துக் கூறியும் வெற்றி கூறியும் வீரவணக்கம் செலுத்தினர். அது போல, யானைப் படையினரும் குதிரைப் படையினரும் சேரனை வாழ்த்தினர்.

இந்த வாழ்த்துக்களைப் பெற்ற மகிழ்ச்சியோடும், பத்தினித் தெய்வத்திற்குக் கல் எடுக்கப் போகிறோம் என்ற புனித உணர்ச்சியோடும், காவா நாவினராய் தமிழ் அரசர்களைப் பழித்த கனகனையும் விசயனையும் வெற்றி கொள்ளப் போகிறோம் என்ற பெருமிதத்தோடும் அரச யானையின் மீது அமர்ந்த வண்ணம் சேரன் செங்குட்டுவன் வஞ்சி நகரத்தை விட்டுப் புறப்பட்டான்.

ஒன்றோடொன்று இடைவெளியின்றி நெருங்கிய வண்ணம் பல்வேறு படைகளும் நடைபோட்டதால் எழுந்த புழுதியானது சேர வேந்தனின் படைகளை மறைத்தது. பத்தினித் தெய்வத்தின் பக்தனுடைய படைகள் அணியணியாகச் சென்றதானது, பெருங்கடலிலே அடுத்தடுத்து எழுகின்ற அலைகளைப் போன்று காட்சியளித்தது. படைகளின் பாரத்தைத் தாங்க முடியாமல் அவை போகும் வழியிலுள்ள மலைகளின் முதுகுகள் நெளிந்தன. சேர நாட்டிலே படை சென்ற பகுதிகளிலெல்லாம் புதிய புதிய பாதைகள் தோன்றி விட்டன! ஆம்;

பழைய பாதையாலது போதாதவண்ணம் படைகள் அகன்றிருந்தமையால் அவை சென்ற பிரதேசத்தில் புதிய பாதைகள் தோன்றிவிட்டன.

## பாடி வீடு!

வஞ்சியிலிருந்து புறப்பட்ட மன்னனும் அவனது படை வீரர்களும் நீலகிரியை யடைந்து அங்கே தங்கினர். ஆம், சேர மன்னன் தனது நாட்டின் எல்லையிலுள்ள நீலகிரியிலே "பாடி வீடு" அமைத்தான். போர் வீரர் தங்குமிடம் இந்நாளில் "ராணுவ முகாம்" எனப்படுகிறது. அந்நாளில், "பாடி வீடு" என்று அழைக்கப் பெற்றது. மன்னன் அரச யானையிலிருந்து இறங்கி, தனக்கென அமைக்கப் பெற்றிருந்த கூடாரத்திற்குச் சென்றபோது, வழி நெடுக இருந்த மறவர்கள் அவனை வாழ்த்தினர். படைகள் பாடி வீடு கொண்டிருந்த இடத்திலே இடையறாத பேரொலி எழுந்தது. வானவெளியில் அந்தரத்தில் சென்றுகொண்டிருந்த முனிவர் சிலர், நீலகிரியில் எழுந்த பேரொலியைக் கேட்டனர்.

ஒலி எழுகின்ற இடத்திலே சேரமன்னன் பாடி வீடு கொண்டிருப்பதையும் அவர்கள் அறிந்து கொண்டனர். அறிந்ததும், இந்திரனுக்கு நிகரான சிறப்பினையும் செல்வத்தையும் பெற்றுள்ள சேரனைக் காண்போம் என்ற கருத்துடன் வானத்திலிருந்து இறங்கி வந்து அரசன் இருக்கும் அவையை அடைந்தனர். மன்னன் தன் இருக்கையினின்றும் எழுந்து, வானியங்கும் முனிவரை வணங்கினன். தங்களை வணங்கியவனை வாழ்த்திவிட்டு, பின் வானியங்கு முனிவர் கூறியதாவது:

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ! கேளாய்;
மலயத்து ஏகுதும்; வான்பே ரிமய
நிலயத்து ஏகுதல் நின்கருத்து ஆகலின்

அருமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்
பெருநில மன்ன! பேணல்நின் கடன்''

(சிலப்பு. 26: 98-103)

'சிவபெருமானது அருளினால் வஞ்சி நகரில் தோன்றிய வானவனே! எங்கள் வார்த்தையைக் கேள். யாங்கள் தென் புலத்திலுள்ள பொதிகை மலைக்குச் செல்கிறோம். மிகவும் உயர்ந்துள்ளதான இமயத்திற்குச் செல்வது நின் கருத்து ஆதலின், நினக்கொன்று சொல்லுகின்றோம்; மறையாளரான அந்தணர் பலர் அங்கே வாழ்கின்றனர். அவர்களுக்கு நின் படையினரால் தீங்கெதுவும் நேராமல் அவர்களைப் பேணிக் காப்பது நின் கடமையாகும்.''

இது, வானியங்கு முனிவர் சேரனுக்குக் கூறிய அறிவுரை. சேரனும் அதற்குச் செவிசாய்த்தான். பின்னர் செங்குட்டுவனை வாழ்த்திவிட்டு முனிவர்கள் விடைபெற்றுச் சென்றனர்.

## கன்னர் தந்த காணிக்கை

செங்குட்டுவன் வடபுல யாத்திரை சென்ற காலத்திலே கொங்கணம், கருநாடகம், குடகு ஆகிய மேற்குப் பிரதேசங்கள் அவனுடைய சேர நாட்டிற்குட்பட்ட பகுதிகளாகவே இருந்தன. அதனால் வடபுலம் செல்லும் தங்கள் மன்னனை வரவேற்று, வாழ்த்துக்கூறி வழியனுப்பினர் கொங்கண, கருநாடக, குடகுக் கூத்தர்கள். அவர்கள், "கடல் சூழ்ந்த உலகத்தை ஆள்பவனான எங்கள் சேர மன்னன் வாழ்க!" என்று வாழ்த்தினர். கூத்தர்களின் மனைவியர்களான கூத்தியரும வரிப் பாடல்கள் பாடியும் ஆடியும் சேரனையும் அவனுடைய சேனையையும் மகிழ்வித்தனர்.

போர் வெறியுடன் புறப்பட்டுச் செல்லும் மறவர்கள் தாங்கள் போகும் வழியில் ஆடலையும் பாடலையும் கண்டு

ஆனந்திக்கின்றனர். வீரத்திற்குக் கலை விலக்கல்லவே! மன்னனும் அவன் படை வீரர்களும் குடகுப் பகுதிக்குச் சென்றபோது, ஆங்குள்ள குடகர்கள் தங்கள் கூத்தியருடன் வந்து ஆடியும் பாடியும் மன்னனை மகிழ்வித்து அவனை வழி யனுப்பினர். ஓவர்கள் என்னும் ஒருவகை மக்கள்,

"வாள்வினை முடித்து மறவாள் வேந்தன்
ஊழி வாழி!"

என வாழ்த்தி, அவனை வழியனுப்பினர். அவர்களுடைய ஆடலையும் பாடலையும் கண்டு மகிழ்ந்த செங்குட்டுவன், அவர் களுக்கு, அதற்கு முன் வேறு எவருக்கும் அளித்திராத வகை யில் அணிகலன்களை வாரி வழங்கினன். ஆம்; வாள் பிடித்துப் பகைவரை வெற்றி காண வடபுலம் செல்லும்போதும் தன்னை வழியனுப்ப வந்த கலைஞர்களுக்கு அணிகலன்கள் வழங்கி மகிழ்ந்தான் செங்குட்டுவன்.

கங்கையாறு வடபுலத்திலுள்ள பெரிய நதியாகும். தமிழ் இலக்கியங்களிலேயும் அதற்குச் சிறப்பு உண்டு. தென்புலத்துக் காவிரிக்கு வடபுலத்திலும் மதிப்பு உண்டு. தென்புலத்தார் கங்கையாட வடபுலம் போவதும், வடபுலத்தார் காவிரியாடத் தென்புலம் வருவதும் தொன்றுதொட்டு இன்று வரை நிகழ்ந்து வரும் வழக்கமாகும். இது, இந்திய சமுதாயத்தின ரிடமுள்ள கலாசார ஒருமைப்பாடு என்றும் சொல்லலாம். செங்குட்டுவனும் தெய்வக் கண்ணகியின் சிலைக்கு இமயத் தில் கல் எடுக்க விருப்பியது, புனிதமான கங்கையாற்றில் நீராட்டுவதற்காகத்தானே!

அந்தக் கங்கையாற்றின் வடகரையில் நூற்றுவர் கன்னரி என்னும் குறுநில மன்னர் கோலோச்சினர். அந்நாளிலே! அவர்கள் அனைவரும் சேரன் செங்குட்டுவனின் சிந்தை கவர்ந்த நண்பர்கள். அவர்களிடமிருந்து சஞ்சயன் என்பான் தூது வந்திருப்பதாக வாயிற் காவலர் செங்குட்டுவனுக்கு

அறிவித்தனர் நூற்றுவர் கன்னர் தங்கள் நண்பனுடைய வடபுல யாத்திரைக்குப் பயன்படும் வகையில் பல உதவிகளையும் சஞ்சயன் மூலம் அனுப்பியிருந்தனர். அதனைப் பட்டியல் தொகுத்துத் தருகிறார் இளங்கோ.

நாடக மகளிர் நூற்றிருவர்; குயிலுவக் கருவிகளை இசைப்போர் இருநூற்று எண்மர்; நகை வேழம்பர் நூறுபேர். இன்னும், தாமரை வடிவத்தில் அமைந்த நெடுந்தேர்கள் நூறு; மதங்கொண்ட யானைகள் ஐந்நூறு; வெட்டப்பட்ட பிடரி மயிரினை யுடைய குதிரைகள் பதினையாயிரம்; கைவேலைத் திறன் விளங்கிய வண்டிகள் இருபதினாயிரம். இவை சஞ்சயன் செங்குட்டுவனுக்கு அனுப்பி வைத்த பரிசுப் பொருள்களாகும்.

> "நாடக மகளிரும் நலத்தகு மாக்களும்
> கூடிசைக் குயிலுவக் கருவி யாளரும்
> சஞ்சயன் தன்னொடு வருக ஈங்கு"

(சிலப்பு. 26 : 141-43)

இது, வாயிற் காவலருக்கு செங்குட்டுவன் இட்ட ஆணை. அதாவது, தூதுவர் தலைவனான சஞ்சயனையும், அவனுடன் வந்துள்ள நாடக மகளிரையும், குயிலுவக் கருவியாளரையும், கஞ்சுக முதல்வர் ஆயிரவரையும் தன்னிடம் அழைத்து வருமாறு வாயிற் காவலருக்கு செங்குட்டுவன் ஆணையிட்டான்.

## சஞ்சயன் தூது

சேரனைக் கண்ட சஞ்சயன் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்தினன். பலவகையான புகழ் மொழிகளைக் கூறிப் போற்றினன். தன் அரசனுடைய ஆணைப்படி தன்னுடன் வந்த நாடக மகளிரையும், பலவகைப்பட்ட கலைத் தொழில்

வல்லுநரையும் மன்னனுக்கு சஞ்சயன் அறிமுகம் செய்து வைத்தான் பின்னர், சஞ்சயன் கூறுவான் :

"வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும் கோற்றொழில் வேந்தே!
வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவுள் எழுதஓர் கற்கே ஆயின்
ஓங்கிய இமயத்துக் கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை நீர்ப்படை செய்து—ஆங்கு
யாம்தரும் ஆற்றலம் என்றனர் என்று
வீங்குநீர் ஞாலம் ஆள்வோய் வாழ்க!"

"செங்கோல் வேந்தே! நின்னொடு கருத்து வேற்றுமை யின்றி நட்புக் கொண்டுள்ள நூற்றுவர் கன்னர் சொல்லி யனுப்பிய செய்தியைக் கேட்பீராக! வடதிசை நோக்கிச் செங் கோல் வேந்தன் செல்வது, பத்தினிக் கடவுள் எழுதுவதற் கான ஒரு கல்லுக்காகவே என்றால், ஓங்கி வளர்ந்துள்ள இமய மலையிலே கல் எடுத்து வந்து, வெள்ளப் பெருக்கினை யுடைய கங்கையிலே அதனை நீராட்டி, யாமே — சேர நாட்டிற்கே—கொண்டுவந்து தரும் ஆற்றலுடையேம்."

இது, நூற்றுவர் கன்னர் அனுப்பிய செய்தி. சஞ்சயனுக் குச் செங்குட்டுவன் பதில் கூறுவான் :

"பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றம் கொண்டிச் சேனை செல்வது
நூற்றுவர் கன்னர்க்குச் சாற்றி ஆங்குக்
கங்கைப் பேர்யாறு கடத்தற்கு ஆவன
வங்கப் பெருநிரை செய்க தாம்"

(சிலம்பு. 26 : 158-65)

"பால குமரன் என்பானின் மகன்களும் நாவடக்க மில்லாத ஆணவக்காரருமான கனகனும் விசயனும் ஒரு விருந்திலே, வேறு பல மன்னருடன் கூடி, தமிழினத்தின் ஆற்றலை அறியாதவராகி எம்மைத் தூற்றினர். ஆகவே, பத்தினிப் படிமத்துக்குக் கல் எடுக்க மட்டுமல்லாமல், தமிழரைப் பழித்துப் பேசிய கனகனையும் விசயனையும் அடக்கு வதற்காகவும் இச்சேனை செல்கிறது; மாற்றார் உயிரை உண் பதற்காக எமனும் எங்களுடன் வருகிறான். இதனை நூற்றுவர் கன்னர்க்கு உரைத்திடுக. கங்கையாற்றைக் கடப்பதற்கான ஓடங்களைத் தந்திடுக!"

செங்குட்டுவன் தந்த செய்தியினை ஏற்றுக்கொண்டு தூதுவர் தலைவன் சஞ்சயன் கங்கையாற்றின் வடகரைக்குச் சென்று நூற்றுவர் கன்னரிடம் சேரன் தந்த செய்தியைச் சொன்னான்.

செங்குட்டுவன் சேர மண்டலத்திற்கு மட்டுமே அரசன் என்றாலும், அவன் வடபுலம் சென்றது தமிழினத்தார் அனைவர் சார்பிலுந்தான்! கண்ணகி தமிழினத்தின் தனித் தெய்வமாகி விட்டாள். அதனால், அவளது சிலைக்குக் கல் எடுக்கும் பணி தமிழினத்தார் அனைவரும் விரும்பக் கூடியது தானே!

"வடதிசை மருங்கின் மன்னர்க்கு எல்லாஅ
தென்தமிழ் நல்நாட்டுச் செழுவில் கயல்புலி
மண்தலை யேற்ற வரைக"

(சிலப்பு. 25: 170-72)

என்று, சேர நாட்டின் தளபதியான வில்லவன் கோதை கூறியதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். சேர—சோழ—பாண்டிய மண்டலங்கள் சார்பில் கண்ணகிக்குக் கல் எடுக்கச் செங்குட்டுவன் இமய யாத்திரை புறப்பட்டானாதலால், மூவேந்தர் சின்னங்களையும் பொறித்துச் சேரனது

யாத்திரை பற்றிய செய்தியை வடபுலத்தரசருக்கு அனுப்புமாறு தளபதி வில்லவன்கோதை கூறினான்.

## பாண்டியன் அனுப்பிய பரிசு

ஆரிய மன்னரான கனகவிசயரை எதிர்த்துப் போராடவுந்தான் செங்குட்டுவன் வடதிசை நோக்கிப் புறப்பட்டான் என்றாலும், அந்தப் பயணத்தைச் சோழபாண்டியர் சார்பிலும் தான் அவன் மேற்கொண்டான். அதனால், வடதிசை செல்லும் சேரனை வாழ்த்தி வழியனுப்ப வேண்டிய கடமை சோழனுக்கும் பாண்டியனுக்கும் உண்டு. ஏனோ, சோழன் அந்தக் கடமையைச் செய்ததாக இளங்கோ கூறவில்லை. சேரன் இமய யாத்திரை தொடங்கிய நேரத்திலே, சோழ நாட்டில் சிற்றரசர்களுக்குள்ளே அரியாசனத்தைக் கைப்பற்றுவதிலே போட்டியும் போரும் நிகழ்ந்து கொண்டிருந்தன போலும்!

பாண்டியன் மட்டும் சேரனுக்குப் பரிசுப் பொருள்களை அனுப்பினான். கங்கையின் தென்கரையில் பாடி வீட்டில் தங்கியிருந்த சேரனைச் சந்திக்கின்றனர் பாண்டியனால் அனுப்பப்பட்ட தூதுவர் ஆயிரவர். பாண்டியனுடைய அரச முத்திரை பொறித்த திருமுகம் ஒன்றினையும் சேரனிடம் தருகின்றனர். "செங்குட்டுவ! நினது வடபுல யாத்திரை வெற்றி பெறுவதாக!" என்று தனது திருமுகத்திலே பாண்டியன் எழுதியிருந்தான் போலும்! சந்தனக்குவியலையும் ஆழ்கடல் முத்துக்களையும் திறைப் பொருள்களாக சேரனுக்கு அனுப்பியிருந்தான் தென்பாண்டி வேந்தன். இவை, பாண்டி நாட்டின் தனிப் பொருள்களல்லவா!

"கஞ்சுக மாக்கள்,
எஞ்சா நாவினர், ஈரைஞ் ஞூற்றுவர்
சந்தின் குப்பையும் தாழ்நீர் முத்தும்

தென்னர் இட்ட திறையொடு கொணர்ந்து,
கண்ணெழுத் தாளர் காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கல்அம் மன்னவர்க் களித்து."

[சிலம்பு 26: 166-71]

இது, ஆயிரம் தூதுவர் மூலம் சேரனுக்குப் பாண்டியன் அனுப்பிய பொருள்கள் பற்றி இளங்கோ தரும் செய்தியாகும். கண்ணகியால் மதுரை மாநகர் அழிக்கப் பெற்றது என்றாலும், பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பின் அரியாசனம் ஏறிய அவன் மகன் வெற்றிவேற் செழியன், கண்ணகி வழிபாட்டைத் தொடங்கி வைக்கச் சேரன் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முன் வந்தான். இது, கண்ணகிபால் அவனுக்கிருந்த பக்தியைக் காட்டுகின்றது.

கங்கையின் வடகரையிலிருந்து நூற்றுவர் கன்னரால் தென்கரைக்கு மரக்கலங்கள் அனுப்பப்பட்டன, ஒன்று, இரண்டா? நூறு, ஆயிரமா? கன்னரால் அனுப்பப்பட்ட மரக்கலங்களின் எண்ணிக்கையைச் சொல்லாமல்,

"கங்கைப்பே ரியாற்றுக் கன்னரிற் பெற்ற
வங்கப் பரப்பின் வடமருங்கு எய்தி"

என்கிறார் இளங்கோ.

## கங்கையைக் கடந்தனர்

கங்கை நீரையே மறைத்து விடும் வகையில் மரக்கலங்களின் பரப்பு இருந்ததாம். நூற்றுவர் கன்னர் கொடுத்த குயிலுவக் கருவியாளர் 108 பேர்; நகைச் சுவை விருந்து வழங்கும் நகை வேழம்பர் 100 பேர்; கொடிஞ்சி நெடுந்தேர் 100; போர் யானைகள் 500; குதிரைகள் 10,000; பண்டங்களுக்கான வண்டிகள் 20,000. இவைபோக, சேர நாட்டிலிருந்து செங்குட்டுவனுடன் திரண்டு வந்த போர்ப்படை வீரர்களும்

போர்க் கருவிகளும் வேறு. இவ்வளவும் கங்கையாற்றைக் கடக்க வேண்டுமானால், அதற்குப் பயன்படுத்தப்படும் மரக் கலங்களை எண்ணிச் சொல்ல முடியுமா? முடியாது என்பதை உணர்த்தத்தான் 'வங்கப்பரப்பு' என்கிறார் இளங்கோ.

கங்கை நதியைக் கடந்ததும் அதன் வடகரையிலே சேரனும் அவன் படை வீரர்களும் பாடிவீடு அமைத்தனர். அங்கு நூற்றுவர் கன்னர் வந்து சேரனைச் சந்தித்து, அவனுடைய வடதிசைப் படையெடுப்பு வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்திவிட்டுச் சென்றனர்.

தென்னகத்து வேந்தனான சேரன் செங்குட்டுவன் கங்கை நதியின் வடகரையில் பாடிவீடு அமைத்திருக்கும் செய்தி ஆரிய மன்னரான கனகனுக்கும் விசயனுக்கும் தெரிந்தது. "சேரனும் சோழனும் பாண்டியனும் இமயத்தில் தத்தம் கொடியைப் பொறித்த நாளிலே நம் போன்ற வீரர்கள் வடபுலத்தை ஆண்டிருந்தால், விட்டிருப்போமோ? வில், புலி, கயல் சின்னங்களை இமயப் பிடரியில் பொறிக்க விடாமல் விரட்டியடித்திருக்க மாட்டோமா?" என்று கனகனும் விசயனும் வீரம் பேசினார்கள் அல்லவா? அந்த 'வீரர்களை'ச் சந்திக்கத் தென்புலத்து வேந்தன் வடபுலத்திற்கு வந்து விட்டான் என்றால், கனகனும் விசயனும் போருக்குப் புறப் பட்டுத்தானே ஆக வேண்டும்?—புறப்பட்டனர்!

கங்கை நதியின் வடகரை சேர்ந்த சேரனும் அவன் படை வீரர்களும் அங்கிருந்து வேக நடைபோட்டு, உத்தர கோசல நாட்டை அடைந்தனர். அதுதான் காவா நாவினராகித் தமிழ் வேந்தரைப் பழித்த கனகவிசயர் நாடு. இதனை, "ஓங்கு நீர் வேலி உத்தரம்" என்கிறார் இளங்கோ. ஆம்; பகைவர் நாடு என்று காழ்ப்புக் காட்டாமல், "நீர்வளம் மிகுந்த நாடு" என்கிறார். இந்த உத்தரத்திற்கும் இன்று உத்தரப் பிரதேசம் எனப்படும் மாநிலத்திற்கும் என்ன தொடர்போ?

## ஆரியர் திரண்டனர்

அவர்களுடன் தோழமைகொண்ட ஆரிய மன்னர்களும் துணைக்கு வந்தனர். வேடிக்கை பார்க்க அல்ல; ஆயுதமெடுத்துப் போர் புரிந்து, தமிழ் மன்னனை வீழ்த்தி ஆரியர் நாட்டிற்கு வெற்றி தேட! துணைக்கு வந்த மன்னர்கள் வங்கரோ, கலிங்கரோ அல்லராம்! கங்கைக்கு வடக்கே நெடுந்தொலைவிலுள்ள ஆரியநாட் டரசர்களாம்! இதனை, "வடதிசை மருங்கின் மன்னர்கள் எல்லாம்" என்னுஞ் சொற்றொடரால் உணர்த்துகிறார் கவிஞர். அவர்களில் உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்திரன், சிவேதன் என எண்மர் பெயரை மட்டும் சொல்லியுள்ளார். "தென் தமிழ் ஆற்றல் காண்குதும் யாம்" என்று வீறுபேசி, போர் முரசு கொட்டினார்கள். இங்கு தமிழர் என்னும் பொருளில் தமிழ் என்னும் சொல்லைப் பயன்படுத்தி யுள்ளார் சிலப்பதிகார ஆசிரியர். சேரன் கொண்டுபோன படை வீரர்களுக்கு எண்ணிக்கையில் குறைந்தவரல்லர் வடவாரியர் திரட்டி வந்த படை வீரர்கள்.

சேரன் படைகள் வஞ்சியி லிருந்து புறப்பட்டு மலை நாட்டைக் கடந்தபோது, படைகளின் பாரந் தாங்காமல் "மலை முதுகு நெளிந்தது!" என்கிறது சிலம்பு. உத்தர கோசலத்திலும் வடதிசை மன்னர் திரட்டி வந்த படைகளின் பாரந்தாங்காமல் நிலம் நெளிந்ததாம்! தென் கோடியிலுள்ள சேர நாட்டான் மலை முதுகு நெளியும்படியாகப் படைகளைத் திரட்டிக்கொண்டு வட கோடிக்குச் செல்ல முடியுமானால், தங்கள் நாட்டின் எல்லையிலேயே பகைவனைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற வடதிசை வேந்தர்கள் நிலம் நெளியும்படியாகப் படைதிரட்ட முடியுந்தானே!

பசியுள்ள சிங்கம் யானைக் கூட்டத்தைக் கண்டால் ஆவேசங் கொண்டு அதன்மீது பாய்ந்து தன் பசியைத் தீர்த்துக் கொள்ளுமாம்! ஆம்; எதிர்ப்பட்டதோ, மதயானைக்

கூட்டம்! அதனை எதிர்த்துப் பாய்ந்ததோ, ஒரே ஒரு சிங்கம்! இந்த அரிய நிகழ்ச்சியை உவமை காட்டி, சேர மன்னன் செங்குட்டுவன் வடவேந்தர் மீது பாய்ந்ததனை இளங்கோ நமக்குக் காட்சிப்படுத்துகின்றார். இதோ இளங்கோவின் வருணனை :

> **இரைதேர் வேட்டத்து எழுந்த அரிமாக்**
> **கரிமாப் பெருநிரை கண்டுளம் சிறந்து**
> **பாய்ந்த பண்பிற் பல்வேல் மன்னர்**
> **காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப.**
>
> [சிலப்பு. 26: 188-91]

## போர் மூண்டது!

தமிழ் வேந்தன்—வடவேந்தர் படைகள் கை கலந்த போர்க்களத்திலே இருதிறத்துக் கொடிகளும் வெயிலை மறைத்துப் பந்தர் போட்டாற் போலக் காணப்பட்டன. "வெயிற் கதிர் விழுங்கிய துகிற் கொடிப் பந்தர்" என்பது இளங்கோவின் வருணனை. "வெயிலைமறைத்தன" என்னுமல், "வெயிலை விழுங்கி விட்டன" என்கிறார் இளங்கோ.

போர் என்றால், இரு தரப்பிலும் வாளொடு வாள் மோதும்; வில்களிலிருந்து புறப்படும் அம்பொடு அம்பு பாயும்; வேலொடு வேல் தாக்கும் அல்லவா? இதனால் எழும் ஒலிகள் கேட்போரின் காதுகளைச் செவிடாக்கின. வெண் சங்குகள் முழங்கின! போர்ப் பறைகள் ஒலித்தன! கொம்புகள் ஊதின! இந்த ஒலி முழக்கத்தால் எட்டுத்திசைகளும் அதிர்ந்தன!

தமிழக—ஆரிய மன்னர்களிடையில் நடந்த போரில் காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை, தேர்ப்படை ஆகிய நாற்படைகளும் பங்கு பெற்றன. இதனால் எழுந்த புழுதி படை வீரர்களின் பார்வையைக் கெடுத்தது.

'சிலைத்தோள் ஆடவர், செரு வேல் தடக்கையர்' என்னும் சொல்லால் காலாட் படையையும், 'கடுந்தேர் ஊருநர்' என்னுஞ் சொல்லால் யானைப் படையையும், 'விரைபரிக் குதிரையர்' என்னுஞ் சொல்லால் குதிரைப் படையையும் குறிப்பிடுகிறார் இளங்கோ.

நாற்படைகளின் மோதலால் பூமியிலிருந்து எழுந்த புழுதிப்படலங்கள் மண்ணகத்து மக்களின் கண் பார்வையைக் கெடுத்தன என்பதனை, "மண் கண் கெடுத்தவும் மாநிலப் பெருந்துகள்" என்னுந் தொடரால் உணர்த்துகின்றார் கவிஞர். யானைகளின் கழுத்தில் கட்டிய மணிகளின் நாக்கு அசைந்து ஒலியெழுப்பவில்லையாம். காரணம், அந்த நாக்கள் அசையாதபடி மணிகளின் துவாரங்களை மண்புழுதி அடைத்துக்கொண்டு விட்டதுதானாம்!

இளங்கோ, நமக்குக் காட்சிப்படுத்தும் வகையில் போரை வருணிக்கவில்லை. இராமாயணத்தில் யுத்த காண்டத்தில் போர் காட்சிப்படுத்தப்படுகிறது. போரிடும் வீரர்கள் ஒருவரை ஒருவர் ஏசிக் கொள்வதும் சுவைபடக் கூறப்படுகிறது. போரின் கொடுமை பல படலங்களில் விவரிக்கப்படுகிறது. கந்த புராணத்திலும் தேவாசுர யுத்தம் காட்சிப் படுத்தப்படுகின்றது. அங்கெல்லாம் போரை வருணிக்கும் வகையில் "போர்புரி படலம்", "வதைப் படலம்" என்னும் பெயரால் பல படலங்கள் படைக்கப்பட்டுள்ளன. செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணியிலும் போர் காட்சிப்படுத்தப் படுகிறது. "போர் பாடியது", "களம் பாடியது" என்னும் தலைப்புக்கள் தந்து போரும், போரின் விளைவும் தனித்தனியே வருணிக்கப்படுகின்றன.

## போரை வருணிக்காததேன்?

சிலப்பிலே போர் பாடப்படவில்லை; போர்க்களம் பாடப் படுகிறது போரும் போர்க்களமும் அவற்றிற்குரிய தலைப்புக் களைப் பெறவில்லை. கால்கோட்காதை என்னும் தலைப்பின்

கிழேயே போர்க்களம் வருணிக்கப்படுகின்றது. இராமாயணத்திலும், கலிங்கத்துப் பரணியிலும் நூற்றுக்கணக்கான செய்யுட்களால் போரும் களமும் வருணிக்கப்படுகின்றன. சிலப்பிலோ முப்பது வரிகளுக்குமேல் பாடப்படவில்லை.

அழற்படு காதையிலே மதுரை எரிந்த காட்சி வருணிக்கப் படவில்லையென்பதை முன்பே அறிந்தோம். "காவெரி யூட்டிய நாள்போற் கலங்க" என்னும் வரியில் பாரதத்திலே அர்ச்சுனன் காண்டவ வனத்தை எரித்ததனை உவமை காட்டி, 'அதுபோல மதுரை எரிந்தழிந்தது' என்று இளங்கோ கூறியிருக்கின்றார். ஆம்; வன்முறை நிகழ்ச்சிகளைச் சுவைபட வருணிக்கக் கூடாதென்பது இளங்கோவின் கொள்கை.

இளங்கோவின் இந்தப் போதனை அவருக்குப் பின் வந்த புலவர்களால் கடைப்பிடிக்கப்படவில்லை. அவர்கள் சிலம்பின் போதனையைப் புறக்கணித்து, வடமொழிக் காப்பியங்களைப் பின்பற்றி போர்க்களம் பற்றிப் பாடினர். "இராவணன் வதைப் படலம்"—"கும்பகருணன் வதைப்படலம்" என்றெல்லாம் படலங்கள் படைத்து மனிதனை மனிதன் வதைப்பதனை ஒரு கலையாகவே வருணித்துக் காட்டினர். ஒட்டக்கூத்தர் படைத்த தக்கயாகப் பரணியும் இதற்கு விலக்கன்று. இளங்கோவின் தமிழ் இதயம் இதனை ஏற்கவில்லை.

இராம—ராவணன் போரிலே இராவணனைப் பார்த்து இராமன் பேசுகிறான். இந்திரஜித்தனும் அனுமனும் பரஸ்பரம் ஏசிக் கொள்ளுகின்றனர். ஆனால், செங்குட்டுவன்—கனக விசயர் போரிலே, அவர்கள் பேசவுமில்லை; ஏசவுமில்லை. களத்திலே அவர்கள் போரிடுவதனைத் தனியாகப் பிரித்துக் காட்டவில்லை கவிஞர். போரின் முடிவிலே கனகனும் விசயனும் செங்குட்டுவனிடம் பிடிபட்டனர். செங்குட்டுவனின் தளபதியான வில்லவன் கோதை போர்க்களத்தில் பேராற்றல் காட்டி, ஆரிய மன்னரை வீழ்த்தி, தன் மன்னனுக்கு வெற்றி தேடித் தந்தான்.

வடதிசைப் போரில் இருதரப்பிலும் மாண்டவர் தொகை எவ்வளவு? அதனை இளங்கோ கூறவில்லை. ஆனால், அது அளவிடற்கரியது என்பதனை ஒரு உவமையால் விளக்குகின்றார்.

**அடும்தேர்த் தானை ஆரிய அரசர்**
**கடும்படை மாக்களைக் கொன்று களங்குவித்து**
**நெடுந்தேர்க் கொடுஞ்சியும் கடுங்களிற்று எருத்தமும்**
**விடும்பரிக் குதிரையின் வெரிநும் பாழ்பட,**
**எருமைக் கடும்பரி ஊர்வோன் உயிர்த்தொகை**
**ஒருபகல் எல்லையின் உண்ணும் என்பது,**
**ஆரிய அரசர் அமர்க்களத்து அறிய,**
**நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்.**

[சிலம்பு. 26: 211-18]

சேரன் செங்குட்டுவன் ஆரிய அரசர்களின் தேர்களை அழித்து, தேர்ப்படை வீரர்களையும் கொன்று குவித்தான். யானைப்படை, குதிரைப்படைகளையும் அடியோடு அழித்து முடித்தான்! எருமைக் கடாவை வாகனமாக உடைய எமனானவன், உயிர்த்திரளை ஒரு பகலிலேயே உண்ணும் ஆற்றலுடையவன் என்பதனை ஆரிய அரசர்கள் அறிந்து கொள்ளும்படிச் செய்தான்.

## வேடதாரிகள்!

வாய் வீரம் காட்டி தமிழ் வேந்தரை இகழ்ந்த கனக விசயரான சகோதரர்களோடு 52 தேர் வீரர்களும் செங்குட்டுவனிடம் பிடிபட்டனர். கனக விசயருக்குத் துணை வந்த ஆரிய மன்னர்கள் என்ன ஆனார்கள் என்பதையும் இளங்கோ அறிவிக்கிறார். கனகனும் விசயனும் பிடிபட்டது அறிந்ததும் துணைக்கு வந்த ஆரிய வேந்தர்கள் நடுக்கமுற்றவர்களாய் நாற்றிசையிலும் சிதறியோடினர். அவர்களிலே உருத்திரனும் பைரவனும் உண்டல்லவா! அவர்கள் தங்கள் பெயருக்கேற்ப சாம்பற் பூசி, காவியுடுத்து, சடைமுடி

புனைந்து, சந்நியாசி கோலம் பூண்டனராம். துணைக்கு வந்த மன்னர்களிலே சமணர்களும் உண்டு போலும்! அவர்கள் மயிற் பீலி தாங்கி, சமண பிட்சுக்கள் போல் வேடம் போட்டனர். வேறு சிலர், ஆடும் கூத்தராகவும் பாடும் பாணராவும் நடித்துக் கொண்டு, தப்பியோடி உயிர் பிழைத்தனர். எஞ்சியவர்கள், தாம் கற்ற வித்ைதகளுக்குத் தேற்ற வேடங்களைப் பூண்டு, களத்திற்குப் புறமுதுகு காட்டி ஓடிவிட்டனர். இதனை இளங்கோவின் வருணனையைக் கொண்டு அறிவோம் :

வாய்வாள் ஆண்மையின் வண்தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்,
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்தன் சினவலைப் படுதலும்
சடையினர், உடையினர், சாம்பற் பூச்சினர்,
பீடிகைப் பீலிப் பெருநோன் பாளர்,
பாடு பாணியர் பல்லியத் தோளினர்,
ஆடு கூத்தர் ஆகி எங்கணும்.
ஏந்துவாள் ஒழியத் தாம்துறை போகிய
விச்சைக் கோலத்து வேண்டு வயிற்படர்தர.

(சிலம்பு. 26, 221-30)

வெற்றி கண்ட செங்குட்டுவனுக்கு விழா எடுக்க வேண்டுமல்லவா? அதுவும் நடக்கிறது. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரையும், இலங்கையிலே நடந்த இராம—ராவணர் போரையும், திருமால் தேரோட்டிய மகா பாரதப் போரையும் உவமை காட்டி, சேரனை வாழ்த்தி, வெற்றி விழா நடத்தப் பெற்றது. இதனை,

"கடல்வயிறு கலக்கிய ஞாட்பும், கடலகம்
இலங்கையில் எழுந்த சமரமும், கடல்வணன்
தேரூர் செருவும பாடிப் பேரிசை
முன்தேர்க் குரவை முதல்வனை வாழ்த்தி"

என்ற வரிகளால் கவிஞர் அறிவிக்கிறார்.

இளங்கோ கொடுமைகளை வருணிக்கும் கொள்கையுடையவர் அல்ல. ஆயினும், போர்க்களம் பாட வந்தவர் அதன் கொடுமையைக் குறைந்த அளவிலேனும் வருணித்தாக வேண்டுமல்லவா? இதோ, வருணிக்கிறார்.

"முடித்தலை அடுப்பில் பிடர்த்தலைத் தாழி,
தொடித்தோள் துடிப்பின் துழைஇய ஊன்சோறு
மறப்பேய் வாலுவன் வயினறிந்து ஊட்டச்
சிறப்பூண் கடியினம் 'செங்கோற் கொற்றத்து
அறக்களஞ் செய்தோன் ஊழி வாழ்க!"

[சிலம்பு. 26: 242-46

"போர்க்களத்தில் தலைகளாகிய அடுப்பிலே, யானையின் தலையாகிய தாழியிலே, தோள்களாகிய துடுப்பினால் துழாவி ஊன் சோறு சமைக்கப்படுகிறது. ஆம்; சமையல் செய்த பேய் பதமறிந்து உண்பிக்க, மற்ற பேய்கள் ஊன் சோற்றை உண்டன 'செங்கோன்மை தவறாமல் அறக்களம் செய்தவனை செங்குட்டுவன், ஊழிதோறும் வாழ்க'! என்று பேய்கள் சேர மன்னனை வாழ்த்தின!

தன் படை வீரர்கள் வெற்றியால் வெறி கொண்டு மறைகாத்தோம்பும் அந்தணர்களுக்குத் தொல்லை கொடுத்து விடுவார்களோ என்ற ஐயம் எழுந்தது சேரனுக்கு. முன்னர் அவன் வஞ்சி நகரை விட்டுப் புறப்பட்ட நேரத்திலே, வானியங்கு முனிவர்கள் வந்து,

"வான்பேர் இமைய
நிலயத்து ஏகுதல் நின்கருத்து ஆகலின்
அருமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்,
பெருநில மன்ன! பேணல்நின் கடன்" —

[சிலம்பு. 26: 100-103]

என்று கூறிப் போயினர் அல்லவா! அது நினைவுக்கு வந்து விட்டது செங்குட்டுவனுக்கு. அதனால், தன் படை வீரரைப் பார்த்து,

"வடதிசை மருங்கின் மறைகாத்து ஓம்புநர்
தடவுத்தீ அவியாத் தண்பெரு வாழ்க்கை
காற்றூ தாளரைப் போற்றிக் காமின்!'

[சிலப்பு. 26 : 248-50]

என்று ஆணையிட்டான்.

அந்நாளில், அந்தணர் என்போர் ஓதல்—ஓதுவித்தல் ஆகிய கடமைகளைக் கண்ணெனக் கொண்டு வாழ்ந்தனர். ஆம்; கற்க வேண்டியவற்றை யெல்லாம் கசடறக் கற்றனர். தாங்கள் கற்றவற்றை நாட்டிலுள்ள மக்களுக் கெல்லாம் கற்பித்தனர். சுருங்கச் சொன்னால், அந்தணர் என்போர், சமுதாயத்தின் அறிவுச் செல்வங்களாக விளங்கினர். அதனால், அவர்களைக் காக்குமாறு ஆணையிட்டான் செங்குட்டுவன்.

## கல் எடுத்தனர்

போர் முடிந்ததும் இமயத்தின் பிடரிக்குச் சென்றது செங்குட்டுவன் சேனை. அதன் உயரத்தை அளந்து அறியவா? அல்ல. பத்தினித் தெய்வமாம் கண்ணகியின் சிலைக்குக் கல் எடுக்கத்தான். செங்குட்டுவன் வடதிசை யாத்திரையை மேற் கொண்டது கண்ணகியின் சிலைக்குக் கல் எடுக்கத் தானே! போரில் வென்று வினை முடித்த வில்லவன்கோதை யுடன் தானை வீரர் சிலரைத் துணைக்கு அனுப்பி இமயத்தி லிருந்து கல் எடுத்து வரச் செய்தான் செங்குட்டுவன். இது,

"வில்லவன் கோதையொடு வென்றுவினை முடித்த
பல்வேல் தானைப் படைபல ஏவிப்
பொற்கோட்டு இமயத்துப் பொருவறு பத்தினிக்
கற்கால் கொண்டனன் காவலன்."

[சிலப்பு. 26 : 251-54]

என்னும் வரிகளில் அறிவிக்கப்படுகிறது.

இனி, கண்ணகிசிலைக்கென இமயத்தில் எடுத்த கல்லை கங்கையிலே நீராட்டிப் புனிதப்படுத்த வேண்டும். இது, நீர்ப்படைக் காதையிலே கூறப்படுகிறது. ஆம்; இங்கு காதை மாறுகிறது. கால்கோள் காதை முடிந்து நீர்ப்படைக் காதை தொடங்குகிறது.

வட இமயத்திலே எடுத்த கல்லைத் தென் தமிழர் நாட்டிற்கு எப்படிக் கொண்டு வருவது? கற்பினளான கண்ணகிதேவி வினைவயத்தால் கொடுங்கோலனாகிவிட்ட நெடுஞ்செழியனை எதிர்த்து, அவனுடைய தலை நகரை எரித்துப் பழிவாங்கிக் கொண்டாள். அந்தப் பழி வாங்கிய பத்தினியின் உருவச் சிலைக்கான கல்லை, தமிழ் வேந்தர்களைப் பழித்ததனால் ஏற்கனவே பழி சுமக்கும் கனக—விசயர் தலையிலே சுமத்தினான் சேரன் செங்குட்டுவன். இதனை,

> "வடபேர் இமயத்து வான்தரு சிறப்பிற்
> கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்,
> சினவேல் முன்பிற் செருவெங் கோலத்துக்
> கனக விசயர்தங் கதிர்முடி ஏற்றி'

என்னும் வரிகளால் அறிகிறோம் போரிலே தோற்றவனுடைய தலையை மொட்டை யடித்து, அந்த மொட்டைத் தலைமீது விளக்கேற்றி வைத்து வெற்றி கொண்ட மன்னன் வேடிக்கை பார்த்து மகிழ்வது அந்நாளைய வழக்கம். இது. தமிழ் வேந்தர் களிடையிலான போர்களிலும் நிகழ்ந்திருக்கிறது என் பதனை செயங்கொண்டார் பாடிய 'கலிங்கத்துப் பரணி' யில் பார்க்கிறோம். இதிலே இனப் பிரச்சினை ஒன்றுமில்லை. பழி வாங்கும் செயல் போர்க்கள "நாகரிக" மாவதன்றி, தமிழினத்தின் நாகரிகமாவதற்கில்லை.

கனக—விசயர் தலைகளை மொட்டையடித்து, அந்த மொட்டைத் தலைகள் மீது விளக்கேற்றி வைத்து மகிழ் வதற்குப் பதிலாக பத்தினித் தெய்வத்திற்குப் படிவம் படைப்பதற்கான இமயத்தில் எடுத்த கல்லை அவர்கள்

தலைகள் சுமக்கும்படிச் செய்தானே செங்குட்டுவன், அது புதுமைதான்!

தமிழ் வேந்தனுகிய செங்குட்டுவன் ஆரிய மன்னருடன் நடத்திய போரை இளங்கோவடிகள் விரிவாக வருணிக்காததற்கு அந்தப் போர் பதினெட்டு நாழிகையளவிலே நடந்து முடிந்ததும் ஒரு காரணமாகும். ஒரு பகற்பொழுது அளவு தான் போர் நடந்ததாம்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்குமான போர் 18 ஆண்டுகளிலும், இராம—ராவணப் போர் 18 மாதங்களிலும், மகாபாரதப் போர் 18 நாட்களிலும் முடிந்தன. இவற்றுடன் ஒப்பிடும்போது, செங்குட்டுவன்—கனக விசயர் போர் மிகக் குறுகிய கால அளவில் நடந்து முடிந்தது என்கிருர் இளங்கோ.

கனக—விசயர் தலையிலேற்றிய கல்லை கங்கையிலே நீர்ப்படை செய்து புனிதப்படுத்தினர் சேர மன்னனின் குழுவினர். சாத்திரம் அறிந்தவர்களைக் கொண்டு வைதிக முறைப்படி நடந்ததாகவும் கவிஞர் கூறுகின்ருர்.

# 9

# வடபுலஞ் சென்ற சேரன் வஞ்சி திரும்பினான்!

"சேரன் செங்குட்டுவனின் வடபுலப்போர் உண்மையில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிதானா? இல்லையேல், கவிஞர் இளங்கோவின் கற்பனைதானா?" என்று ஐயம் எழுப்பப் படுகிறது. "கற்பனைதான்" என்று முடிவு கட்டுவோரும் உண்டு. ஏன்? எனக்கே அந்த ஐயப்பாடு உண்டு. ஆனால், அதுபற்றி முடிந்த முடிவாக எதுவும் சொல்வதற்கில்லை. "கவிஞரின் கற்பனைதான்" என்று கூறுவோர், அதற்காகக் காட்டும் சான்றுகள் என்ன?

வடபுலத்து மொழிகளிலுள்ள இலக்கியங்களிலே செங் குட்டுவன் படையெடுப்பு பற்றிச் சான்றுகள் இல்லையாம்; வடபுலத்துச் சரித்திர ஆசிரியர்களும் அதுபற்றி ஒன்றும் சொல்லவில்லையாம். தமிழ் நாட்டிலும் அரசர்கள் படைக்கும் "மெய்க்கீர்த்தி"கள் போன்ற சான்றுகள் இல்லையாம். அதனால் செங்குட்டுவன்—கனக விசயர் போரினை வரலாற்று நிகழ்ச்சி யாக ஏற்கப் புலவர்களிலே சிலர் மறுக்கின்றனர். வடபுலத்து மொழிகளிலுள்ள இலக்கியங்களையோ, அங்கு மக்கள் வழக்கிலுள்ள பழமொழிகளையோ, கர்ண பரம்பரைக் கதைகளையோ நம்மில் யாரேனும் ஆராய்ந்து பார்த்த துண்டா?

செங்குட்டுவன் படையெடுப்பைப் பற்றி மட்டுமல்ல; அவனுக்கு முன்னும் தமிழ் மூவேந்தர்கள் வட புலத்திலே

படை நடத்தி இமயத்தில் தத்தம் கொடிச் சின்னங்களைப் பொறித்ததாகத் தமிழ் இலக்கிய ஏடுகளிலே படிக்கிறோமே அவற்றில் எதையேனும் உறுதிப்படுத்த வடதிசை இலக்கிய ஏடுகளிலே சான்றுகள் உண்டா? இல்லையே! அதனால், அந்தச் செய்திகளெல்லாம் கவிஞர்களின் "கைச் சரக்கு" என்ற முடிவுக்கு வந்து விடலாமா?

கரிகால் வளவன் இமயம்வரை படை நடத்தி, வழியில் தன்னை எதிர்த்த வடவேந்தர்களைப் போரில் முறியடித்து, நட்பரசர்களிடமும் போரில் வீழ்ச்சியுற்ற பகையரசர்களிடமும் பட்டிமண்டபம், தோரணவாயில் போன்றவற்றைப் பரிசுகளாகப் பெற்றுத் திரும்பினனென்று சிலம்பு கூறுகின்றதே, அதுவும் கவிஞர் இளங்கோவின் கற்பனைதானா?

'ஆம்' என்றால், தமிழ் வேந்தர்களின் வடபுலப் படையெடுப்புபற்றித் தமிழ் இலக்கிய ஏடுகள் கூறும் செய்திகள் அனைத்துமே கவிஞர்களின் கற்பனைச் சரக்குகள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். அப்படிக் கொள்ள எனது அறிவு இடந்தரவில்லை. சங்க இலக்கியங்களோ, அவற்றையடுத்ததான சிலப்பதிகாரமோ புராண பாணியில் இயற்றப் பட்டவையல்ல. அவையனைத்தும் சிறிதளவே கற்பனை தழுவிய வரலாற்று இலக்கியங்களாகும்.

## சான்று உண்டா?

வடபுலத்துக் கவிஞர்கள் புனைந்த இலக்கியங்களிலோ, அறிஞர்கள் எழுதிய வரலாற்று ஏடுகளிலோ தமிழ் வேந்தர்களின் வடபுலப் படையெடுப்பு இடம் பெறாததற்குக் காரணமுண்டு. ஒரு நாட்டு மன்னன் இன்னொரு நாட்டின்மீது படையெடுப்பது, அந்நாட்டை அடிமைப்படுத்தி, அதன்மீது ஆதிக்கஞ் செலுத்துவதற்காகவே! அடிமைப்பட்ட நாட்டினர்மீது ஆதிக்கம் பெற்ற அயலரசன் தனது நாட்டு மொழியைத்

திணிப்பான். மதத்தால் வேறுபட்டவனுனால், தனது மதத்தையும் திணிப்பதுண்டு. அத்துடனன்றி, தனது நாட்டு மக்களை தான் அடிமைப்படுத்திய நாட்டிலே குடும்பம் குடும்பமாகக் குடியேற்றி. அதனைத் தனது காலனியாக்குவான்.

கி.பி. 2-ஆம் நூற்றுண்டில் வடபுலத்து அசோகன் தென்புலத்தை நோக்கிப் படையெடுத்தான். கலிங்கம் வரை வெற்றிநடை போட்டான். அதற்கும் தெற்கே வரமுடியாதவனுகி, கலிங்கத்தோடு படையெடுப்பை நிறுத்தினுன். கலிங்கம்வரை தனக்கு அடிமைப்பட்ட நாடுகளில் தன் வெற்றிச் சின்னங்களை—அசோக ஸ்தூபிகளை—நிறுவினுன். காலம் அசோகன் படைத்த பேரரசை விழுங்கி விட்டது. ஆயினும், அவன் நிறுவிய சின்னங்கள் நிலைபெற்று விட்டன, அதனுல், அவனுடைய தென்புலப் படையெடுப்பு சரித்திர ஏடுகளில் ஏறிவிட்டது.

செங்குட்டுவனே, கனக—விசயரைக் கைது செய்து தாயகம் கொண்டுவருவதோடு ஆறுதல் அடைந்து விட்டான். அதற்கு மேல் உத்தரகோசல நாட்டில் தன்படைகளை நிறுத்தி அந்நாட்டை அடிமைப்படுத்தினுனில்லை. அதனுல், அந்த உத்தரகோசலத்திலே சேரனுடைய வெற்றியைக் காட்டும் சின்னங்களில்லை.

## "அரச பவனம்!"

வடபுலத்துப் போரி முடிந்ததும் தன் படைகளுடன் திருப்பி நூற்றுவர் கன்னரி தந்த மரக்கலங்கள் மூலம் கங்கை நதியைக் கடந்து தென்கரைக்கு வந்து பாடி விடு கொண்டான் சேரன் செங்குட்டுவன். கங்கை நதியின் தென் கரையிலே சேர மன்னன் சில நாட்கள்வரை தங்கி, சிரம பரிகாரம் செய்து கொள்வதற்கென்று "அரச பவனம்" ஒன்றை அமைத்துக் கொடுத்தனர் நூற்றுவர் கன்னர்.

மிகவும் பெரிதான அரண்மனை, பொன் தகடுகளால் வேயப்பட்ட அரங்கம், வேலைப்பாடுகளால் அழகு செய்யப் பட்ட பூப்பந்தல், காதலியருடன் அரசன் கலந்து மகிழ்வதற் குரிய அந்தப்புரம், மிகப் பரந்த நிலப்பரப்பில் அமைந்த பூஞ்சோலை, தாமரைக் குளம் வரிக் கூத்தினைக் கண்டு மகிழ் வதற்கான கலையரங்கம் ஆகிய எல்லாம் நூற்றுவர் கன்னர் அமைத்த "ராஜ பவனத்"தில் இருந்தனவாம். பெரிய சக்கர வர்த்திக்குத் தேவைப்படுவனவற்றையெல்லாம் தங்கள் சக்கர வர்த்தியான செங்குட்டுவனுக்கு நூற்றுவர் கன்னர் அமைத் துக் கொடுத்தனராம். இதனை இளங்கோவே கூறக் கேட் போம் :

"மன்பெரும் கோயிலும் மணிமண் டபங்களும்,
பொன்புனை அரங்கமும் புனைபூம் பந்தரும்,
உரிமைப் பள்ளியும், விரிபூஞ் சோலையும்,
திருமலர்ப் பொய்கையும், வரிகாண் அரங்கமும்,
பேரிசை மன்னர்க்கு ஏற்பவை பிறவும்
ஆரிய மன்னர் அழகுற அமைத்த
தெள்ளுநீர்க் கங்கைத் தென்கரை யாங்கண்
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு"

இவ்வளவு சிறப்புகளுடன் கூடிய பாடி வீட்டிலே சேரன் செங்குட்டுவன் தன் பரிவாரங்களுடன் தங்கி, போர் புரிந்த தால் ஏற்பட்ட அலுப்புத் திர ஓய்வு கொண்டான்.

## பரிசுகள் வழங்கினன்

கங்கையின் தென்கரையில் தங்கிய செங்குட்டுவன், வட வாரியருடன் தான் நடத்திய போரில் தனக்கு வெற்றி தேடித் தந்த வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கினன் அவ் வீரர்கள் இரு வகையினர், ஒரு வகையினர், போரில் வீர சாகசங்கள் புரிந்து உயிர் நீத்தவர்கள். மற்றொரு வகையினர், போரில் விழுப் புண் பட்டும் படாமலும் உயிர் பிழைத்தவர்கள்.

போரில் மாண்ட வீரர்கள் அனைவரையும் சமமாகக் கருதாமல் அவர்கள் வெளிப்படுத்திய வீர சாகசங்களுக் கேற்ப அவர்களை ஐவகையாகப் பிரித்து அவரவர் தரத்திற் கேற்பப் பரிசுப் பொருள்களை அவர்களுடைய மைந்தர் களுக்குச் செங்குட்டுவன் வழங்கினான் என்கிறார் இளங்கோ.

மாண்ட வீரர்களை ஐவகையாகப் பிரிக்குமிடத்து போர்க்கள நிகழ்ச்சிகளைச் சுவைபடக் கூறுகின்றார் ஆசிரியர். போர்க்களத்திலேயே கூறியிருக்க வேண்டிய வீர சாகசங்களை வீரர்களுக்குப் பரிசு கொடுக்கும் இடத்திலே வைத்துக் கூறு வதற்குக் காரணம் என்ன? போரின் கடுமையைக் காட்சிப் படுத்த இளங்கோ விரும்பாததுதான்!

ஐவகையாகப் பிரிக்கப்பட்ட அமரர்களிலே ஒரு வகையினர்,

> ''நீணில மன்னர் நெஞ்சுபுகல் அழித்து
> வானவர் மகளிரின் வதுவை சூட்டு அயர்ந்தோர்.''

என்கிறார்.

தமிழ் மூவேந்தர்களைப் பழித்துப்பேசிய காவா நாவினராம் கனக விசயருடனும் அவர்களுக்குத் துணைவந்த ஆரியமன்னரு டனும் அவர்களுடைய ஆணவம் அழியுமாறு போரிட்டு, அந்தப் போரிலே உயிர் நீத்ததன் காரணமாகச் சொர்க்கம் புகுந்து, அங்கு தேவ மகளிரை மணந்து வாழும் வீரர்களின் மைந்தர் களை அழைத்து, அவர்கள் தந்தையர்க்குரிய பரிசுகளைச் சேரன் வழங்கினான். வீர சுவர்க்கம் புகுந்தோர் அங்கு தேவ மகளி ரைத் தழுவி இன்பம் துய்த்தர் என்பது கவிஞர் கூறும் கற்பனை தான் என்றாலும் காப்பியத்திற்குச் சுவை ஏற்றுவதுதானே!

> ''உலையா வெஞ்சமம் ஊர்ந்தமர் உழக்கித்
> தலையும் தோளும் விலைபெறக் கிடந்தோர்''

கொடுமை மிகுந்த போர்க்களத்திலே புகுந்து, பகைவர் கலங்குமாறு போர் செய்து, அதனால் தங்கள் தலைகளையும் தோள்களையும் தங்கள் வேந்தனுக்குக் கிடைக்கும் வெற்றிக்கு விலையாகக் கொடுத்து உயிர் நீத்த வீரர்களின் புதல்வர்களை அழைத்து அவர்கள் தரத்திற்கேற்ற பரிசுப் பொருள்களைச் சேரமன்னன் வழங்கினான்.

போர்க்களத்தில் உயிர் விடுவது போற்றத் தக்கதுதான். அதை விடவும், தலை துண்டிக்கப்பட்டும், தோள்களோடு கூடிய கைகள் துண்டிக்கப்பட்டும் கோர மரணம் அடைவது மிக மிகப் போற்றத்தக்கதாகும்.

இராமாயணத்திலே இலக்குமணனால் வெட்டப்பட்ட இந்திரஜித்தனுடைய தலையை அங்கதன் கொண்டு செல்ல, அவனுடைய உடல் மட்டும் அவனைப் பெற்றெடுத்த மண்டோதரியின் பார்வைக்குச் சென்றபோது, "மகனே! உன் தலையிலா யாக்கை காண யான் என்ன பாவம் செய்தேன்?" என்று கூறி அவள் அழுகிறாள் அல்லவா! அதுபோல, உடல் சிதைவுண்டு உயிர் நீத்த வீரர்களை,

"நாள்விலைக் கிளையுள் நல்லமர் அழுவத்து
வாள்வினை முடித்து மறத்தொடு முடிந்தோர்"

என்ற வரிகளில் கூறுகிறார்.

போரிலே வாட்களின் மூலம் தங்கள் வல்லமைகளையெலாம் காட்டி, வெற்றியை மன்னனுக்குத் 'தந்து வீர சுவர்க்கத்தைத் தாங்கள் தேடிக் கொண்டுவிட்ட வீரர்களின் மக்களை அழைத்து, அவர்கள் தரத்திற்குரிய பரிசுகளை வஞ்சி நகர்த்தலைவன் வழங்கினான். வாள் முனையிலே சாகசங்கள் புரிந்த வீரர்கள் தனிச் சிறப்புக்குரியவர்கள்தானே! அவர்களை,

"குழிகண் பேய்மகள் குரலையின் தொடுத்து,
வழிமருங்கு ஏத்த வாளொடு மடிந்தோர்"

என்ற வரிகளில் அறிமுகப்படுத்துகிறார் கவிஞர்.

மாற்றானுடைய படை வீராவேசத்துடன் தங்களுடன் மோத வரும்போது, அப்படை தங்களை நெருங்கு முன்பு தாங்களே முன்னேறிச் சென்று அது பின்வாங்கியோடும் படியாகப் போர் புரிந்தனர் வஞ்சி நாட்டு மன்னனின் வாள் வீரர்கள். அந்தப் போரின்போது வெட்டுண்டு வீழ்ந்த பகை வீரர்களின் உடலங்களின்மீது ஏறிக்கொண்டு குழிந்த கண் களையுடைய பேய்கள் குரவை பாடிக் கூத்தாடினவாம். அத் தகைய வீர சாகசம் புரிந்து உயிர் நீத்த வீரர்களின் மைந்தர் களை அழைத்து அவர்கள் தரத்திற்கேற்ற பரிசுகளை வழங்கி னான் மலைநாட்டு மன்னன்.

**கிளைகள் தம்மொடு கிளர்பூண் ஆகத்து**
**வளையோர் மடிய மடிந்தோர் மைந்தர்**

வடவாரிய மன்னர் மீது போர் நடத்தச் செங்குட்டுவன் புறப்பட்டபோது, குடும்பம் குடும்பமாகப் பலர் சேரன் படை யில் சேர்ந்து கொண்டனராம். ஆம்; தந்தையும் மகன்களு மாக, அண்ணனும் தம்பியருமாக, மாமனும் மைத்துனனு மாக சேரனுடைய படையில் சேர்ந்து வடபுலம் சென்றனர். அவர்கள் போர்க்களத்திலே குடும்பம் குடும்பமாக மடிந்து தங்கள் வாழ்வரசிகளை விதவைகளாக்கி, அவர்களை வேதனையி லாழ்த்திவிட்டு வீர சுவர்க்கம் புகுந்தனராம். இவர்கள் மன்னனுடைய தனி மதிப்புக் குரியவர்கள்தானே! அதனால், அவர்களுடைய மைந்தர்களை அழைத்து, மதிப்புமிக்க பரிசு களை மன்னன் வழங்கினான்.

இப்படி, இறந்த வீரர்களை ஐவகைப்படுத்தி, ஒவ்வொரு வகையினருக்கும் உரிய பரிசுகளை அவரவருடைய மைந்தர் களுக்கு வழங்கிய பின்னர், போரில் விழுப்புண்பட்டும் படா மலும் உயிர் பிழைத்த வீரர்களை நால் வகையாகப் பிரித்து அவர்களுக்கும் சேர மன்னன் சிறப்பு மிக்க பரிசுகளை வழங் கினன்.

போரில் மாற்றுருடைய படை வீரர்களின் தலைகளைக் கொய்வது சிறந்த வீரம்தான். அதை விடவும் பகை மன்னர்களின் தலைகளைக் கொய்து கொண்டு வந்து தனது மன்னனின் காலடியில் வைக்கும் சாதனை சிறப்பு மிக்கதல்லவா! அதனால்,

"மாற்றரும் சிறப்பின் மணிமுடிக் கருந்தலைக்
கூற்றுக்கண் ணோட அரிந்துகளம் கொண்டோர்"

ஆகிய வீரர்களுக்கும் வெற்றிப் பரிசுகளைச் செங்குட்டுவன் வழங்கினான்.

## மாடலன் வந்தான்!

இப்படி, இன்னும் பலவகையான சாதனைகளைப் புரிந்த வீரர்களுக்கெல்லாம் சேர மன்னன் செங்குட்டுவன் பரிசுகள் வழங்கினான். ஒரு பகல் முழுவதும் பரிசுகள் வழங்குவதிலேயே மன்னன் ஈடுபட்டிருந்தான்.

போருக்குப் புறப்பட்டபோதே, அப்போர் முடிந்ததும் அதிலே வெற்றி தேடித்தந்த வீரர்களுக்கு வழங்குவதற்கான பரிசுப் பொருள்களையும் செங்குட்டுவன் தன்னுடன் கொண்டு சென்றிருக்க வேண்டும். போர் முடிந்து வஞ்சிநகர் திரும்பிய பின் தனக்கு வெற்றி தேடித் தந்த வீரர்களுக்கு மன்னன் பரிசுகள் வழங்கி யிருக்கலாம். அப்படிச் செய்யாமல் கங்கை நதியின் தென் கரைக்கு வந்து பாடிவீட்டில் தங்கியதுமே முதல் காரியமாகத் தன் வீரர்களுக்குப் பரிசுகளை வழங்கி யிருக்கிறான். ஆம்; வீரர்களைப் பாராட்டுவதிலே தாமதம் கூடாது என்பது தமிழ் வேந்தர்களின் கொள்கையாகும்.

வடதிசைப் போரில் கலந்து கொண்ட வீரர்களுக்குப் பரிசுகளை வழங்கி மகிழ்ந்திருந்த நேரத்தில் மாடலமறையவன் அங்கு வந்து தோன்றினான். இந்த மாடலன் கோவலனுடைய நண்பன் என்பதனை இங்குதான் அறிகிறோம். மாடல மறையவன் சேரன்முன் தோன்றி,

"வாழ்க, எங்கோ! மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது; முதுநீர் ஞாலம்
அடிப்படுத்து ஆண்ட அரசே! வாழ்க!"

என்று உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்துக் கூறினன். மாடலன் கூறியது கேட்டு சேரன் வியப்புற்றான். அதனால்,

"பகைப்புலத்து அரசர் பலர்ஈங் கறியா
நகைத்திறம் கூறினை, நான்மறை யாள!
யாது, நீ கூறிய உரைப்பொருள்....?"

என்று கேட்டான்.

"என்னிடம் போரில் தோல்வியுற்ற பகைவர்களான ஆரிய மன்னர்கள் என் அவையிலே இருக்கின்றனர். இவர்கள் அறியாத ஒரு புதுமையான செய்தியைக் கூறினாயே, அதன் பொருள் என்ன?"

இது, சேரன் விடுத்த வினா. இதற்குப் பதில் சொல்லப் புகுந்த மாடலன், பூம்புகாரில் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் கோவலனும் மாதவியும் மாறி மாறி கானல் வரிப் பாடல் பாடியதையும்; அதன் காரணமாகப் பரஸ்பரம் ஒருவரையொருவர் ஐயுற்றதையும்; அதனால், மாதவியை விட்டுக் கோவலன் பிரிந்ததையும்; பிரிந்தவன், கண்ணகியை அழைத்துக்கொண்டு மதுரை புகுந்ததையும்; அங்கு கள்வன் என்று குற்றஞ் சாட்டப்பட்டு மதுரை மன்னன் ஆணைப்படி கோவலன் கொல்லப்பட்டதையும்; அதன்பின் கணவனையிழந்த கண்ணகி சேர நாடு அடைந்ததையும்; அந்தக் கண்ணகியே கல் வடிவத்தில் ஆரிய மன்னர் தலைமீது இருப்பதாகவும் கூறினான். அதனை மாடலன் வாக்காலேயே அறிவோம்!

கானலம் தண்துறைக் கடல்விளை யாட்டினுள்
மாதவி மடந்தை வரிநவில் பாணியோடு
ஊடற் காலத்து, ஊழ்வினை உருத்தெழக்
கூடாது பிரிந்து, குலக்கொடி தன்னுடன்
மாட மூதூர் மதுரை புக்கு, ஆங்கு
இலைத்தார் வேந்தன் எழில்வான் எய்தக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
குடவர் கோவே! நின்னாடு புகுந்து
வடதிசை மன்னர் மணிமுடி ஏறினள்.

*மதுரை நிகழ்ச்சிகள் தண்டமிழ் ஆசான் சாத்தன் மூலம் செங்குட்டுவன் முன்னரே அறிந்தவையே. ஆனால், புகாரில் நடந்த நிகழ்ச்சிகளை அவன் அறியான். அதனை அறிவிப்பதற்கு யாத்திரிகனான மாடல மறையவனை இளங்கோ பயன்படுத்திக் கொள்கிறார். கண்ணகி மதுரையை விட்டுப் புறப்பட்ட பின்னர், அந்நகரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் சேரன் அறியான். ஏன், நாமும் அறியோம். அந்த நிகழ்ச்சிகளை மாடல மறையவன் மூலம் சேரனுக்கும் நமக்கும் அறிவிக்கின்றார் இளங்கோ.*

*கங்கை நதிப் பிரதேசத்திற்குத் தான் வந்த காரணத்தையும் மாடலன் கூறுகின்றான்:*

மாமுனி பொதியின் மலைவலம் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வேன்,
ஊழ்வினைப் பயன்கொல்? உரைசால் சிறப்பின்
வாய்வாள் தென்னவன் மதுரையிற் சென்றேன்;
வலம்படு தானை மன்னவன் தன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை என்றலும்,
தாதெரு மன்றத்து, மாதரி எழுந்து.
கோவலன் தீதிலன்; கோமகன் பிழைத்தான்;
அடைக்கலம் இழந்தேன்; இடைக்குல மாக்காள்!
குடையும் கோலும் பிழைத்த வோ? என.

**இடையிருள் யாமத்து, எரியகம் புக்கதும்;**
**தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்**
**நிவந்தோங்கு செங்கோல் நீணில வேந்தன்**
**போகுயிர் தாங்கப், பொறைசால் ஆட்டி,**
**என்னோடு இவர்வினை உருத்த தோஎன,**
**உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்த்ததும்**

"அகத்திய முனிவர் வாழும் பொதிகை மலையை வலம் வந்த பின்னர், பாரதத்தின் தென்கோடியில் முக்கடலும் கலக்கும் குமரியம் பெருந்துறையில் தீர்த்தமாடி மீளுங்கால், என்னுடைய ஊழ்வினைப் பயனாலோ என்னவோ, நான் புகழ் மிக்கதும், பாண்டியனுடைய ஆட்சியின் தலைநகருமான மதுரைக்குச் சென்றேன்.

"அங்கு வெற்றிகொள்ளும் சேனைப்பெருக்கத்தையுடைய பாண்டி வேந்தனைத் தன் காற்சிலம்பைக் கொண்டு கண்ணகி வெற்றி பெற்றாள் என்ற செய்தியை அறிந்ததும், ஆயர்சேரியில் வாழ்ந்த மாதரி என்பாள், 'கோவலன் தீதிலன்; கோமகனே தவறிழைத்தான். அதனால், கோவலன் அடைக்கலம் தந்துவிட்டுப் போன கண்ணகியை இழந்தேன். இடைக்குல மாக்காள்! கோமகனின் வெண் கொற்றக் குடையும் செங்கோலும் பிழைத்தனவோ!' என்று கூறி, நடுச்சாம வேளையில் தீக்குளித்து மாண்டாள் என்னும் செய்தியைக் கேட்டேன்.

"தவத்திற் சிறந்த கவுந்தியடிகள், பாண்டி வேந்தன் கோவலனைக் கொன்ற செய்தி கேட்டதும், அவன்மீது சீற்றங் கொண்டாள். ஆனால், பாண்டியன் மாண்டு விட்டதை அறிந்து அவளது சீற்றம் தணிந்தது. ஆயினும், "கோவலனும் கண்ணகியும் என்னை வழிகாட்டியாகக் கொண்டு மதுரை வந்ததனாலல்லவா அவர்களுக்கு இந்தக் கேடு நேர்ந்தது!" என்று கூறி, உண்ணா நோன்பிருந்து தன் உயிரை விட்டார். இவை, சேரன் செங்குட்டுவனிடம் மாடலன் கூறிய செய்திகள்.

கோவலன்—கண்ணகி வாழ்வு முடிந்த பின்னர் புகார் நகரில் நிகழ்ந்தவற்றையும் மாடல மறையவன் சேரனுக்குக் கூறுகின்றான் :

**பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்கு**
**உற்றதும் எல்லாம் ஒழிவின்றி உணர்ந்து, ஆங்கு**
**என்பதிப் பெயர்ந்தேன். என்துயர் போற்றிச்**
**செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க்கு உரைக்க.**

"பொன்னாலான அழகிய தேரினையுடைய வெற்றிவேற் செழியனின் மதுரை மாநகரில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் ஐயமற அறிந்தபோது என் மனத்தில் ஆற்றொணாத் துயரம் எழுந்தது. அதனைப் பொறுத்துக் கொண்டு, யான் பிறந்த பதியான புகாருக்குச் சென்றேன். அங்கு என்பால் அன்பு கொண்டவர்களை யணுகி, மதுரையில் நடந்தவற்றை அவர்களிடம் கூறினேன்."

மாடலன், தன்னைச் சார்ந்தவர்களிடந்தான் மதுரை நிகழ்ச்சிகளைக் கூறினானென்றாலும், அவை கண்ணகி—கோவலன் பெற்றோர் செவிகளுக்கும் சென்றன. மைந்தன் கொலையானதறிந்த தந்தை மாசாத்துவான், தன்னுடைய செல்வங்கள் அனைத்தையும் தானம் தந்துவிட்டு, புகாரிலிருந்த இந்திர விகாரம் ஏழினிடத்தும் புகுந்து, அங்கு உறையும் அந்தரசாரிகளான துறவியர்களின் முன்பு தானும் துறவுக் கோலம் கொண்டான். அவன் மனைவி தன் ஒரே மகனான கோவலன் இறந்த துயரைத் தாங்க மாட்டாமல் உயிர் துறந்தாள். இந்தப் பரிதாப நிகழ்ச்சிகளை அந்தண மாடலன் வாக்காலேயே அறிவோம் !

**மைந்தற்கு உற்றதும், மடந்தைக்கு உற்றதும்**
**செங்கோல் வேந்தற்கு உற்றதும கேட்டுக்**
**கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி,**
**மாபெரும் தானமா வான்பொருள் ஈத்து, ஆங்கு,**

இந்திர விகாரம் ஏழுடன் புக்கு, ஆங்கு,
அந்தர சாரிகள் ஆறுஐம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று,
துறந்தோர் தம்முன் துறவி எய்தவும்,
துறந்தோன் மனைவி மகன் துயர் பொருஅள்,
இறந்ததுயர் எய்தி இரங்கிமெய் விடவும்.
கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத்து ஆசீவகர் முன்
புண்ணிய தானம் புரிந்து அறம் கொள்ளவும்;
தானம் புரிந்தோன் தன்மனைக் கிழத்தி
நாள்விடூஉ, நல்லுயிர் நீத்து, மெய் விடவும்;

''மகள் கண்ணகியும், அவள் கணவன் கோவலனும் மறைந்த செய்தி கேட்ட மாநாய்கன், தன்னுடைய செல்வங்களையெல்லாம் தானம்செய்துவிட்டு, முனிவர்களான சமணத் துறவிகள் முன்னர் தவ வாழ்க்கையை மேற் கொண்டான். மாநாய்கனின் மனைவியான கண்ணகியின் அன்னை, மகளின் பிரிவுத் துயர் தாங்காமல் உயிர் விட்டாள்,

மற்றது கேட்டு மாதவி மடந்தை,
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்;
மணிமே கலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணா தொழிக எனக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து,
போதித் தானம் புரிந்தறம் கொள்ளவும்.

''கோவலன்—கண்ணகி தம்பதிகளின் மண்ணுலக வாழ்வு முடிந்தது கேட்ட மாதவி, தன்னைப் பெற்ற அன்னையான சித்ராபதியை அழைத்து, மணிமேகலையை துயரங்கள் விளைவிக்கத் தக்கதான கணிகையர் தொழிலில் ஈடுபடுத்தாது அவளை குல மகளாக வாழ விடுவாயாக!' என்று சொல்லி விட்டு, தான் அணிந்திருந்த தலை மாலையுடன் தன் கூந்தலை

யும் களைந்து தன்வசமிருந்த செல்வங்களையெல்லாம் பௌத்த நிறுவனங்களுக்குத் தந்துவிட்டு, துறவு பூண்டாள்.

என்வாய்க் கேட்டோர் இறந்தோர் உண்மையின்,
நன்னீர்க் கங்கை ஆடப் போந்தேன்;
மன்னர் கோவே, வாழ்க!

"மதுரையிலே கண்ணகிக்கும் கோவலனுக்கும் உற்ற துயரை நான் சொல்லிக் கேட்டதனாலல்லவா, அவர்களுடைய தந்தையர் துறவு கொண்டனர்; தாயர் உயிரிழந்தனர்; மாதவியும் உலக இன்பங்களைத் துறந்தாள்—என்று எண்ணி, மனம் நொந்தவனாகி, அதற்குக் கழுவாய் தேடும்பொருட்டு கங்கையாடுவதற்காக வடபுலம் வந்தேன். மன்னர் பெருமான், வாழ்க."

மரணம் கொடியதுதான். விரும்பி ஏற்க முடியாததுதான். ஆனால், வாழ்வு கசந்து விடுகிறபோது கொடிய மரணம்கூட இனிப்பாகி விடுகிறது. இடைக்குல மாதரி, கோவலன் தன்னிடம் அடைக்கலம் தந்த பத்தினிப் பெண்ணை தான் காப்பாற்றத் தவறியதையும், பாண்டி வேந்தன் கொடுங்கோலனாகி விட்டதையும் நினைந்து வேதனையடைந்தாள். அதனால், அவளுக்கு வாழ்க்கை கசந்து, மரணம் இனித்தது. ஆகவே, நள்ளிரவில் தீக்குளித்து உயிர் நீத்தாள்.

கண்ணகியையும் கோவலனையும் கவுந்தியடிகள்தான் வழிகாட்டி மதுரைக்கு அழைத்து வந்தாராதலால், அவர்கள் வாழ்வு பறிபோனதற்குத் தன்னையும் காரணமாக்கிக் கொண்டு, அதற்காக வருந்தி, உண்ணாவிரதம் இருந்து அவர் உயிர் நீத்தார்.

## புண்ணியத் திசைகள்

தற்கொலை செய்து கொள்வது மன்னிக்க முடியாத கோழைத்தனமாகும். அதனால்தான் தற்கொலையைக்

கடுந்தண்டனைக்குரிய குற்றமாக்கும் சட்டம் நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், மாதரியும் கவுந்தியடிகளும் தற்கொலை செய்து கொண்டவர்கள் அல்லர். உயர்ந்த ஒரு லட்சியத்திற்காக உயிர்த் தியாகம் புரிந்தவர்கள். அரசர்களும் புலவர்களும் முனிவர்களும் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த செய்திகளை இலக்கியங்களில் படிக்கின்றோம்.

உண்ணா நோன்பு இருப்போர் வட திசையை நோக்கி அமர்வது வழக்கமாக இருந்திருக்கிறது. கவுந்தியடிகளும் வடதிசை நோக்கி அமர்ந்துதான் உயிர் துறந்திருக்க வேண்டும். அந்நாளிலே, வடபுலம் புண்ணியத் திசையாகக் கருதப்பட்டது. சோழ நாட்டின் மாமன்னனான கரிகால் வளவன் வடபுலம் சென்றதைக் கூறுமிடத்து, "புண்ணியத் திசை முகம் போயினன்" என்கிறார் இளங்கோ. வடபேரிமய மலையில்தான் சிவ பெருமான் உறையும் கயிலாயம் இருப்பதாக இந்துத் தமிழர் நம்புகின்றனர். அதனால், வடபுலம் புண்ணியத் திசையாகக் கருதப்பட்டிருக்கலாம்.

"வடபுலம் புண்ணியத் திசையானால், தென்புலம் பாவத் திசையா?" என்னும் வினா எழுவது இயற்கை. தமிழர், வடதிசையிலே கங்கை நதியும் இமயமலையும் இருத்தல் காரணமாக, அதனைப் புண்ணியத் திசையாகக் கருதுகின்றனரென்றால், அதுபோல, வடபுலத்திலுள்ளவர்களும், காவிரியாறும் குமரித்துறையும் பொதிகை மலையும் உள்ள காரணத்தால் தென் திசையைப் புண்ணியத் திசையாகக் கருதி, இத்திசை நோக்கி, தீர்த்த யாத்திரைக்கும் தலயாத்திரைக்கும் வருகின்றனர். இதன்படி, பாரதத்தின் வட புலமும் தென்புலமும் புண்ணியத் திசைகள் என்பதே இந்து மக்களின் கொள்கை எனலாம்.

## ஆரியனை ஏறினன்

வடபுலப் போரில் சிறைப்பட்ட ஆரிய மன்னரான கனக விசயரை, சோழனுக்கும் பாண்டியனுக்கும் காட்டிவிட்டு

வருமாறு சேர மன்னன் தனது தளபதியான நீலன் என்பானுக்கு ஆணையிட்டான். பின்னர், மாடலனை நோக்கி,

"மன்னவன் இறந்தபின் வளங்கெழு சிறப்பின்
தென்னவன் நாடு செய்தது ஈங்கு உரை"

என்று செங்குட்டுவன் கேட்க, மாடலன் கூறுகின்றான்:

"கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியன்
பொன்தொழில் கொல்லர் ஈரைஞ் ஞூற்றுவர்
ஒருமுலை குறைந்த திருமா பத்தினிக்கு,
ஒருபகல் எல்லை, உயிர்ப்பலி ஊட்டி,
உரைசெலவெ மறுத்தமதுரை மூதூர்
அரைசு கெடுத்து அலம்வரும் அல்லற்காலைத்
தென்புல மருங்கின், தீதுசீர் சிறப்பின்
மன்பதை காக்கும் முறைமுதற் கட்டிலின்,
நிரைமணிப் புரவி ஓர்ஏழ் பூண்ட
ஒருதனி ஆழிக் கடவுள் தேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுள் ஏறினன்; என,
மாலைத் திங்கள் வழியோரன் ஏறினன்."

பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் நீத்த பின், அவன் மகனும் இளவரசனுமான வெற்றிவேற் செழியன் என்பான் பாண்டி நாட்டின் துறைமுகப் பட்டினமான கொற்கையில் இருந்தான். தந்தை மாண்ட செய்தியை அறிந்ததும், கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் மதுரைக்கு வந்து, அரச மரபுக்கேற்ற முறைப்படி தந்தையின் வாரிசாக அரியாசனம் ஏறினன்.

வெற்றிவேற் செழியன், தன் முலையை பிய்த்தெறிந்து மதுரையைத் தீக்கிரையாக்கிய பத்தினித் தெய்வத்தின் சீற்றத்தைத் தணிவிப்பதற்காகப் பொற்கொல்லர் ஆயிர வரைப் பலி கொடுத்தான் என்பது மாடல மறையோன் மூலம் செங்குட்டுவனுக்கு இளங்கோ வழங்கும் செய்தியாகும். ஒரு பொற்கொல்லன் செய்த குற்றத்திற்காக

அவன் குலத்தினரான ஆயிரம் பொற்கொல்லர்களை வெற்றிவேற் செழியன் கண்ணகியின் சீற்றந் தணியப் பலி கொடுத்தான் என்பது நம்பத் தகுந்த செய்தியாக இல்லை. இது, இடைச் செருகலாக இருக்கலாம்.

பாண்டிய நாட்டின் இளவரசனான வெற்றிவேற் செழியன் தலைநகரான மதுரையில் இல்லாமல் துணை நகரான கொற்கையி லிருக்கக் காரணமென்னெ? சிலப்பதி காரக் கதை நிகழ்ந்த காலத்தில் மூவேந்தர் ஆண்ட மும் மண்டலங்களிலே ஒவ்வொரு மண்டலமும் இரண்டு இரண்டு தலைநகரங்களைப் பெற்றிருந்தன. சோழ மண்டலத்திலே பூம்புகாரானது சக்ரவர்த்தி உறையும் பெருந் தலைநகராக வும், உறையூரானது சிற்றரசன் தங்கியிருக்கும் இரண்டாந்தர தலைநகராகவும் இருந்து வந்தன. பாண்டி மண்டலத்தில் மதுரையம்பதியில் மாமன்னன் இருப்பான். கொற்கையம் பதியிலே சிற்றரசன் இருப்பான். இப்படியே, சேர மண்டலத் தில் வஞ்சி மாநகரில் பேரரசனும், தொண்டியில் சிற்றரசனும் இருந்தனர் என்று சொல்லலாம்.

பிரிட்டனிலே லண்டன் மாநகரில் பேரரசனும், வேல்ஸ் நகரில் இளவரசனும் இருந்து வரும் வழக்கத்தை இன்றும் காண்கிறோம். அரசியல் நாகரிகத்தின் தாயகம் எனப்படும் பிரிட்டனில் தற்போது நடைமுறையிலுள்ள இந்த வழக்கம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழகத்தின் மூவேறு மண்டலங்களிலும் அமுலில் இருந்ததாக அறிகிறோம்.

இந்நாளில், மனித நாகரிகம் பற்றி ஆராயும் அறிஞர்கள் "கடற்கரையோர நாகரிகம்" என்றும், "ஆற்றங்கரையோர நாகரிகம்" என்றும் பிரித்துக் கொண்டு ஆராய்ச்சி நடத்துகின்றனர். சங்க காலத்தில் மும்மண்டலங்களிலே ஒவ்வொன்றிலும் ஆற்றங்கரை நகரமும், கடற்கரை நகரமும் இருந்திருக்கின்றன. பாண்டி மண்டலத்திலே மாமன்னன் இருந்த மதுரை ஆற்றங்கரை நகரமாகும். சிற்றரசன் தங்கி யிருந்த கொற்கை கடற்கரை நகரமாகும்.

இந்தச் சிறப்புகளை யெல்லாம் சிலப்பதிகாரத்தின் மூல மாகத்தான் தெளிவாக அறிய முடிகிறது. கண்ணகி கோவலன் கதையை மட்டும் கூறிச் செல்லாமல், தமிழினத் தின் உயரிய அரசியல் நாகரிகத்தையும் இளங்கோவடிகள் ஆங்காங்கே விளக்குகின்றார்.

மாடல மறையோன் சேரன் செங்குட்டுவனைச் சந்தித்தது அந்திமாலை நேரத்திலாகும். பகற்பொழுதிற் குரிய கதிரவன் மறைந்து, இரவுப் பொழுதிற்குரிய சந்திரன் அடிவானத்திலே தோன்றிக் கொண்டிருந்தான். இந்த மாறுதல் நேரமானது, தலைவனைப் பிரிந்த தலைவிக்கும், தலைவியைப் பிரிந்த தலைவனுக்கும் துன்பத்தைத் தருவதாகும். இதனை, "அந்தி மாலைச் சிறப்புச்செய் காதை"யிலே இளங்கோவடிகள் விரிவாகக் கூறியுள்ளார்.

மாடல மறையவனிடம் பேசி முடித்த நிலையில் சேரன் செங்குட்டுவன் அந்தி வானத்தைக் கூர்ந்து நோக்கிய வண்ணம் தன்னை மறைந்திருந்தான். பிறைச் சந்திரனானது அவனது கண்ணுக்குக் காட்சியளித்து, மனைவியைப் பிரிந்த நினைவை அவனது நெஞ்சத்திலே தோற்றுவித்தது. அதனை இளங்கோவடிகளே கூறக் கேட்போம்!

"அகல்வாய் ஞாலம் ஆரிருள் விழுங்கப்
பகல்செல, முதிர்ந்த படர்கூர் மாலைச்
செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க,
அந்திச் செக்கர் வெண்பிறை தோன்றப்
பிறையேர் வண்ணம் பெருந்தகை நோக்க"

"அகன்று பரந்திருக்கும் பூமியை இருள் விழுங்குவதற்கு இடமளித்து, பகற்பொழுதின் வேந்தனான கதிரவன் மேற்குத் திசையில் சென்று மறைந்துவிட்டான். பிரிந்த காதலர்களுக்குத் துன்பத்தைத் தரும் மாலையாகிய செந்தீ யானது கதிரவன் மறைந்த மேற்குத் திசையில் பரந்து

விளங்கியது. அந்த மாலை நேரத்திலே வெண்மையான பிறைத் திங்கள் வானத்தில் தோன்றியது. அதன் அழகைக் கூர்ந்து நோக்கி அனுபவித்துக் கொண்டிருந்தான் செங்குட்டுவன்.

சேர மன்னன் அந்திமாலை நேரத்தில் வானத்தில் தோன்றிய பிறைச் சந்திரனைத் தன்னை மறந்த வண்ணம் கூர்ந்து நோக்கிச் சிந்தனையிலாழ்ந்ததன் பொருள் என்ன? மன்னன் தனக்கு வெற்றி தேடித் தந்த வீரர்களுக்கெல்லாம் பரிசுகள் வழங்கினானல்லவா? அப்போது அவனது நெஞ்சம் ஒன்றை நினைத்திருக்கும். மன்னன் வஞ்சி நகர் சென்றால், அவனது பட்டத்தரசியார், வெற்றி வீரனைத் திரும்பி வரும் தன் கணவனுக்குத் திருஷ்டி கழித்து, நெற்றியில் வீரத் திலக மிட்டு, தன் இரு கைகளாலும் அவனை ஆரத்தழுவி வரவேற்பாளல்லவா! அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்து, மன்னன் தன்னை மறந்திருந்தான்போலும்.

## 32 திங்கள் முடிந்தன !

அந்த நேரத்தில் அவன் அருகிலிருந்த பெருங்கணி என்பான், "மண்ணாள் வேந்தே வாழ்க!" என வாழ்த்திவிட்டு, "வஞ்சி நகரை வட்டு நீங்கி வந்து 32 திங்கள் முடிந்து விட்டன" என்று கூறினான்.

செங்குட்டுவன்—வடவாரியர் போர் பதினெட்டு நாழிகை வரைதான் நடந்தது. அப்படியானால், அவன் வஞ்சி நகரை விட்டு நீங்கிய பின்னுள்ள 32 மாதங்களும் வழிப் பயணத்திலேயே கழிந்தன போலும்! இதன் பின்னும் கங்கைக் கரையிலிருந்து புறப்பட்டு அவன் வஞ்சிக்கு வருவதற்குக் குறைந்த அளவு 24 திங்களேனும் ஆகியிருக்கலாம். எவ்வளவு குறைத்துப் பார்த்தாலும், நான்காண்டுகள் செங்குட்டுவன் சேர நாட்டிற்கு வெளியே இருந்திருக்கிறான் என்பது உறுதியாகிறது. இவ்வளவு நீண்ட காலம் மன்னன் இல்லாதிருந்தும்

உள்நாட்டுக் கலவரமோ, அயல் நாட்டுப் படையெடுப்போ நிகழவில்லை யென்பது நினைவிற்கொள்ளத் தக்கதாகும். இதற்குச் செங்குட்டுவனின் செங்கோன்மையும் காரணம் என்றாலும், வேறு காரணங்களும் இருக்கின்றன.

செங்குட்டுவன் காலத்திலே, சேரநாட்டில் மட்டு மல்லாமல், தமிழ்நாடு முழுவதிலுமே உயர்வு தாழ்வோடு கூடிய சாதி வேறுபாடுகள் இருக்கவில்லை. சைவம்—வைணவம்—சமணம்—பௌத்தம் என வேறுபட்ட மதங்கள் இருந்தன வென்றாலும். அவற்றிடையே பகைமை இருந்ததாகத் தெரியவில்லை. சாதிகள் தொழில் வழித்தான் இருந்தன. பிறப்பு வழியில் இருக்கவில்லை.

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு"

என்கிறார் திருவள்ளுவர். செங்குட்டுவன் காலத்திலே தமிழ் நாட்டில் தொழில்வழிக் குழுக்கள் (சாதிகள்) இருந்தன வென்றாலும், அவற்றிடையே பாழ் செய்யும் உட்பகை இருக்கவில்லை. அதனால், "வேந்தலைக்கும் கொல் குறும்பும்"– அதாவது, அராஜகக் கும்பலும் இருக்கவில்லை.

"தமிழர்" என்னும் இனவுணர்வு தமிழைத் தாய்மொழி யாகக் கொண்ட ஒவ்வொருவரிடமும் இருந்தது. நாட்டில் இனவழி ஒருமைப்பாடும் நிலவியது. மொழியால் வேறு பட்ட அயல் இனத்தார் புகார், தொண்டி போன்ற துறைமுக நகரங்களிலே வாழ்ந்து வந்தனர். ஆனால், அவர்கள் நாட்டின் உட்பிரதேசங்களை ஊடுருவி காலனிகள் அமைத்து வாழ வில்லை. அதனால், நான்காண்டுக்கு மேற்பட்ட காலம் மன்னன் இல்லாமலிருந்தும் சேரநாட்டில் அமைதி நிலவியது.

தமிழனத்தின் மானம் காக்கவே சேரன் செங்குட்டுவன் வடபுலம் சென்றுனுதலால். அவன் இல்லாததைப் பயன்

படுத்திச் சேர நாட்டின் மீது படையெடுக்க சோழனும் பாண்டியனும் விரும்பியிருக்க மாட்டார்கள். அது, சேரனின் முதுகில் குத்தும் இனத் துரோகமாதலால், அதனை அவர்கள் நினைத்திருக்கவும் முடியாதுதானே!

சேரன் செங்குட்டுவன் வடபுலத்திலுள்ள கங்கை யாற்றின் தென் கரையில் தன்னைச் சந்தித்து, கண்ணகி—கோவலன் மறைவுக்குப் பின்னர் மதுரையில் நடந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் கூறிய மாடல மறையவனுக்கும் பரிசு வழங்கினன். "துலா பாரம்" என்று சொல்லப்படும் மரபை யொட்டி, தன்னுடைய உடல் நிறையளவு பொன் தந்தான். அதன் நிறை ஐம்பது துலாம் என்கிறார் இளங்கோவடிகள். அதனை அவரே கூறக் கேட்போம் :

> பெருமகன் மறையோற் பேணி, ஆங்கு, அவற்கு
> ஆடகப் பெருநிறை ஐயைந்து இரட்டி,
> தோடார் போந்தை வேலோன், 'தன்னிறை
> மாடல மறையோன் கொள்க' என்று அளித்து;

வடவாரிய மன்னருடன் போர் புரியச் செல்லும்போதும் போர் முடிந்து திரும்பி வரும்போதும் கங்கையாற்றைக் கடப்பதற்கு மரக்கலங்கள் தந்து உதவியும், கங்கையின் தென்கரையில் பாடி வீடு அமைத்து உபசரித்தும் அன்பு காட்டிய நூற்றுவர் கன்னருக்கு, "நீங்களெல்லாம சிறப்பு பொருந்திய உங்கள் நாட்டிற்குச் செல்லுங்கள்" என்று கூறி, விடை கொடுத்து அனுப்பினன். பின்னர், செங்குட்டுவனும் தனது நாட்டிற்குத் திரும்பினன்.

## வரவேற்பு

சேர நாட்டின் தலைநகரான வஞ்சியம்பதியிலே தன் கணவனுடைய பிரிவாற்றாமையினால் வருந்திக் கொண்டிருந்தாள் பட்டத்தரசியான கோவேண்மாள். மன்னன் வடபுலம்

சென்று ஆண்டுகள் பல ஆகிவிட்டனவாதலால், அவனது பிரிவைத் தாங்காமல், உறக்கமின்றிப் படுக்கையில் கிடந்து அரசி வருந்திக் கொண்டிருந்தாள்.

இந்த நேரத்தில், சேரன் வெற்றி வீரனாக வஞ்சி நகருள் புகுந்தான். அவனது வரவை சேரமாதேவிக்கு அறிவித்தனர் அவளுடைய தோழியர்கள்.

''தோள்துணை துறந்த துயரீங்கு ஒழிக' எனப்,
பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்தச்
சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று,
பெறுகநின் செவ்வி; பெருமகன் வந்தான்;
நறுமலர்க் கூந்தல் நாளணி பெறுக!''

''அரச மாதேவியின் ஆயச் செவிலியர்கள், 'நின் தலைவன் வந்தான். அவனைப் பிரிந்ததனால் உண்டான துயரினை இப்போழுதே விட்டொழிப்பாயாக!' என்று கூறி, பண்ணோடிசைத்துப் பல்லாண்டு பாடி வேண்மாலை ஏத்தினர்.

''நகரிலுள்ள குறத்தியர்கள், 'வட நாட்டிற்குச் சென்று, காவா நாவினருடன் போர் புரிந்து, அவர்களை வெற்றி கொண்ட வீரனாக வேந்தன் வருகின்றான். வாகையும் தும்பையும் முடித்து மதகளிறு போன்று மன்னன் வருகின்றான். அவன் வரும் வழியினின்றும் அனைவரும் நீங்குவீராக!'' என்று குறத்தியர்கள் குறிஞ்சிப் பாணியில் பாட்டிசைத்தனர்.

''வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்
கவடி வித்திய கழுதைஏர் உழவன்,
குடவர் கோமான் வந்தான்; நாளைப்
படுநுகம் பூணாய், பகடே! மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணி ஆம்' எனும்
தொடுப்புஏர் உழவர் ஓதைப் பாணியும்''

"வடதிசைப் போரிலே பகை மன்னர்களின் அழகிய கோட்டைகளை அழித்து, வெள்வரகை விதைத்து, கழுதை பூட்டி உழச் செய்த வாளேர் உழவனாகிய குடநாட்டுக் கோமகன் வந்தனன். நாளை அவனுக்கு வெள்ளணி (பிறந்த நாள்) விழா. அதனால், பகை மன்னர்களின் கால் விலங்குகளை நீக்கி, அவர்களுக்கு விடுதலை தருவான். ஆகவே, பகடே! நீயும் நாளை நுகம் பூண்டு உழுவதற்குச் செல்வாய்" என்று உழவர் மக்கள் மருதப் பண் பாடினர்.

முல்லை நிலத்திற்குரிய பண்ணை இசைத்து மன்னனை வரவேற்று ஆயர்கள் பாடினர்.

"வில்லவன் வந்தான்; வியன்பேர் இமயத்துப்
பல்லான் நிரையொடு படர்குவிர் நீர்!"

இது, ஆயர்கள் பாடிய முல்லைப் பாணி. அழகிய மகளிர் நெய்தற் பண்ணும் பாடினர்.

தங்கள் தலைவனுக்கு ஐவகைப் பண்களையும் பாடி குடி மக்கள் வீர வரவேற்பு தருவது கண்டு கோவேண்மாள் மகிழ்ந்தாள். அரண்மனையின் மேல் தளத்தில் இருந்த வண்ணம், தன் தலைவன் வெண் கொற்றக் குடையின்கீழ் அமர்ந்து, தலையில் வாகை சூடியவனாக வருவது கண்டு மனம் பூரித்தாள்.

வஞ்சி நகரிலுள்ள மக்களெல்லாம் வெற்றி வீரனை செங்குட்டுவனை வரவேற்றுப் போற்றினார்கள். சேர மன்னனின் வருகை காரணமாக வஞ்சிமா நகரிலே மகிழ்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வெண்திரியிட்ட விளக்குகளை ஏந்திய மகளிர், "உலக மன்னவன் வாழ்க, வாழ்க!" என்று வாழ்த்தொலி யெழுப்ப, மாலைக் காலமும் வந்து மன்னனை வரவேற்றது.

மன்னனைப் பின்பற்றி வடபுலப் போரில் வெற்றி கொண்ட பெருமிதத்துடன் வஞ்சி நகரில் புகுந்த வீரர்கள், தங்கள் காதலியர் வரவேற்கத் தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர். தங்கள் காதலர்கள் விழுப்புண் பெற்றவர் களாய் வீடு திரும்பியதால், அந்தப் புண்கள் ஆறும்படியாக அவர்களை மார்புறத் தழுவி காதலியர் மகிழ்ந்தனர். சேரனுக் குத் தரப்படும் சிறப்பு மிக்க வரவேற்பைக் காண விரும் பியவன்போலப் பலரும் புகழ்கின்ற வஞ்சிமூதூரின் வானத் திலே விரிந்த கதிர்களையுடைய திங்கட் செல்வனும் காட்சி யளித்தான். எங்கும் நிலவொளி பரந்தது.

## சோழ—பாண்டியர் சொன்னது

வஞ்சிமாநகரின் நடுவிடத்திலே உயர்ந்து விளங்கிய அழகிய மாளிகையின்கண் எழுநிலைக்கும் மேல் நிலையாக வுள்ள நிலா முற்றத்திலே செங்குட்டுவனின் தேவியான வேண்மாள் திங்களின் அழகைக் காணத் தோன்றினாள்.

அவள் வரும்போது ஒளி பொருந்திய வளையலணிந்த மகளிர் தங்கள் கைகளில் விளக்குகளை ஏந்திக்கொண்டும், பட்டத்தரசிக்குப் பல்லாண்டு பாடிக்கொண்டும் அவளுக்கு இரு பக்கத்திலும் வரிசையாக நின்றனர். யாழின் இசையும் பண்ணோடு பொருந்திய பாடலும் ஒருபுறம் முழங்கின. கஸ்தூரி சாந்தும் தொய்யற் குழம்பும் கைகளில் ஏந்திய வராகக் கூனரும் குறளரும் கோவேண்மாளின் அருகிலிருந் தனர். வண்ணமும் சுண்ணமும் மணம் தரும் அழகிய மாலை களும் ஏந்தியவராகப் பெண் தன்மை மிக்க பேடியர்களும் அருகில் நின்றனர். கண்ணாடியும் ஆடையும் அணிவதற்கான ஆபரணங்களும் ஏந்தியவராகத் தோழியர்கள் ஒருபுறம் பணிவோடு நின்றனர்.

இந்நிலையில், சேர மன்னன் அழகிய மாளிகையின் நிலா முற்றத்தின்கண் வந்து சேரமாதேவியின் அருகில் அமர்ந்

தான். அரசனும் அரசியும் காண சாக்கையர் எனப்படும், கலைஞர்கள் கூத்து நிகழ்த்தினர். கூத்தாடிய சாக்கையர், கோவேந்தனிடம் பரிசு பெற்று நீங்கிய பின்னர் தனது பேரோலக்க மண்டபத்திற்குச் சென்று, அரசு அலுவல்களைக் கவனிக்கலானான் செங்குட்டுவன்.

இந்த நேரத்தில் சோழனுக்கும் பாண்டியனுக்கும் கல் சுமக்கும் கோலத்தில் கனகனையும் விசயனையும் காட்டி வரச் சென்ற தளபதி நீலன் அரசவை புகுந்தான். புகுந்தவன் செங்குட்டுவனிடம் கீழ் வருமாறு கூறினான்.

"தும்பை வெம்போர்ச் சூழ்கழல் வேந்தே!
செம்பியன் மூதூர்ச் சென்றுபுக்கு, ஆங்கு,
வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய
சித்திர மண்டபத்து இருக்க வேந்தன்:
அமரகத்து உடைந்த ஆரிய மன்னரொடு
தமரிற் சென்று, தகையடி வணங்க,
'நீளமர் அழுவத்து, நெடும்போர் ஆண்மையொடு
வாளும் குடையும் மறக்களத்து ஒழித்துக்
கொல்லாக் கோலத்து உயிருய்ந் தோரை
வெல்போர்க் கோடல் வெற்றம் அன்று' என,
தலைத்தேர்த் தானைத் தலைவற்கு உரைத்தனன்.
சிலைத்தார் அகலத்துச் செம்பியர் பெருந்தகை.
ஆங்குநின் றகன்றபின், அறக்கோல் வேந்தே!
ஓங்குசீர் மதுரை மன்னவற் காண,
"ஆரிய மன்னர் அமர்க்களத் தெடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி சிறந்த
சயந்தன் வடிவின் தலைக்கோல், ஆங்குக்,
கயந்தலை யானையிற் கவிகையிற் காட்டி,
இமையச் சிமயத்து, இருங்குயி லாலுவத்து,
உமையொரு பாகத்து ஒருவனை வணங்கி,
அமர்க்களம் அரசனது ஆகத் துறந்து,
தவப்பெரும் கோலம் கொண்டோர் தம்மேல்

கொதியழல் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது' என்றனன் போர்வேற் செழியன்."
[சிலம்பு. 28: 84-107]

"தும்பை சூடிய—பேராற்றல் மிக்க—வீரக் கழல் அணிந்த சேர வேந்தே! தங்கள் ஆணைப்படிச் சோழ நாட்டின் தலைநகரான புகாருக்குச் சென்றோம். அங்கு, அவந்தி நாட்டான் தந்த தோரண வாயிலும் மகதநாட்டு மன்னன் தந்த மண்டபமும் ஒருங்கே கொண்டு விளங்கிய சித்திர மண்டபத்திலே சோழன் இருந்தான். எம்முடன் வந்த ஆரிய மன்னரோடும், அவர்களுடைய உரிமைச் சுற்றத்தினரான ஆரியப் பேடியருடனும் சென்று சோழனின் திருவடிகளை வணங்கினோம்.

"பெரும் போர்க்களத்திலே தங்கள் வீரத்தையும் வாளையும் வெண்கொற்றக் குடையையும் போட்டுவிட்டு, உயிர் பிழைப்பதற்காகப் பகைவர்களால் கொல்லக் கூடாத மாற்றுருவங்களுடன் ஓடினார்கள், இந்த ஆரிய மன்னர்கள். இவர்களைச் சிறைப் பிடித்து, இவர்கள் தலையில் கல் சுமத்திக் கொண்டு வந்தது சிறந்த வெற்றியாகாது' என்று தனது தேர்ப் படையின் தலைவர்களிடம் சோழ மன்னன் கூறினான்.

"அங்கிருந்து அகன்று சிறப்பு மிக்க மதுரை மாநகர் சென்று பாண்டியனைக் கண்டோம். அம்மன்னன் சொன்னான்.

"ஆரிய மன்னர்கள், யானையின் மீதிருந்த வண்ணம் கூப்பிய கையினராய், தங்கள் வெண்கொற்றக் குடையின் காம்பினை முறித்தெடுத்து, சயந்தன் வடிவினதான தலைக் கோலாகக் காட்டி, போர்க்களத்தை நும் மன்னனுடையதாக்கி, உயிர் பிழைக்க தவப்பெருங்கோலமுங் கொண்டனர்; வீரமற்றவராய் உயிர் பிழைக்கக் கருதி ஓடியவர் மீது சினங்காட்டி, அவர்களைப் பிடித்து வந்த நும் அரசனின் வெற்றிச் சிறப்பு தமிழக வரலாற்றிலேயே புதுமையானதாகும்' என்று கூறினன்."

## மாடலன் அறிவுரை

இப்படி, சோழனும் பாண்டியனும் தன்னைப் பற்றிக் குறைகூறியதனை நீலன் சொல்லக் கேட்ட செங்குட்டுவன், சினங் கொண்டவனாகிச் சிரித்தான். அவனுடைய கண்கள் சிவந்து, அனலைக் கக்கின. அவையிலிருந்த மாடலன் எழுந்து, "மன்னர் மன்ன! வாழ்க நின் கொற்றம்', என்று கூறி, மன்னனின் சினத்தைத் தணிக்க அவனுக்கு அறிவுரைகள் கூறலானான்.

சேரனுடைய சினத்தைத் தணிக்க விரும்பிய மாடலன், முதலில் அவனுடைய வரலாற்றுச் சிறப்புக்களைப் பட்டியல் தொகுத்துச் சொல்லி, அவன் மனங் குளிரும்படியாக அவனை வாழ்த்துகின்றான். நான்மறைகளையும் பழுதறப் பயின்ற ஞானியாதலால், இங்கிதம் தெரிந்து செங்குட்டுவனிடம் உரையாடுகின்றான். இதோ, மாடலன் பேசுகின்றான்!

"கறிவளர் சிலம்பில் துஞ்சும் யானையின்
சிறுகுரல் நெய்தல், வியலூர் எறிந்தபின்!
ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயில் நிலைச்செரு வென்று;
நெடுந்தேர்த் தானையொடு இடும்பிற்புறத்து இறுத்துக்,
கொடும்போர் கடந்து; நெடுங்கடல் ஓட்டி;
உடன்றுமேல் வந்த ஆரிய மன்னரைக்
கடும்புனற் கங்கைப் பேர்யாற்று, வென்றோய்!
நெடுந்தார் வேய்ந்த பெரும்படை வேந்தே!
புரையோர் தம்மொடு பொருந்த உணர்ந்த
அரைச ரேறே! அமைக், நின் சீற்றம்!
மண்ணாள் வேந்தே! நின்வாழ் நாட்கள்
தண்ணான் பொருநை மணலினுஞ் சிறக்க!
அகழ்கடல் ஞாலம் ஆள்வோய், வாழி!
இகழாது என்சொற் கேட்டல் வேண்டும்."

[சிலம்பு. 28 : 114-28]

"மன்னர் பெருமானே! மிளகுக் கொடிகள் வளர்கின்ற மலையிலே வாழும் மத யானையினைப் போல நெய்தல் மலர்களையுடைய வியலூரை அழித்து, வெற்றிவாகை சூடினாய்!

"ஆத்திமாலை சூடியவரான சோழ மன்னர் ஒன்பதின்மருடன் நேரி வாயில் என்னுமிடத்திலே போர் செய்து, வெற்றி கண்டனை!

"பெரிய தேர்ப்படையுடைய நின் வீரர்களுடன் இடும்பில் என்னும் ஊரினையும் வெற்றி கண்டனை! கொடும் போர்கள் பலவற்றிலே வெற்றி கண்டு நெடுங் கடலும் பின்னிடுமாறு செய்த வீர மறவர்களுடன் கூடி, நின்னுடன் போர் புரிய வந்த ஆரிய அரசர்களை கங்கைப் பேரியாற்றங் கரையிலே வென்றனை!

"நீண்ட மாலையை அணிந்த மார்பையுடையவனே! வெற்றியைத் தவிர வேறொன்றைக் காணாத வேந்தர் பெருமானே! சான்றோர்களுடன் ஒப்பிடத்தக்க அறிவைப் பெற்றுள்ள அரசர் ஏறே! நீ கொண்ட சீற்றம் தணிவதாக!

"சேர நாட்டினை வாழிடமாகக் கொண்டு மண்ணுலகம் முழுவதன் மீதும் செல்வாக்குச் செலுத்துகின்ற செங்குட்டுவனே! நின் வாழ்நாட்கள் ஆன்பொருநை யாற்று மணலினும் மிகுதிப்படும்படி விளங்குமாக! கடலால் சூழப்பட்ட இவ்வுலகினை ஆள்பவனே, நீ வாழ்க! யான் கூறும் சொற்களை இகழ்ந்து புறக்கணிக்காது, விரும்பிக் கேட்டருள வேண்டும்."

## யாக்கை நிலையாமை!

மாடலன் கூறிய இவ்வளவும் வெறும் புகழுரைதான். இனிதான் போதனை தொடங்குகிறது.

சோழ—பாண்டிய மன்னர் மீது சேரன் செங்குட்டுவன் கொண்ட சினத்தைத் தணிக்க அவனுக்கு யாக்கை நிலையாமையை உணர்த்துகின்றான் மாடலமறையவன். இதோ மாடலன் பேசுகிறான்:

**வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு**
**ஐயைந்து இரட்டி சென்றதற் பின்னும்**
**அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்,**
**மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை,**
**வேந்துவினை முடித்த ஏந்துவாள் வலத்துப்**
**போந்தைக் கண்ணி, நின் ஊங்கணோர் மருங்கின்,**

"மன்னர் மன்ன! வையகத்தை யாளும் நினக்கு 50 ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன. இன்னமும் அறக்கள வேள்வி செய்யாது, தொடர்ந்து மறக்கள வேள்வியையே செய்து வருகின்றனை! நின் முன்னோர்களான மறைந்துவிட்ட சேர மன்னர்களைக் கொஞ்சம் நினைவு கூர்ந்து பார்! அவர்களிடையிலே, கடலிலுள்ள தீவுகளை ஆளுகின்ற ஓர் அரசனுடைய காவல் மரமாகிய கடம்பினை வெட்டி, அம்மன்னனை வெற்றி கண்டான் ஒரு சேர மன்னன்;

"இமய மலையின் உச்சியிலே தன் விற் கொடியைப் பொறித்தான் குடக்கோச் சேரலன்;

"நான்மறையாளனுன பாலைக் கௌதமனார் தன்னைப் பற்றிப் பாடிய செய்யுளை ஏற்றுக் கொண்டு, அதற்குப் பதிலாக அப்புலவனுடைய விருப்பத்திற்கேற்ப அறக்கள வேள்வி செய்து, அவனை உடம்போடு மேலுலகத்திற்கு அனுப்பினான் மற்றொரு சேர மன்னன்;

"மக்களுடைய முறையான வாழ்நாட்கள் முடியுமுன்னர் அவர்கள் உயிரைக் கொள்ளாதவாறு கூற்றுவனையும் ஓர் எல்லைக்குள் நிறுத்தினான்—அதாவது, தன் குடிமக்களுக்கு நல்வாழ்வளித்து, அவர்களை அகால மரணத்திலிருந்து மீட்டான் பிறிதொரு சேர மன்னன்;

"மிகப் பெரிய படைகளுடன் வந்து தன்னுடன் போர் புரிந்தவர்களைப் புறமுதுகிட்டோடச் செய்து, அவர்களுடைய கோட்டைகளைக் கைப்பற்றினன் வேறொரு சேர மன்னன்;

"வன்மையான மொழியினையுடைய யவனரின் வடநாட்டைக் கைப்பற்றி, பொற்கோட்டு இமயமலையிடத்தும் புகுந்து போர் செய்து வென்றான், ஒரு சேர மன்னன்;

"அச்சத்தைத் தரும் தன்மையினையுடைய அயிரை மலையின்கண் கோயில்கொண்ட கொற்றவைத் தெய்வத்திற்கு மேல் கடல் கீழ் கடல் ஆகிய இரு கடல் நீரையும் கொண்டு திருமுழுக்குச் செய்வித்தான் இன்னொரு சேர மன்னன்;

"சதுக்கப் பூதர்களைத் தனது வஞ்சிக்குத் தருவித்து, மதுவினைக் கொள்ளும் சோம யாகத்தினைச் செய்தான் வேறொரு சேர மன்னன்;

"அவர்கள் எல்லாம் செயற்கரிய செய்தவர்கள் என்றாலும், இப்போது அவர்களில் ஒருவர் கூட இல்லாது போயினர் அன்றோ! இதனால், மனித உடலானது நிலையற்றதென்பதனை நீ உணர்ந்தனையல்லவா? ஆரவாரமுடைய இந்த நிலவுலகத்து வாழ்பவர்களிடையே செல்வம் நிலையானது அன்று என்பதனைத் தமிழரை இகழ்ந்த ஆரிய மன்னர் வாயிலாகவும் நீ அறிந்தனையன்றோ?

"இளமையும் நிலையற்றது' என்பதனைப் பேரறிவாளனாகிய நினக்கு யான் சொல்லவும் வேண்டுமோ? இலக்குமி வாழும் மார்பினையுடைய மன்னவனே! இன்னும் கேள் :

"நல்வினையால் தேவர் வடிவினைப் பெற்று வானுலகம் சென்ற நல்லுயிர்கள், அவ்வினைக்குரிய காலம் முடிந்ததும் மீண்டும் மக்கள் வடிவிலே பிறப்பினும் பிறக்கும். மனித

வடிவினை யெடுத்த உயிர்களில் பல தீவினை காரணமாக மிருகங்களின் உடலை எடுத்தாலும் எடுக்கும். பேராற்றல் உடையவனே! விலங்கு உடலிலிருந்து பிரிந்த உயிரானது நடுங்கும் நரகராகப் பிறத்தலும் கூடும்.

"அடிக்கடி வேடங்களை மாற்றி ஆடுகின்ற நடிகரைப் போன்று, அருமையான உயிரானது ஒரு முறை எடுத்த உடலுடனேயே எக்காலத்தும் நிலைத்துச் செயல்படக் கூடியது அன்று பிறவிதோறும் செய்த நல்வினை தீவினை களுக்கேற்ப உயிர்கள் வெவ்வேறு உடல்களில் செல்லும். இஃது ஆன்றவிந்தடங்கிய சான்றோரான மெய்ஞ்ஞானியர் சொல்லியுள்ள உண்மையான முடிவாகும்.

"எழுமுடி மார்பனே! வெற்றி வாளினையுடைய வேந்தனே! நீ தாங்கியுள்ள ஆணைச் சக்கரமானது நினக்குப் பின் வழிவழி தோன்றுவோருக்கும் சிறப்புத் தருவதாக!"

## வேள்வி செய்க!

"அகழ்கடல் ஞாலம் ஆள்வோய், வாழி!
இகழாது என்சொல் கேட்டல் வேண்டும்."

என்னும் முன்னுரையோடு செங்குட்டுவனுக்கு உபதேசம் செய்யத் தொடங்கிய மாடலன், யாக்கை நிலையாமை குறித்து நீண்ட சொற்பொழிவு நிகழ்த்திய பின்னர், மன்னன் இனி செய்ய வேண்டியவற்றையும் கூறுகின்றான்:

"அரும்பொருட் பரிசிலேன் அல்லேன், யானும்;
பெருபேர் யாக்கை பெற்ற நல்லுயிர்
மலர்தலை உலகத்து உயிர்போகு பொதுநெறி,
புலவரை இறந்தோய்! போகுதல் பொறேஎன்.
வானவர் போற்றும் வழிநினக்கு அளிக்கும்
நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்

அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய
பெருநல் வேள்வி நீ செயல் வேண்டும்
'நாளைச் செய்குவம் அறம்' எனின்; இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்;
இதுஎன வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை;
வேள்விக் கிழத்தி இவளொடுங் கூடித்
தாழ்கழல் மன்னர் நின்னடி போற்ற
ஊழியோடு ஊழி உலகங் காத்து
நீடுவா ழியரோ, நெடுந்தகை! ..."

[சிலப்பு. 28: 171-186]

"அரிய பொருள்களைப் பரிசுபெற நினைத்து, நின்னை நாடி யான் வந்தேனில்லை! பெருமை மிக்க உடலினைப் பெற்ற நினது நல்ல உயிரானது, இவ்வுலகிலே பிற உயிர்கள் போன்று பாழ்பட்டு மறைவதை யான் பொறேன்.

"அறிவு மிக்கவனே! இன்னும் கேள்:

"நான் வேத விதிப்படி வேள்வி செய்யும் பார்ப்பனன்; வானவர் உலகுக்குச் செல்லும் வழியினை நினக்குக் காட்டக் கூடியவன். அந்த வேதங்களின் விதிப்படி வேந்தர்களுக்குரிய தான பெரு வேள்வியை நீயும் செய்ய வேண்டும். இது என் வேண்டுகோள்.

"நாளை செய்குவம் அறம்" என்று நினைப்போமானால், இன்றே நமது நல்லுயிர் நம்மை விட்டு நீங்கினும் நீங்கும். தம் வாழ்நாளின் வரம்பு இதுவென அறிந்தவர் கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் எவருமே இல்லை.

"நின்னுடன் இருந்து வேள்வியை நடத்துவதற்கு உரியவளான இவ் வேண்மாளொடும் கூடி, உலக மன்னரெல் லாம் நின் அடிபோற்றுமாறு பல ஊழிக்காலம் இந் நில வுலகினைக் காத்து, நெடுங்காலம் நீ வாழ்வாயாக!"

## சமாதானப் பிரசாரம்

யாக்கை நிலையாமையைச் செங்குட்டுவனுக்கு உணர்த்துவதற்குப் புராண இதிகாசங்களிலிருந்து மாடலன் சான்று காட்டுமாறு இளங்கோ செய்திருக்கலாம். அப்படிச் செய்து, சிலம்பையும் ஒரு புராணமாக்கிவிட அவர் விரும்பவில்லை. அதனால், சேர மரபில் தோன்றிய சரித்திர நாயகர்களையே சான்று காட்டச் செய்தார்.

செங்குட்டுவன் கொண்ட சினத்தை மாடலன் தணித்திராவிடில், அவனுக்கும் சோழ பாண்டியர்களுக்கும் இடையே போர் தோன்றியிருக்கக் கூடும். அந்தப் போரிலே வெற்றி யாருக்குக் கிட்டினாலும், தமிழினத்தின் ஒற்றுமை குலைந்திருக்கும். தமிழரைத் தமிழரே கொல்லும் கொடுமை நிகழ்ந்திருக்கும். அதனைத் தவிர்த்ததன் மூலம் தமிழ் மூவேந்தரிடையே ஒற்றுமை நிலவ உதவி புரிந்திருக்கிறான் மாடலன்.

வடவாரியரான கனக—விசயருடன் போர் செய்து, அவர்களை வெற்றி கண்டு செங்குட்டுவன் திரும்பியபோது, அதனை 'குற்றம்' என்று கூறுது, வெற்றி கண்ட மன்னனை வாழ்த்தினான் மாடலன். அவனே தமிழ் மூவேந்தரிடையே போர் நிகழ்வதனைத் தனது கல்வித் திறன் முழுவதையும் காட்டித் தவிர்த்தான், இதைச் செய்தவன் தமிழகத்து அந்தணன் எனபதனை நினைவு கூர்ந்தால், சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில் 'தமிழன்' என்ற இன உணர்வுக்கு அந்தணரும் விலக்கு அல்ல என்பது விளங்கும்.

போரில் தோற்றோடிய கனக விசயரைக் கைது செய்து, அவர்கள் தலையில் கல் சுமத்தி சேரன் கொண்டு வந்ததனை சோழ—பாண்டியரைக் கொண்டு இளங்கோ குறை கூற வைத்ததன் பொருள் என்ன? கனக—விசயர் தலையிலுள்ள கல்லை இறக்கி, அவர்களுக்கும் தமிழ் மூவேந்தருக்கு மிடை

யில் நட்பை வளர்ப்பதே கவிஞரின் குறிக்கோள். இதற்காகவுந்தான் சேரனுக்கும் வடவாரியருக்குமிடையே ஒரு போரைக் கற்பித்தார்.

சோழனையும் பாண்டியனையும் செங்குட்டுவன் செயலைக் குறை கூற வைத்து, அதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு கனக—விசயர் தலையிலிருந்து கல்லை இறக்குகிறார் இளங்கோ. மாடல மறையவன் சேரன் செங்குட்டுவனுக்கு யாக்கை நிலையாமையைப் போதிப்பது, மதப் பிரசாரம் அல்ல; அரசர்களிடையே நிகழும் போரைத் தவிர்க்கும் உலக சமாதானப் பிரசாரம் ஆகும். இளங்கோவடிகள், சேரனுக்கும் ஆரிய மன்னருக்கு மிடையே ஒரு போரைக் கற்பித்தது உலக நாடுகளிடையே நிகழும் போர்களை நியாயமாக்கி விடுவதற்காக அல்ல. வடவாரியருக்கும் தமிழ் வேந்தருக்கு மிடையே அந்நாளில் நிலவிய பகையை நிலைபெறச் செய்வதற்காகவும் அல்ல. போர் ஒழிந்த உலகைப் படைப்பதற்காகவே மாடலனைக் கொண்டு செங்குட்டுவனுக்கு யாக்கை நிலையாமையை இளங்கோ போதிக்கிறார்.

மாடலன் சேர மன்னனின் செவிவழி விதைத்த ஆன்ம ஞான வித்தானது பெரும் பயனைத் தந்தது. போரை ஒழித்து, யாக்கை எடுத்ததன் பலனை அடையும் விருப்பத்தைச் சேர வேந்தனுக்கு ஏற்படுத்தியது. நால் வேதங்களின் மரபுகளை அறிந்துள்ள வேதியர்களைக் கொண்டு மாடலன் சொன்ன முறைப்படி வேள்வி நடத்துமாறு மன்னன் ஆணையிட்டான்.

வஞ்சி நகரிலே பத்தினிக் கோட்டத் திறப்பு விழா நிகழ்வதற்கு ஏற்பாடுகள் நடந்தன. இந்த விழாவை முன்னிட்டு சிறைப்பட்ட ஆரிய மன்னர்களுக்கு விடுதலை தரப்பட்டது. அவர்களை விருந்தினராக ஏற்று வஞ்சி நகரிலுள்ள அரசாங்க விருந்தினர் மாளிகையிலே விழா முடியும்வரை அவர்கள் தங்கியிருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் பெற்றன.

கண்ணகி கோட்டத் திறப்பு விழா முடிந்த பின் தங்கள் நாட்டிற்குச் செல்லலாமென்று விடுதலை பெற்ற ஆரிய மன்னர்களுக்கு அறிவிக்கப்பட்டது. பகை நீங்கி, நண்பர்களாகிவிட்ட ஆரிய மன்னர்களை உபசரிக்கும் பொறுப்பை சேனைத் தலைவனான வில்லவன் கோதையிடம் ஒப்புவித்தான் சேரன் செங்குட்டுவன்.

தலைமை அமைச்சனான அழும்பில் வேள் என்பானும் ஆயக் கணக்கரும் வஞ்சியில் நடக்க விருக்கும் விழாவுக்கு நேச நாடுகளின் மன்னர்களுக் கெல்லாம் செய்திகள் அனுப்பினர்.

## மூன்று நெறிகள்

தமிழ் மூவேந்தர் மூலம் மூவேறு நெறிகளைக் கண்ணகி உலகினருக்குப் போதித்தாள் என்று இளங்கோவடிகள் அறிவிக்கிறார். அவை வருமாறு:

> "அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
> பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது' என
> பண்டையோர் உரைத்த தண்தமிழ் நல்லுரை
> பார்தொழுது ஏத்தும் பத்தினி ஆதலின்,
> ஆர்புனை சென்னி அரசற்கு அளித்து."

"அருந்திறலுடைய அரசர்கள் செங்கோல் முறைவழி மக்களைக் காத்தால் அல்லாது, பெரும்புகழினையுடைய பெண்களின் கற்பு நெறிக்குச் சிறப்புச் சேராது. இது, பண்டைப் பெரியோர் உரைத்த தண்தமிழ் நல்லுரை. இந்த நல்லுரையினை, பார்தொழுதேத்தும் பத்தினியாதலின், ஆத்தி மாலை சூடிய சோழன் மூலம் உலகுக்கு அளித்தாள் கண்ணகி."

சோழ நாடு சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்திலே செல்வச் செழிப்புடன் விளங்கியது. பூம்புகார் உலக நாடு

ளோடு தொடர்புடைய சிறப்பு மிக்க துறைமுகப் பட்டின மாக விளங்கியதால், அந்நகர மக்கள் மிதமிஞ்சிய சுகபோகத் தில் ஆழ்ந்து கிடந்தனர். அதனால், ஆண்கள் கற்பு நெறி யைக் கடைப்பிடிப்பதிலே அக்கறை காட்டவில்லை. பெண் கற்பு போற்றப்படவில்லை. பாட்டும் கூத்தும் ஆகிய நுண் கலைகள் வரம்புமீறி வளர்ந்திருந்த காரணத்தால் பரத்தை யருக்கு சமூகத்திலே—ஏன், ஆட்சியிலேயும் அதிக செல் வாக்கு இருந்தது இதனாற்றான், கோவலன் தன் பத்தினியை விட்டுப் பிரிந்து பரத்தைக் குலத்தினளான மாதவி வீட்டில் தங்கினான். இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தினாள் கண்ணகி என்கிறார் இளங்கோ. இன்னுங் கூறுவார்:

"செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலம் காவல் மன்னவற்கு அளித்து."

"செங்கோன்மை பிறழ்ந்த மன்னன் உயிர் வாழ மாட்டான்; உயிர் வாழவும் கூடாது'' என்ற உண்மையை பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் மூலம் உலகறியச் செய்தாள்.'' பின்னுஞ் சொல்லுவார்:

"வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை, யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர்' என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவற்கு அளித்து"
[சிலப்பு. 28; 214-17]

"வஞ்சினம் வாய்த்த பின்னரன்றி, வேந்தர்கள் தாங்கள் கொண்ட வெஞ்சினத்தை விடார்' என்பதனை வடபுலத்தி லுள்ள மன்னர்கள் அறியுமாறு செய்வதனைக் குடதிசையிலே வாழ்கின்ற வேந்தனாகிய செங்குட்டுவனுக்கு அளித்தாள்."

சிலப்பதிகாரத்தின் முகப்பிலுள்ள பதிகம்,
"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்,

> சூழ்வினைச் சிலம்பு காரணமா,
> 'சிலப்பதி காரம்' என்னும் பெயரால்
> நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்''

என்று இளங்கோவடிகள் சொன்னதாகக் கூறுகிறது. நடுகற் காதையில் மூவேந்தர் வாயிலாக கண்ணகி உலகுக்கு உணர்த்தியதாகச் சொல்லப்படும் மூவேறு நெறிகளிலிருந்து பதிகத்திலே இளங்கோவடிகள் கூற்றாகச் சொல்லப்படும் மூன்று நெறிகள் வேறுபடுகின்றன. ''ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்'' என்பது பதிக ஆசிரியர் சொல்லும் கருத்து. மூலக் கதையிலே வினை ஒரு பாத்திரமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆயினும், காப்பியத்தின் கருப்பொருள் களில் ஒன்றாக அது காட்டப்படவில்லை. பதிகமோ, ஊழ்வினையே சிலப்பு போதிக்கும் மூன்று நெறிகளுள் முதல்நெறி என்று கூறுகின்றது.

சிலப்பதிகாரம் முழுக்க முழுக்க அரசியல் காப்பியம் அதனால், நடுகற் காதையில் மூவேந்தருக்கும் கண்ணகி உணர்த்தியதாகச் சொல்லப்படும் மூன்று அரசியல் நெறி கள்தான் சிலப்பதிகாரத்தின் கருப்பொருள் என்று சொல்ல வேண்டும்.

# 10

# கண்ணகி கோட்டத் திறப்பு விழா

சேர நாட்டின் தலைநகரான வஞ்சி மாநகரிலே, சிறைச் சாலைகள் திறக்கப்பட்டு, அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப் பெற்றது. 'சேர மன்னனுக்குக் கீழ்ப் பட்ட சிற்றரசர்கள் இனி கப்பம் கட்டாமல் சுதந்திரமாக வாழலாம்' என்று பிரகடனம் செய்யப்பட்டது. இவ்வளவும் பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவுக்காகவுந்தான்!

இதோ, சேர மன்னன் செய்த பிரகடனம்:

**"சிறையோர் கோட்டஞ் சீமின்; யாங்கணும்,**
**கறைகெழு நல்லூர்க் கறைவீடு செய்ம்"...**

பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவில் கலந்துகொள்ள நேசநாட்டு மன்னர்களெல்லாம் வஞ்சிக்கு வருகை தந்தனர். அவர்களின் பெயர்களை இளங்கோவே கூறக் கேட்போம்:

**உலக மன்னவன் நின்றோன் முன்னர்**
**அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,**
**பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்**
**குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும்**
**கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்.**

*[சிலம்பு 30: 156-60]*

## சோழ பாண்டியர் எங்கே?

இந்தப் பட்டியலிலே, உலகாளும் மன்னவனுன சேரன் செங்குட்டுவனின் ஆணைக்கிணங்க, சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்ற ஆரிய மன்னரான கனக—விசயர், பெரிய காவற் கூடத்திலிருந்து விடுதலை பெற்ற பிற வேந்தர்கள், குடகு நாட்டுக் கொங்கணர், மாளுவ வேந்தர், கடலால் சூழப்பட்டுள்ள இலங்கையின் வேந்தனுன கயவாகு ஆகியோரைக் காண்கிருேம். தமிழரான பாண்டியனையும் சோழனையும் காணேம் அவர்கள் பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவுக்குச் சேரனுல் அழைக்கப்படவில்லை போலும்! ஆம்; கனக விசயர் தலையில் சேரன் கல் சுமத்திக் கொண்டு வந்ததைக் குறை கூறினுர்கள் அல்லவா! ஒருகால், சேரனுல் அழைக்கப்பட்டும் அவர்கள் வரத் தவறியிருக்கலாம்.

வஞ்சி நகர் விழாவில் கண்ணகியின் குடும்பத்தாரும் கலந்துகொள்ள வேண்டுமல்லவா! அவர்கள் யார்? கோவலன்—கண்ணகி தந்தையர் துறவியராய் விட்டனர். தாயர் இருவரும் உயிர் துறந்து விட்டனர். அவர்களுக்கு உடன் பிறந்தார் இல்லையென்பதை அறிவோமல்லவா!

இந் நிலையில், கண்ணகியின் தோழியான தேவந்தி, செவிலித் தாய், அடித் தோழி, மாதரியின் மகள் ஐயை ஆகிய நால்வரும் வஞ்சிக்கு வருகின்றனர். மன்னன் செங்குட்டுவன் அழைத்துத்தான் வந்தார்களா என்ருல், அப்படிச் சொல்வதற்கில்லை. அவர்கள் கண்ணகியும் கோவலனும் மதுரை சென்றதறிந்து, அங்கு சென்றுர்கள். அங்கு, கோவலன் கொலையுண்டதும், கண்ணகி மதுரையை எரித்துவிட்டு வஞ்சிக்குச் சென்றதும் அறிந்து, அவர்கள் தங்களுடன் மாதரி மகள் ஐயையையும் அழைத்துக்கொண்டு வஞ்சிக்கு வந்தனர்

## தேவந்தி அறிமுகம்

அவர்கள் வந்த நேரத்தில் பத்தினிக் கோட்டத் திறப்பு விழா நிகழ்ந்து கொண்டிருந்தது. சேரன் செங்குட்டுவனை செங்குன்றம் என்னும் மலைமீது பத்தினிக் கோட்டத்தின் முன்பு சந்தித்தனர். தேவந்தியும் செவிலித் தாயும அடித்தோழியும் சேரனிடம் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றனர். இதோ, தேவந்தி பேசுகின்றாள்:

**முடிமன்னர் மூவரும் காத்தோம்பும் தெய்வ**
**வடபேர் இமய மலையிற் பிறந்து,**
**கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த**
**தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்!**
**சோணாட்டார் பாவைக்குத் தோழிநான் கண்டீர்!**

"தமிழக முடி மன்னர்களான சேர, சோழ, பாண்டியர் மூவரும் காத்து ஓம்புகின்ற—தெய்வத் தன்மை பொருந்திய—வட திசையிலுள்ள இமய மலையில் பிறந்து, பெருக்கெடுத்தோடும் கங்கையாற்றிலே நீராடி வஞ்சி நகருக்கு வந்தாள். அப்படிப்பட்ட கண்ணகிக்கு—சோழ நாட்டு மன்னனின் குடிமகளுக்கு—தோழி நான் கண்டீர்!"

இது, சேர மன்னனிடம் தேவந்தியானவள் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட விதம்.

இளங்கோவடிகள் கண்ணகியின் கதை கூறும் போக்கில் சிலப்பதிகாரம் முழுவதிலும் தமிழ் நாட்டின் வரலாற்றுச் சிறப்புகளையும், தமிழருடைய வாழ்க்கை நெறிகளையும், தமிழ் மன்னர்களின் அரசியல் மேம்பாடுகளையும் ஆங்காங்கே கூறிச் செல்கின்றார்.

இங்கும், "முடிமன்னர் மூவரும் காத்தோம்பும் தெய்வ வடபேர் இமயமலை" என்னும் வாசகத்திலே, "இமயமலைக்குத் தெற்கே குமரிமுனைவரை பரந்து கிடக்கும் பெருநாடு

முழுவதுமே தமிழருடைய தாய் நாடு'' என்று சொல்லாமல் சொல்லுகின்றார். சிலப்பதிகார காலத்தில் பாரதத்தில் பல பேரரசுகளும் பல நூற்றுக்கணக்கான சிற்றரசுகளும் இருந் திருக்கின்றன. ஆயினும், தமிழர் பாரதத்தை ஒரே நாடாகவே—தங்கள் தாய் நாடாகவே கருதினர் எனலாம்.

தமிழ் மூவேந்தரும் காத்து ஓம்பி வருவது வடபேர் இமயமலை என்றால், அந்த மலைக்குத் தெற்கே நீண்டு கிடக்கும் நிலப்பரப்பு முழுவதையும் காப்பதனை அவர்கள் தங்கள் கடமையாகக் கருதினர் என்றுதானே பொருள்! இமயமலைக்குள்ள தெய்விகங் காரணமாகவும் தமிழ் வேந்தர்கள் அதனைத் தங்களால் காக்கத் தக்க வடஎல்லை யாகக் கருதினர் போலும்! அதனாற்றான், ''தெய்வ வடபே ரிமயமலை'' என்கிறார் இளங்கோ.

தேவந்தி காண வந்தது கல் வடிவில் நிற்கும் கண்ணகி யின் தெய்வச் சிலையைத்தான்! அதனால், ''இமயமலையிற் பிறந்து'' என்றும், ''கங்கைப் புனலாடிப் போந்த'' என்றும் கூறுகின்றாள். செங்குட்டுவன், கண்ணகியின் சிலைக்கு இமயத்தில் கல்லெடுத்து, அதனைக் கங்கையில் நீராட்டச் செய்து வஞ்சிக்குக் கொண்டு வந்தானல்லவா!

## செவிலியின் அறிமுகம்

தேவந்தியை அடுத்து கண்ணகியை வளர்த்த செவிலித் தாயானவள் தன்னை சேரனுக்கு அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறாள்:

மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்டாள் காதற் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவற் கொடுங்கானம் போந்த
தடம்பெருங் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்!
தண்புகார்ப் பாவைக்குத் தாயர் நான் கண்டீர்!

"தன் இளமை வாழ்வு பறிபோகக் காரணமானவளான மாதவிபால் சினங்காட்டாதிருந்தாள். தன் காதற் கணவனின் கைப்பிடித்து, நீரில்லாக் காரணத்தால் குடம் புகுதலில்லாத வறண்ட கிணறுகளையுடைய கொடுங்கானகத்தில் நடந்து போனாள். அத்தகைய கண்ணகிக்கு—பூம்புகாரில் பிறந்த பாவைக்கு யான் தோழி கண்டீர்!"

சிலம்பிலே, மாதவியைப்பற்றி கண்ணகி என்ன நினைத்தாள் என்பதைக் காட்டாமலே கதையை நடத்திச் செல்லுகிறார் கவிஞர். தன்னைப் பிரிந்து சென்ற தவறு கோவலனுடைய தாதலால், மாதவியின்பால் கண்ணகி காழ்ப்புக் காட்டவில்லை போலும்! இந்த உயர் குணத்தை, "மாதவி தன்னைக் கடம்படாள்" என்ற சொல்லால் இளங்கோ இங்கு சுட்டிக் காட்டுகிறார். பிற்கால நாடகக்காரர்கள் காட்டிய கண்ணகி மாதவியை ஏசுகின்றாள்.

கோவலன் நாடகத்திலே கொலைக்களத்திற்கு வந்து வெட்டுண்டு கிடக்கும் கோவலனைக் காண்கிறாள் கண்ணகி. தன் புனிதக் கரங்களால் அவள் தொட்ட மாத்திரத்திலே கோவலன் உயிர்பெற்றெழுகிறான். எழுந்தவன் கண்ணகியைக் காண்கிறான். அவள் கண்ணகியா, மாதவியா?—என்று தெளிய அவனால் முடியவில்லை. அதனால், கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பி,

> "மாதவியோ, கண்ணகியோ
> வந்தவள் யாரோடி?"

என்று கேட்கிறான். அதற்கு மேல்,

> "மாதவியானால் மடிமேல் வா!
> கண்ணகியானால் கடுகிச் செல்!"

என்றும் கூறுகின்றான்.

நாடகத்திலே நாம் கண்ட இருபதாம் நூற்றாண்டுக் கண்ணகி இரண்டாம் நூற்றாண்டில் இளங்கோ கண்ட கண்ணகியிடமிருந்து பண்பிலே வேறுபட்டவள். கொஞ்சம் வாயாடியுமாவாள்! கோவலன் வினவுக்கு கண்ணகி தரும் விடை வருமாறு!

தோட்டம் வைத்தவள் கண்ணகியே!
பூ முடித்தவள் மாதவியே!
தோட்டம் வைத்தவள் இங்கு வந்தேன்
பூ முடித்தவள் ஏன் வருவாள்?

இது, தமிழினத்துப் பெண்களின் வாழ்க்கைப் பண்பாடு தாழ்ந்துவிட்ட தற்காலத்தில் நாடகத்திலே நாம் காணும் கண்ணகிக்கும் கோவலனுக்குமிடையே நடக்கும் வாதம்! இளங்கோ, கண்ணகியின் சிறந்த குணங்களிலே அவள் மாதவியைப் பற்றிய நினைவே இல்லாதிருந்த நிலையை நமக்கு நினைவூட்டுகிறார்.

## அடித்தோழியின் அறிமுகம்

தேவந்தியும் செவிலித் தாயும் தங்களைச் சேர மன்னனுக்கு அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னர், அடித்தோழியும் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறாள். இதோ, அடித் தோழி பேசுகிறாள்!

தற்பயந்தாட்கு இல்லை; தன்னைப் புறங்காத்த
எற்பயந் தாட்கும் எனக்குமோர் சொல்லில்லை;
கற்புக் கடம்பூண்டு காதலன் பின்போந்த
பொற்றொடி நங்கைக்குத் தோழிநான் கண்டீர்!
பூம்புகார்ப் பாவைக்குத் தோழிநான் கண்டீர்!

"கோவலனைப் பின்பற்றிப் புகாரை விட்டுப் புறப்படும் போது, தன்னைப் பெற்ற தாயிடமும் கண்ணகி ஒரு வார்த்தை

சொல்லவில்லை. என்னைப் பெற்றவளான தனது செவிலித் தாயிடமும் ஒரு வார்த்தை சொல்லவில்லை. கற்பு நெறியைக் கடைப்பிடித்துத் தன் காதலனைப் பின்பற்றி வந்துவிட்டாள். அந்தப் பொற்றொடி நங்கையான கண்ணகிக்குத் தோழி நான் கண்டீர்! பூம்புகாரர்ப் பாவைக்குத் தோழி நான் கண்டீர்!''

## மூவரும் அழுதனர்!

தேவந்தியும் செவிலியும் அடித்தோழியும் சேர மன்னனுக்குத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட பின்னர், சிலை வடிவில் நிற்கும் கண்ணகித் தெய்வத்தைப் பார்த்து அரற்றி அழுகின்றனர்.

இதோ, அந்தணத் தோழி தேவந்தி அழுகிறாள்! ஆம்! பிள்ளைப் பருவத்திலிருந்து அவளுடன் பழகியவள் அழுகிறாள். கேட்போம்:

செய்தவம் இல்லாதேன் தீக்கனாக் கேட்டநாள்,
எய்த உணரா திருந்தேன் மற் றென்செய்தேன்?
மொய்குழல் மங்கை முலைப்பூசல் கேட்டநாள்
அவ்வை உயிர்வீவும் கேட்டாயோ தோழீ?
அம்மாமி தன்வீவும் கேட்டாயோ தோழீ?

''என் அருமைக் கண்ணகியே! நீ கனாக்கண்டு என்னிடம் சொல்லியபோது, அது உடனே பலிக்கப் போகிறது என்பதனை உணரத் தவறிவிட்டேன். உணர்ந்திருந்தால், உன்னைக் கண்காணித்து, நீ மதுரைக்குப் புறப்படுவதைத் தடுத்திருப்பேன். என் தோழி! மதுரையில் நீ நிகழ்த்திய முலைப்பூசலைக் கேட்டு நின் தாய் உயிர் விட்டதனைக் கேட்டனையோ? கோவலனைப் பெற்ற நின் மாமியும் உயிர் துறந்ததனைக் கேட்டனையோ?''

'அம்மாமி' என்னும் சொல் இந்நாளில் அந்தணத் தமிழரிடையேதான் வழங்கக் கேட்கிறோம். அதனால், அது 'அக்கிரகாரத் தமிழ்' என்றும் பெயர் பெற்றுவிட்டது. சிலம்பிலும் அந்தணத் தேவந்திதான் 'அம்மாமி' என்று சொல்கிறாள்.

தேவந்தியை அடுத்து, செவிலித்தாய் புலம்புகின்றாள்.

கோவலன் தன்னைக் குறுமகன் கோளிழைப்பக்
காவலன் தன்னுயிர் நீத்ததுதான் கேட்டு, ஏங்கி,
'சாவதுதான் வாழ்வு' என்று, தானம் பலசெய்து,
மாசாத்து வான்துறவும் கேட்டாயோ, அன்னை!
மாநாய்கன் தன்துறவும் கேட்டாயோ அன்னை?

"கீழ் மகனான பொய்த் தொழிற் கொல்லன் சொன்ன பொய்யுரையை நம்பி, மன்னன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்றான். அது கேட்டு ஏங்கியவனாகி, 'சாவதுதான் வாழ்வு' என்று கருதி, தன் பெருஞ் செல்வங்களை யெல்லாம் தானம் செய்துவிட்டு, மாசாத்துவான் துறவு பூண்டான். அதனை, அன்னையே, நீ கேட்டனையோ? நின் தந்தையான மாநாய்கனும் துறவு பூண்டதனை நீ கேட்டனையோ?"

கோவலன்—கண்ணகி வாழ்வு முடிந்தது கேட்ட மாசாத்துவானும் மாநாய்கனும் 'இனி சாவதுதான் வாழ்வு' என்று முடிவுக்கு வந்தவர்களாகி, துறவு பூண்டனராம்! 'சாவதுதான் வாழ்வு'—என்ன அருமையான சொல்! எவ்வளவு பொருள் பொதிந்த சொல்! வாழ்வு கசந்துவிட்டால், சாமான்யர்கள் தற்கொலை புரிந்துகொள்ளுகின்றனர். மாசாத்துவானும் மாநாய்கனும் அறிவு விளக்கமுடைய சான்றோராதலால், தற்கொலையை விரும்பாமல் துறவினை மேற்கொண்டனர்.

இனி, அடித்தோழி அரற்றுவதைக் கேட்போம்.

காதலன் தன்வீவும் காதலி நீ பட்டதூஉம்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையுங் கேட்டேங்கி,
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதா னம்புரிந்த
மாதவி தன்துறவும் கேட்டாயோ, தோழீ?
மணிமேகலைதுறவும் கேட்டாயோ, தோழீ?

"நின் காதலனான கோவலன் உயிர் நீத்ததும், அதனால் நீ பட்ட துன்பங்களும், அயலார்கள், "இந்த மாதவிதான் இவ்வளவுக்கும் காரணமாவாள்" என்று கூறும் ஏச்சுரைகளுங் கேட்டு ஏக்கமுற்று, போதிமரத்து நிழலில் தவம்புரியும் மாதவர்களின் முன்னால் புண்ணிய தானம் புரிந்த மாதவிதன் துறவினையுங் கேட்டனையோ தோழீ? அவள் மகள் மணிமேகலையும் துறந்ததனைக் கேட்டனையோ, தோழீ!"

இனி, தேவந்தியும் செவிலித் தாயும் அடித்தோழியும் தங்களுடன் வந்துள்ள மாதரியின் அருமை மகளான ஐயையை கண்ணகித் தெய்வத்திற்குக் காட்டி அரற்றுவதைக் கேட்போம்:

'ஐயந்தீர் காட்சி அடைக்கலம் காத்தோம்ப
வல்லாதேன் பெற்றேன் மயல்'என்று உயிர்நீத்த
அவ்வைமகள் இவள்தான் அம்மனம் பட்டிலா,
வையெயிற்று ஐயையைக் கண்டாயோ தோழீ?
மாமி மடமகளைக் கண்டாயோ தோழீ?

"பொய்தீர்க் காட்சியினரான கவுந்தியடிகள் அடைக்கலமாகத் தந்த கண்ணகியைக் காத்துப் பேணத் தவறிய யான் பிழை செய்தேன்' என்று கூறி உயிர் விட்டாள் இடைக்குல மாதரி. அந்தத் தாயின் மகள்தான் இவள். திருமணம் ஆகாத—நீண்டு கூரிய பற்களையுடைய—ஐயையாகிய இவளைக் கண்டாயோ, தோழீ! நின் மாமியான மாதரியின் மடமகளைக் கண்டாயோ, தோழீ!"

மாதரியைக் கண்ணகியின் மாமி என்கின்றனர் தேவந்தியும் அடித்தோழியும். காரணம், கோவலனை மாதரி தன் மகனாகக் கருதியதுதான்.

## கண்ணகித் தெய்வம் காட்சி தந்தது!

வஞ்சியம்பதியில் செங்குன்றத்தின் மேலே அப்போது தான் திறந்து வைக்கப்பட்ட பத்தினிக் கோட்டத்தின் முன்பு

நின்று, கண்ணகித் தெய்வத்தை நினைந்து தேவந்தியும் செவிலித் தாயும் அடித்தோழியும் அரற்றி அழுததனைக் கேட்டு, அத் தெய்வம் அருள் கூர்ந்து விட்டது!

மின்னற்கொடி போன்று வானத்தில் ஓர் ஒளி தோன்றியது! அந்த ஒளியானது, பொன்னஞ் சிலம்பையும் அழகு செய்யப்பட்ட மேகலாபரணத்தையும் கை வளையல்களையும் பொன் தோடுகளையும் காட்டி, ஒரு பெண்ணுக்குரிய தோற்றத்தில் பொலிந்தது!

இதனைக் கண்ணுற்ற சேரன் செங்குட்டுவன் வியப்புற்றான். அப்போது அவன் கூறியதனை இளங்கோவடிகளே கூறக் கேட்போம்।

என்ன!இஃதுஎன்னே!இஃது என்னே!இஃது
    என்னேகொல்!
பொன்னஞ் சிலம்பின் புனைமேகலை, வளைக்கை,
நல்வயிரப் பொன்தோட்டு நாவலம் பொன்இழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பில் தோன்றுமால்!

வானத்தில் ஒளிவடிவில் தோன்றிய கண்ணகித் தெய்வம் பேசுகின்றது, கேட்போம்.

தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்து ஆயினன் நான் அவன் தன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்;
என்னோடும் தோழீமீர்! எலவீரும், வம்மெல்லாம்!

விண்ணகத்தில் மின் வடிவில் தோன்றிய கண்ணகித் தெய்வமானது "தென்னவன் தீதிலன்" என்று முதலில் கூறியது பின், "நான் அவன் மகள்" என்றும் கூறி, கோவலனைக் கொலைபுரிவித்த பாண்டியனோடு உறவு கொண்டாடியது. மேலும், "சொர்க்கத்தில் பாண்டியன் நெடுஞ்செழியனும்

நானும் தந்தையும் மகளுமாக இருந்து வருகிறோம்" என்றது அந்த ஒளித் தெய்வம். "ஒளி பொருந்திய வேலாயுதத்தைக் கையில் தாங்கிய முருகன் வாழும் இந்தக் குன்றத்தை விட்டு யான் அகலேன். இங்கேயே விளையாடுவோம். தோழிமீர், எல்லோரும் வாருங்கள்!"

இது, வானத்திலிருந்து அசரீரியாக எழுந்த ஒலியுரை.

## மூவேந்தருக்கு வாழ்த்து!

இனி, பத்தினிக் கோட்டத்தின் முன்பு குழுமியுள்ள வஞ்சி நகர மகளிர் கண்ணகித் தெய்வத்தையும் தமிழ் மூவேந்தரையும் வாழ்த்திப் பாடுகின்றனர்.

சிலம்பின் இறுதியிலே வரும் வாழ்த்துக் காதையானது மூவேறு வகையான வாழ்த்துக்களைக் கொண்டதாகும். ஒரு வகை, வஞ்சிநகரப் பெண்கள் கண்ணகித் தெய்வத்தை வாழ்த்துவதாகும. மற்றொரு வகை, அவர்கள், தமிழ் மூவேந்தரையும் வாழ்த்திப் பாடுவதாகும். இன்னொரு வகை, கண்ணகித் தெய்வமே சேரன் செங்குட்டுவனை வாழ்த்துவதாகும். காதை முழுவதும் வாழ்த்துக்களே நிறைந்திருப்பதால்தான் அதற்கு "வாழ்த்துக் காதை" என்று பெயரிட்டார் இளங்கோ வடிகள்.

வஞ்சி நகர மகளிர், முதல் இரண்டு பாடல்களில் கண்ணகித் தெய்வத்தை வாழ்த்துகின்றனர். அடுத்து பாண்டியன்—சேரன்—சோழன் என முறைப்படுத்தி, மூவேந்தரையும் தனித்தனியே வாழ்த்தி, ஒவ்வொருவர் மீதும் ஒவ்வொரு பாடல் பாடுகின்றனர். திரும்பவும் நான்கு பாடல்களால் சோழனை வாழ்த்துகின்றனர். நான்கும் அம்மானை வரிப் பாடல்கள்.

பின்னர், கந்துகவரிப் பாடல்கள் மூன்று பாடி, பாண்டியனை வாழ்த்துகின்றனர். அப்புறம், "ஊசல் வரி"யாக

மூன்று பாடல்கள் பாடிச் சேரனை வாழ்த்துகின்றனர். பின்னர், "வள்ளைப் பாட்டு" மூன்றுபாடித் திரும்பவும் சோழனை வாழ்த்துகின்றனர்.

## மூவரும் சமம்

மூவேறு மன்னர்களிலே ஒவ்வொரு மன்னருக்கு முதன்மை தரும் வகையில் மும்மூன்று தொகுப்புகளாக வாழ்த்துப் பாடல்களை இளங்கோ அமைத்துள்ள திறம் போற்றத் தக்கதாகும். அவருடைய பார்வையிலே மூவேந்தர்களும் சமமானவர். அவர்களில் ஒருவருக்கு முதன்மை தந்து மற்றிருவரைப் பின்னுக்குத் தள்ளும் முறையை அவர் கடைப்பிடிக்கவில்லை.

மூவேந்தரையும் வாழ்த்துகின்ற வஞ்சி நகரப் பெண்கள் சேர மன்னனுக்கேவுரிய குடிமக்கள் ஆவர். ஒரு நாட்டின் குடிமக்கள் தங்கள் மன்னனையன்றி, பிறிதொரு மன்னனை வாழ்த்தும் வழக்கம் அந்நாளில் இருக்கவில்லை. புலவர்கள் மட்டுமே இந்த விதிக்கு விலக்கு ஆவர். அப்படியிருந்தும் சேர நாட்டின் எளிய குடிமக்களான வஞ்சி நகரப் பெண்களைக் கொண்டு தமிழ் மூவேந்தரையும் வாழ்த்தும்படி இளங்கோ செய்திருக்கிறார். தமிழினத்தவரிடையே ஒருமைப் பாட்டை உருவாக்கும் குறிக்கோளுடன்தான் இதைச் செய்திருக்கிறார். தமிழ்நாடு மூவேறு மண்டலங்களாகப் பிரிந்து கிடந்தாலும், மூவேறு மன்னர் பரம்பரைகளால் ஆளப் பட்டாலும் தமிழ் பேசும் மக்களெல்லாம் ஒரே இனத்தவர் என்னும் உணர்வை வஞ்சி மகளிரைக் கொண்டு வாழ்த்துக் காதையிலே வெளிப்படுத்துகிறார்.

செங்குன்றத்தின் மீது பத்தினிக் கோட்டத்தில் குழுமிய பெண்கள், வஞ்சி நகரத்திலும் புற நகர்களிலும் உள்ள பெண்களையெல்லாம் அழைக்கின்றனர், கண்ணகித் தெய்வத் திற்கு வாழ்த்துப் பாட! சேர மன்னனின் அரண்மனையிலுள்ள

ஆயமகளிரும் இந்தக் கூட்டு வழிபாட்டிலே கலந்து கொள் கின்றனர். ஆம்; பத்தினிக் கோட்டத்தின் முன்னே நிகழ்வது கூட்டு வழிபாடாகும்.

'வஞ்சியீர், வஞ்சி இடையீர்; மறவேலான்
பஞ்சடி ஆயத்தீர்! எல்லீரும் வம்மெல்லாம்!''

"வஞ்சி நகரிலும், புறநகரிலும் வேற்படை தாங்கிய செங்குட்டுவனின் அரண்மனையிலும் உள்ள பெண்களே, கண்ணகியை வாழ்த்துவோம் வாருங்கள்!" என்று அழைக் கின்றனர்.

அழைத்தவர்களும் அழைக்கப்பட்டவர்களுமான பெண்க ளெல்லாம கூடி கண்ணகியை வாழ்த்திப் பாடுகின்றனர்.

''கொங்கையாற் கூடற் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்
தென்னவன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்!''

"கொடுங்கோலனாகி விட்ட பாண்டியனுடன் வழக்காடி, அவனை வென்ற வீர மகளைப் பாடுவோம்! கோவலன் கள்வன் அல்லன் என்பதனைத் தன் கைவசமிருந்த ஒற்றைச் சிலம்பால் மெய்ப்பித்துக்காட்டிப் பாண்டியன் அரசை வீழ்த்தினாளே, அந்த வீராங்கனையைப் பாடி வழிபடுவோம், எல்லோரும் வாருங்கள்!"

கண்ணகியே செங்குட்டுவனுக்குக் காட்சியளித்து, "தென்னவன் தீதிலன்; நான் அவன் மகள்" என்று கூறியதை வஞ்சி நகர மகளிர் கேட்டனராதலால், "தென்னவன் தன் மகளைப் பாடுதும்"—"பாண்டியன் தன்மகளைப் பாடுதும்" என் றெல்லாம் வாய் மணக்கக் கூறி, கண்ணகியை வாழ்த்து கின்றனர்.

வஞ்சி மகளிர் மேலும் பாடுகின்றனர்:

'வானவன் எம்கோ, மகள்' என்றாம்; வையையார்
கோனவன்தான் பெற்ற கொடிஎன்றாள்—வானவனை
வாழ்த்துவோம் நாமாக, வையையார் கோமானை
வாழ்த்துவாள் தேவ மகள்.'

"கண்ணகியை நம் கோவேந்தனாகிய சேரன் மகள் என்றே நாம் கருதினோம், அவள் நம் நாட்டில் அடைக்கலம் புகுந்ததால்! ஆனால், அவளோ, 'நான் பாண்டியன் மகள்' என்று கூறிவிட்டாள்! வானவனான சேரனை நாம் வாழ்த்துவோம். வையையாற்றை யுடைய பாண்டியனைத் தெய்வ மகளான கண்ணகி வாழ்த்துவாள்."

இனி, வஞ்சி மகளிர் பாண்டியனை வாழ்த்துவதைக் கேட்போம்.

"தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணின்நீர்
கொல்ல, உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ!
வாழியரோ, வாழி, வருபுனல்நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்தன் தொல்குலமே."

"கண்ணகி தேவி துயருற்றதற்குக் காரணம், அவள் கணவனான கோவலனுடைய பழைய வினைதான். அவளுடைய கண்கள் சிந்திய நீரைத் துடைக்கத் தன் உயிரையே கொடுத்தான் மதுரை மன்னன். அவன் வாழ்க! வற்றாது எந்நாளும் பெருக்கெடுத்தோடும் வையை யாற்றால் சூழப்பட்ட மதுரையின் மன்னனான பாண்டியன் குலம் வாழ்க, வாழ்க!"

அடுத்து, வஞ்சி மகளிர் சேரனை வாழ்த்துகின்றனர்:

"மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீள்முடிமேல் ஏற்றினான் வாழியரோ!
வாழியரோ, வாழி! வருபுனல்நீர் வையை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்தன் தொல்குலமே!

''நிலத்தினும் உயர்ந்தது இமயமலை. அம்மலையை ஆள்வோன் தந்த பாவையை, நிலத்தை யாளும் அரசரான கனக—விசயர் தலையின் மேல் ஏற்றியவனான செங்குட்டுவன் வாழ்க! இடையறாது பெருகி வரும் நீரினையுடைய பொருநை யாறு சூழ்ந்து செல்லும் வஞ்சி நகரத்தானான சேரன் புகழ் வாழ்க, வாழ்க!

தங்கள் மன்னனான செங்குட்டுவன் வடவாரியரான கனக—விசயர் தலையிலே கண்ணகித் தெய்வத்திற்கான கல்லைச் சுமத்தியது அவன் குடிமக்களான வஞ்சி நகரப் பெண்களுக்கும் மகிழ்ச்சியைத் தந்ததுபோலும்!

இனி, சோழனுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்!

**''எல்லாம் நாம்,**
**காவிரி நாடனைப் பாடுதும், பாடுதும்;**
**பூவிரி கூந்தற் புகார்.''**

'தோழிமீர்! நாம் காவிரி நாடனான சோழனை வாழ்த்திப் பாடுவோம். பூக்களாலான கூந்தலையுடைய புகார் நகரினை வாழ்த்திப் பாடுவோம்.''

சோழன்—பாண்டியன்—சேரன் என முறைப்படுத்திக் கொண்டு தமிழ் மூவேந்தரையும் வாழ்த்திப் பாடுகின்ற இம்முறையும் ஒவ்வொரு வேந்தர் மீதும் முப்மூன்று பாடல்களைப் பாடி அவர்களை வாழ்த்துகின்றனர். சந்தவேறுபாடுகளைக் காட்டியும் பாடுகின்றனர்.

சோழனை அம்மானை சந்தத்தில் பாடி வாழ்த்துவதைக் கேட்போம்:

**''வீங்குநீர் வேலி உலகாண்டு, விண்ணவர்கோன்**
**ஓங்கரணம் காத்த உரவோன்யார், அம்மானை?**
**ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்**

**தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண், அம்மானை;**
**சோழன் புகார்நகரம் பாடேலோர், அம்மானை."**

*"நாற்புறமும் கடல்நீரை வேலியாக உடைய இந்நிலவுலகினை ஆள்பவனாகி, விண்ணவர் கோமானான தேவேந்திரனின் உயர்ந்த அரணைக் காத்த திறனுடையவன் யாவன்? உயர்ந்த அரணைக் காத்த திறனையுடையவன், தூங்கெயில் மூன்றினையும் தகர்த்தெறிந்த சோழன்காண் அம்மானாய்! அந்தச் சோழன் புகாரினைப் பாடுவோம், அம்மானாய்!"*

**"புறவு நிறைபுக்குப் பொன்னுலகம் ஏத்தக்**
**குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானை?**
**குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த**
**கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை!**
**காவலன் பூம்புகார் பாடேலோர், அம்மானை!"**

*"ஒரு புறாவினைக் காக்கும் பொருட்டு, பொன்னுலகத்தினரும் தன்னைப் போற்றுமாறு குறைபாடு ஏதுமில்லாத தன் உடம்பினை அரிந்து துலைத் தட்டில் வைத்த கொற்றவன் யார் அம்மானாய்? குறைவற்ற தனது உடம்பினை அரிந்த கொற்றவன், தனது அரண்மனை வாயிலிலிருந்த ஆராய்ச்சி மணியை அடித்த பசுவுக்கும் நீதி வழங்கிய காவலன்காண் அம்மானாய்! அந்தக் காவலன் புகார் நகரினைப் புகழ்ந்து பாடுவோம் அம்மானாய்!"*

## இமயத்தில் விற்கொடி

*கண்ணகி தேவி பிறப்பதற்கு முன்பு, அவளுடைய தாயகமான சோழ மண்டலத்தைக் கரிகால் வளவன் என்னும் மாமன்னன் ஒருவன் ஆண்டான். அம்மாவீரன் இமயம் வரை படை நடத்திச் சென்றான். அந்த இமய மலையை நடந்தே கடக்க முயன்றான்; இமயத்திற்கு அப்பாலுள்ள நாடுகளை அறிவதற்கும் ஆள்வதற்கும் முயன்றான்; முடியவில்லை.*

இயற்கையின் ஆற்றலை வெல்ல முடியாமற் போனதற்கு வருந்தி, அந்த இமயமலையின் பிடரியிலே தனது அரசியல் சின்னமான 'வில்'லைப் பொறித்து விட்டுத் திரும்பினான்.

இந்நிகழ்ச்சியை, சிலம்பில் முன்னர் பலவிடங்களில் கூறி விட்டார் இளங்கோ. இங்கும் சேர நாட்டு மன்னனின் குடி மக்களான வஞ்சி மகளிரைக் கொண்டும் கூற வைக்கிறார். சேர நாட்டு மக்கள் அரசியல் மரபுப்படி அயலவனான சோழ நாட்டு மன்னன் திறனைப் புகழ்ந்தால்தானே தமிழ் இனத் தவரிடையே ஒருமைப்பாடு உருவாகும்? இதோ, வஞ்சி மகளிர் சோழனை வாழ்த்துகின்றனர்.

கடவரைகள் ஓர்எட்டும் கண்இமையா காண,
வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன்யார், அம்மானை?
வடவரைமேல் வாள்வேங்கை ஒற்றினன் திக்கெட்டும்
குடைநிழலில் கொண்டளித்த கொற்றவன்காண் அம்மானை
கொற்றவன்தன் பூம்புகார் பாடேலோர், அம்மானை!

"அன்னையே! திசையானைகள் விழித்த கண்களை இமைக் காமல் வியப்புடன் காணுமாறு வட விமயத்தின்மேல் தனது புலிக்கொடியைப் பொறித்தவன் யாரென்று நீ அறிவாயோ? அங்ஙனம் வட விமயத்தின் மேல் தனது புலிச் சின்னத்தைப் பொறித்தவன், எட்டுத் திசைகளையும் தன் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்த சோழன் காண்; அந்தச் சோழனது பூம்புகாரை நாம் பாடுவோமாக!"

அடுத்து, பாண்டியன் மீது கந்துகவரியாக மூன்று பாடல் களைப் பாடிக் கொண்டே பந்தாடுகின்றனர் வஞ்சி மகளிர். இதோ, பந்தடிக்கும் பாவையரின் பாடல்:

'பொன்னிலங்கு பூங்கொடி!
பொலஞ்செய் கோதைவில்லிட
மின்னிலங்கு மேகலைகள்
ஆர்ப்பஆர்ப்ப, எங்கணும்,

தென்னன்வாழ்க, வாழ்க, என்று
சென்று, பந்து அடித்துமே
தேவர்ஆர மார்பன்வாழ்க!
என்றுபந்து அடித்துமே.''

''அழகு பொலிந்த பூங்கொடி போன்ற தோழியே! பொன்னலான மாலையானது ஒளிவிட, மேகலை அணிகள் அசைந்தாடி ஆரவாரிக்க, இக்களத்தில் எவ்விடத்தும் போய் 'தென்னவன் வாழ்க, வாழ்க' என்று வாழ்த்தி நாம் பந்தடிப்போம்! 'தேவர் ஆர மார்பன் வாழ்க' என்று வாழ்த்தி, நாம் பந்தடிப்போம்.''

''பின்னுமுன்னும் எங்கணும்
பெயர்ந்துவந்து எழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி
வியனிலத்து இழிந்தெனத்
தென்னன் வாழ்க, வாழ்க!என்று
சென்று, பந்து அடித்துமே;
தேவர்ஆர மார்பன்வாழ்க
என்றுபந்து அடித்துமே.''

''வானத்தே மின்னுகின்ற இளங்கொடியானது நிலத்தில் இறங்கி இப்படியும் அப்படியும் உலாப்போந்ததுபோல, 'தென்னன் வாழ்க, வாழ்க!' என்று நாம் பந்தடித்து ஆடுவோம்! 'தேவேந்திரன் தந்த ஆரத்தை அணிந்த மார்பினனை பாண்டியன் வாழ்க' என்று நாம் பந்தடித்து ஆடுவோம்!''

''துன்னிவந்து கைத்தலத்து இருந்ததில்லை நீணிலம்
தன்னினின்றும் அந்தரத்து எழுந்ததில்லை; தானெனத்
தென்னன்வாழ்க, வாழ்கஎன்று சென்றுபந்து அடித்துமே,
தேவர்ஆர மார்பன்வாழ்க! என்றுபந்து அடித்துமே.''

"நமது பந்தாட்டத்தைப் பார்ப்பவர், நாமடிக்கும் பந்துகள் விரைந்து வந்து நம் கையகத்தே இருந்ததுமில்லை; நீண்ட நிலத்தினின்றும் எழுந்தும் அந்தரத்தே சென்றதுமில்லை —என்று கூறி மயங்கும்படியாக, 'தென்னன் வாழ்க, வாழ்க; என்று சொல்லி பந்தடிப்போமே! 'தேவர் ஆர மார்பன் வாழ்க' என்று கூறி பந்தடிப்போமே!"

## அகதிகளுக்குச் சோறளித்தவன்!

அடுத்து, சேர மன்னனை வாழ்த்தி, "ஊசல் வரி"ப் பாடல்கள் மூன்றைப் பாடுகின்றனர் வஞ்சி மகளிர். அவற்றையும் பார்ப்போம்:

"வடங்கொள் மணியூசல் மேல்இரீஇ, ஐயை
உடங்குஒருவர் கைநிமிர்த்தாங்கு ஒற்றைமேல் ஊக்கக்,
கடம்பு முதல்தடிந்த காவலனைப் பாடிக்
குடங்கைநெடுங் கண்பிறழ, ஆடாமோ ஊசல்;
கொடுவிற் பொறிபாடி ஆடாமோ ஊசல்."

"கயிறுகளைக் கொண்ட அழகிய ஊசலின் மேல் ஏறியிருந்து, நிலத்தில் நிற்கின்ற ஐயையுடன் இருப்பாருள் யாரேனும் ஒருவர் தம் கையை உயர்த்தி ஒற்றைத் தாளத்தை ஒத்தி, அக்கையை மேலே தூக்கும்படியாய், பகைவருடைய கடம்பினை வெட்டி வீழ்த்தி காவலனைப் பாடி, நாம் ஊசலாடுவோம், தோழீ! வளைந்த வில் சின்னத்தைப் பாடி ஊசல் ஆடுவோம், தோழீ!"

"ஓர்ஐவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
போரில், பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன், பொறையன், மலையன், திறம்பாடிக்,
கார்செய் குழலாட ஆடாமோ ஊசல்;
கடம்புஎறிந்த வாபாடி ஆடாமோ ஊசல்."

"ஐவரான பாண்டவரும், நூற்றுவரான துரியோதனாதியரும் தம்முள் பகை கொண்டு செய்த போரின்போது வடபுலத்திலிருந்து தென்புலம் போந்த அகதிகளுக்குப் பெருஞ் சோற்றினை வரையாது வழங்கினான் நம் தமிழ் வேந்தனான சேரன். அவனே, பொறையன்—மலையன். அவன் புகழைப்பாடி, மேகத்தை யொத்த கூந்தல் அசைந்தாடுமாறு ஊசலாடுவோம். கடல் நடுவே யிருந்த கடம்ப மரத்தை வெட்டியெறிந்த சேரனுடைய வெற்றியினைப் பாடி ஊசலாடுவோம்!"

"வன்சொல் யவனர் வளநாடு, வன்பெருங்கல்;
தென்குமரி ஆண்ட; செருவில், கயல், புலியான்,
மன்பதைகாக் கும்கோமான், மன்னன், திறம்பாடி;
மின்செய் இடைநுடங்க ஆடாமோ ஊசல்;
விறல்விற் பொறிபாடி ஆடாமோ, ஊசல்!"

"தோழி! வன்சொல்லையுடைய யவனரின் வளமிக்க நாட்டினை திண்மை பொருந்திய பெரிய மலையினையும் தென் குமரியினையும் ஆண்ட வில்லும் மீனும் புலியும் ஒருசேரப் பொறித்த கொடியினையுடையவனும் மக்களைக் காக்கின்றான் சேர மன்னன். அவனது செங்கோன்மையைப் பாடி, மின் போன்ற இடைதுவள ஊசலாடுவோம். வெற்றியின் சின்னமான வில் இலச்சினையைப் பாடி ஊசலாடுவோம்."

## வள்ளைப் பாட்டு

இறுதியாக, மூவேந்தர் மீதும் வள்ளைப் பாட்டாகத் தனித்தனியாக மூன்று பாடல்கள் பாடி, அவர்களை வாழ்த்துகின்றனர் வஞ்சி மகளிர்.

"தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழல், அவைப்பார் புகார் மகளிர்;
ஆழிக் கொடித்திண்தேர்ச் செம்பியன் வலம்பலர்தார்ப்
பாழித் தடவரைத்தோள் பாடலே பாடல்!
பாவைமார் ஆரிக்கும் பாடலே பாடல்!"

"பாடல்சால் முத்தம் பவழ உலக்கையால்
மாட மதுரை மகளிர் குறுவரே;
வானவர்கோன் ஆரம் வயங்கியதோட் பஞ்சவன்தன்
மீனக் கொடிபாடும் பாடலே பாடல்;
வேப்பந்தார் நெஞ்சுணக்கும் பாடலே பாடல்."

"சந்து உரற் பெய்து தகைசால் அணிமுத்தம்,
வஞ்சி மகளிர் குறுவரே, வான்கோட்டால்;
கடந்தடுதார்ச் சேரன் கடம்பெறிந்த வார்த்தை
படர்ந்த நிலம்போர்த்த பாடலே பாடல்;
பனந்தோடு உளங்கவரும் பாடலே பாடல்."

"தித்திக்கும் கரும்பினை நல்ல உலக்கையாகக் கொண்டு, வளமான முத்தங்களை பூத்திருக்கும் காஞ்சி மரத்தின் நிழலிலிருந்து குற்றுவர் புகார் மகளிர். அந்நகருக்கு உரியவன் உருள்கின்ற சக்கரங்களையுடைய—புலிக் கொடி பறக்கின்ற தேரினையுடைய சோழன். அவனுடைய வலிமை பொருந்திய—பெரிய குன்று போன்ற ஆத்திமாலை சூடிய தோள்களைப் பாடும் பாடலே பாடல். பாவைமார் விரும்புகின்ற அப்பாடலே பாடல்.

"பாடல் பெற்ற முத்தத்தினை பவழ உலக்கை கொண்டு குற்றுவர் மாட மதுரைவாழ் மகளிர், வானவர்கோன் ஆரம் விளங்கும் தோள்களையுடைய பாண்டியனின் மீனக் கொடியினைப் பாடும் பாடலே பாடல். வேப்பந்தார் நெஞ்சினை வருத்தப் பாடும் பாடலே பாடல்!

"சந்தன மர உரலிலே அழகிய முத்துக்களைப் பெய்து, யானைத் தந்தத்தினை உலக்கையாகக் கொண்டு வஞ்சி மகளிர் குற்றுவர். போர்க்களம் புகுந்த போதெல்லாம் வெற்றியையே காண்பவன் சேரன். கடலகத்தே கடம்ப மரத்தை அழித்தவனாகிய பனம்பூ மாலையை யணிந்த அவனது நிலத்தினைப் பாடும் பாடலே பாடல். உள்ளங்கவர பாவையர் பாடுகின்ற பாடலே பாடல்.

## கண்ணகி வாழ்த்தினுள் !

இத்துடன் வஞ்சி மகளிர் கூட்டு சேர்ந்து பாடும் மூவேந்தர் வாழ்த்து முடிகின்றது. இது, செங்குன்றத்தின் மீதுள்ள பத்தினிக் கோட்டத்தின் முன்புதான் நிகழ்ந்தது என்பதனை மறந்திருக்க மாட்டோம் அல்லவா!

மூவேந்தரை வாழ்த்திப் பாடும் இசை நிகழ்ச்சி முடிந்ததும், தெய்வக் கண்ணகி சேரன் செங்குட்டுவனை வாழ்த்துகின்றாள். அந்த வாழ்த்தொலியை இளங்கோவின் வாக்காலேயே கேட்போம் :

**"ஆங்கு,.....—**
**நீணில மன்னர், நெடுவிற் பொறையன்நல்**
**தாள்தொழார், வாழ்த்தல் தமக்கரிது; சூழ்ஒளிய**
**எம்கோ மடந்தையும் ஏத்தினாள், 'நீடூழி,**
**செங்குட்டுவன் வாழ்க' என்று!"**

நெடு நிலத்தை யாள்கின்ற மன்னரெல்லாம் நெடிய வில் சின்னத்தையுடைய சேரனை வாழ்த்துவர்; அது வழக்கம். இப்போது அந்தச் சேர மன்னனால் படைக்கப்பட்ட பத்தினிக் கோட்டத்தின் தெய்வமான கண்ணகியும் வாழ்த்துகின்றாள் 'நீடூழி செங்குட்டுவன் வாழ்க' என்று. இத்துடன் வாழ்த்துக் காதை முடிகின்றது. செங்குட்டுவனை வாழ்த்திய கண்ணகி, பத்தினிக்கோட்டத் திறப்பு விழாவுக்கு வந்திருந்த அயல் நாட்டு மன்னர்களுக்கெல்லாம் வரம் தருகிறாள். அந்த நிகழ்ச்சியைக் கூறும் "வரந்தரு காதையுள்" புகுவோம்.

## வரந்தரு தெய்வம்

சிலப்பதிகாரத்திலுள்ள இறுதிக் காதைக்கு "வரந்தரு காதை" என்று பெயர். இந்தக் காதையிலே பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவுக்கு வந்திருந்த தமிழினத்தா

ரல்லாத மன்னர்களெல்லாம் தங்கள் நாட்டுக்கும் வந்தருள வேண்டுமென்று கண்ணகித் தெய்வத்திற்கு அழைப்பு விடுக்கின்றனர். இதனை,

"அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும், மாளுவ வேந்தனும்,
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்,
'எந்நாட்டு ஆங்கண் இமய வரம்பனின்
நன்னாள் செய்த நாளணி வேள்வியில்
வந்தீக' என்றே வணங்கினர்;"

என்ற வரிகளில் இளங்கோ அறிவிக்கின்றார்.

"எங்கள் நாடுகளில் பெரு மன்னனை—இமயவரம்பன் என்னும் சிறப்புப் பெயருக்குரியவனை—செங்குட்டுவனின் பிறந்த நாளைக் கொண்டாடப் போகின்றோம். அந்த நாளணி விழாவிலேயும் வந்தருள வேண்டும்."

இது, பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவுக்கு வந்திருந்த வேந்தர்கள் கண்ணகிக்கு விடுத்த வேண்டுகோள்.

இதனால், பத்தினிக் கோட்ட விழாவுக்கு வந்திருந்த மன்னர்களெல்லாம் சேரன் செங்குட்டுவனின் மேலாட்சியை ஏற்றுக் கொண்டவர்கள் என்பது புலனாகிறது. அதனாற்றான், தங்கள் பேரரசனின் பிறந்த நாளை அவர்கள் தத்தம் நாட்டில் கொண்டாடுகின்றனர்.

சேரனின் மேலாதிக்கத்தை ஏற்காது சுதந்திரமாக சோழ மண்டலத்தையும் பாண்டி மண்டலத்தையும் ஆண்டதனால் தான் சோழனும் பாண்டியனும் பத்தினிக் கோட்ட விழாவுக்கு வரவில்லையென்பதும் இங்கு நன்கு புலப்படுகிறதல்லவா?

சேரனின் விருந்தினர்களாக வந்திருந்த அரசர்கள் விடுத்த வேண்டுகோளுக்குக் கண்ணகித் தெய்வம் இசைந்ததனை,

"'தந்தேன் வரம்' என்று எழுந்தது ஒருகுரல்"

என்ற வரிகளில் அறிவிக்கின்றார் கவிஞர். "தந்தேன் வரம்' என்பது அசரீரியாக எழுந்த குரல்தான்!

"ஆங்கு. அதுகேட்ட அரசனும் அரசரும்
ஓங்கிருந் தானையும் உரையோடு ஏத்த
வீடுகண் டவர்போல்—"

"பத்தினிக் கோட்டத்திலிருந்து 'தந்தேன் வரம்' என்று அசரீரியாக எழுந்த குரலைக் கேட்ட சேரனும், பிற மன்னரும் வீட்டின்பத்தையே அடைந்து விட்டவர்போல மகிழ்ந்தனர்.'"

## இளங்கோவின் வரலாறு

இதன் பின், சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோவடிகள் தாம் படைத்த காப்பியத்துள் தம்மையும் ஒரு பாத்திரமாக்கிக் கொள்கின்றார். கதை தம் காலத்தில்தான் நிகழ்ந்ததென்பதனை நமக்கு உணர்த்த!

சிலப்பதிகாரம் நாடக பாணியில் இயற்றப்பெற்ற காப்பியமாகும். காப்பியத்திலே ஓரங்க நாடகக் காட்சி ஒன்றையும் "வரந்தரு காதை"யில் இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

## நாடகத்துள் நாடகம்!

பத்தினிக் கோட்டத் திறப்பு விழாவிலே கண்ணகி—கோவலன் தாயரும் கலந்து கொள்ள வேண்டுமென்பது இளங்கோவின் விருப்பம். கண்ணகி—கோவலன் வாழ்வு முடிந்த செய்தி கேட்டதுமே அவர்களுடைய தாயார்

இருவரும் உயிர் நீத்தனர் என்பதனை முன்பே அறிந்தோம். இறந்து விட்டவர்களைப் பத்தினிக் கோட்டத்திற்கு எப்படிக் கொண்டு வருவது? ஆன்மாவுக்குப் பல பிறவிகள் உண்டு என்ற நம்பிக்கையைப் பயன்படுத்தி, கண்ணகி—கோவலன் தாயரைப் பத்தினிக் கோட்டத்திற்குக் கொண்டு வருகிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

பத்தினிக் கோட்டத்தில் சேரன் செங்குட்டுவனின் எதிரிலே நிற்கும் தேவந்தியானவள் தெய்வம் ஏறியவளானாள். அவளது கூந்தல் குலைந்து, முதுகுப்புறத்தில் அவிழ்ந்து விழுந்தது; புருவங்கள் துடித்தன; சிவந்த வாயின் பவளம் போன்ற இதழ்களை மடித்துச் சிரித்தாள்; வாயினின்று வரும் பேச்சுகள் பெரிதும் குழறின; திருமுகம் வியர்த்தது; கண்கள் சிவந்தன; கைகளை மேலே உயர்த்தியும் கீழே இறக்கியும் இப்படியும் அப்படியுமாக வீசியும் கால்களைப் பெயர்த்து வைத்தும் ஆடினாள். சுற்றி யிருந்தவர்களால் புரிந்து கொள்ள முடியாத நிலையை தேவந்தி அடைந்தாள்; அவளது நா உலர்ந்தது. உயர்ந்த வார்த்தைகளைக் கூறி தெய்வத் தன்மையை வெளிப்படுத்தினாள். அப்போது அவள் மீதேறிய பாசண்டச் சாத்தன் என்னும் தெய்வம் மாடன் மறையவனைப் பார்த்துப் பேசுகின்றது.

சேர மன்னன் முன்னிலையிலே கடவுள் மங்கலத்தினைக் காண வந்த பெண்கள் கூட்டத்தினருள் இரு சிறுமியரும் இருக்கின்றனர் அவர்கள் வஞ்சிப் பதிவாழ் அரட்டன் செட்டி என்பானின் மனைவிக்கு இரட்டையராகப் பிறந்தவர்கள். இந்த இருவரோடு ஆடகமாடத்து அரவணையில் பள்ளி கொண்ட திருமாலுக்குத் தொண்டு செய்யும் சேடக் குடும்பி என்பானின் சிறு மகளும் இருக்கிறாள்.

தேவந்திமேல் தோன்றிய பாசண்டச் சாத்தன் வேறு யாருமல்ல; அவளுடைய கணவன்தான். இந்தப் பாசண்டச் சாத்தன் பற்றிக் கூறத்திறம் உரைத்த காதையிலே கண்ணகி

யிடம் தேவந்தியானவள் விவரமாகக் கூறியதை அறிந்தோம். வரந்தரு காதையில் பாசண்டச் சாத்தனைக் கொண்டு ஓரங்க நாடக மொன்றை நடத்துவதற்காகவே கனாத் திற முரைத்த காதையில் முன்கூட்டியே அவனை அறிமுகப்படுத் தினார் கவிஞர்.

## அரட்டன் செட்டி மக்கள்

கற்பு நெறியைக் கருப்பொருளாகக் கொண்டது சிலப் பதிகாரக் காப்பியம். அதனால், கற்புடைய ஒரு பெண்ணின் மீது ஆண் தெய்வம் தோன்றுவதாகச் சொல்லுவது பிழை யாகும். ஆகவே, தேவந்தியின் கணவனே அவள்மேல் தோன் றியதாகக் கவிஞர் கூறுகின்றார். பூம்புகாரில் உயிர்நீத்த கண்ணகியின் தாயும் கோவலன் தாயும் வஞ்சிமா நகரில் வாழும் அரட்டன் செட்டியின் மக்களாகப் பிறந்தனர். கண்ணகி கோவலன் மீது வைத்த பற்று காரணமாகவே அவர்கள் மறுபிறப்புப் பெற்றனர். கண்ணகி தெய்வநிலை யடைந்துள்ள வஞ்சிமா நகரில் பிறந்தனர். தான் அடைக் கலம் பெற்ற கண்ணகியைக் காப்பாற்றத் தவறியதற்காகத் தீயில் விழுந்து உயிர் துறந்த இடைக்குல மாதரியே திரு மாலின் அடியவனான குறும்பியின் மகளாகப் பிறந்தாள். இந்த விவரங்களை தேவந்தி மேல் தோன்றிய பாசண்டச் சாத்தன் கூறினான்.

பத்தினிக் கோட்டத்திலிருந்த மாடலன் பாசண்டச் சாத்தன் சொன்னதற்கிணங்கத் தன் கையிலுள்ள கரகத்தி னுள்ளிருந்த தீர்த்தத்தைத் தெய்வமேறிய தேவந்தி குறிப் பிட்ட மூன்று சிறுமியர் மீது தெளித்தான். உடனே அரட் டன் செட்டியின் இரு சிறுமியரில் ஒரு சிறுமியின் மூலம் கண்ணகியின் தாய் பேசுகின்றாள்:

"ஒளித்த பிறப்புவந்து உற்றதை ஆதலின்,
புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்

'இகழ்ந்ததற்கு இரங்கும் என்னையும் நோக்காய்;
ஏதில் நன்னாட்டு யாருமில் ஒருதனிக்
காதலன் தன்னொடு கடுந்துயர் உழந்தாய்;
யான்பெறு மகளே! என்துணைத் தோழீ!
வான்துயர் நீக்கும் மாதே, வாராய்!"

"கண்ணகியே! முற்பிறப்பின் வினை வேலை செய்யத் தொடங்கியது. அதனால், உன்னுடன் வாழ்ந்த நாட்களிலே உன்னை வாயாரப் புகழ்ந்த காதலன், பெரியோர் போற்றாத ஒழுக்கக் கேடுகளைக் கடைப் பிடித்து மாதவியுடன் வாழ்ந்தனனாக, அதற்காகப் பெரிதும் வருந்தி வாடும் என்னையும் துறந்தாய்! யார் துணையுமின்றி, நின் காதலனோடு மட்டுமே வேறு நாடு சென்று, அங்கு கடுந்துயர் அடைந்தனையே! யான்பெற்ற மகளே! தோழி போன்று பிரிவின்றி என்னுடனேயே இருந்த மகளே! எனக்குற்ற துயரத்தினைப் போக்கும் மாதரசே! நீ வாராயோ?"

அரட்டன் செட்டியின் இன்னொரு சிறுமியின் மூலமாகக் கோவலனின் தாய் பேசுகிறாள்:

என்னோடு இருந்த இலங்கிழை நங்கை,
தன்னோடு இடையிருள் தனித்துயர் உழந்து,
போனதற்கு இரங்கிப் புலம்புறும் நெஞ்சம்;
யானது பொறேஎன்; என்மகன், வாராய்!

"என்மகனே! நீ பிரிந்திருந்தபோது என்னோடு இருந்த கண்ணகியுடனே நள்ளிரவு நேரத்திலே புகார் நகரிலிருந்து வெளியேறினை பிறர் அடையாத பெருந்துன்பம் நீ அடைந்தன் கேட்டு எனது நெஞ்சம் பெரிதும் வருந்துகின்றது. யாது அதனைப் பொறுக்கலாற்றேன். என் மகனே! கோவலனே! என்பால் வாராயோ?"

## சேடக் குடும்பியின் சிறுமி

இனி, சேடக் குடும்பியின் மகளான சிறுமி, தனது முற்பிறப்பான மாதரியின் குரலிலே பேசுகின்றாள்.

**வருபுனல் வையை வான்துறைப் பெயர்ந்தேன்;**
**உருகெழு மூதூர் ஊர்க்குறு மாக்களின்**
**வந்தேன் கேட்டேன்; மனையிற் காணேன்;**
**எந்தாய்! இளையாய்! எங்குஒளித் தாயோ?**

"என் கண்ணகி தேவியே! நீர் நிறைந்த வையை யாற்றின் பெருந் துறைக்குப் போய்விட்டுத் திரும்பி வீடு வந்து பார்த்தேன் அழகு மிக்க மூதூரான மதுரை நகரத்துப் பிள்ளைகள் மூலம் நிகழ்ந்த கொடுமைகளை யெல்லாம் கேட்டு எனது வீட்டிற்கு ஓடோடியும் வந்தேன். மனையிலே நின்னைக் காணேன். என் தாய் போன்றவளே! கண்ணகியே! நீ எங்கு சென்று ஒளிந்தனையோ?"

அரட்டன் செட்டியின் சிறுமியரும் சேடக் குடும்பியின் சிறுமியும் முதிர்ச்சி பெற்ற மூத்தவர் குரலில் பேசி அழுத தனைக் கண்டும் கேட்டும் சேர மன்னன் வியந்தான். தன் அருகிலிருந்த மாடல மறையோனை நோக்கினான். அந்நிலையிலே, 'மன்னர் கோவே! நீவிர் வாழ்க!' என்று வாழ்த்தினான் மாடலன். பின்னர், கண்ணகி—கோவலன் தாயிருவரும் மறுபிறப்பு பெற்றதற்கான காரணங்களைக் கூறினான்.

தமிழ் மாநிலத்தின் வரலாற்றிலே வீர சொர்க்கமடைந்த ஆண்களுக்குச் சிலை நிறுத்தி, அவர்களை வழிபடுவது வழக்கம். சேரன் செங்குட்டுவனே, வீராங்கனைக்குக் கோட்டம் அமைத்து வழிபாடு நடத்தும் புதுமையினைத் தொடங்கி வைத்தான். இது, பெண்ணினத்திற்குச் செய்த பெருமை யாகும்.

பார்ப்பனத் தேவந்தியை அழைத்து, "கண்ணகித் தெய்வத்திற்கு நாள்தோறும் அலங்காரம் செய்து, பூச்சொரிந்து தூபதீபங் காட்டி, வழிபாடு நிகழ்த்துவாயாக!" என்று செங்குட்டுவன் ஆணையிட்டான்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால் வருணப் பாகுபாடு நடைமுறையிலிருந்த காலம் அது. அந் நாளில், மேல் வருணத்தவளான அந்தணத் தேவந்தியை மூன்றாவது வருணத்தவளான கண்ணகித் தெய்வத்தின் கோயிலுக்குப் பூசாரியாக்கினன் சேர மன்னன். "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்" என்பது சிலம்பு போதிக்கும் முப்பொருள்களில் ஒன்றல்லவா!

கண்ணகி—கோவலன் தந்தையரான மாநாய்கனும் மாசாத்துவானும் பத்தினிக் கோட்டத்திற்குக் கொண்டு வரப் படவில்லை. காரணம், அவர்கள் இருவரும் பிறப்பொழிக்கும் பெற்றியதான துறவு நிலையை மேற்கொண்டதுதான். அது போல, கண்ணகிக்குப் புகார் நகரிலிருந்து மதுரை மாநகர் வரை வழித் துணையாக வந்த தேவந்தியும் பத்தினிக் கோட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை, அவர் ஐம்புலன்களையும் வென்றதன் காரணமாக பிறப்பை ஒழித்தவராதலால்!

மணிமுடி தாங்கிய மன்னர்களெல்லாம் கண்ணகியிடம் வரம் பெற்ற பின்னர், தமக்கு வரவிருந்த மணிமுடியைத் துறந்து குணவாயிற் கோட்டத்தின் துறவியாகிவிட்ட இளங்கோவடிகளும் பத்தினிக் கோட்டத்தின் உள்ளே புகுந்தார். வரம் பெற அல்ல; தம் வரலாறு அறிய! அதையும் தாம் அறிவதற்காக அல்ல; நமக்கு அறிவிப்பதற்காக! இதோ, கண்ணகித் தெய்வம் தமக்குக் காட்சியளித்துக் கூறியதனை அடிகளாரே கூறுகிறார், கேட்போம்!

"வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்
யானும் சென்றேன், என்னெதிர் எழுந்து,

தேவந் திகைமேல் திகழ்ந்து தோன்றி,
'வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழல் இருந்தோய்! "நின்னை
அரைசு வீற்றிருக்கும திருப்பொறி உண்டு" என்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட்டுவன் தன் செல்லல் நீங்க,
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்,
சிந்தை செல்லாச் சேண்நெடுந் தூரத்து,
அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து' என்று,
என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி."

"பத்தினிக் கோட்டத்திலிருந்த செங்குட்டுவன் அங்கிருந்து வெளியேறி மாடல மறையவனுடன் வேள்விச் சாலைக்குச் சென்றான். அதன் பின்னர், பத்தினித் தெய்வத்தின் முன் யானும் சென்றேன் அப்போது, கற்சிலையாக இருந்த கண்ணகித் தெய்வமானது, அங்கிருந்த தன் தோழியான தேவந்தியின் மேல் தோன்றி பேசத் தொடங்கியது.

"வஞ்சி மாநகரில் நின் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் அரசவையில் நீ இருந்தாய். அதுகாலை அவையிலிருந்த நிமித்திகன் எழுந்து, 'தந்தைக்குப் பின் அரியணை ஏறும் வாய்ப்பு இளவலுக்குத்தான் உண்டு' என்று கூறினன். அவன் மேல் சினங்கொண்டு, நிமித்திகன் கூற்றால் வருந்திய செங்குட்டுவனின் வருத்தத்தை நீக்குவான் வேண்டி, அரச பதவியை விரும்பாத மனப் போக்கினை நீ வெளிப்படுத்தினாய். அத்துடனன்றி, வஞ்சிக்கு மேற்றிசையிலுள்ள குணவாயிற் கோட்டத்தையடைந்து. அங்குள்ள முனிவர்கள் முன்பாகத் துறவு பூண்டனை. அதனால், முடிவில்லாத பேரின்ப அருளாட்சிக்குரிய வேந்தனாக ஆயினை!" என்று எனது வரலாற்றைக் கண்ணகி உரைத்தனள்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்வரை சிலப்பதிகாரக் கதை தமது காலத்தில்தான் நிகழ்ந்தது என்பதனை ஆசிரியர் இளங்கோ சூசகமாகக்கூடச் சொல்லவில்லை.

இராமாயணக் கதை தமது காலத்தில்தான் நிகழ்ந்தது என்பதனை வான்மீகியார், காப்பியத்தின் தொடக்கத்திலேயே கூறிவிடுகிறார். அதுபோல, மாபாரதம் படைத்த வியாசரும், அந்தக் காப்பியத்தின் பாத்திரங்களிலே தம்மையும் ஒரு பாத்திரமாக்கிக் கொண்டு, பல்வேறு கட்டங்களில் தோன்றுகின்றார்.

இளங்கோவடிகளோ, சிலப்பதிகாரக் கதை நடந்த காலத்தில் தாம் வாழ்ந்ததனை அக்கதை முடியும்வரை மறைபொருள் (சஸ்பென்ஸ்) ஆக்கி, கதையின் முடிவில் பத்தினிக் கோட்டத்தின் முன்பு தாம் தோன்றுவதன் மூலம் வெளிப்படுத்துகின்றார். கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றோடு பிணைந்த கதை இத்துடன் முடிகின்றது.

## உபதேசம்!

கதையை முடித்து வைத்து "மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!" என்று உலகிலுள்ள மக்களையெல்லாம் அன்புக் குரல் கொடுத்து அழைத்து, "இதுகாறும் பத்தினிக் கண்ணகியின் கதையைக் கேட்ட நல்லவர்களே! என்னுடைய அறவுரை சிலவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள்!" என்று முன்னுரை கூறி, மேலே சொல்லுகின்றார்:

"பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்மமின்; தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;

பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளுங், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும், விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்.''

# 11

# பத்தினி வழிபாடு

இளங்கோவடிகள் விரும்பியவாறு அவர் காலத்துக்குப் பின் தமிழ் நாட்டிலும் இந்தியப் பெரு நாட்டிலும் உலகெங்கணும் பத்தினித் தெய்வ வழிபாடு நிகழ்கின்றதா? நிகழ்கின்றதென்றால், எந்த அளவில்—எங்கெங்கு? நிகழவில்லையென்றால், அதற்குக் காரணம் என்ன?—இந்த வினாக்களுக்கு விடை காண முயல்வோம்.

சிலப்பதிகாரத்துள் 'வேட்டுவ வரி'யிலே சாலினி என்பாள் மேல் தோன்றிய கொற்றவைத் தெய்வமானது கண்ணகியைப் பார்த்து,

—''இவள்
கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய
திருமா மணி''

என்று கூறக்கேட்டோம். இதனால், கண்ணகிதேவி கொங்கு நாட்டிலும், குட நாட்டிலும், தென் தமிழ் நாட்டிலும்—ஏன் உலகம் எங்கணும் தெய்வமாகக் கொண்டாடப்படுவாள் என்று இளங்கோ கனவு கண்டது புலனாகின்றது.

இந்த வரிகளுக்கு, உரை எழுதிய அடியார்க்கு நல்லார் ''மேற் கொண்டு இவள் தெய்வமாகக் கொண்டாடுமிடம் கூறியபடியாலே'' என்று கூறியுள்ளார்.

## உரைபெறு கட்டுரை

சிலப்பதிகாரக் காப்பியத்திற்கு வெளியே—அந்தக் காப்பியத்திற்குள் நுழைவதற்கு முன்பே— "உரைபெறு கட்டுரை" என்பதாக ஒரு பகுதி அதனோடு இணைக்கப் பட்டிருக்கிறது. அதையும் பார்ப்போம்:

"அன்று தொட்டுப் பாண்டியன் நாடு மழை வறங் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று கள வேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து நோயும் துன்பமும் நீங்கியது."

இது, உரைபெறு கட்டுரையின் முதற் பகுதி. இதிலே வரும் "அன்று தொட்டு" என்பதற்கு, "கண்ணகிதேவி, சீற்றங் கொண்டு மதுரையை எரித்த நாள் தொட்டு" என்று பொருள் கொள்ள வேண்டும்.

அந்த நாள் தொட்டுப் பாண்டியன் நாட்டிலே மழை பெய்யவில்லை. அதனால், மக்கள் வறுமை எய்தினார்கள். உஷ்ணபேதி (காலரா), கொப்புளம் (அம்மை) போன்ற தொற்று நோய்கள் தோன்றி பல்லாண்டுகள் நீடித்து மக்களைக் கொள்ளை கொண்டன. இவ்வளவுக்கும் காரணம் பொற்கொல்லன் சொன்ன பொய்யை நம்பி கோவலனைப் பாண்டியன் கொன்றதும், அதனால், கண்ணகி தேவி தணியாச் சீற்றங் கொண்டதுந்தான் என்று, பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பின்னர் அரியணையேறிய அவன் மகன் வெற்றிவேற் செழியன் கருதினான்.

அவன், கண்ணகியின் சீற்றத்தைத் தணிவிக்கக் கருதி, ஆயிரம் பொற்கொல்லர்களைப் பலி கொடுத்து, கொற்கை மாநகரில் விழா எடுத்து, சாந்தி செய்தான். அதன்பின், கண்ணகியின் அருளால் 'அங்கு பெய்தது; இங்கு பெய்ய

வில்லை' என்று சொல்ல இயலாதபடி, பாண்டி நாடு எங்கணும் மண் குளிரும்படியாக மழை பெய்ய, நோயும் துன்பமும் நீங்கி, மக்கள் இன்பத்தில் மூழ்கினார்கள். மதுரை மாநகரைக் கண்ணகி தேவி எரித்துவிட்டபடியால், பாண்டி நாட்டின் துறைமுக நகரான கொற்கையில் விழா எடுத்தான் வெற்றிவேற் செழியன்.

உரைபெறு கட்டுரை இன்னும் சில செய்திகளையும் தருகின்றது. அதையும் பார்ப்போம்!

"அது கேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய, மழை தொழில் என்றும் மாறாதாயிற்று.

"அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான், ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப, மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

"அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் அமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

இத்துடன் உரைபெறு கட்டுரை முடிகின்றது. இதில் வரும் "அதுகேட்டு" என்பதற்கு, "கொற்கையில் வெற்றி வேற் செழியன் கண்ணகியின் சீற்றத்தைத் தணிவிக்க விழா எடுத்தது கேட்டு" என்று பொருள் கொள்ள வேண்டும்.

## புகாரைக் கூறாததேன்?

சோழன் பெருங்கிள்ளி என்பான் தனது நகரான கோழியகத்துக் கண்ணகிக்கு விழா எடுத்ததாக உரைபெறு கட்டுரை கூறுகின்றது. இங்கு, "புகார் நகரம் என்ன

ஆயிற்று? அதுதானே கண்ணகி பிறந்து, வாழ்வாங்கு வாழ்ந்த நகரம்? அங்கல்லவா சோழன் அவளுக்கு விழா எடுத்திருக்க வேண்டும்!'' என்னும் வினாக்கள் நம் உள்ளத்தில் எழுவது இயற்கை.

சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த பின்னர் புகார் நகரைக் கடல் கொண்டு விட்டதாக மணிமேகலைக் காப்பியம் கூறுவதால், இந்தக் கடல்கோளுக்குப் பின்னர் சோழன் கண்ணகிக்கு விழா எடுத்திருக்க வேண்டும் என்று கருத இடம் இருக்கிறது. மதுரை எரியுண்டதால் பாண்டியன் கொற்கையிலிருந்து கண்ணகிக்கு விழாக் கொண்டாடியது போல, புகாரை இழந்துவிட்ட சோழனும் 'கோழியூர்' எனப்படும் உறையூரில் இருந்த வண்ணம் பத்தினி விழாவைக் கொண்டாடினான் என்று கருதலாம். புகாரைக் கடல் கொண்டு விட்ட செய்தியை உரைபெறு கட்டுரை சொல்லாமற் சொல்லுவதால், அதனை எழுதியவர் இளங்கோவடிகள் அல்ல வென்பது புலனாகின்றது. அவர் காலத்துக்குப் பிறகு வேறு யாரோ ஒரு புலவர் அதனை எழுதி சிலப்பதிகாரத்துடன் சேர்த்திருக்கக் கூடும்.

உரைபெறு கட்டுரையால் தெரிவதென்ன? சேர நாட்டு வஞ்சிமாநகரில் தொடங்கி வைக்கப்பட்ட பத்தினி (கண்ணகி) வழிபாடு, பிற்காலத்தில் பாண்டிய நாடு, கொங்கு நாடு, இலங்கைத் தீவு ஆகியவற்றிலும் நிகழ்ந்ததென்பது உணரப் படுகின்றது. ''ஆடித் திங்கள் அகவையின் ஆங்கோர் பாடி விழாக் கோள் பன்முறை எடுப்ப'' என்று உரைபெறு கட்டுரை கூறுவதால், சிலப்பதிகாரக் கதை முடிந்த பின் கண்ணகிக்கு விழா எடுத்த மன்னர்கள் ஆண்டுதோறும் ஆடித் திங்களில் அதனைத் தொடர்ந்து நடத்தினார்கள் என்ற உண்மை துலங்குகின்றது.

இன்றும் தமிழ் மக்கள் கண்ணகி விழாவை ஊர்தோறும் கொண்டாடி வருகின்றனர். இன்றென்ன, கண்ணகிக்

காப்பியம் தோன்றிய அன்று தொட்டே பத்தினி வழி பாட்டை நடத்தி வருகின்றனர். பாண்டியன் பத்தினி விழாவைக் கொற்கையில் கொண்டாடியது கேட்டு, கொங் கிளங் கோசரும் சோழனும் இலங்கைக் கயவாகுவும் கொண்டாடினார்களல்லவா? அந்த மன்னர்களெல்லாம் கொண்டாடியதைக் கண்டும் கேட்டும் தமிழ் நாட்டு மக்களெல்லாம் கண்ணகி விழாவைக் கொண்டாடத் தொடங்கினர். ஆனால், எப்படியோ—எப்போதோ கண்ணகி விழாவானது, "மாரி விழா" என்ற மாற்றுப் பெயர் பெற்று விட்டது!

## மாரியம்மனாக மாறியதெப்போது?

இன்று நாம் ஊர்தோறும் மாரியம்மன் கோயில்களைக் காண்கிறோம். சென்னை போன்ற பெரு நகரங்களிலும் பேட்டைதோறும் மாரியம்மன் கோயில்களைப் பார்க்கிறோம். அந்தக் கோயில்தோறும் தமிழர் வீடுதோறும் ஆடித் திங்க ளிலே மாரியம்மனுக்கு விழா எடுப்பதும் வழக்கமாகி விட்டது.

கண்ணகியம்மன் மாரியம்மனாக மாறியது எதனால்? கொற்கையிலும் கொங்கு மண்டலத்திலும் குட நாட்டிலும் இலங்கைத் தீவிலும் மழை வரம் வேண்டியே மன்னர்கள் விழா நடத்தினர் என்பதனை, அவர்கள் விழா நடத்திய பின்னர், "நாடு மலிய மழை பெய்து பிழையா விளையுள் நாடாயிற்று" என்றும், "மழை தொழில் என்றும், மாறாதா யிற்று" என்றும் உரைபெறு கட்டுரை கூறுவதால் அறிகிறோம் அல்லவா!

'மாரி' என்னுஞ் சொல் 'மழை' என்று பொருள் தரும். சிலப்பதிகாரக் காலத்திற்குப் பின்னர் மன்னர்களும் மக்களும் மழையைக் கோரியே கண்ணகிக்கு விழா எடுத்தன ராதலால், காலப் போக்கில் மழை தரும் தெய்வத்தின் பெயர் "மாரி" என்றும் மாறி வழங்கியிருக்கக் கூடும்.

இங்கொரு புராணக் கதை வந்து என் வாதத்துக்கு எதிர்வாதம் எழுப்ப நினைப்போருக்குத் துணை புரிகின்றது. அந்தக் கதையையும் பார்ப்போம்:

அந்தணோத்தமரான ஜமதக்கினி முனிவர் தன் பத்தினியான ரேணுகை என்பாளின் கற்பில் ஐயங்கொண்டு, அதாவது, சித்தாதரன் என்ற கந்தருவனுடன் அவள் கூடியிருந்ததாகக் கருதி—அவள்மீது கடுஞ்சினங்கொண்டார். தன் கடைசி மகனை பரசுராமனை அழைத்து ரேணுகையின் தலையை வெட்டி விடுமாறு ஆணையிட்டார். அதன்படி, தன் தாயின் தலையை வெட்டி விட்டான் பரசுராமன். தனது கட்டளையை நிறைவேற்றியதற்காக பரசுராமன்பால் அன்பு மிகுந்த முனிவர், தனக்குத் தேவையான வரத்தைக் கேட்குமாறு மகனை வேண்டினர். அவன், "என்னல் வெட்டப்பட்டு மாண்டுவிட்ட என் தாய் திரும்பவும் உயிர்பெற்றெழ வேண்டும்" எனக் கேட்டான். கொடுத்த வரத்தை மறுக்க மாட்டாதவராகி, "வெட்டுண்ட தலையை உடலோடு பொருத்தினல், உன் தாய் உயிர் பெற்றெழுவாள்" என்று கூறினர் ஜமதக்கினி முனிவர்.

இதற்குள், வெட்டுண்ட ரிஷி பத்தினியின் தலையை ஏதோ ஒரு மிருகம் கொண்டு சென்று விட்டது. அதனல் கவலை கொண்ட பரசுராமன், புலைச்சி யொருத்தியின் தலையினை வெட்டிக்கொண்டு வந்து (அவள் தலைதானே விலையில்லாதது!) தன் தாயின் உடலுடன் பொருத்தினன். உடனே ஜமதக்கினியின் அனுக்ரகத்தால் ரேணுகை உயிர் பெற்றெழுந்தாள்.

## ரேணுகா தேவியா?

ரேணுகையின் கதை பல வடிவங்களில் வழங்கி வருகின்றது. மாரியம்மன் பெயரோடு சேர்த்து வழங்கி வரும் வடிவத்தில் நான் இங்கு சொன்னேன். ரேணுகையின் தலை

மாறி விட்டதால், அதன்பின் அவள் "மாரி" என்று அழைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதனை நம்பி மாரியம்மன் கோயில்களில் உற்சவ காலங்களில் வெளியிடும் விளம்பரத் தாள்களிலே, "ரேணுகா தேவி" என்றே போடுகிறார்கள்.

தலை மாறி வந்ததைக் குறிப்பதானால், வல்லின 'றி' போட்டு 'மாறியம்மன்' என்று அழைக்கவேண்டும். அப்படி யின்றி, இடையின 'ரி' போட்டு மாரியம்மன் என்றே மக்கள் அழைக்கின்றனர். இதனால், தலை மாறிய கதையை நம்பு வதற்கில்லை. கற்பின் கொழுந்தான கண்ணகியின் வழி பாட்டைக் கற்பிழந்தவளென்று தன் கணவனால் சந்தேகிக்கப் பட்ட—தன் மகனாலேயே கொல்லப்பட்ட—ரேணுகையின் வழிபாடாக மாற்றியவர்கள் யாராயினும், அவர்கள் தமிழருக்கு நன்மை செய்யவில்லை.

தமிழ் நாட்டில் நடைபெறும் மாரியம்மன் விழாக் களிலே கூழ், கருவாடு, முருங்கைக் கீரை முதலியன வைத்துப் படைக்கப்படுகின்றன இவை யனைத்தும் மக்கள் பஞ்சம் நேர்ந்த காலத்தில் பயன்படுத்தும் உணவு வகை யாகும். வெற்றிவேற் செழியன் பாண்டியநாடு பஞ்சத்தால் அவதியுற்றகாலை மழை வரம் வேண்டி கண்ணகிக்கு விழா எடுத்தானாதலால், பஞ்ச கால உணவைப் படைத்து வழிபட்டிருக்கலாம்.

அந்தணப் பெண்ணும் ரிஷி பத்தினியுமான ரேணுகைக்கு நடத்தும் வழிபாட்டிலே, கருவாடு சமைத்துப் படைப்பது அசம்பாவிதமாகும். மற்றும், ரேணுகை வடபுலத்தவள்; அப்படியிருந்தும், தமிழ் நாட்டில் மாரியமமன் விழா கொண்டாடப்படும காலத்திலே, அது போன்ற முறையிலோ வடபுலத்தில் ரேணுகாதேவி விழா நடைபெறு வதாகத் தெரியவில்லை. உண்மையென்னவெனறால, தமிழர் நடத்தி வந்த கண்ணகி விழாவையே பிற்காலததில் ரேணுகா

தேவி விழாவாக மாற்றிவிட்டிருக்கின்றனர் மதவாதிகள் என்பதுதான்.

## பூசாரியின் சிலம்பு

மாரியம்மன் கோயில்களெல்லாம் கண்ணகித் தெய்வத்தின் கோயில்களே என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உண்டு. அவற்றையும் சொல்லுகிறேன். மாரியம்மன் கோயில்களில் விழா நடக்கும் காலங்களிலே, 'பூசாரிகள்' என்போர், பம்பையும் உடுக்கையும் அடித்துப் பாடி மகிழ்வார்கள். அப்படி மகிழும்போது, உள்ளே பரல்களைக் கொண்ட ஒற்றைச் சிலம்பைக் கையில் தாங்கி, அதனை அசைத்து அசைத்து ஒலி யெழுப்புவார்கள். இரண்டு சிலம்புகளை அவர்கள் பயன்படுத்தி நான் பார்த்ததில்லை.

சிலப்பதிகாரத்திலே, விற்பதற்காகக் கோவலன் கொண்டு சென்ற ஒரு சிலம்புதான் அவன் கொலையாவதற்குக் காரணமாகின்றது.

மாரியம்மன் கோயில்களிலே அம்மன் சிலைக்கு முன்பு உள்ள திருநீற்றுத் தட்டிலே சிலம்பு ஒன்றும் வைக்கப் பட்டிருக்கக் காணலாம். இந்த ஒற்றைச் சிலம்பு சிலப்பதி காரக் கதையையே நினைவூட்டுகின்றது.

பெரும்பாலான கோயில்களிலே முழு உருவத்தில் மாரியம்மன் சிலையைக் காண்கின்றோம். அந்தக் கோயில்களிலேயும் சிலவற்றிலே முழு உருவச் சிலைக்கு முன்னே முக உருவச் சிலையும் இருக்கின்றது.

சிலப்பதிகாரத்திலே, வஞ்சி மாநகரில் கண்ணகிக்கு மட்டுந்தான் சேரன் செங்குட்டுவன் உருவச் சிலை நிறுத்தினான் என்று சொல்லப்படுகிறது. ஆனால், மணிமேகலையிலே,

"அணியிழை அந்தரம் ஆரு எழுந்து
தணியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காணிய!
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று, குணம்பல ஏத்தி''

என்னும் வரிகளிலே, வஞ்சி மா நகரிலுள்ள பத்தினிக் கோட்டத்துக்குச் சென்ற மணிமேகலை, அங்கு சிலை வடிவில் இருந்த தந்தை கோவலனையும் தாய் கண்ணகியையும் கண்டதாகக் கூறப்படுகிறது. இதனால், சிலப்பதிகாரத்திற்குப் பின்னர் வஞ்சி நகரில்—பத்தினிக் கோட்டத்தில்—கோவலன் சிலையும் வைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகின்றது. கோவலன் தலை வேறு முண்டம் வேருக வெட்டப்பட்டு இறந்தவனுதலால், அவனது முக உருவச் சிலை மட்டும் பத்தினிக் கோட்டத்தில் வைக்கப்பட்டிருக்கலாமென்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த ஆண் தலை பின் எந்தக் காலத்தில் பெண் தலையாக மாறியதோ, யானறியேன்! மாரியம்மன் கோயில்களெல்லாம் ரேணுகா தேவியின் கோயில்களாக மாற்றப்பட்ட காலத்திலே ஆண் தலை பெண் தலையாக மாற்றப்பட்டதும் நிகழ்ந்திருக்கலாம்.

## தொத்து நோய்கள்

உரைபெறு கட்டுரையிலே, மதுரையில் கண்ணகி நிகழ்த்திய புரட்சி முடிந்த பின்னர், பஞ்சம் தோன்றி வெப்பு, குரு போன்ற நோய்கள் மலிந்தன வென்று கூறப்படுகின்றது, 'வெப்பு' என்பதற்கு 'உஷ்ண பேதி' என்றும், 'குரு' என்பதற்குக் 'கொப்புளம்' என்றும் பொருள் கொள்ளலாம்

இந்நாளிலும் வெப்பக் காலத்திலே காலரா, அம்மை போன்ற தொத்து நோய்கள் மக்களைப் பிடிக்கக் காண்கிறோம் அல்லவா? இந்தச் சந்தர்ப்பங்களிலே, தொத்து நோய்களி லிருந்து காப்பாற்றுமாறு மாரியம்மனை வேண்டிக் கொள் வதும், நோய் அகன்றால் உயிர்ப்பலி கொடுப்பதாகப் பிரார்த்தித்துக் கொள்ளுவதும் வழக்கமாக இருந்து வருவ தைப் பார்க்கிறோம்.

சென்னைக்கு அடுத்தாற்போல் பெரியபாளையம் என்னும் சிற்றூரிலுள்ள மாரியம்மன் கோயிலிலே அம்மை நோய் நீங்கப் பிரார்த்தனை செய்து கொண்ட மக்கள், பருத்தி ஆடைகளைக் களைந்தெறிந்து, "வேப்பஞ் சீரை" (வேப்பிலை யாலான ஆடை) அணிந்து கொண்டு மாரியம்மன் கோயிலை வலம் வருகின்றனர்.

பாண்டிய நாட்டில் உணவுக்கு மட்டுமேயன்றி, உடுப்பதற்கான உடைக்கும் பஞ்சம் ஏற்பட்டிருந்த காலத் திலே வெற்றிவேற் செழியன் கண்ணகித் தெய்வத்திற்கு விழா எடுத்தான். அந்த விழாவிலே வறுமைக்குப் பலியான ஆண்களும் பெண்களும் வேப்பஞ் சீரை உடுத்தியிருக்கலாம் அந்த வழக்கம் வழிவழி நீடித்து வந்து, இன்றுவரை நிலைத்துவிட்டது போலும்!

## துர்க்கையா?

மாரியம்மன் கோயில்களிலேயுள்ள விக்கிரகங்கள் பயங் கரத் தோற்றத்தில்—அதாவது, துர்க்கையைப் போன்று இருக்கக் காண்கிறோம். இதற்குச் சிலம்பிலேயே சான்று உண்டு.

பாண்டியனுடைய அரண்மனை வாயிலை அணுகிய கண்ணகி,

"இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே!"

என்று வாயிற் காவலனிடம் கூற, அவன் அரசவைக்கு ஓடி, கண்ணகியின் வரவை அரசனுக்குக் கூறுங்கால்,

"அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூர்உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்!"

என்கிறான். இதிலே, அரண்மனை வாயிலில் வந்திருப்பவள் எப்படி இருக்கிறாள் என்று வருணிக்கப் புகுந்த வாயிலோன் —கொற்றவை, பிடாரி, பத்ரகாளி, காளி, துர்க்கை ஆகிய ஐந்து பயங்கரத் தெய்வங்களை ஒவ்வொன்றாகச் சொல்லி, "அவர்களெல்லாம் அல்லள்" என்கிறான். இதனைக் கொண்டு கண்ணகியம்மனுக்கு வடிவம் படைத்தவர்கள் துர்க்கைக் கோலத்தைக் கொடுத்திருக்கலாம். 'வேட்டுவ வரி'யில் தெய்வமேறிய சாலினி, கண்ணகியைப் பார்த்து, "இவள், கொங்கச் செல்வி குடமலையாட்டி" என்று கூறியதற்கு உரை எழுதிய அரும்பதவுரைகாரர், 'மேற்கொண்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடும் இடம் கூறினபடியாலே, இவள் துர்க்கையாகவே பிறந்தாள் என்றவாறு' என்று கூறி விட்டார். இதனால், அரும்பதவுரைகாரர் காலத்திலேயே கண்ணகி கோயில்களில் அத்தெய்வத்தின் உருவச் சிலைகள் துர்க்கையின் கோலத்தில் இருந்தனவெனக் கருதலாம்.

பிற்காலத்தில் புராண ரீதியில் எழுதப்பட்ட கோவலன் கதையுள் காளிதேவியே கண்ணகியாகப் பூம்புகாரில் அவதரித்தாள் என்று கூறப்பட்டுள்ளது. தவத்திரு சங்கர தாச சுவாமிகள் இயற்றிய கோவலன் நாடகத்துள்ளும், பாண்டியனிடம் கண்ணகி வழக்குரைக்கும் காட்சியில் திடீரென அம் மாபத்தினி காளியாக மாறிவிடுகிறாள். திரு. என். இரத்தினம் என்ற நாடக நடிகர் ஒருவர், காளியாக மாறிவிட்ட கண்ணகியாக அற்புதமாக நடித்து, அதற்காகக் "காளி என். ரத்தினம்" என்றே மக்களால் அழைக்கப்பட்டார்.

இவற்று லெல்லாம் மாரியம்மன் உருவச் சிலைகள் ஆரம்ப காலத்திலேயே காளிதேவி கோலத்தில் நிறுத்தப் பட்டிருக்கலாம் என்று அனுமானிக்க வேண்டியிருக்கிறது. ஆனல், வஞ்சிமாநகரில் பத்தினிக் கோட்டத்தில் செங் குட்டுவன் நிறுத்திய கண்ணகி சிலை எப்படி இருந்ததென்பது பற்றிச் சிலம்பில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

## வெள்ளிக் கிழமை விரதம்

தமிழ் நாட்டில் பெண்கள் வெள்ளிக்கிழமைதோறும் எண்ணெய் தேய்த்துக் குளித்து, அன்று ஏதேனுமொரு பெண் தெய்வத்தின் கோயிலுக்குச் சென்று, அத் தெய்வத்தை வழி படுகின்றனர். குறிப்பாக, மாரியம்மன் கோயில்களில் ஏராள மாகக் குழுமி, அத்தெய்வத்திற்கு விசேஷ வழிபாடு செய் கின்றனர். இது, கண்ணகி வழிபாடாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. வெள்ளிக்கிழமை வழி பாட்டை 'பூவாடைக்காரி வழிபாடு' என்று பெண்கள் சொல்லுகின்றனர்.

அந்த 'பூவாடைக்காரி' யார் என்று கேட்டால், அதை விளக்கமாகச் சொல்ல அவர்களால் முடியவில்லை. ஆனால், மனையுறை தெய்வம் என்னும் பொருளில்தான் அப்படிக் கூறுகின்றனர் என்று நினைக்கத் தோன்றுகிறது.

'பூவாடைக்காரி' என்றால், பூவோடும் புத்தாடையோடும் மறைந்துபோன குலத்தெய்வம் என்று பொருள் கொள்ளலாம். கண்ணகி மண்ணுலக வாழ்வின் முடிவில் கணவனையிழந்தவள் என்றாலும், சிலப்பதிகாரக் கதையின் முடிவிலே அவள் கணவனுடன் கூடிச் சொர்க்கம் புகுந்த வாழ்வரசியாகவே காட்டப்படுகின்றாள்.

வஞ்சி மாநகரில் பத்தினிக் கோட்டத் தெய்வத்திற்குத் 'தினமும் விழாவும் பூக்களால் அலங்காரமும் நிகழ்த்துக' என்று பார்ப்பனத் தேவந்திக்கு செங்குட்டுவன் ஆணையிடுவதாலும் கண்ணகி வாழ்வரசி என்பது உறுதிப்படுகிறது.

இஸ்லாமியரும் தமிழரல்லாத வடபுலத்து இந்துக்களும் வெள்ளிக் கிழமையைக் கொண்டாடுகின்றனர். ஆனால், அவர்களில் ஆண்—பெண் அனைவருமே அந்நாளைக் கொண்டாடுகின்றனர். இந்துத் தமிழரில் பெண்கள் மட்டுமே கொண்டாடுகின்றனர். இதனாற்றான், அது, கண்ணகி வழிபாடாக இருக்குமோ என்று ஐயுறுகிறேன்.

## மதுரைக் கோயிலுள்....

மதுரையிலே மீனாட்சியம்மன் கோயில் உட்பிரகாரத்தில், ஒரு தூணிலுள்ள பயங்கர வடிவங் கொண்ட பெண் தெய்வத்தின் மார்பில் எப்போது பார்த்தாலும் வெண்ணெய் நிறைந்திருக்கக் காண்கிறோம். ஆம்; அந்தச் சிலை மீது நான்

தோறும் வெண்ணெய் அப்பப்படுகிறது. 'இது எதற்கு?' என்று கேட்டால், கோயிலிலுள்ளவர்கள் ஏதேதோ சொல்லுகிறார்கள். அவை நம்பத் தக்கனவாக இல்லை. சிலப்பதிகாரத்திலேயும் இதற்குச் சான்று எதுவும் காணப்படவில்லை.

புகழேந்திப் புலவர் பெயரால் உலவிவரும் கோவலன் கதையிலே ஒரு குறிப்பு காணப்படுகின்றது. கண்ணகி, சீற்றத்தால் தன் முலையைப் பிய்த்தெறிந்து மதுரையை எரித்து முடித்தபோது, அழல் கனன்ற மார்பகத்தில் தோன்றிய எரிச்சலால் அவள் வேதனையடைந்ததாகவும், அந்நேரத்தில் கண்ணகியைக் காண வந்த இடைக்குல மகள் ஒருத்தி, தன் கூடையிலிருந்த வெண்ணெயை அவள் மார்பகத்தின் மீது அப்பி, தன் முந்தானையிலிருந்து கிழித்தெடுத்த துண்டுத் துணியால் அந்த மார்பைக் கட்டி விசிறியதாகவும் கூறப்படுகிறது. அந்த வரிகள் வருமாறு:

வெண்ணெய்க் குடமெடுத்து வாருள் தயிரிடைச்சி
வெண்ணெய் தனை எடுத்து விட்டெறிந்தாள் மார்மேலே
வெண்ணெய் உருகுவதை மெல்லியவள் தான்பார்த்து
தன்முன் தானை யைக்கிழித்து மார்பில் வரிந்துகட்டி
முழந்தால் விசிறினளே மெல்லியந்த சீரிடைச்சி

இடைசிகுல மகள் காட்டிய அன்பால் மனங் குளிர்ந்த கண்ணகி இடையர்வாழ் தெருவிற்குத் தீ பரவாதிருக்க வரங் கொடுத்தாளாம். இதைக் கூறும் வரிகள் வருமாறு:

தேகங் குளிர்ந்தவுடன் திரும்பியேதான் பார்த்தாள்
"எந்தத்தெரு வெந்தாலும் இடைச்சிதெரு வேகாது"
என்று வாழ்த்தி வரங்கொடுத்து
மாதர்களைப் போங்க ளென்றாள்.

இதன்படிப் பார்த்தால், ம து ரை மீனுட்சியம்மன் கோயில் தூண் ஒன்றில் வெண்ணெய் அப்பிய கோலத்தில் காணப்படுவது கண்ணகியின் சிலையாக இருக்கலாமோ என்று கருதத் தோன்றுகிறது. இது, மே லு ம் ஆராயப்பட வேண்டும்.

## ஒற்றியூரில் கண்ணகி?

மதுரையை எரித்து முடித்ததும் கண்ணகியாள் வைகையாற்றின் ஒரு கரை வழியாக மேற்கு நோக்கிச் சென்று செங்குன்றத்தை அடைந்து, பின்னர் சொர்க்கஞ் சென்றதாகச் சிலப்பு கூறுகிறது. ஆனால், கோவலன் கதையில் வேறு விதமாகக் கூறப்படுகிறது. செய்யுள் நடையிலுள்ள அதனை உரை நடையாக்கிப் பார்ப்போம் :

"மதுரையை எரித்ததும் சினந் தணியப் பெறுதவளாகி வடதிசை நோக்கிப் புறப்பட்டு, இடையிலுள்ள தனது சொந்த நாடான சோழ நாட்டையுங் கடந்து, சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூரை அ டை ந் தா ள். அங்கு, தியாகராசப் பெருமான் கோயிலுள் நுழைந்தாள். அப்போது, தியாகரும் வடிவுடையம்பாளும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தனர். தியாகேசர், ஆற்றொணுச் சினத்துடன் வருகின்ற கண்ணகியைக் கண்டதும், இவள் வருகையால் ஒற்றியூருக்குக் கேடு நேரக்கூடுமென்று அஞ்சினர்.

"அஞ்சியவர், தம் கையிலிருந்த சொக்கட்டான் ஆட்டக் காயைக் கிணற்றில் விழுமாறு உருட்டினுர். காய் கிணற்றில் விழுந்தது. அதனை எடுக்க இறங்குவதுபோல் தியாகர் நடித்தார். அந் நிலையில், "யான் எடுத்துத் தருகிறேன்" என்று கூறி, கிணற்றிலிறங்கினுள் கண்ணகி. உடனே

தியாகேசர், கிணற்றை ஒரு வட்டப்பாறையால் மூடி விட்டார். கிணற்றுள் சிக்கிக்கொண்டுவிட்ட கண்ணகி தனக்கு ஆண்டுதோறும் ஒரு பொற்கொல்லனைப் பலி தர வேண்டுமென்று தியாகரைக் கேட்க, அவரும் அதற்கு இசைந்தார்.

"இதன்படி, ஆண்டுதோறும் நரபலி தரப்பட்டு வந்தது. ஒரு ஆண்டில் பலியாகவிருந்த பொற்கொல்லன் சிறந்த தமிழ்க் கவிஞன். அவன் தன்பால் இரக்கம் காட்டுமாறு கண்ணகி மீது பதிகம் பாடி வேண்ட, அத் தெய்வம் மன மிரங்கி, இனி நரபலி வேண்டாமென்றும், அதற்குப் பதிலாக எருமைக்கடா பலி தந்தால் போதுமென்றும் கூறியது. அதன்படி நரபலி கடாபலியாக மாறியது."

இந்தக் கதை சிலப்பதிகாரக் கதையிலிருந்து வேறுபடுவதால் இதனை நம்புவதற்கில்லை. ஆயினும், இந்தக் கதைக் கிணங்க, திருவொற்றியூரில் வட்டபுரியம்மன் கோயில் இருக்கிறது. இந்த அம்மனுக்கு சுமார் முப்பதாண்டுகளுக்கு முன்வரை எருமைக் கடா பலி தரப்பட்டு வந்தது. "ஜீவ பந்து" ஸ்ரீபால் காட்டிய எதிர்ப்பால், இந்த உயிர்ப் பலியும் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனுல், பிற்காலத்தில் திருவொற்றியூரில் கண்ணகி வழிபாடு ஏற்படுத்தப்பட்டு, அதற்கு, சிலப்பதிகாரத்தோடு சேர்த்துக் கதை கட்டப் பட்டது என்று நம்பலாம்.

## பழக்க வழக்கங்கள்

தமிழ் நாட்டுச் சாதாரண மக்களின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தால் பத்தினித் தெய்வ வழிபாட்டின் சாயல்களைக் காணலாம். சிலம்பிலே, கணவன் கோவலன் கள்வன்

எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட செய்தியைக் கேட்ட கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதனை மெய்ப்பிப்பதற்குக் கதிரவனைச் சாட்சிக்கு அழைக்கிருள்.

அதுபோல, இன்றும் பிறருடைய கொடுமைக்கு ஆளான தமிழ்ப் பெண்கள்—குறிப்பாக, கிராமப்புறங்களில் வாழும் சாமான்ய மகளிர், வானத்தில் உலாப் போகும் கதிரவனைப் பார்த்து, "சூரிய பகவானே! எனக்குக் கொடுமை செய்த பாவிகளை நீதான் தண்டிக்கணும்" என்று வாய்விட்டு அரற்றுவதைக் காண்கிறோம்.

இது, கண்ணகி காலத்திலிருந்து ஏற்பட்ட வழக்கமாதல் வேண்டும். இல்லையேல், கண்ணகி காலத்திற்கு முன்பிருந்து இந்த வழக்கத்தை அவளும் கடைப்பிடித்தாள் என்று கருத வேண்டும்.

சினங்கொண்ட கண்ணகி, தன் கூந்தலை விரித்த கோலத்துடன் மதுரை வீதிகளிலே நடைபோட்டாள். பாண்டிவேந்தன் அரசவைக்குச் சென்று, அவன்முன் வழக்குரைத்தாள். அவள் தன் கூந்தலை விரித்ததுதான் கோவேந்தன் மாளவும், கூடற்பதி அழியவும் காரணமானது.

இன்றும் வீட்டிலுள்ள இளம் பெண்கள் வெள்ளிக் கிழமையிலே தலைமுழுகிக் குளித்துவிட்டு ஈரம் உலர்வதற்காகக் கூந்தலை விரித்து விட்டிருந்தால், வீட்டிலுள்ள வயது முதிர்ந்த பெண்கள், "கூந்தலை விரித்திருக்காதேடீ! குடித்தனத்திற்கு ஆகாது" என்று சொல்லக் கேட்கிறோம். "ஈரம் உலரக் கூந்தலை விரித்து விட்டிருக்கிறேன்" என்று இளம் பெண்கள் சொன்னால். "அப்படியா? கூந்தலின் முனையி

லேனும் முடிபோட்டு வை" என்று முதியவர்கள் சொல்வார்கள்.

இதுவும் கண்ணகி கூந்தலை விரித்து விட்டதன் விளைவுகளை நினைவில் வைத்து, அந்த மாபத்தினி மறைந்தபின் ஏற்பட்ட வழக்கமாதல் வேண்டும்.

தமிழ் நாட்டிலே சில இடங்களில் 'ஒற்றை முலைச்சியம்மன்' என்னும் மாற்றுப் பெயரில் கண்ணகி கோயில்கள் இருந்து வருகின்றன. அந்தக் கோயில்களிலே அம்மனின் உருவச்சிலை ஒரு முலை இழந்த கோலத்திலே அமைந்திருந்தன வென்று சொல்லப்படுகிறது. ஆனால், அங்கம் சிதைந்த கோலத்திலுள்ள சிலை வழிபாட்டுக்கு ஆகாது என்று கருதி, பிற்காலத்தில் அந்தச் சிலைகள் எடுக்கப்பட்டுவிட்டன என்றும், அவற்றுக்குப் பதிலாக இரண்டு மார்புகளும் உடைய உருவச் சிலைகள் வைக்கப்பட்டன என்றும் அறிகிறோம்.

தமிழ் நாட்டிலே "சிலம்பாயி", "கண்ணாயி" என்று கண்ணகியின் நினைவாகப் பெண் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும் வழக்கம் இருந்து வருவதைப் பார்க்கிறோம்.

"பாஞ்சாலி", "திரௌபதி" என்னும் பெயர்களால் மகா பாரதக் காப்பிய நாயகிக்கும் தமிழ் நாட்டில் வழிபாடு நிகழ்ந்துவரக் காண்கிறோம். வட நாட்டிலே திரௌபதி வழிபாடு அங்குள்ள மக்களால்—குறிப்பாக, பெண்களால் நிகழ்த்தப்படக் காணோம். வடபுலத்துப் பெண்ணான திரௌபதிக்குத் தென்கோடியிலுள்ள தமிழகத்தில்தான் வழிபாடு நிகழ்கின்றது. தனியாகக் கோயில்களும் இருந்து வருகின்றன. கண்ணகி வழிபாடே சிலவிடங்களில் நாளடைவில் பாஞ்சாலி வழிபாடாக மாறியிருக்கக்கூடும்.

திரௌபதி திருவிழாவிலே தீ மிதிக்கப்படுகிறது பய பக்தியுடன் விரதம் இருப்பவர்களே தீக்குழியில் இறங்கி அச்சமின்றி நடைபோடுகின்றனர். இந்த வழிபாட்டு முறை மதுரையம்பதியைத் தீக்கிரையாக்கிய கண்ணகிக்குரியதாக இருந்து, பின்னர் பாஞ்சாலிக்குரியதாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

## பகவதியம்மன் கண்ணகியா?

மலையாளத்தில் நடைபெறும் பகவதி அம்மன் வழிபாடு கண்ணகி வழிபாடாகவே கருதப்படுகிறது. கொடுங்கோளூர் பகவதி அம்மன் மலையாளிகளால் பெரிதும் போற்றப்படும் தெய்வமாவாள். இந்தக் கொடுங்கோளூரை யடுத்ததுதான் சேரநாட்டின் தலைநகராகத் திகழ்ந்த வஞ்சிமாநகர். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுத்தது "செங் குன்றம்" என்னும் மலையிலா? அம்மலையடிவாரத்திலுள்ள "திருவஞ்சைக் களம்" என்று பெயர் மாற்றம் பெற்றுள்ள வஞ்சி மாநகரிலா?—என்பது ஆராயப்படுகிறது.

வஞ்சியம்பதியில் "பத்தினிக் கோட்டம்" என்ற பெயரில் சேரன் எழுப்பிய கண்ணகி கோயில்தான் கொடுங் கோளூரில் இன்று காணப்படும் பகவதி அம்மன் கோயில் என்று சொல்லப்படுவது சரியாக இருக்கக்கூடும் என்றே எனக்குத் தோன்றுகிறது.

மங்கலாதேவி என்னும் பெயரில் கர்நாடக மாநிலத் திலும் கண்ணகி வழிபாடு நிகழ்ந்து வருவதாக ஆராய்ச்சி

யாளர்கள் அறிவித்துள்ளனர். மங்கலாதேவிக்கெனத் தனியாகக் கோயிலும் இருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டில் உள்ள நீலகிரி மலையிலும் மாற்றுப் பெயரில் கண்ணகி வழிபாடு நிகழ்ந்து வருவதாக அறிகிறோம்.

சிலப்பதிகாரக் காலத்திலே சோழ நாட்டின் கடற்கரையோர ஊர்களில்—குறிப்பாக, துறைமுகப் பட்டினமாக விளங்கிய பூம்புகாரில் வணிக சாதியினர் மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்தனர் என்பது சிலப்பதிகாரத்தால் அறியக் கிடக்கிறது. அவர்கள் பிற்காலத்தில் கடற் கோளுக்கு அஞ்சி, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பாலைவனப் பிரதேசத்தில் குடியேறியிருக்கக் கூடும் என்று கருத வேண்டியிருக்கிறது. அவர்கள், தாங்கள் வாழும் பகுதிக்குச் "செட்டி நாடு" என்று பெயர் வைத்துக் கொண்டுள்ளனர். "நாட்டார்", "நகரத்தார்" என்னும் சிறப்புப் பெயர்களையும் பெற்றுள்ளனர்.

"நாட்டார்" என்பதுதான் "நாட்டுக் கோட்டையார்" என்று விரிந்திருக்க வேண்டும். கண்ணகி இந்த சமூகத்தில் பிறந்தவள் என்பது ஆராய்ச்சியால் அனுமானிக்கப் படுகின்றது. ஆனால், நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்தாரின் பழக்கவழக்கங்களிலே கண்ணகி வழிபாட்டின் அடையாளத்தைக்கூடக் காண முடியவில்லை.

"நகரத்தார்" எனப்படும் வணிக சமூகத்தினர் தமிழ்நாடு முழுவதிலும் பல்வேறிடங்களில் கோயில்களை நிர்மாணிக்கும் திருத்தொண்டினைச் செய்திருக்கின்றனர். இன்னமும் செய்து

வருகின்றனர். ஆனால், ஏனோ இவர்கள் கண்ணகிக்குக் கோயில் எடுக்கும் திருப்பணியில் ஈடுபடவில்லை. தமிழ் நாட்டிலுள்ள மாரியம்மன் கோயில்களிலே ஒன்றுகூட நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் நிர்மாணிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இவர்களுடைய குடும்பப் பழக்க வழக்கங்களிலேயும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பெயர் வைப்பதிலேயும் சிலப்பதிகாரத்தின் சாயலைக்கூடக் காண முடியவில்லை.

மலேசிய, சிங்கப்பூர் நாடுகளிலே மாரியம்மன் என்னும் பெயரில் கண்ணகியம்மன் வழிபாடு நிகழ்ந்து வருகின்றது. தமிழர் குடியேறி வாழும் ஊர்தோறும் மாரியம்மன் கோயில்கள் இருந்து வருகின்றன. அக் கோயில்களுக்கு நிறைய சொத்துக்களும் உண்டு. ஆம்; மலேசியாவிலுள்ள மாரியம்மன் பணக்காரி!

தமிழ் நாட்டில்கூட மாரியம்மன் கோயில்களுக்கு நிறைய வருமானம் உண்டு, திருச்சியை யடுத்தாற்போலுள்ள சமயபுரம் மாரியம்மன் கோயில் வருமானத்தைக் கொண்டுதான் திருவரங்கம் ரங்கநாதர் கோயில் நிர்வாகம் நடைபெறுகின்றது.

## இலங்கையில் பத்தினி வழிபாடு

இலங்கையில் தமிழர் வாழும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாநிலங்களில்—குறிப்பாக, மட்டக்களப்பு நகரில் கண்ணகி என்னும் பெயராலேயே இன்னமும் பத்தினி வழி

பாடு நடைபெற்று வருவதைப் பார்க்கிறோம். மட்டக்களப்பு மாநிலத்திலே கண்ணகிதான் அனைத்துத் தமிழருக்குமுரிய பொதுத் தெய்வம். கண்ணகி வழிபாட்டுக்கான துதிப் பாடல்களும் தோன்றியுள்ளன. ஆண்டுதோறும் கண்ணகி விழா மட்டக்களப்பிலுள்ள இந்துத் தமிழர்களால் பயபக்தி யோடு நடத்தப்படுகிறது.

கந்தப் பெருமான் கோயிலுள்ள புகழ்பெற்ற கதிர் காமத்திலும் கண்ணகியம்மன் கோயில் இருக்கிறது. கந்தனை வழிபட அங்கு செல்வோர், "வெள்வேலான் குன்றில் விளை யாடல் யானகலேன்" என்று கூறிய கண்ணகியம்மன் கோயி லுக்கும் சென்று வழிபாடு நிகழ்த்துகின்றனர்.

இலங்கையில் சைவ சமயத்தின் காவலர் எனத் திகழ்ந்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், கண்ணகி வழிபாட்டை எதிர்த்ததாகத் தெரிகிறது. "சமண சமயத்துச் செட்டிச்சியை தெய்வமாக வழிபடுவதா?" என்று நாவலர் எழுதிய வாசகம் "ஆறுமுக நாவலர் பிரபந்தம்" என்னும் நூலிலே இருந்து வருகின்றது சமணத்தின்பால் கொண்ட காழ்ப்பு கண்ணகி வழிபாட்டை எதிர்க்க நாவலரைத் தூண்டியது போலும்! இன்னும்கூட அங்குள்ள வைதிகச் சைவர்களிலே சிலர் கண்ணகி வழிபாட்டை விரும்பாதவர்களாகத்தான் இருக் கின்றனர்.

இளங்கோவடிகள் கண்ணகியை முழுமுதற் கடவுளுக்கு நிகரான தெய்வமாகச் சொல்லவில்லை. போர்க்களத்தில் வீரசாகசம் புரிந்து மாண்ட வீரனுக்குக் கல் கடுவது தமிழருடைய வழக்கம்—வரலாறு. ஆனால், பெண்களிலே

வீராங்கனையாகத் திகழ்ந்தவர்களுக்குச் சிலை நிறுத்தி வழிபடும் வழக்கம் சிலப்பதிகாரத்திற்கு முற்பட்ட காலத்தில் தமிழர் வாழ்வில் இருந்ததாகத் தெரியவில்லை. இந்தக் குறை அகல கண்ணகி வழிபாட்டை வீர பத்தினி வழிபாடாகவே இளங்கோ தொடங்கி வைத்தார்.

சாதி உயர்வு—தாழ்வுகளிலே நம்பிக்கையுடைய "பழமை யாளர்கள்" கண்ணகி வழிபாட்டை வெறுக்கலாம். ஆனால், மனிதர்களிடையே எந்த வகையிலும் உயர்வு தாழ்வைக் காணாத சமரசவாதியான இளங்கோவடிகள் கற்பொழுக் கத்தை வளர்ப்பதற்கென்று பத்தினி வழிபாட்டைத் தொடங்கி வைத்ததில் தவறு இருக்க முடியாது.

## எதிர்ப்பது ஏன்?

அறிவை கலைமகளாகக் கற்பித்து, அக் கலைமகளுக்குக் கோயில்கள் எடுத்து வழிபட்டு வருகிறோம். செல்வத்திற்குத் "திருமகள்" —"இலக்குமி" என்றெல்லாம் பெயர் தந்து, அந்தப் பெண் தெய்வத்திற்கும் கோயில்கள் எழுப்பி, அதனை வழிபட்டு வருகிறோம். தீமை செய்யும் "சனி"யனுக்கும் திருக்கோயில் நிறுவி, தீமை செய்யாதிருக்குமாறு அந்தச் சனீசுவரனை வழிபட்டு வருகிறோம். வாயுவின் ஆற்றலுக்கு அடையாளமாகக் கற்பிக்கப்பட்ட அனுமனுக்கும் ஆலயம் உண்டு, வழிபாடும் உண்டு தமிழ் நாட்டிலே! 'கற்பு' நெறியைப் போற்றி வழிபடுவதனை மட்டும் வைதிகர் வெறுப்பானேன்?

திருமண நாளிலே கற்புக்குரிய கடவுளாக விண்ணை சுத்துப் பெண்ணுக்குக் கூறப்படும் அருந்ததியைக் காட்டி ஆறுத

லடைகிறோம். மண்ணகத்திலே கற்பு நெறிப்படி வாழ்ந்து தெய்வமான ஒருத்தியை சிலம்புக்கு முன்னுள்ள இலக்கியங்கள் நமக்குக் காட்டவில்லை. இந்தக் குறைபாட்டை அகற்றத் தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் படைத்து, பத்தினித் தெய்வ வழிபாட்டைத் தொடங்கி வைத்தார்.

அந்த மகாகவியின் புகழ் வாழ்க என வாழ்த்துவோம்! அவர் தொடங்கி வைத்த பத்தினித் தெய்வ வழிபாடு புத்துயிர் பெற வேண்டுமென்று பிரார்த்திப்போம்! மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி தேவியின் புகழ் உலகெங்கும் பரவுவதற்குப் பாடுபடுவோம்!

★

# பொருளடைவு


அகதிகளுக்குச் சோறளித்தான் 335
அசோகன் படை எடுப்பு 282
'அதுகேட்டு' 351
அந்தணனுக்கு அபயம் 104
அந்திமாலை நேரத்தில் சேரமன்னன் 298
அந்நாளைய தமிழ் மன்னர்கள் 185
'அம்மாமி' 324
அரச நிந்தனைப் பிரசாரம் 171
'அரச பவனம்' 282
'அரசவையில் பத்தினி' 179
அரசியல் புரட்சி 231
அரசியின் ஆணை 245
அரட்டன் செட்டி மக்கள் 342
அழும்பில் வேள் செய்தி 250
அறக்கற்பும் மறக்கற்பும் 227
'அறிவிப்பாயே, அறிவிப்பாயே!' 178
'அன்று தொட்டு' 350
ஆச்சியர் குரவையின் அவசியம் 141
ஆசான் தந்த புதிய தகவல் 255
ஆடித்திங்களில் பாடிய நா 352
ஆறிய கற்பும் சீறிய கற்பும் 229
ஆறுதல் கூற ஆளில்லை (கண்ணகிக்கு) 161
ஆறைங்காதம் 78
இசைப்பாடல்கள் 148
இடம் மாறிக் கூறியதேன் (கோவலன் சிறப்பை) 108
இந்திய தேசிய ஒருமைபாடு 6
இமயத்தாபதர் 252
இமயத்தில் புலிக்கொடி 25
இமயத்தில் விற்கொடி 332
இமயப்படை எடுப்பு ஏன்? 147
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் 6
இயற்கையிலேயே பாமரன் 177
இரண்டு இரண்டு தலைநகரங்கள் 296
இல்வாழ்க்கைக்கு இருட்டடிப்பு 20
இலங்கையில் பத்தினி வழிபாடு 369
இளங்கோ கொள்கை 209, 273
இளங்கோ தரும் அரசியல் சித்திரம் 221
இளங்கோவின் திருமால் பக்தி 142
இளங்கோவின் வரலாறு 340
இளவரசன் எங்கே 211
உபதேசம் 347
உரைபெறு கட்டுரை 350
உலக சமாதானப் பிரச்சாரம் 313
உலகம் முழுவதுமே தாயகம் 13
ஊர்வசியின் கதை 42
ஊரை எரிக்கும் எண்ணம் (சீதைக்கு) 232
எந்தச் சிலம்பு? 5, 9
எரித்தது குற்றமா? 190, 233

எரியூட்டும் காட்சிகள் (காப்பியங்களில்) 231
என் கால் சிலம்பு மணியுடை அரியே 184
ஒத்துழையாமைத் தத்துவம் 174
ஒருமைப்பாட்டுப் புத்தி 128
ஒல்லென் ஒலிபடைத்ததூர் 168
ஒற்றைச் சிலம்பு 356
ஓலை வாங்கியதேன் 93
கட்டிடக் கலை 32
கடவுள் வாழ்த்துப் பாடாததேன்? 10
கடைசி வாழ்த்து 175
கண்ணகி உரைத்த இளங்கோ வரலாறு 346
கண்ணகி எரித்தது ஏன்? 233
கண்ணகி காற்சிலம்பே 8, 9
கண்ணகி கோட்டத் திறப்பு விழா 317, 348
கண்ணகி-கோவலன் இல்லற வாழ்க்கை 10, 38
கண்ணகி-கோவலன் திருமணச் சடங்குகள்
கண்ணகி-கோவலன் மதுரைப் பயணம் 74, 130
கண்ணகி தெய்வத்தின் காட்சி 325
கண்ணகி தேவி சேரநாடு வந்தது 244
கண்ணகி முதல் தெய்வம் 235
கண்ணகியின் அரச பக்தி 181
கண்ணகியைக் கைது செய்யாததேன்? 210
கண்ணகி வழிபாடு, 235, 237, 240
கண்ணகி வல்வி நாயகி 24
கண்ணகி வழிபாடே பாஞ்சாலி வழிபாடு 366
கண்ணகி வாழ்த்து 338
கண்ணகி வாழ்வரசி 361
கணியன் பூங்குன்றனர் 13
கதைப் போக்கில் தமிழக வரலாறு 319
கந்தபுராணத்தில் யுத்தக்காட்சி 272
கம்பனுக்கு உடன்பாடா? 231
கரிகால் வளவன் 25
கரிகால் வளவன் படை 181
கல் எடுத்தனர் 277
கலாச்சார ஒருமைப்பாடு 263
கலிங்கத்துப் பரணியில் போர் 278
களவியலில் தொடங்கும் இல்வாழ்க்கை 17
கவவுக்கை 24
கவிஞரின் குறிக்கோள் 313
கவுந்தியடிகள் உண்ணு நோன்பு 290
கவுந்தி யார்? 79
கவுந்தியின் ஆறுதல் 97
கவுந்தியும் மாதரியும் முன் அறிந்தவர்கள் 115
கற்பனை தழுவிய வரலாற்று இலக்கியங்கள் 281
கன்னர் அனுப்பிய செய்தி 265
கன்னர் தந்த காணிக்கை 268
காட்சிப் படுத்தாததேன் (மதுரை எரிந்ததை) 208
காந்தியடிகள் 174
காப்பியச் சுவை 284
காப்பியம் காணு புதுமை 281
காமர் மனைவி 30
காமனும் ரதியும் 29
காலனி 282

காவலர்களுக்குள் கருத்து வேற்றுமை 138
காவலன் கண்ட கண்ணகி 176
காவா நாவினர் 253
காளி என் ரத்தினம் 360
'காலை' என்னும் சிறப்பு 154
கிரந்தையின் மனைவி 218
குற்றமல்ல கொற்றம் 183
குற்றமும் புகாரும் 107
குற்றமிலேன் யான் 200
குறவர்கள் கண்ட கண்ணகி 243
குறியாக் கட்டுரை 34
குன்றக் குரவை வழிபாட்டு நெறி 234
கூட்டறிக்கை 203
கூறியது கூறல் 15
கூனி கிழவியா 51
கொலைக் களத்தில் கண்ணகி 166
கோயில் மன்னனைக் குறுகினாள் 179
கோவலன் உயிர் பெற்றான் 169
கோவலன் கேட்ட மன்னிப்பு 122
கோவலன் நாடகம் 360
கோவலன் பள்ளியறையில் புகுந்தது 73
கோவலன் புலமை 111
கோவலன் வருணிப்பது புதுமுறை 37
கோழியூர் பத்தினி விழா 352
சகுந்தலையின் வாதப் போர் 230
சங்கமனின் இன்னல் 221
சஞ்சயன் தூது 264
சமய சமரசம் 145
சமயபுரம் மாரியம்மன் 369
சமாதானத் தேவதை 37
சர்வ சமய கீதம் 12
சர்வ தேசிய கீதம் 14
சாத்தனார் 40
சாபத்தால் வந்த கலை 42
சாலினி கூற்று 83, 349
சாவக நோன்பினன் 119
சாவுதான் வாழ்வு 324
சித்திராபதிக்கு இருட்டடிப்பு 40
சிலப்பதிகாரம் அரசியல் காப்பியம் 316
சிலப்பதிகாரக் காதலர்கள் 34
சிலப்பதிகாரம் பெயர்க் காரணம் 7
'சிலம்பாயி', 'கண்ணாயி' 366
சிலம்பில் உள்ள ஒரு குறை 103
சிலம்பு ஒரு சரித்திர நூல் 102
சினிமா டெக்னிக் 101
சீதையின் வாதம் 230
செங்குட்டுவன் காலத்தில் தமிழ்நாடு 299
செங்குட்டுவனின் செங்கோன்மை 299
செங்கோலன் நாடு 85
செழியன் தீர்ப்பு 187
சேக்கிழார் 13
சேடக்குடும்பியின் சிறுமி 344
சேரநாட்டில் வரவேற்பு 300
சேரமன்னனின் வடபுலப் படையெடுப்பு 234, 279
சேரன் கனகவிசயர் போர் (இனப்போரல்ல) 252
சேரன் சூளுரை 254
சேரன் முன் மாடலன் 287

சேரனின் அரசவைப்
புலவர் 243
சேரனின் மேலாதிக்கம் 339
சொல்லாமல் சொல்லிய
செய்தி 159, 172, 320, 352
சோழ-பாண்டியர் எங்கே 318
சோழ-பாண்டியர் சொன்ன
குறை 303
டவுன் பிளானிங் 101
டெலிவிஷன் காட்சி 208
தமிழ் வேந்தர் கொள்கை
287
தமிழ் வேந்தர் போர்த்
தந்திரம் 36
தமிழ் வேந்தரின் காலனி
ஆதிக்கம் 149
தமிழக ஆரியப் போர் 271
தமிழர் ராணுவம் 155
தமிழர் வரலாறு 44
'தமிழன்' உணர்வுக்கு
அந்தணர் 312
தமிழினத்தின் அரசியல்
மரபு 187
தமிழினத்தின் தனித்
தெய்வம் 266
தலைமாறிய கதை 355
தன்மானத் தமிழன் 76
திருமண வயது 21
திருமால் பொதுத்
தெய்வம் 144
திருமேனி என்னும்
வழக்கு 251
திருவொற்றியூர் வட்டபுரி
யம்மன் 364
திருத்தக்கதேவர் 10
திருமணச்சடங்கு 104
திருமால் மதத் தெய்வம் 145
தீயை வழிபடும் தீ 22, 23
தீர்ப்பா, வாக்குமூலமா? 190
துலாபாரம் 300
துரிக்கையா? 358
தெய்வங்கள் ஓடின 102
தெய்வத்திருநகர் 214
தெய்வம் ஏறிய தேவந்தி 341
தெய்வ வடபேர் இமயம் 320
தேசியம் பாடிய முதல்
கவிஞர் 6
தேரா மன்னா! 181
தொல்காப்பியம் 17
தொழுது வலம் வந்தது 77
தோரிய மகளிர் 50
தோளில் துளபம் 258
நக்கீரர் 13
நச்சினார்க்கினியர் 17
நளனின் தருமம் 193
நாட்டார் நகரத்தார் 368
நாட்டுக் கோட்டையார் 368
நாடகக்காரரின்
கண்ணகி 321
நாடகத்துள் நாடகம் 340
நாடக மகளிர் வாழ்த்து 260
நாவலர் எதிர்ப்பு 370
தருமமும் நியாயமும் 192
நிலத் தெய்வ வழிபாடு 152
நிலம் என்னும் நல்லாள் 213
நிலாமுற்றத்தில் சேர
மன்னன் 303
நீலி தந்த சாபம் 221
நெடுஞ்செழியனின் உயிர்த்
தியாகம் 186
நெடுஞ்சேரலாதனின்
புகழ் 249
நெடுவேள் குன்றம் 225
பக்திக் கூற்று 156
பகவதியம்மன்
கண்ணகியா? 367
பத்தினி வழிபாடு
349-372

பத்தினிக் கோட்டத் திறப்பு
விழா 313, 317
பத்தினிக் கோட்டத்தில்
கண்ணகி-கோவலன்
சுற்றத்தார் 341, 319, 320,
322, 341
பத்தினிக் கோட்டத்துள்
கொண்டு வராதோர் 345
பத்தினிப் பெருமை 194
பத்தினியர் தப்பினர் 204
பத்தினியர் வரலாறு 195
பத்தினி வழிபாடு (பழக்க
வழக்கத்தில்) 364
பரத்தையர் நிலை
(மதுரையில்) 205
பரத்தையர் குலப்படைப்பு 44
பரத்தையர்
பல வகையினர் 44
பரதன் 6
பள்ளியறை வருணனை 33
பாசண்டச் சாத்தன் 341
பாஞ்சாலி சூளுரை 230
பாட்டும் கூத்தும் 43
பாடிவீடு 261
பாண்டியன் வழங்கிய மரண
தண்டனை 135
பாண்டியன் அனுப்பிய
பரிசு 267
பார்ப்பினி தந்த வட
மொழி ஏடு 105
பாரதம் ஒரே நாடு 320
பால சரிதக் கூத்து 156
பிரிட்டனில் வேல்ஸ்
நகரம் 296
புகழேந்தியின் கோவலன்
கதை 362
புண்ணியத் திசைகள் 293
பூதம் புடைத்த
பொய்யன் 106
பூம்புகாரிக் காதலர்கள் 31
பூம்புகார் மாதவி 39, 88
பூம்புகாரில் மிதமிஞ்சிய சுக
போகம் 315
பூர்வ வாசனை 90
பூவாடைக்காரி 361
பெரியபாளையம்
மாரியம்மன் 358
பொங்கி எழுந்த
கண்ணகி 160
பொய்த் தொழிற்
கொல்லன் 1.5
பொருளுடைய புகழுரை 128
பொற்கொல்லர் பலி 295
போர்க்கள நாகரிகம் 278
போர்க்கள நிகழ்ச்சிகள் 284
போரில் மாண்டோர்
வரிசை 284
மகாபாரதத்தில் தருமம் 193
மண்ணுள்வோரின்
தொல்லைகள் 245
மணமதுரை
(சொல் நயம்) 236
மணிமேகலை பிறந்தாள் 103
மணிமேகலையில் கண்ணகி
356
மணிமேகலையில்
சித்திராபதி 42
மதிப்பதும் துதிப்பதும் 259
மதுராபதித் தெய்வம்
தோன்றியது 213, 215
மதுராபதியாள் தந்த
சாட்சியம் 217
மதுரை எரியுண்ட நாள் 222
மதுரைக் காண்டத்தின்
தொடக்கம் 75
மதுரை மக்கள் துயரம் 165
மதுரை மீனாட்சி கோயில்
கண்ணகி 363

மதுரை மூதூர் யாது 77
மதுரையின் அவலம் 207
மதுரை வீதிகளிலே
கண்ணகி 163
மதுரை வீதிகளிலே
கோவலன் 100
மலேசிய மாரியம்மன் 369
மறக்கற்பும் அறக்கற்பும் 172
மன்னன் நடு
கட்சிக்காரன் 140
மன்னவ மீது கண்ணகி
தொடுத்த வழக்கு 151, 189
மன்னனின் சுதேசியப்
பற்று 185
மனத்துக்கும் மதிக்கும்
போராட்டம் 201
மாடலன் அறிவுரை 306
மாடலனும் கோவலனும்
ஆருயிர்த் தோழர்கள் 114
மாதவி அறிமுகம் 43
மாதவி கோவலன் காதல்
வாழ்கை 39, 74
மாதவி பாடிய அரச
வாழ்த்து 69
மாதவியின் கவர்ச்சி
மாதவியின் தந்தை'
கோவலன் 90
மாதவியின் தூதன் 87
மாதவியின்
பிறப்பொழுக்கம் 46
மாதரி மாண்டாள் 290
மாதரி விதவை ·116
மாநாய்கன் தவவாழ்வு 292
மாமன்னனுக்கு
அனுதாபம் 188
மாரி விழா 853
மான யாத்திரை 74
மிலைப்பட்ட வருணனை 249
முதல் திருப்பம் 75
முதல் வழிபாடு 839
முப்பதிரண்டு திங்கள்
முடிந்தன 298
முனியாதே (சொல் நயம்) 236
மூவரும் அழுதனர் 323
மூவேந்தர் ஒற்றுமைக்கு
மாடலன் 312
மூவேந்தர் பெருமை 157
மூவேந்தருக்கு வாழ்த்து 827
மூவேந்தரும் சமம் 328
மூன்று நெறிகள் 314
மேருவும் இமயமும் 27
மேல் வழக்கு 172
யாரம்மா நீ 180
ராணுவ முகாம் 261
இராமனை வழிபடு
தெய்வமாக்கியது 100
இராமாயணம் 192, 224,
272.
ரேணுகையின் கதை 854
வங்கப் பரப்பு 269
வஞ்சிமகளிர் வாழ்த்து 829
வஞ்சி விழாவில் கண்ணகியின்
குடும்பம் 318
வடபுலஞ் சென்ற சேரன்
வஞ்சி திரும்பினான் 280, 316
வடபுலப் போர்
உண்மையா? 280
வடவாரியருடன் போர் 248
வரந்தரு தெய்வம் 838
வருக, தருக 178
வருந்துவதேன்? 126
வருண பூதங்கள் 203
வள்ளுவம் 13, 183
வளையலை உடைத்ததேன்? 222
வளையாத செங்கோல்
வளைந்தது 131, 150
வார்த்திகனின் திடீர்
வாழ்வு 219

வாராதீர் 96
வாய் இல்லாத காவலன் 179
வானியங்கு முனிவர்
அறிவுரை 262
விதியின் வேலைக்கட்டம் 69
வினைவிளை காலம் 186
வீரபத்தினி 230, 371
வீர வணக்கம் 160
வீராங்கனையின் வீர
சொர்க்கம் 226
வெள்ளிக்கிழமை விவரம் 360
வேடதாரிகள் 274
வைணவத்தின் சிறப்பு 143
வையையின் கண்ணீர் 94

★

# சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களின் இலக்கிய நூல்கள்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரத் திறனாய்வு | 20 | 00 |
| சிலப்பதிகார உரையாசிரியர்கள் சிறப்பு | 6 | 00 |
| சிலப்பதிகார யாத்திரை | 3 | 00 |
| கலிங்கத்துப்பரணி திறனாய்வு | 7 | 50 |
| தமிழகத்தில் பிறமொழியினர் | 15 | 00 |
| கம்பரிடம் யான் கற்ற அரசியல் | 8 | 50 |
| பாரதியின் போர்க்குரல் | 7 | 00 |
| பாரதியாரின் பாதையிலே | 5 | 50 |
| திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும் | 6 | 00 |
| மகாத்மாவும் மதுவிலக்கும் | 3 | 00 |
| காந்தியடிகளைச் சந்தித்தேன் | 5 | 00 |
| ஔவையார் அருளிய கல்விஒழுக்கம் | 3 | 00 |
| The first Patriot Veerapandiya kattabomman | 5 | 00 |
| சிலம்புச் செல்வருக்கு அறிஞர்கள் வாழ்த்து தொகுப்பு : வே. கணபதி | 4 | 00 |
| சிலம்புச் செல்வருக்கு டாக்டர் பட்டம் தொகுப்பு : தி. வ. மெய்கண்டார் | 5 | 00 |